உ

சிவமயம்

ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி



காஞ்சிபுரம் மலர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி

காஞ்சிபுரம் மலர்

மார்ச்சு, 1979

மலர்க்குழு

திரு. அ. மு. மு. அருணசலம் *(தலைவர்)*

,, கம்பன் அடிப்பொடி சா. கணேசன்

,, உ. ராம. மெ. சுப. சேவு. அண. அண்ணமலைச் செட்டியார்

,, சா. நா. அ. சொ. அண்ணமலைச் செட்டியார்

,, ஆர். எம். அருணசலம் *(செயலர்)*

,, சோமலெ *(பதிப்பாசிரியர்)*

மலர்க்குழு அலுவலகம்

TIAM HOUSE 7th FLOOR,

28, வடக்குக் கடற்கரைச் சாலை

சென்னை-600 001

பதிப்புரை

தமிழ் நாட்டில் வரலாற்றுத் தொன்மையாலும் சமயச் சிறப்பாலும் கலை வளத்தாலும் ஒப்பும் உயர்வும் அற்ற பெரும்பதி, காஞ்சிபுரம் ஆகும். எண்ணற்ற சிவாலயங்களும் வைணவத் திருக்கோயில்களும் நிரம்பியுள்ள பழம் பதி, இது.

கச்சி ஏகம்பமாகிய ஏகாம்பரேசுவரர் கோயில் குடநீராட்டு விழாவை நகரத்தார்கள் 1-2-1979இல் சிறப்பாக நடத்திவைத்தனர். அதன் நினைவாக, கச்சியம்பதியின் சிறப்பும், ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலின் பெருமையும், பிற பல அருமைகளும் நிரம்பிய மலர் ஒன்றை வெளியிட வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் வழங்கிய அறிவுரைப் படி, கட்டுரைகளின் தலைப்புக்களையும் அவற்றை இன்னின்னார் எழுத வேண்டும் என்பதையும் முடிவு செய்து, கட்டுரைகளை வரவழைத் தோம்.

கட்டுரை வழங்கிய அறிஞர்களுக்கும், மலர் உருவாக உதவிய நண்பர் மறைமலையடிகள் நூலகத்து நூலகரும் 'செந்தமிழ்ச் செல்வி' ஆசிரியருமான திரு. இரா. முத்துக் குமாரசுவாமி அவர்களுக்கும், யான் வேண்டிய தகவல்களைத் தெரிவித்த ஏராளமான அன்பர்களுக்கும், விளம்பரங்களை ஈந்தவணிகர்களுக்கும், மலர்ப் பதிப்பாசிரியர் பொறுப்பை எனக்குக் கொடுத்த மலர்க் குழுவினர்க்கும், அச்சுத்தாள்களைத் திருத்தித்தந்த பெரும் புலவர் கா. தனகோடி, எம்.ஏ., அவர்களுக்கும் திரு. இரா. ஆளவந்தார், எம்.ஏ., பி. டி. அவர்களுக்கும், நன்முறையில் அச்சிட்டுத் தந்திருக்கும் ஏஷியன் பிரிண்டர்சுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாஸ்திரி நகர் அஞ்சல் நிலையக் கட்டிடம்
சென்னை-600 020
5—3—1979

சோமலெ

பொருளடக்கம்

பொருளடக்கம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்

காஞ்சீபுரம்

முகாம்: காஞ்சீபுரம் தேதி 3-1-1979

'புஷ் பேஷு ஜாதீ.........நகரீஷு காஞ்சீ' என்ற புராதனமான முதுமொழி ஒன்று இருக்கிறது. ஜாதீ புஷ்பமானது தன் நறுமணத்தாலும், தூய வெண்மை நிறத்தாலும், ஜனங்களை எப்படி ஈர்க்கிறதோ, அதேபோல் காஞ்சீபுரம் தன்னகத்தே கொண்ட சிவ, விஷ்ணு, சக்தி ஆலயங்களின் மஹிமையாலும் பல்வேறு சிறப்புகளாலும் எல்லாவிதமான மக்களையும் தன்பால் ஈர்க்கிறது.

> த்ரையிடங் கொள்ளும் பதிகளில்
> காஞ்சியந் தலம்போல்

என்று வாழ்க்கை நடத்தி நன்மை பெறும் தலம் காஞ்சீ என கந்த புராணத்தில் கச்சியப்ப சிவாசாரியார் கூறுகிறார். இத்தலத்தில் தான் அன்னை காமாக்ஷி தேவி ஸ்ரீஏகாம்ரநாதரை வழிபட்டு அறம் வளர்க்கும் தன்மையையும், வழிபாட்டு முறையையும் முதன் முதல் போதித்தாள் என்பது,

> மண்ணின் மேல் வழிபாடு செய்தருளி
> மனையறம் பெருக்குங் கருணையால்......புரக்கும்

என்ற பெரியபுராணத்தின் பாடல் மூலம் தெரியவருகிறது.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் திக்விஜயம் செய்து வருகையில் ஸ்ரீகாஞ்சீ க்ஷேத்ரத்தை அடைந்து, ஸ்ரீ காமாக்ஷீ தேவி ஸன்னிதியில் தன் கையினாலேயே ஸ்ரீசக்ரத்தை ஸ்தாபித்துப் பிரதிஷ்டை செய்து அப்போது காஞ்சீ மண்டலத்தை ஆண்டுவந்த ராஜஸேனன் என்ற அரசனுக்கு ஸ்ரீகாமாக்ஷீ, ஸ்ரீஏகாம்ரநாதர், ஸ்ரீவரதராஜர் இவர்களுக்கு சிறந்த ஆலயங்களை நிர்மாணம் செய்யும்படி ஆக்ஞையிட, அவர் ஆணைப்படி அரசன் கோபுரம், பிராகாரம், மண்டபங்கள் முதலியவைகளைக் கொண்ட பெருங் கோயில்களை நிர்மாணித்தான்.

மேலும் இத்தலத்தில் ராமானுஜாசார்யர், வேதாந்ததேசிகர், சைவசமய நாயன்மார்கள் நால்வர், ஆழ்வாராதிகள், கச்சியப்ப சிவாசாரியர், பரிமேலழகர் அர்த்த சாஸ்திரத்தை எழுதிய சாணக்யர், பட்டினத்தார் போன்ற பெரியோர்களும் ஞானிகளும் வாழ்ந்து வழிபட்டார்கள் என்று தெரிகிறது.

இத்தகை பெருமை வாய்ந்த இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஏகாம்ரநாதர் திருக்கோயில் காஞ்சிபுரம் ஏ. பெரிய தம்பி முதலியார் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட திருப்பணிக் குழுவினரால் நன்கு திருப்பணி செய்யப்பட்டு, பெரும் சிவபக்தர்களாகிய நகரத்தார் சமூகத்தினரால் அண்மையில் கும்பாபிஷேகம் நடத்தப்பட இருக்கிறது என்பதை அறிந்து மிகவும் ஸந்தோஷிக்கிறோம்.

இந்த கும்பாபிஷேகத்தில் யாவரும் கலந்துகொண்டு சிறப்புடன் நடைபெற அவரவர்களால் முடிந்த பணிகளை செய்தும், இந்த மஹோத்ஸவத்தை தர்சித்தும் ஸ்ரீஏகாம்ரநாதர் அருளால் எல்லாவித நன்மைகளையும் அடையும்படி ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி

உ

நால்வர் துதி

சைவத்தின்மேற் சமயம் வேறிலை அதில்சார் சிவமாம்
தெய்வத்தின்மேல் தெய்வம்இல்லெனும் நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த் திருத்தேவாரமும் திருவாசகமும்
உய்யவைத் தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே.

— சைவ எல்லப்ப நாவலர்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பரசமய கோளரியைப் பாலறுவாயனைப் பூம்பழனம் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத் தேயமெல்லாம்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்தம் குலதீபத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ இளங்களிற்றை விரும்பிவாழ்வாம்.

திருநாவுக்கரசு நாயனார்

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்து வாழ்வாம்.


சுந்தரமூர்த்தி நாயனார்

ஒரு மணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட் டாட்கொண்ட உவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாளன் எல்லாமுய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த பேரருளின் பெருமாள் என்றும்
திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமாள் எமதுகுல தெய்வமாமால்

மாணிக்கவாசக சுவாமிகள்

பெருந்துறையிற் சிவபெருமான் அருளுதலும் பெருங்கருணைப் பெற்றிநோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத் துரியநிலை கடந்துபோந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத் தேக்கிச்செம்மாந்து
இருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூரடிகள் அடியிணைகள் போற்றி.

—சிவஞான சுவாமிகள்



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
ஸ்வாமிகளும் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி

திருமுறைகளில் கச்சி

பாலாறு வளஞ்சுரக்கப் பண்பாடு தலை சிறக்கும் தொண்டை நாட்டில் பழம்பெருமை மிக்க பதியாக விளங்குவது காஞ்சி மாநகரம். எட்டுத் திக்குகளிலும் கோயில்களும் கோட்டங் களும் நிறைந்து பட்டொளி வீசும் இந்நகர் தெய்வ மணங் கமழும் திரு நகராகவே இன்றும் விளங்குகிறது. நெடுமதில் சூழ்ந்த இப்பெரு நகரை 'மதிற்கச்சி மாநகரம்' எனத் தேவாரம் புகழ்கிறது.

பன்னிரு திருமுறைகளிலும் திருக்கச்சித் தளிகளைப் பற்றி 390 திருப்பாடல்கள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :

திருக்கச்சி யேகம்பம்

	திருப் பதிகங்கள்	திருப் பாடல்கள்
திருஞானசம்பந்தர்	4	43
திருநாவுக்கரசர்	7	72
சுந்தரமூர்த்தி சுவாமிகள்	1	11
பட்டினத்தார் பாடிய திருவேகம்பமுடையார் திருவந்தாதி	1	100
திருக்கச்சிநெறிக் காரைக்காடு		
திருஞானசம்பந்தர்	1	11
திருக்கச்சி மேற்றளி		
திருநாவுக்கரசர்	1	10
சுந்தரமூர்த்தி சுவாமிகள்	1	10
திருவோண காந்தன் தளி		
சுந்தரமூர்த்தி சுவாமிகள்	1	10
திருக்கச்சி யனேகதங்காவதம்		
சுந்தரமூர்த்தி சுவாமிகள்	1	10
	18	277

இவையே யன்றி நாயன்மார்கள் திருக் கச்சியம் பதிக்கு வேறாய திருத்தலங்களைப் பாடியபோதும் (40 திருத்தலங்களில்) திருக் கச்சித் தளிகளை நினைவு கூர்ந்து பாடியருளினர் கள். திருஞான சம்பந்தப் பெருமான் 3 திருப் பாடல்களிலும், திருநாவுக்கரசு நாயனர் 50 திருப் பாடல்களிலும், சுந்தரமூர்த்தி நாயனர் 3 திருப் பாடல்களிலும், ஆக 56 திருப்பாடல்களில் திருக் கச்சித் தளிகளைப் பாடியருளியுள்ளனர்.

அத்தலங்கள் வருமாறு :

1. கோயில் : சிதம்பரம்
2. திருவதிகை வீரட்டானம்
3. திரு ஆமாத்தூர்
4. திரு ஆரூர்
5. திரு ஆலங்காடு
6. திரு ஆனைக்கா
7. திரு இடை மருதூர்
8. திரு இடையாறு
9. திரு இரும்பூளை
10. திரு இலம்பையங் கோட்டூர்
11. திரு ஐயாறு
12. திரு ஓண காந்தன் தளி
13. திருக்கச்சி மேற்றளி
14. திருச்கச்சி நெறிக்காரைக்காடு
15. திருக்கச்சி அனேகதங்கவதம்
16. திருக்கச்சி யேகம்பம்
17. திருக் கடுவாய்க் கரைப் புத்தூர்
18. திருக் கருவிலிக் கொட்டிட்டை
19. திருக் கழிப்பாலை
20. திருக்காளத்தி
21. திருச் சாய்க்காடு
22. திருச் செங்காட்டங்குடி
23. திருச் சோற்றுத்துறை
24. திருத் தலையாலங்காடு
25. திரு நன்னிலத்துப் பெருங்கோயில்
26. திரு நள்ளாறு

27. திரு நாகேச்சரம்
28. திரு நாகைக் காரோணம்
29. திரு நாரையூர்
30. திரு நெய்த்தானம்
31. திருப் பருப்பதம்
32. திருப்பாசூர்
33. திருப்புத்தூர் (பாண்டி நாடு)
34. திருப்பூந்துருத்தி
35. திருப்பெருவேளூர்
36. திருமழபாடி
37. திரு மாற்பேறு
38. திருவீழி மிழலை
39. திருவெண்காடு
40. திருவெண்ணியூர்

எட்டாம் திருமுறையாசிரியராகிய மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தில் 6 திருப்பாடல்களிலும், பதினொன்றாவது திரு முறையில் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய திருக்கோயில் திரு வெண்பாக்களில் ஒரு திரு வெண்பாவிலும், பரணதேவ நாயனார் அருளிய சிவபெருமான் திருவந்தாதியில் 4 திருப் பாடல்களிலும் பட்டினத்துப் பிள்ளையார் அருளிய திருவேகம்ப முடையார் திருவந்தாதி யில் 100 திருப் பாடல்களிலும் நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி யில் 2 திருப்பாடல்களிலும் சேக்கிழார் பெரு மான் அருளிய பெரிய புராணத்தில் 39 திருப் பாடல்களிலும், ஆக 152 திருப்பாடல்களில் திருக்கச்சியேகம்பப் பெருமானைப் போற்றியுள்ளனர்.

1900-ஆம் ஆண்டு வெளியீடு

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீகாமாட்சியம்பா சமேத ஏகாம்பர நாதாயநம:

காஞ்சீபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் மஹாகும்பாபிஷேக ஸம்புரோக்ஷண பத்திரிகை

விநாயகர் காப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

திருஞான சம்பந்த சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

நலமார் கச்சி நிலவேகம்பங்
குலவரவேத்தக்கல வாவினையே

திருநாவுக்கரசு சுவாமிகள்

நல்லானை நல்லான நான் மறையோடாறங்கம்
வல்லானை வல்லார்கண் மனத்துறையு
மைந்தனைச்
சொல்லானை சொல்லார்ந்த பொருளானைத்
துகளேது
மில்லானை யெம்மானை யென்மனத்தே
வைத்தேனே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திங்கள் தங்கிய சடையுடையானைத் தேவனை செழுங்கடல் வளருஞ்
சங்க வெண் குழைக்காதுடையானைச் சாம வேதம் பெரிதுகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு மருவியேத்தி வழிபடப்பெற்ற
கங்கையாளனைக் கம்பனெம்மானைக் காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

"சாந்தோக்யேஸா புனர்ப்பிரஹ்ம புரம்மித்யேவர்ணிதா-அதர்வணேனஸா ஸ்வர்க்கலோக ப்ரோக்தோ.
மஹாபுரி,—தைத்திர்யஜ்யோதிஷாஸ்வர்க்க ஆவ்ருதோ லோகயித்யபி—தத்ப்ரஹ்மபுரமே தத்தி
நான்யத் காஞ்சிபுராதிதி,—ஸர்வோப்யு பநிஷத்பாக: ப்ரவதத்தியாக மைஸ்ஸஹ."—என்று

வேதவேதாந்தங்களால் பரமாகாச மென்றும் பிரமபுர மென்றும், சோதி சுவர்க்க மென்றும் சுவர்க்க மென்றும் பலவிடங்களிற் பிரதி பாதிக்கப் பட்டதாகியும், நித்தியார்ச்சனைப் பயனென்றனையே தரும் ஏனையவுலகங்களையுங் கண்டங்களையும் போலாது நித்ய நைமித்திகசுர மிக மென்று மூன்றருச்சனைப் பயனையு மொருங்கேதரவல்ல கீழ்க்கடல், மேற்கடல் சேது இமய மென்னும் நாற்பாங்கெல்லைக் குட்பட்ட இப்பரத கண்டத்திற் சிறந்து விளங்கும் க்ஷேத்திரங்கள் பல கோடியினும் அவற்றுட் சிறந்த ஆயிரத் தெட்டினும் அவற்றுட் சிறந்த நூற்றெட்டினும் அவற்றுட் சிறந்த வறுபத் தெட்டினும் அவற்றுட் சிறந்த விரண்டினும் சிறந்ததாய், க்ஷீர நதி சங்கமமாகிய கீழ்க் கடற்கரையும் நைருதியில் தக்ஷிண பினுகியும் வாயுவில் சிலாஹ்ருதமும் ஈசானத்தில் சுவாமி புஷ்கரணியுமாகிய இவற்றைப் புறவெல்லை யாகக் கொண்டு மாவலிபுரம் தேவகிபுரம் விரிஞ்சிபுரம் நாகலாபுரம் என்னும் நாற்புறங் களையு நாற்புறங்களிலுங் கொண்டு கோரூபமாய் விளங்கும் காஞ்சியே "காசியினுஞ்சால

நமக்கினிய நகர்" என் றிறைவனுல் தேவியாருக்கு வலியுறுத்தப்பட்ட தாகியும்,—

சத்திய சத்தியர் சத்திய சோதகர் சத்திய சங்கற்பர் சத்திய காமர்களாகிய சரியை கிரியா யோக ஞானிகள் வாழப் பெற்ற சத்திய விரத க்ஷேத்திரமாகியும்,—

மகா தேவியினுற் பொழிந்த க்ஷீர புண்ணியப் பாகு வேகவதி. அரித்திராம்பு பம்பை கம்பா நதி முதலியவைகளும், சதாசிவ மூர்த்தி சடை முடியினும் உருத்திரமூர்த்தி ரோம கூபங்களினுந் தோன்றிய பஞ்ச தீர்த்தம், சர்வதீர்த்தம், வார தீர்த்தங்களாகிய இஷ்டசித்தி முதலியவைகளும், அஸ்தகிரி முதலியவைகளும் காம கோட்டம், குமர கோட்டம், முப்புராரி கோட்டம் கச்ச பாலய முதலியவைகளும் ஆகிய நதிபர் வதாலய சிரேஷ்டங்களாற் சூழப்பட்ட பாஸ்கர க்ஷேத்திரமாகியும்,—

காமகோடி பில முதலியவைகளும் மா. கடம்பு புளி கூவிள அத்தி காஞ்சி விருக்ஷ முதலியவைகளும், புண்ணியகோடி விமான முதலியவைகளுமாகிய மஹாபில மஹாவிருக்ஷ மஹா புண்ணியகோடி விமானங்களால் முத்திரிக்கப்பட்ட தைஜஸ் க்ஷேத்திரமாகியும்,—

பரசிவமும் பராசக்தியும் நிட்களசகளமாய் ஒன்ருய் வேருயுடனிருக்குஞ் சிவசக்தி க்ஷேத்திர மாகியும்,—

அருவுருவங் குறிகுணங்கள் முதலிறு கட்டு வீடனைத்துமின்றிப் பெருமையதாய் நுண்ணிய தாய்ப் பேருணர்வா யானந்தப் பிழம்பாயெங்கும், ஒரு முதலா யழிவின்றி. யோங் கொளியாய் கற்பகம் நிறைந்துளதா யுயிர் கடோறும், விரவி யுடன் ரெழிற்படுத்துப் புலங்கொளுத்தி,வீடுய்க் கும் பதி, உய்வண்ணமறியாது இருண்மலத்திரு வினையாற் பிணிப்புண்டு மருளின் மூழ்கிக் கிடக்கும் ஆன்மாக்களை யிருவினைக்குரிய பிறவியுட்படுத்திச் சுவர்க்க நரகாதிகளில் ஊசல் எனச் சுழல்வித்துப் பருவ நோக்கி மெள்ள வினைப்பயனூட்டி அது பின் என்று மனுகா வண்ணங் காத்தற்பொருட்டுக் கச்சபேசம் சித்தீசம் காயா ரோகணம் வீராட்டகாசம் திருவேகம்பம் எனு மைந்திடங்களில் தோற்ற நிலை யிறுதி மறைப்பு அருளென்னும் பஞ்ச கிருத்தியமாகிய ரக்ஷா தாண்டவம் புரியும் புரமாகாச க்ஷேத்திரமாகியும்,— த்வாதிரிம் சத் தாமங்கணிலே பெற இரு நாழி நெற்கொண்டி யற்றச் செய்ய வல்ல தர்ம க்ஷேத்திரமாகியும்,—

அறுபத்து நாலாயிரஞ் சக்தி பீடங்களுட் சிறந்து துர்வாசரால் துதித்த காமராஜ பீட க்ஷேத்திர மாகியும்,—

புவன்சார மும்மூர்த்திவாச முதலிய பன்னிரு பெயர் புனைந்து பூவுலகத்திற்கு மூலாதார க்ஷேத்திரமாகியும்,—

கதித்த தாய் தந்தையர் முதாலாயினுரைக் காட்டும், மூன்றிடம், அமுதநீர் முதலானவற்றைக் கொடுக்கும், மூன்று வேதிகை நெல்லரியுந் தோறும் மீள மீள விளைதல் முதலிய நான்கு வயல்கள், பிரமன் முதலானவரைக் காட்டும் நான்கு சிங்காதனங்கள், ஒரு நாளத்தில் மூன்று தாமரையைக் காட்டல், முதலிய ஐந்து தடாகங் கள், ஆம்பர விருக்ஷத்திற்குவல மிடங்களிலுலாவு கின்ற புறவு, நாகணவாய்ப்புள் முதலிய ஆறு பறவைகள், முயல் யானையைத்துரத்துதல் முதலிய ஏழு பொதுவிடங்கள், இச் சிதவையெல் லாம் தருதல் முதலிய எட்டுப் பொய்கைகள், திண்டினரைத் தேவராக்கல் முதலிய ஒன்பது கற்கள், நவரத்னங்களைப் பொழிகின்ற ஒன்பது சோலைகள், மகா பாதகரை ஊமையாக்கல் முதலிய பத்து சபைகள், பார்த்தவர் நிழல் தோன்ருமற் செய்தல் முதலிய பதினேரு கூவல் கள் ஆகிய வற்புதங்களைக் காட்டும் விம்மித க்ஷேத்திரமாகியும்.

கல்வி மண்டபம், கணக்கறி மண்டபம் கழைக கூத்து மண்டபம், கங்கைகொண்டான் மண்டபம், காயத்ரி மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், ஆடல் மண்டபம, ஆஸ்தான மண்டபம், பாடல்மண்டபம், துலாபாரதானமண்டபம், முத்தி மண்டப முதலியவைகளால் பொன்னுலகினுமழகு பெற்றிருக்கும் அலங்கார நகரமாகியும்

சரியை கிரியா யோகங்களானடையத்தகும் சாலோகாதிபத முத்திகளுட் சிறந்து சிவஞானத் தாலடையப் படுவதாகிய "தன்னிகரில் கேசாந்த முறுமாவி. தன் சிரத்துக் கபாலங் கீறி வன்னியினிற் பூவெனப் போய் வாயுவினிற் புவ்வெனப் போயிரவி மாட்டுப்பின்ன மறு சுவ் வெனப் போய் விண்ணரசின் மகவெனப் போய்ப் பிரமத்தொன்ருய், மன்னிடு மிக்கே சாந்த முக்தியினை" மெய் ஞானிகளேயன்றி "ஒன்றுணரா மடவோர்கள் விலங்குமா முதலனைத்து முயிர் போங்காலை மன்ற மசைத் தலையோடு கீறி யுடல் விடுத்தேகுங்கால்" வழங்கிப் பிறவா நெறியளிக்கு முக்தி நகர மாகியும்,—

நமக்கினிய நகர்" என் றிறைவனால் தேவியாருக்கு வலியுறுத்தப்பட்ட தாகியும்,—

சத்திய சத்தியர் சத்திய சோதகர் சத்திய சங்கற்பர் சத்திய காமர்களாகிய சரியை கிரியா யோக ஞானிகள் வாழப் பெற்ற சத்திய விரத க்ஷேத்திரமாகியும்,—

மகா தேவியினாற் பொழிந்த க்ஷீர புண்ணிய பாகு வேகவதி. அரித்திராம்பு பம்பை கம்பா நதி முதலியவைகளும், சதாசிவ மூர்த்தி சடை முடியினும் உருத்திரமூர்த்தி ரோம கூபங்களினுந் தோன்றிய பஞ்ச தீர்த்தம், சர்வதீர்த்தம், வார தீர்த்தங்களாகிய இஷ்டசித்தி முதலியவைகளும், அஸ்தகிரி முதலியவைகளும் காம கோட்டம், குமர கோட்டம், முப்புராரி கோட்டம் கச்ச பாலய முதலியவைகளும் ஆகிய நதியர் வதாலைய சிரேஷ்டங்களாற் சூழப்பட்ட பாஸ்கர க்ஷேத்திரமாகியும்,—

காமகோடி பில முதலியவைகளும் மா. கடம்பு புளி கூவிள அத்தி காஞ்சி விருக்ஷ முதலியவைகளும், புண்ணியகோடி விமான முதலியவைகளுமாகிய மஹாபில மஹாவிருக்ஷ மஹா புண்ணியகோடி விமானங்களால் முத்திரிக்கப்பட்ட தைஜஸ க்ஷேத்திரமாகியும்,—

பரசிவமும் பராசக்தியும் நிட்களசகளமாய் ஒன்றாய் வேறாயுடனிருக்குஞ் சிவசக்தி க்ஷேத்திர மாகியும்,—

அருவுருவங் குறிகுணங்கள் முதலீறு கட்டு விடலைத்துமின்றிப் பெருமையதாய் நுண்ணிய தாய்ப் பேருணர்வா யானந்தப் பிழம்பாயெங்கும், ஒரு முதலா யழிவின்றி. யோங் கொளியாய் கற்பகம் நிறைந்துளதா யுயிர் கடோறும், விரவி யுடன் றெழிற்படுத்துப் புலங்கொளுத்தி,வீடுய்க் கும் பதி, உய்வண்ணமறியாது இருண்மலத்திரு வினையாற் பிணிப்புண்டு மருளின் மூழ்கிக் கிடக்கும் ஆன்மாக்களை யிருவினைக்குரிய பிறவியுட்படுத்திச் சுவர்க்க நரகாதிகளில் ஊசல் எனச் சுழல்வித்துப் பருவ நோக்கி மெள்ள வினைப்பயனூட்டி அது பின் என்று மணுகா வண்ணங் காத்தற்பொருட்டுக் கச்சபேசம் சித்தீசம் காயா ரோகணம் வீராட்டகாசம் திருவேகம்பம் எனு மைந்திடங்களில் தோற்ற நிலை யிறுதி மறைப்பு அருளென்னும் பஞ்ச கிருத்தியமாகிய ரக்ஷா தாண்டவம் புரியும் பரமாகாச க்ஷேத்திரமாகியும்,— த்வாதிரிம் சத் தாமங்கணிலை பெற இரு நாழி நெற்கொண்டி யற்றச் செய்ய வல்ல தர்ம க்ஷேத்திரமாகியும்,—


அறுபத்து நாலாயிரஞ் சக்தி பீடங்களுட் சிறந்து துர்வாசரால் துதித்த காமராஜ பீட க்ஷேத்திர மாகியும்,—

புவனசார மும்மூர்த்திவாச முதலிய பன்னிரு பெயர் புனைந்து பூவுலகத்திற்கு மூலாதார க்ஷேத்திரமாகியும்,—

கதித்த தாய் தந்தையர் முதாலாயினரைக் காட்டும், மூன்றிடம், அமுதநீர் முதலானவற்றைக் கொடுக்கும், மூன்று வேதிகை நெல்லரியுந் தோறும் மீள மீள விளைதல் முதலிய நான்கு வயல்கள், பிரமன் முதலானவரைக் காட்டும் நான்கு சிங்காதனங்கள், ஒரு நாளத்தில் மூன்று தாமரையைக் காட்டல், முதலிய ஐந்து தடாகங் கள், ஆம்பர விருக்ஷத்திற்குவல மிடங்களிலுலாவு கின்ற புறவு, நாகணவாய்ப்புள் முதலிய ஆறு பறவைகள், முயல் யானையைத்துரத்துதல் முதலிய ஏழு பொதுவிடங்கள், இச் சிதவையெல் லாம் தருதல் முதலிய எட்டுப் பொய்கைகள், தீண்டினரைத் தேவராக்கல் முதலிய ஒன்பது கற்கள், நவரத்னங்களைப் பொழிகின்ற ஒன்பது சோலைகள், மகா பாதகரை ஊமையாக்கல் முதல்ய பத்து சபைகள், பார்த்தவர் நிழல் தோன்றாமற் செய்தல் முதலிய பதினொரு கூவல் கள் ஆகிய வற்புதங்களைக் காட்டும் விம்மித க்ஷேத்திரமாகியும்.

கல்வி மண்டபம், கணக்கறி மண்டபம் கழைக கூத்து மண்டபம், கங்கைகொண்டான் மண்டபம், காயத்ரி மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், ஆடல் மண்டபம, ஆஸ்தான மண்டபம், பாடல்மண்டபம், துலாபாரதானமண்டபம், முத்தி மண்டப முதலியவைகளால் பொன்னுலகினுமழகு பெற்றிருக்கும் அலங்கார நகரமாகியும்

சரியை கிரியா யோகங்களானடையத்தகும் சாலோகாதிபத முத்திகளுட் சிறந்து சிவஞானத் தாலடையப் படுவதாகிய "தன்னிகரில் கேசாந்த முறுமாவி. தன் சிரத்துக் கபாலங் கீறி வன்னியினிற் பூவெனப் போய் வாயுவினிற் புவ்வெனப் போயிரவி மாட்டுப்பின்ன மறு சுவ் வெனப் போய் விண்ணரசின் மகவெனப் போய்ப் பிரமத்தொன்றாய், மன்னிடு மிக்கே சாந்த முக்தியினை" மெய் ஞானிகளேயன்றி "ஒன்றுணரா மடவோர்கள் விலங்குமா முதலனைத்து முயிர் போங்காலை மன்ற மசைத் தலையோடு கிறி யுடல் விடுத்தேகுங்கால்" வழங்கிப் பிறவா நெறியளிக்கு முக்தி நகர மாகியும்,—



கச்சி ஏகம்பன் கோயில்
விண்ணை அளாவும் ராஜகோபுரத்தின் கவின்மிகு தோற்றம்

இடையூறகற்றவும் அளிக்கவும் வந்த விநாயகரும், தந்தை மொழி வந்ததனல் வந்த சுப்பிரமண்யரும் பிரம்ம கபாலத்தில் திருமால் முதலியோருதிர மேற்று பூதங்களுக்குப் பகிர்ந்த வயிரவக் கடவுளும்,—

இறைவன் பேராணை வேண்டி வந்த ஹறி ஹர புத்திரரும், கருடனை யாணை இன்றி அழைத்து வந்த இடப தேவரும்,

சுத்தா சுத்த புவன பதவதிகாரங்களைப் பெற விரும்பிய அஷ்டவித்யேஸ்வரரும் உருத்திர கோடிகளும்,—

முக்தியுலக வாழ்வை விரும்பிய சுவேதன் முதல் இலகுளீசனீருன வெண் ணிறந்த சிவாம்ஸ பூதர்களும்,—

சங்கிழந்த திருமாலும், சக்கரம் வேண்டிய திருமாலும், வைகுண்டம் வேண்டிய திருமாலும், பச்சை நிறமொழிந்து பவள நிறம் வேண்டிய திருமாலும், விஷச் சுவாலை தணிய வேண்டிய திருமாலும், படக முடிக்க வேண்டிய திருமாலும், மத்தள முழக்க வேண்டிய திருமாலும் சிவனடியார்கள் பாலுள்ள முருக வேண்டிய திருமாலும், பொய்யுரை கூறியதனுல் வந்த அனநதவுரு நீங்க வேண்டிய திருமாலும், சிவனெறியைப் பொய்ப் படுத்திய புத்தவுரு நீங்க வேண்டிய திருமாலும், மாமியைக் கொலை செய்ததனுல்வந்த சாபநீங்க வேண்டிய திருமாலும் மாவலிபாற் களவாடிய திங்ககல வேண்டிய வாமனரும், இரணியனு திரபான வெறியைப் போக்கிய கருணை நாடி வந்த நரசிங்கரும், சீதையைக் கொள்வதையே வேண்டி பாசுபதம் வேண்டிய சீராமரும் உதிர தர்ப்பணம் செய்ய விரும்பிய பரசுராமரும். சிவ தீக்ஷை வேண்டிய பலராமரும் கண்ணனும், இறைவனுற் சங்கரிக்க பட்ட மச்ச கூர்ம வராக முதலிய திருமாலவ தாரங்களும், துஷ்ட நிக்ரஹத்தை விரும்பிய கற்கியும், வரதா வரதா வெனப் புகழ்ந்து அப் பெயரோடு புண்ணிய கோடி விமானமும் பெற்று பிரமனைப் படைக்க வேண்டிய அஸ்தகிரி வரதாஜ மூர்த்தியும் சத்திய லோகம் விரும்பிய விதியும், சிருட்டிவேண்டிய அயனும், திருமாலைப் படைக்க வேண்டிய பிரமனும், தன்பதம் வெறுத்துச்சிவ பதம் விரும்பிய இந்திரனும், கீர்த்தியை யபகரித்துச் சென்ற திருமாலை வெல்ல விரும்பிய இந்திரனும், அவிசுகளைச் சுமக்கும் ஆற்றலை விரும்பிய அக்னியும், தண்டத் தலைமை விரும்பிய இயமனும், பூதாதிகளுக்குத் தலைமை விரும்பிய நிருதியும், சலத்திற்குத் தலைவனும் பதம் விரும்பிய வருணனும் தந்த வாகனனெனும் பெயர்விரும்பிய வாயுவும், இழந்த கண்ணையும் இறைவன் றோழமையையும் விரும்பிய குபேர னும், திக்குகளில் சிறந்த ஈசான பதம் விரும்பிய ஈசானருமாகிய அஷ்டதிக்குப் பாலகரும், கண்ணிழந்த பகனும், பல்லிழந்த பூஷாவும், கிரணம் விரும்பிய கதிரவனும், முத்தியின்பம் வேண்டிய தேவகுருவும், மிருதசஞ்சீவிவேண்டிய அசுரகுருவும், கிரகநிலை விரும்பிய பரிதி முதலிய நவக்கிரகங்களும்,—

ஆதியந்தங் காணக் கூடாத, அடி முடியைக் காணவெண்ணிய அபராத நீங்கவேண்டிய அரி பிரமரும்,—

இறைவன் கொள்ளாத அவிர்ப்பாகத்தைத் தாங்கிக்கொள்ள வெண்ணிய வபராதமும், தாங்கக் கொள்ளாத வியத்தை, இறைவன் கொள்ளச்செய்த வபராதமும், தரும்பொன்றை அசைக்க முடியாத தம்மை தலைவராக வெண்ணிய வபராதமும் நீங்கி அவையென்று மனுகா வாறு வேண்டிய தேவர்களும்,—

துவார பாலகராக வெண்ணிய முப்புராரி களும், சிவகணத்தலைமை விரும்பிய வாணனும், முத்தியை விரும்பிய அந்தகன், சலந்தரன், ஓணன், காந்தனும், வன்மைவேண்டிய இரணியன், இரணியாக்ஷன், மாவலி, பிரகலா தன், விரோசனன் முதலிய அசுரர்களும்,—

உற்பத்திக்குங் கொடுப்பதற்குங் கொள் வதற்குந்தானேயாகி எங்குந்தன்னுணை விரும்பிய மன்மதனும், சிவகணத்தலைமை விரும்பிய தக்ஷனும், திருமாலிழந்த சக்கரம் பெற விரும்பிய விடுவச்சேனனும், பாம்புகள் தன்னைக் கண்டஞ்ச வெண்ணிய கருடனும், கருடன் தங்களைக் கண்டஞ்ச இறைவனணியாக வேண்டிய ஆதி சேடன் முதலிய பாம்புகளும், முத்தியின்பம் வேண்டிய மாகாளனும், தெய்வத்தன்மை விரும்பிய ரேணுகையும், கரு மையுங் கிழத் தன்மையு நீக்கிக் கொள்ள விருப்பிய திருமகளும், நீராடவந்த பிரமனேடும், திருமாலோடும் வந்த கலைமகளும், திருமகளும்,—

தமிழ் வழங்கவும், மணக்கோலங் காணவும் விரும்பிவந்த அகத்திய முனிவரும், பால் வேண்டிய உப மன்னிய முனிவரும் வச்சிர தேகம் விரும்பிய ததீசி முனிவரும், நாராயண பரத்துவஞ் செய்த வபராத நீங்க வந்த வியாச முனிவரும், அணிமா முதலிய சித்திகள் வேண்டிய

சித்தர்களும், முத்திவேண்டிய சப்தரிஷிகளும், அரக்கர் குலத்தை நீருக்க வெண்ணிய பராசர ரிஷியும் திரிகால ஞானம்வேண்டிய முனிவர்களும், மகிமையறிவானெண்ணிச் சிவலிங்கத்தின் மேற் குளிகை வைத்திழந்த கொங்கண முனிவரும் பிறப்பை யொழிக்க வெண்ணிய வாமதேவமுனி வரும், இறப்பையொழிக்க வெண்ணிய மார்க் கண்டேயர் முதலிய பல முனிவர்களும், அரம்பை யர்போகம் விரும்பிய துச்சுருள மேளன் மாண்டு கன்னி முதலிய முனிவர்களும், எண்ணிய எண்ணியாங் கெய்திய வர நகரமாகியும் விளங்கு வது இக் காஞ்சிநகரம்,—

இங்ஙனம் ஒப்புவமையின்றி தேசமெல்லாம் புகழ்ந்தாகும் கச்சியின் கண் எவ்வுலகத்தும் எச் சமயத்துந்தனழத் தோங்கி வளர்கின்ற வேதமே மாவிருக்ஷமாய்த் தளிர் பூங்கனியோடு நிழலைச் செய்ய அம்மூலத்தில் "உருவருவணுமலை யுண்மையின்மை மற்றிரு ளொளியன்றி நின்றிலகும்" அகண்ட சோதியாய், "உயிர்ப் பினை யொடுக்கியே விழித்துறங்கும்" யோகியர் "அயர்ச்சியிகைக் கண்ணேக்கும்"

சுடரொளியாய் ஏனையோருள்ளத்துப் "பெரு விரலளவையினுளத்திற் பேணி நின்றுரு வுயிர் முழுவதும் ஆட்டும்," விளக்கொளியாய் ஸ்ரீவித்யா சொரூபியாயும், திரிபுரசுந்தரியாயும், மஹாராஜ்ஞையாயும், விளங்குந்தனது சக்தி யாகிய காமாக்ஷிதேவியினுல் தழுவப்பட்டு குசங்கண முத்திராங்கிதத்தோடு சச்சிதானந்த பிழம்பாய்த் தோன்றி, பிரம்மவிஷ்ணு சுரேந்தரர் கனால் சேவிக்கப்பட்டு "பாயுமால் விடை யிலொரு பாகனே,...காயவின் மதன்பட்டது கம்பமே" என்றும், "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை,....இரவாடும் பெருமானை என் மனத்தே வைத்தேனே" என்றும், "ஆலந்தானு கந்தமுது செய்தானை,...."காலகாலனைக் கம்ப னெம்மானைக் காணக் கண்ணடியேன் பெற்ற வாறே." என்றும் சைவசமயாசாரியார்களாகிய மூவர் முதலிகளாலோதப்பட்டன வாகிய பல தேவாரமாலைகளேற்று, அவருள் திருஞான சம்பந்த சுவாமிகளால் தவங்கிடந்த திருமாலுக்குச் சிவசாரூபமும், "மைப்படிந்த கண்ணுளுந்தானுங் கச்சி மயானத்தான் வார் சடையான். மாசொன்றில்லா, னெப்புடைய னல்ல னொருவனல்ல னோரூரனல்ல னோருவ மனில்லி, யப்படியும் மந்நிறமுமவ் வண்ணமும் வனருளே கண்ணுகக் காணினல்லால், இப்படி யனிந்நிறத்தனிவ் வண்ணத் தனி வனிறை வனென் றெழுதிக் காட்டொணுதே" என்ற திருநாவக்கரசு சுவாமிகளுக்குச் சிவானுபவ விளை வும், "நெய்யும் பாலுந்தயிரும் கொண்டு நித்தம் பூசனை செய்யலுற்ருற், கையிலொன்று காண மில்லைக் கழலடி தொழுதுய்யினல்லால், ஐவர் கொண்டிங் காட்ட வாடியாழ் குழிப்பட்டழுந்து வேனுக், குய்யுமாறென்றருளிச் செய்யீரோண காந்தன்றளியுளீரே," என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு சிவபோகநுகர்தற்கேது வாகிய பொன்னுந்தந்தருளிய ஸ்ரீகாமாட்சியம்பா சமேத ஏகாம்பர நாதராலயத்தில் உலகில் உள்ள சிவனடியார்களாலும், ஏனையோர்களாலும் சிவ தர்ம பரிபாலக ரென்று புகழ்பெற்று வாழும் நாட்டுக்கோட்டை நகரத்தவர்கள் மூலட்டானம், மஹாமண்டபம், அம்மையார் மண்டபம், மாவடிக் கந்தப் பராலய முதலிய சில முக்கியமான திருப் பணிகள் முடித்துவிட்டார்கள். ஏனைய திருப் பணிகளும் நடத்தி வருகின்றுர்கள். திருப்பணி களெல்லாம் முடிந்த பின்னர் மஹா கும்பாபி ஷேகம் நடப்பதென்றுல் கால நீட்டிக்குமெனச் சிவ நேசர்களாகிய கனவான்கள் யாவரும் பிரார்த் தித்தபடியால் விகாரி வருஷம் தை மாதம் 23-ஆம் தேதி ஆதிவாரம், பஞ்சமி திதி, ரேவதி நக்ஷத் திரம், சிவ நாம யோகம் பத்திரவாகரணங் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 7½-க்கு மேல் 8½-க்குள் மீனலக்னத்தில் உத்தம புஷ்கர வேளையில் பரிவார சகிதமாக ஸ்ரீஏகாம்பர நாதர்க்கு அஷ்ட கந்தலேபன மகாகும்பாபிஷேக சம்புரோக்ஷணை நடத்த நிச்சயித்திருக்கின்றுர்கள்.

ஆகையால் அந்த மஹோநந்த மஹாசாந்தி மஹோற்சவ மஹாவைபவத்தைச் சிவநேசச் செல்வர்களாகிய தனவான்கள் யாவரும் இஷ்ட மித்திர பந்துசன சகிதமாக வந்து தரிசித்தும் பேரானந்தப் பெருவாழ்வு பெறும்படி கேட்டுக் கொள்கின்றேம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் மரனுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

விகாரி வருஷம் மார்கழி மாதம் 5-ம் தேதி

விகாரி வருஷம் தைமாதம் 13ந்தேதி குருவாரம் அனுக்ஞை விக்னேசுவரபூஜை.
,, ,, 19ந்தேதி புதவாரம் கலச ஸ்தாபனம்
19ந்தேதி முதல் 22ந்தேதி வரையில் மகாயாகபூஜை
" 23ந்தேதி ஆதிவாரம் காலை மஹாகும்பாபிஷேகம்
,, ,, ,, இரவு தங்க ரிஷபவாகனத் திருவெழுச்சி.

இங்ஙனம்
நகரத்தார், தேவஸ்தான தர்மகர்த்தர்
கா. மு. சுப்பராய முதலியார், ரூம. மெ. லெட்சுமணன் செட்டியார்

1979-ஆம் ஆண்டுத் திருக்குட நீராட்டுப் பத்திரிகை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி

சேக்கிழார் :

எம்பிராட்டி, இவ் ஏழுலகு ஈன்றவள்,
தம்பிரானைத் தனித் தவத்தால் எய்தி,
கம்பை ஆற்றில் வழிபடு காஞ்சி என்று
உம்பர் போற்றும் பதியும் உடையது!

இவ் வளம் தரு பெரும் திருநாட்டிடை, என்றும்
மெய் வளம் தரு சிறப்பினுல் உலகு எலாம் வியப்ப,
எவ் உலகங்களும் உள்ளது என்று யாவரும் ஏத்தும்,
கை விளங்கிய நிலையது காஞ்சி மாநகரம்!

பார்வளரும் காஞ்சிபுரப் பதிவளர் காமாட்சியுடன்,
ஏர்வளரும் தனித் தெய்வம் ஏகம்பன் முதலோர்கொள்,
சீர்வளரும் திருக்குட நீராட்டவற்றைத் தெரிசிக்க,
ஊர்வளரும் அன்பர்களை உவந்தழைக்கும் பத்திரிகை.

சம்பந்தர்:

பிரமனும் திருமாலும் கைதொழப்
பேர் அழல் ஆய பெம்மான்,
அரவம் சேர் சடை அந்தணன்,
அணங்கினொடு அமரும் இடம்,
கரவு இல்வண் கையினர்கள் வாழ்,
கலிக் கச்சி மாநகருள்,
மரவம் சூழ் பொழில் ஏகம்பம் தொழ
வல்வினை மாய்ந்து அறுமே!

மணிவாசகர்:

காசு அணிமின்கள், உலக்கை எல்லாம்
காம்பு அணிமின்கள், கறை உரலை;
'நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக' என்று வாழ்த்தி;
தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திரு ஏகம்பன் செம்பொன் கோயில் பாடி,
பாச வினையைப் பறித்து நின்று,
பாடி, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!

அப்பர்:

நம்பனை, நகரம் மூன்றும்
எரிஉண வெருவ நோக்கும்
அம்பனை, அமுதை, ஆற்றை,
அணி பொழில் கச்சியுள்ளே
கம்பனை, கதிர்வெண் திங்கள்
செம் சடைக் கடவுள் தன்னை,
செம்பொனை, பவளத் தூணை,
சிந்தியா எழுகின்றேனே!

ஐயடிகள் காடவர் கோன்:

என் நெஞ்சே! உன்னை
இரந்தும் உரைக்கின்றேன்;
கன்னம் செய்வாயாகில்
காலத்தால்— வல் நெஞ்சு ஏய்
மா கம்பத்து ஆனை
உரித்தானை, வண்கச்சி
ஏகம்பத்தானை, இறைஞ்சு!

சுந்தரர்:

ஆலம் தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை, அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானை,
சிந்திப்பார்—அவர் சிந்தை உளானை,
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனை, கம்பன் எம்மானை,
காணக் கண் அடியேன் பெற்றவாறே

பட்டினத்தார்:

கல்லாப் பிழையும், கருதாப்
பிழையும், கசிந்து உருகி
நில்லாப் பிழையும், நினையாப்
பிழையும், நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும், துதியாப்
பிழையும், தொழாப் பிழையும்,
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்
கச்சி ஏகம்பனே!

மெய்யன்புடையீர்!

வரலாற்றுப் பெருமையும், புராணச் சிறப்பும் மூர்த்தி, தலம், தீர்த்தம், முதலான வளங்களும் நிரம்பியதும்—, அநாதி காலமாக, சோழர், தொண்டையர், பல்லவர் முதலான மாமன்னர் களின் கோநகராக விளங்கியதும்—, தென்னாட்டுக் கல்வியறிவுப் பீடமாகப் பிறங்கியதும்—, சைவ, வைணவ ஆலயங்கள் நிரம்பிய தனிப்பெரும் கோயில் நகரமாகப் பொலிவதும்—, சைவ வைணவ சமயச் சான்றோர் பலர் திரு அவதாரம் செய்தருளிய புனிதப் பதியாய் மிளிர்வதும்—, காமகோடி பீடாதிபதிகளின திருமடம் செழித்துத் திகழ்வதும்—, முத்தி தரும் ஏழு திரு நகரங்களுள் முக்கியமானதாய் ஒளிர்வதும் ஆன காஞ்சிபுரம் என்னும் அரும் பெரும் திருநகரில்,

திருஞான சம்பந்தப் பிள்ளையார், திருநாவுக் கரசு நாயனர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மணிவாசகப் பெருமான் ஆகிய சமயாசாரியர் நால்வரும் பட்டினத்து அடிகள் முதலிய ஞான குரவர்கள் பலரும் பாடிப் பரவி மகிழ்ந்த ஏகாம்பர நாதர் கோயில் என வழங்குகின்ற கச்சி ஏகம்பம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள விகடசக்கர விநாயகர், மாவடிக் கந்தர், ஏலவார் குழல் அம்மை, நிலாத்துண்டப் பெருமாள் முதலிய பரிவார தெய்வத் திருமேனிகட்கு அஷ்டபந்தனமருந்து சார்த்தியும், ஏகாம்பரநாதர் என்னும் திரு ஏகம்பனுக்கு அஷ்ட கந்த லேபனம் சார்த்தியும் மகா கும்பாபிஷேகம் என்னும் திருக்குட நன்னீ ராட்டுப் பெருஞ் சாந்தி விழாவும்

காஞ்சிக் காமகோட்டத்தில் எழுந்தருளி யுள்ள அன்னை காமாட்சி தேவியின் விமானத் திற்குப் பொன் கவசம் போர்த்தி அதற்கு மகாகும்பாபிஷேகம் என்னும் திருக்குட நன்னீ ராட்டுப் பெருஞ்சாந்தி விழவும்,

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீலஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய சுவாமிகள் அனுக்கிரகத்தாலும் தமிழக இந்து சமய அறநிலை ஆணையர் அனுமதியுடனும் அடியிற் கண்ட விவரப்படி நிகழ உள்ளன.

அன்பர்கள் யாவரும் வந்து, கண்டு, கேட்டு, வணங்கி வழிபட்டு இறையருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

தமிழ்த் தேதி	ஆங்கிலத் தேதி	கிழமை	நேரம் - மணி	நிகழ்ச்சி விவரம்
காளயுக்தி தை—9உ	22—1—1979	திங்கள்	காலை 6-15 மணி	அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தனபூஜை முதலியன
தை—16உ	29—1—1979	திங்கள்	இரவு 6-30 மணி	கும்பஸ்தாபனம் ; யாகபூஜை ஆரம்பம் ; பூரணகுதி.
தை—17உ	30—1—1979	செவ்வாய்	காலை 11-30 மணி	யாகபூசை நிறைவேறி பூரணகுதி
மேற்படி	மேற்படி	மேற்படி	இரவு 8-30 மணி	மேற்படி மேற்படி
தை—18உ	31—1—1979	புதன்	காலை 11-30 மணி	மேற்படி மேற்படி
மேற்படி	மேற்படி	மேற்படி	இரவு 8-30 மணி	மேற்படி மேற்படி
தை—19உ	1—2—1979	வியாழன்	காலை 6-00 மணி	யாக பூஜை முற்றுப் பெற்றுப் பூரணகுதி
மேற்படி	மேற்படி	மேற்படி	காலை 9-15-9-30 மணி	ஏகாம்பரநாதர் திருக்கோவிலில் திருக்குட நன்னீராட்டு
மேற்படி	மேற்படி	மேற்படி	காலை 10-10-30 மணி	காமாக்ஷியம்மன் திருக்கோவிலில் தங்க விமானத் திருக்குட நன்னீராட்டு.
மேற்படி	மேற்படி	மேற்படி	மாலை 3 மணி	மகாபிஷேகம்.
மேற்படி	மேற்படி	மேற்படி	மாலை 5 மணி	திருக்கல்யாணம்
மேற்படி	மேற்படி	மேற்படி	இரவு 7 மணி	ஐம்பெருங் கடவுளர் திருவுலாக் காட்சி

பெருஞ்சாந்திக் குடநீராட்டு யாகசாலை வழிபாட்டுக் காலங்களில் நான்மறையாளர்களும், திருமுறைவாணர்களும், முறைப்படி பாராயணம் செய்வர் ; அறவோர் பெரியோர்களின் சமயப் பேருரைகளும் முத்தமிழ் வித்தகர்களின் சொற்பொழிவு, பட்டிமண்டபம் முதலியனவும் நடைபெறும். விசேட நாதசுரம், பியாண்டு முதலியனவும் உண்டு.

காஞ்சிபுரம்
காளயுத்தி-கார்த்திகை - 20உ
6—12—1978

இங்ஙனம்
நாட்டுக்கோட்டை நகரத்தார்.
காஞ்சிபுரம் திருப்பணிக் குழுவினர்.

காஞ்சியின் பழமை

வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன், ஆசிரியர்: கலைமகள்

காஞ்சிபுரம் என்று வழங்கும் பெருநகர் பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகராக விளங்கியது. அதைப் பெரு நகர் என்று பழைய இலக்கியங்கள் கூறுகின்றன. கச்சி என்றே அதன் பெயர் பழம் புலவர்களால் வழங்கப் பெறும். பல்லவர்களின் குல முதல்வர்களாகிய தொண்டைமான்கள் இருந்து ஆட்சி புரிந்த நகர் அது. **தொண்டைமான் இளந்திரையன்** என்னும் அரசனைக் கடியலூர் **உருத்திரங் கண்ணனார்** என்ற சங்கப் புலவர் சிறப்பித்த **பெரும்பாணாற்றுப்படை** என்ற நூல் பத்துப்பாட்டில் நான்காவது பாட்டாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. 500 அடிகளையுடைய அந்த நெடும் பாட்டில் தொண்டைமானுடைய பல வகைச் சிறப்புக்களும் கச்சி மா நகரைப் பற்றிய செய்திகளும் வருகின்றன.

திருவெஃகா என்பது காஞ்சிபுரத்தின் ஒரு பகுதி. அங்கே திருமால் எழுந்தருளியிருக்கிறார். சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்று தமிழிலும், யதோக்தகாரி என்று வட மொழியிலும் அவர் திருநாமம் வழங்கும். அந்தப் பெருமாளைப் பற்றிய செய்தியும் பெரும்பாணாற்றுப்படையில் வருகின்றது.

கச்சி மா நகரத்தைப் பற்றி உருத்திரங் கண்ணனார் கூறுவதைப் பார்க்கலாம்.

பல வகையான பழங்களிலும் இனிமையால் சிறந்து நிற்கும் பலாப்பழத்தைப் போல, உலகிலுள்ள நகர்கள் எல்லாவற்றிலும் சிறந்து நிற்பது கச்சிமா நகர். நகரைச் சூழ்ந்து செங்கல்லால் அமைந்த பெரிய மதிலும் அதைச் சார்ந்து படை வீரர்கள் தங்கியிருக்கும் படைவீடுகளும் இருந்தன.

அந்நகரில் பாம்புப் படுக்கையில் திருமால் பள்ளி கொண்ட **திருவெஃகா** என்ற இடம் இருக்கிறது. சிறிய மரங்களையுடைய இளமரச் சோலை நகரைச் சுற்றி இருந்தது. குயில்கள் அங்கே பறந்து செல்ல முடியாது, நுழைந்துதான் செல்ல வேண்டும். **காஞ்சி மரங்கள்** பல உள்ள சோலை அது. அந்த மரங்களில் குருக்கத்திக் கொடிகள் படர்ந்து பூக்களை உதிர்க்கும், அந்த மலர்கள் நீரிலே விழுந்திருப்பதைப் பார்த்தால், இடியப்பத்தைப் பாலிலே போட்ட மாதிரி இருக்கும்.

ஆண்களும் பெண்களும் சோலைகளில் விளையாடி மகிழ்ந்தார்கள். எப்போதும் நீர்வளம் மிக்கு இருப்பதனால் அது சொர்க்க பூமி போல இருக்கும். பாணர்கள் யாழை மீட்டித் திருமாலைப் பாடினார்கள்.

சோலைகளில் யானைகளைக் கட்டியிருப்பார்கள். அவற்றிற்குப் பாகர் கவளம் இடுவார்கள். அவர்கள் கவனிக்காமல் இருக்கும்போது குரங்குகள் அதைக் கவர்ந்து செல்லும்.

தேர்கள் ஓடும் பெரிய தெருக்கள் இருந்தன. அவை ஓடின சுவடுகளும், பள்ளங்களும் அங்கங்கே இருக்கும். பல வகையான பண்டங்களைக் கொடுத்தும் கொண்டும் வியாபாரம் நடைபெறும் பெரிய கடைகள் அங்கே இருந்தன. குடிமக்கள் நெருங்கி வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்தார்கள்.

இத்தகைய கச்சி மா நகரில் வீரமும் கொடையும் சிறந்த தொண்டைமான் இளந்திரையன் இருந்து அரசோச்சி வந்தான்.

கச்சி மா நகர்ச் சோலைகளில் காஞ்சி மரங்கள் இருந்தனவாகப் பெரும்பாணாற்றுப் படையில் வருகிறது. அதனால்தான் இந்த நகருக்குக் காஞ்சிபுரம் என்ற பெயர் வந்தது போலும்.

காஞ்சி என்பது மகளிர் இடையில் அணியும் மேகலைக்கும் பெயர். நிலமா மகளின் இடையிலணியும் காஞ்சி போல நடுவாக அமைந்ததால் அப்பெயர் அமைந்தது என்று ஒரு காரணமும் சொல்வது உண்டு.

மணிமேகலை என்னும் தமிழ்க் காப்பியத்தில், மணிமேகலை தன் வாழ்க்கையின் இறுதியில் காஞ்சிமா நகர் வந்து அறவணவடிகளிடம் உபதேசம் கேட்டு அங்கேயே தவம் செய்து கொண்டிருந்தாள் என்ற செய்தி வருகிறது.

அக் காலத்தில் அங்கே இருந்து அரசாண்டவன் தொடுகழற்கிள்ளி என்ற அரசனுடைய

தம்பியாகிய **இளங்கிள்ளி** என்பவன். கச்சி மா நகர் இந்திரனுக்குரிய அமராவதியைப் போல வளமும் எழிலும் சிறந்ததாக விளங்கியது. மழை பெய்யாமையால் அது அழகழிந்து குலைந்தது. அதனால் வருந்திய மன்னனுக்கு ஒரு தெய்வம், "இந்த ஊருக்கு ஒரு பெண்மணி வருவாள். மணிபல்லவத் தீவையும் அங்குள்ள கோமுகி என்னும் பொய்கையையும் போல இங்கே பொழிலும் பொய்கையும் அமைத்து வை. அவள் வந்து மழை பெய்யச் செய்வாள்" என்று அறிவித்தது. இளங்கிள்ளி அப்படியே செய்து மணிமேகலையின் வரவுக்காகக் காத்திருந்தான்.

மணிமேகலை அங்கே வந்து தருமதவனம் என்ற இடத்திலே தங்கியிருந்தாள். மன்னன் அங்கே சென்று அவளை வணங்கி அழைத்து வந்து தான் இயற்றியிருந்த பொழிலையும் பொய்கையையும் காட்டினான். மணிமேகலை மணிபல்லவத் தீவுக்குச் சென்றவள். அங்குள்ள கோமுகி என்னும் பொய்கையில்தான், எடுக்க எடுக்கச் சோறு வளரும் அமுதசுரபி என்ற பாத்திரம் அவளுக்குக் கிடைத்தது.

கச்சி மா நகரில் அரசன் உண்டாக்கின மணி பல்லவப் பொழிலையும் கோமுகிப் பொய்கையையும் கண்டு மனம் மகிழ்ந்தாள் மணிமேகலை; அந்த இடத்தில் புத்த பீடிகையை அமைக்கச் செய்தாள்; மணிபல்லவத்தின் காவல் தெய்வமாகிய தீவ திலகைக்கும் மணிமேகலா தெய்வத்துக்கும் கோவில் கட்டச் சொன்னாள்.

அமுதசுரபியிலிருந்து உணவு எடுத்து யாவருக்கும் கொடுத்து மகிழச் செய்தாள். பிறகு மழை பெய்து வளம் உண்டாயிற்று. அறவண வடிகள் அவள் தங்கியிருந்த அறச்சாலைக்கு வந்தார். அவரிடம் உபதேசம் கேட்டு அங்கேயே பவம் அறுக எனத் தவம் செய்து கொண்டிருந்தாள்.

காஞ்சிபுரத்தில் சைனர்கள் கோயிலும் உண்டு; அந்தப் பகுதியைத் திருப்பருத்திக் குன்றம் என்பார்கள். ஜின காஞ்சி என்றும் பெயர் உண்டு. சிவகாஞ்சி, விஷ்ணு காஞ்சி என்று பெரிய காஞ்சிபுரத்தையும் சின்னக் காஞ்சிபுரத்தையும் சொல்வது வழக்கம். ஆகவே பௌத்தர், சைனர், சைவர், வைணவர் எல்லோருக்கும் உரிய பெரிய நகரம் இது என்பதை அறிந்து கொள்ளலாம்.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளை அருளாளர் என்று வழங்குவர். திருமழிசை ஆழ்வார் விருப்பப்படி திருவெஃகாவில் உள்ள பெருமாள் அவரைத் தொடர்ந்து சென்றார் என்றும் பிறகு அவர் விண்ணப்பித்தபடியே மீண்டும் வந்து சயனித்தருளினார் என்றும் ஒரு வரலாறு உண்டு. அதனால் தான் அந்தப் பெருமாளுக்குச் சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்ற திரு நாமம் உண்டாயிற்றாம்.

காஞ்சிபுரத்தில் நூற்றெட்டுச் சிவத் தலங்கள் இருக்கின்றன என்பர். கச்சிஏகம்பம் என்பது ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில். அதற்குள் கச்சி மயானம் என்ற தலம் இருக்கிறது. மாமரத்தின் அடியில் இறைவர் எழுந்தருளியிருத்தலால் அவருக்கு ஏகாம்பரநாதர் என்ற பெயர் வழங்கும். கம்பர் என்று தமிழில் வழங்கும். வேகவதி, கம்பா நதி என்ற இரண்டும் தலத்துக்குரிய நதிகள், இத் தலத்துக்குப் பழையபுராணம் ஒன்றும்; சிவஞான முனிவரும் கச்சியப்ப முனிவரும் பாடிய காஞ்சிப்புராணமும்; காமாட்சி கல்யாணம் என்ற நூலும், இரட்டையர் பாடிய ஏகாம்பரநாதர் உலாவும், பூண்டி அரங்கநாத முதலியார் பாடிய கச்சிக்கலம்பகமும் வேறு சில பிரபந்தங்களும் உண்டு.

இங்குள்ள முருகன் திருக்கோயிலாகிய குமர கோட்டத்தில் பூசகராக இருந்த கச்சியப்ப சிவாசாரியார் **கந்தபுராணத்தைப்** பாடி அந்தத் திருக் கோயிலில் அரங்கேற்றினார்.

ஆனந்த ருத்திரேசர் கோயில் என்ற சிவாலயம் ஒன்று இங்கே இருக்கிறது. அதற்குக் கச்சியப்பமுனிவர் பல பிரபந்தங்களை அச்சிட்டிருக்கிறார்கள். வண்டு விடு தூது என்ற பிரபந்தத்தை மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் அச்சிட்டிருக்கிறார்கள்.

இந்நகருக்கு நடு நாயகமாக விளங்குவது காமாட்சியம்மன் ஆலயம். அதைக்**காமக்கோட்டம்** என்றும் வழங்குவர்; சங்கராசாரிய சுவாமிகள் இந்தத்திருக் கோயிலில் ஸ்ரீ சக்கரப் பிரதிஷ்டை செய்து இங்கே பலகாலம் தங்கியிருந்தார். அவர் நிறுவிய காமகோடி பீடம் இன்று யாவரும் போற்றும் நிலையில் விளங்குகிறது.

கரிகால் சோழன் வடநாட்டுக்குச் செல்லும் போது இத்தலத்துக்கு வந்து காமாட்சியம்மையைத் தரிசித்துக்கொண்டான். அந்தக் கோயிலில் சாஸ்தாவின் சந்நிதி இருக்கிறது. அவர் கையில் செண்டு என்கிற சவுக்கு வைத்திருக்கிறார். கரிகாலன் அவரை வணங்கி

அவர் கையில் உள்ள செண்டாயுதத்தை வாங்கி வடக்கே சென்றனும்; தன்னை எதிர்த்த மன்னர்களை வென்று இமயமலையை அடைந்து, அதைச் செண்டால் அடித்துத்தன் புலி அடையாளத்தைப் பொறித்தானும். இந்தச் செய்தியை ஒருபழைய பாடல் தெரிவிக்கிறது.

"கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டம்காவல்
மெச்சி இனிதிருக்கும் மெய்ச் சாத்தன் —
கைச் செண்டு
கம்பக் களிற்றுக் கரிகால் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு."

[வளைக்கைச்சி - வளையை அணிந்த கையையுடைய காமாட்சியம்மை. காமக் கோட்டம் - காமாட்சியம்மை திருக்கோயில் இந்தக்கோயிலுக்குக் காவல் தெய்வம் சாஸ்தா, கம்பக் களிறு- அசையும் யானை, செம்பொற்கிரி- மேரு; இங்கே இமயமலை, செண்டு- சவுக்கு; குதிரைச் சாட்டை போன்றது.]

சங்ககாலப் புலவர்களில் மாமூலனர் என்பது ஒரு புலவர் பெயர். அதற்கு மாவின் அடியில் உள்ளவர் என்பது பொருள். ஏகாம்பரநாதர் திருப்பெயர் அது. மாவடியான் என்ற பெயர் இன்றும் வழங்குகிறது. பெண்புலவர் ஒருவர் காமக்கண்ணி நப்பசலையார் என்பது, காமக் கண்ணி என்பதும் காமாட்சி என்பதும் ஒரே பொருளை உடையன. இந்தப் பெயர்களைப் பழங்காலப் புலவர்கள் வைத்துக் கொண்டிருப்பதனுல் அக்காலத்தில் ஏகாம்பரர் வழிபாடும், காமாட்சி வழிபாடும் மக்கள் செய்து வந்தனர் என்பதை உய்த்துணரலாம்.

பிற்காலத்து நூல்களினுல் காஞ்சிபுரத்தைப் பற்றி அறியும் செய்திகள் பல. கல்வெட்டுக் களினுல் தெரியவரும் வரலாற்றுச் செய்திகள் பலப்பல.

காஞ்சியும் கலைகளும்

கு. தாமோதரன்

தமிழ் நாட்டில் உள்ள நகரங்களில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரங்கள் ஒரு சிலவே ஆகும். அவற்றுள் காஞ்சி, உறையூர், பூம்புகார், தஞ்சை, மதுரை ஆகிய நகரங்கள் சிறப்புடையன. இவற்றுள் காஞ்சிமாநகர் தொன்மையான வரலாற்றினையும் கலைச்சிறப்பினையும் பெற்று இன்றுவரை சிறந்து விளங்குகின்றது. தமிழகத்தின் வடபகுதியில் அமைந்துள்ள காஞ்சியம்பதி, பல்லவ, பாண்டிய, சோழ, விசயநகர மன்னர்களாலும் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. காஞ்சியம்பதிக்கு அண்மையில் அமைந்துள்ள மாமல்லபுரம் பல்லவர் காலத்தில் சிறப்புப் பெற்று விளங்கியது. தமிழகத்தின் தலைசிறந்த கலைப் பரப்பைப் படைத்தளித்துள்ளதால் கலையின் சிகரமாக இப்பகுதி விளங்குகிறது.

மாமல்லபுரத்துக் கற்களுக்கு கலைமெருகு கூட்டியவன் யார் ?

மாமல்லபுரத்தில் அமைந்த இயற்கையான குன்றுகளில் பல்வகையான கலைச் சிறப்பின் உயிர் ஓட்டத்தை உண்டாக்கியவர்கள் பல்லவர்கள் என்பதில் ஐயமில்லை. முதலாம் மகேந்திரவர்மன், தமிழகத்தின் முதன்முதலில் குகைக் கோயிலைத் தோற்றுவித்தவன் என்பதில் எந்த விதக் கருத்து மாற்றமும் இல்லை. இவன் காலத்தில் இயல், இசை, நாடகம், சிற்பம் முதலிய கலைகள் சிறப்புற்று விளங்கியதைப் போன்று குடைவரைக் கோயில்களும் உருவெடுத்தன. இவனுடைய மண்டகப்பட்டு வடமொழிக் கல்வெட்டு இதனைக் குறிக்கிறது.

விசித்திர சித்தன் என்ற விருதுப் பெயருடைய இம்மன்னன் பிரமன், சிவன், திருமால் ஆகிய மூவருக்கும் செங்கல், மரம், உலோகம், சுதை இன்றி நூதனமான இந்த ஆலயத்தை எடுத்துள்ளான் என்பது கருத்தாகும். இத்தகைய கோயில்கள் பல்லாவரம், வ ல் ல ம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உருவெடுத்தன. மகேந்திரவர்மன் காலத்துக் குடைவரை எளிமையான நீண்ட சதுர மண்டபம் போன்ற அமைப்பு உடையவை. அவற்றின் தூண்கள் மேலும் கீழும் நான்கு சதுரமுள்ளவை. நடுவில் எண்பட்டை யினைப் பெற்றுள்ளன.

இவனுக்குப் பின்னர் வந்த நரசிம்மவர்மன் குடைவரைக் கோயில்களை மட்டும் எடுக்காமல் குன்றன்ன கோயில்களையும் எடுத்துள்ளான். அமர்ந்த சிம்மம் தாங்கும் தூண்களை இவன் காலத்துக் கட்டடக்கலையில் காணலாம். சிம்மத் தூண்களை உடைய குகைகள் மாமல்லனால் தோற்றுவிக்கப்பட்டன.

மாமல்லனுக்குப் பிறகு இராஜசிம்மன் என்ற பட்டப்பெயரையுடைய இரண்டாம் நரசிம்மன் காலத்தில் காஞ்சி கயிலாயநாதர் கோயில் (மாமல்ல புரத்துக் கடற்கரைக் கோயில் பனமலைக் கோயில்) முதலியன தோற்றுவிக்கப்பட்டன. இவைகள் கட்டடக் கோயில்களாகும்.

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலில் இராஜசிம்மனுடைய கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. இதற்கு இராஜராஜன் காலத்திலும் சிறந்த வழிபாடு நடந்துள்ளது என்பது தெரிகிறது. இக்கோயிலுக்கு இராஜராஜன் பெயரால் ஒரு நந்தவனமும் அமைக்கப்பட்டிருக்கிறது என்பது சிறப்புடையதாகும்.

காஞ்சி கயிலாயநாதர் கோயில் திருச்சுற்றுகளில் சிறு ஆலயங்கள் பல உள்ளன. ஒவ்வொன்றிலும் இராசசிம்மனின் பட்டப் பெயர்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சிறு ஆலயங்கள் அவனுடைய பட்டத்தரசியான ரங்கபதாகை என்பவளால் கட்டப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இதிலுள்ள ஓவியங்கள் பல்லவ கால ஓவியக் க லை க் கு எடுத்துக்காட்டாக உள்ளன. இராசசிம்மன் காலத்தில் கலை, புதுப்பொலிவுடன் விளங்கியது. பலவகையான கலைப்படைப்புக்கள் குறிப்பாக மாமல்லப் பகுதியில் அமைந்தன. இவன் காலத்தில்தான் பெருமளவிற்குக் கட்டடக் கோயில்களும், குடைவரைச் சிற்பங்களும் உருவெடுத்தன. மாமல்லபுரத்துச் சிற்பங்களை உருவாக்

கிய மன்னர் யார் என்ற கருத்துப் பலவாறாக நிலவி வருகிறது. இவற்றுள் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாக சாமி அவர்கள் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் துணைகொண்டு மாமல்லபுரத்துச் சிற்பங்களைத் தோற்றுவித்தவன் 'அத்யந்தகாமன்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற, இராசசிம்மனே என்று குறித்துள்ளார். மாமல்லபுரத்துச் சிற்பங்கள் ஒரே மன்னன் காலத்தில் தோன்றியவை என்றும், பின்னர் அவன் இறந்தவுடன் பாதியிலே நின்றுவிட்டது என்றும் குறிக்கின்றார். பல மேலைநாட்டு அறிஞர்கள் இக்கருத்தினைப் போற்றியுள்ளனர்.

காஞ்சிப் பகுதியில் கலை உருவெடுத்ததற்குக் காரணம்

உலகே போற்றிப் பாராட்டுகின்ற மாமல்ல புரத்துச் சிற்பங்கள் எந்தச் சூழ்நிலையில் உரு வெடுத்தன என்று ஆராயும்போது நமக்கு உணர்ச்சி மேலிடுகிறது. சிற்பக்கலை, கட்டடக் கலை, ஓவியக்கலை இன்னும் உள்ள பலவகைக் கலைகளையும் வெளிப்படுத்த மதமும், அதனுடன் இணைந்த கோயில்களுமே சிறந்த அரங்கங்களாக இருந்திருக்கின்றன என்பது உலக வரலாற்றில் எங்கும் காணக்கூடிய ஒன்று. பல்லவ மன்னர்கள் இந்து மதத்தினையும், சமண மதத்தையும் காழ்ப்பின்றிப் போற்றி வளர்த்ததால் அவர்களது தலைநகரான காஞ்சிப் பகுதி பல வகைக் கலைகள் உருப்பெறுவதற்குக் காரணமாக அமைந்தது, மேலும் கடிகை போன்றவைகள் இருந்ததால் காஞ்சி, சிறந்த கல்விக்கூடமாகவும், கலாசாரம், பண்பாட்டை ஊக்குவிக்கும் இடமாகவும் விளங்கியதால் பல்வேறு துறைகளில் திறன்மிக்கோர் இங்குக் கூடினர். இதன் விளைவாக இங்குப் பலவிதக் கலைகளும் தோன்றிச் செழிப்புடன் வளர்ந்தன.

ஓரிடத்தின் கலையின் சிறப்பிற்கு அங்கு நிலவும் பொருளாதார நிலைமை பெரிதும் காரணமாகிறது. இக்கலை தோன்றிச் சிறந்த இரு நகரங்களுமே இவ்வகையில் சிறப்பிடம் பெறுவன. ஒன்று காஞ்சி, பல்லவர்களின் தலை நகர். அங்குப்பொருளாதார வறட்சிக்குஇடமே இல்லை. மற்றொன்று மாமல்லை. இதுவே அடுத்த சிறப்பு நகரான துறைமுகப்பட்டினம். கடல்மல்லையின் வாணிபச் சிறப்பு பெரிது. கரையில் பெரும் அளவில் கலங்கள் இயங்கிக்கொண்டிருந்தன. இங்கு நிதியின் குவையும், களிறும், குதிரையும் நவமணிகளும் கலங்களில் செல்வதும் வருவதுமாக மிகப் பெருமிதத்துடன் வாணிபம் நடந்தேறியது. இதனைத் திருமங்கை மன்னர்,

> "புலன்கொள் நிதிக் குவையோடு புழைக்கைமா களிற்றினமும்
> நலங்கொள் நவமணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து
> கலங்களியங்கும் மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்"

என்று பாடுகின்றார். இத்தகைய சிறப்புக்கள் இங்குக் கலைகள் பிறந்து செழிக்கக் காரணமாய் இருந்தன.

பல்லவர்களும், சாளுக்கியர்களும் ஓயாத போர் செய்துகொண்டிருந்த பகைவர்கள். நரசிம்மவர்மன் தொடங்கி இரண்டு மூன்று தலைமுறைகளாகப் போர் நடந்துகொண்டே இருந்தது. குடைவரைக் கோயில்களைத் தாம் வெற்றிகொண்ட வாதாபியில் பார்த்தனர் பல்லவர்கள். மங்களேசன் காலத்தைச் சார்ந்த (கி. பி. 6-ஆம் நூற்றாண்டு) குடைவரைக் கோயில்களை அவர்களது தலைநகரான வாதாபியில் காணலாம். அக்கோயில்களின் எழிலையும், கலையையும் கண்ட பல்லவ மன்னன் அது போன்று தன் நாட்டிலும் எழில்மிகு குடைவரைகளைச் செய்ய விரும்பியதில் வியப்பு இல்லை. மகேந்திரன் காலத்திலேயே முதன் முதலில் குடைவரைக் கோயில்கள் அமைக்கும் முறை தமிழகத்தில் தொடங்கிவிட்டதெனினும், இராசசிம்மன் காலத்தில்தான் மாமல்லை முழுதுமாக வளர்ச்சி பெற்றது. இதுவும் அவர்கள் பகுதி, ஏற்றமிகு இக்கலை பரிணமிக்க ஒரு காரணமாயிற்று எனலாம்.

பகைவனையும் ஆட்கொண்ட பல்லவர் கலையின் சிறப்பு

முதலாம் நரசிம்மவர்மனுக்கும், சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசிக்கும் மணிமங்கலம் என்ற இடத்தில் போர் மூண்டது. இங்குச் சாளுக்கிய மன்னனை வெற்றிகொண்டு அவனுடைய முதுகில் பல்லவனின் சின்னத்தைப் பொறித்து வாதாபிவரை துரத்தி அடித்து, அந்நகரை அழித்ததோடு அமையாமல் அங்குக் கல்வெட்டுக்களையும் பொறித்துள்ளான். சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் தீராத பகை இருந்து வந்தது. சாளுக்கிய மன்னன் ஆறும்

விக்கிரமாதித்தன் இரண்டாம் புலிகேசியின் தோல்வியினைக் கண்டு சினங்கொண்டு காஞ்சியின்மீது போர் தொடுத்தான். அப்பொழுது முதல் பரமேஸ்வரவர்மன் காஞ்சிப் பகுதியினை ஆண்டுவந்தான். விக்கிரமாதித்தன் அவனை வெற்றிகொண்டான். இந்த வெற்றி வெறியாக மாறவில்லை. கலையின் சிறப்பினையும், அழகினையும் நிமிர்ந்து பார்க்கின்றான். அவன் வெற்றி அங்கே மண்டியிடுகிறது. பல்லவ மன்னர்கள் பகைவர்களாயிற்றே ; அவர்களை வெற்றிகொண்டவன் நான்தானே, எனவே, அவர்கள் வடித்த கோயில்களையும், சிற்பங்களையும் வெற்றிகொள்ள வேண்டாமா என்ற எண்ணம் அவனுக்கு எழவில்லை. மாறாகப்பல்லவ மன்னர்கள் வளர்த்த கலை அங்கே வெற்றிபெறுகிறது. கயிலாயநாதர் கோயிலுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான் என்று பார்க்கின்றபொழுது, மாமல்லனின் கலைச்சிறப்பு மேம்படுகிறது.

காஞ்சிப் பகுதியில் கட்டடக் கலை

பல்லவர் கட்டடக்கலைச் சிறப்பைக் காஞ்சி, மாமல்லை, உத்திரமேரூர் போன்ற இடங்களில் நன்கறியலாம். குடைவரைகள், ஒற்றைக் கற்றளிகள், கட்டிடக் கோயில்கள் என்று மூன்று பிரிவில் பல்லவர் கட்டடக்கலை அமைகின்றது. கடற்கரையிலும் சரி, மலை உச்சியிலும் சரி, சமபரப்பிலும் சரி வலுவான கட்டடக் கோயில்களை அமைப்பதற்குப்பல்லவர் காலச்சிற்பிகள் திறன் பெற்றிருந்தனர் என்பது சிறப்பானது. பல்லவர்கால சிற்பிகளின் பெயர்கள் பல நொண்டி வீரப்பன் குதிரைத் தொட்டிக் கல்வெட்டுக்களாலும், உத்திரமேரூர் போன்ற கோயில் கல்வெட்டுக்களாலும் அறியக்கிடைக்கின்றன. இராஜராஜனும் பிற சோழர்களும் எழுப்பிய பிரம்மாண்டமான கோயில்களுக்கு முன்னோடியாக கட்டடக் கோயில்களை எழுப்பியவர்கள் பல்லவர்கள்.

சோழர்காலக் கட்டடக் கலைச் சிறப்பைத் திருவொற்றியூர், மதுராந்தகம், வேளச்சேரி, மீஞ்சூர், திருவிடந்தை, பரமேஸ்வரமங்கலம், வடதிருமுல்லைவாயில் முதலிய இடங்களில் சிறக்கக் காண்கிறோம். திருவொற்றியூரில் இராசேநதிர சோழனேதான் ஆணை பிறப்பித்துக் கோயில் எடுத்துள்ளான். தொண்டைமண்டலத்தில் பல இடங்களில் தூங்கானை மாட அமைப்புக்களைக் காண்கின்றோம்.

விஜயநகரர் காலக் கோயில்களும் தொண்டைமண்டலத்தில் காணக்கிடைக்கின்றன. வானளாவும் காஞ்சி ஏகாம்பரர் கோயில் கோபுரம், காஞ்சியை அடைவதற்கு 12 மைல்களுக்கு அப்பாலேயே காட்சி தந்து சிறப்புச் செய்கின்றது. விட்டலருக்கு எடுக்கப்பட்ட விட்டலாபுரம் (கோவளத்திற்கருகில்) கோயில் ஒன்றும் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவரான ஆங்கிலேயர், பிரஞ்சு நாட்டவர்களது கோட்டைகளும், பிரம்மாண்டமான கட்டடங்களும் 18, 19-ஆம் நூற்றாண்டுக் கட்டடங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

சிற்பக்கலை

தொண்டை மண்டலத்தில் சிற்பக்கலையும் சிறந்து விளங்கியது. கூத்தாடுபவர்களின் சிற்பங்கள் காஞ்சி, தான்தோன்றீஸ்வரர் கோயிலில் காணக் கிடைக்கின்றன. (கி.பி.5, 6-ஆம் நூற்றாண்டு). மாமல்லையில் பாறைச் சிற்பங்களாகவும், குடைவரைச் சிற்பங்களாகவும் எழிலுடன் காணக் கிடைக்கின்றன. பல்லவர் சிற்பங்கள் எளிமையான, பட்டையான முப்புரிநூல், உருண்டு உயர்ந்த மகுடம், சப்பையான மூக்கு, அகலமற்ற முகம், பரந்த மார்பு ஆகியவற்றுடன் விளங்குகின்றன. சோழர் காலச் சிற்பங்களும் செப்புத் திருமேனிகளும் இப்பகுதியில் காணப்படுகின்றன. மயிலாப்பூர் சேலமொழியம்மன் கோயிலில் காணப்படும் காளியின் செப்புத் திருமேனியும் திருவொற்றியூர் தக்ஷிணாமூர்த்தி செப்புத் திருமேனியும் எடுத்துக்காட்டுகளாகும்.

விஜயநகர நாயக்கர் சிற்பங்கள் பல்வேறு கோயில்களின் மண்டபத் தூண்களில் காணக் கிடைக்கின்றன.

ஓவியக்கலை

தொண்டை மண்டலப் பகுதியில் ஓவியக் கலையும் சிறந்து விளங்கி உள்ளது. காஞ்சி கயிலாயநாதர் கோயில் ஓவியங்கள் சிறப்புடையவை. பனமலையில் உள்ள பார்வதியின் ஓவியம் மிகவும் எழில்வாய்ந்தது. பல்லவர் கால ஓவியங்கள் அஜந்தாவில் உள்ள ஓவியங்களையும், இலங்கையில் உள்ள சிகிரியா ஓவியங்களை விஞ்சுகின்ற வகையில் அமைந்துள்ளன.

விஜயநகர நாயக்கர் கால ஓவியங்களுக்கு எடுத்துக்காட்டாக வரதராஜப் பெருமாள் கோயில் ஓவியங்கள் விளங்குகின்றன.

சேக்கிழாரும் காஞ்சியும்

டாக்டர் டி. பி. சித்தலிங்கம்,
தமிழ்ப் பேராசிரியர்,
கல்கத்தாப் பல்கலைக் கழகம்.

பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணத்தை இயற்றியவர் சேக்கிழார். அவரது மற்றொரு பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும். இராமதேவர் என்பது அவரது இயற்பெயர். சேக்கிழார் என்பது குடிப்பெயர். அதுவே அவரது பெயராக நிலைத்துவிட்டது.[1]

அக்காலத்துத் தொண்டைநாடு 24 கோட்டங்களைக் கொண்டது. அவற்றுள் ஒன்று புலியூர்க் கோட்டம். அதன் உட்பிரிவுகள் பலவற்றுள் ஒன்று குன்றத்தூர் வள நாடு. அவ்வளநாட்டின் ஊர்கள் பல. குன்றத்தூர் அவற்றுள் ஒன்று. அவ்வூரில் சேக்கிழார் மரபில் பிறந்தவர் திருத்தொண்டர் புராண ஆசிரியராகிய சேக்கிழார்.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே'' யல்லவா? எனவே, சேக்கிழார் சோழமன்னனின் முதலமைச்சராகப் பணியேற்ற பின்பும் தமது நாட்டை மறக்கவில்லை. பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின், திரும்பவும் தொண்டைநாட்டுக்கே வந்து சேர்ந்தார். குன்றத்தூரில், திருநாகேச்சுரம் எனும் பெயரில் ஒரு கோயில் எழுப்பி அங்கேயே வாழ்ந்தார்.

தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடையது. அந்நாட்டின் பெருமையைச் சேக்கிழார் தமது நூலில் மறவாது போற்றுகின்றார். வரலாற்று நூல் எழுதப் புகுந்த அவர், வரம்பு மிகாமல், தமது பிறந்த நாட்டைப் புகழ்கிறார். அதற்காக, வலிந்து கொண்டு வந்து, அதனைத் திணிக்காமல், அந்நாட்டில் தோன்றிய நாயன்மார்களைப் பற்றிக் கூறும்போது அதனை விளக்குகிறார். பிற பகுதிகளில் வாழ்ந்த நாயன்மார்களும் தேவாரம் பாடிய மூவர் முதலிகளும் அந்த நாட்டுக்கு வருகை தந்தபோது, அதன் சிறப்பை, பழமையை, பெருமையை எடுத்துச் சொல்கிறார்.

தொண்டை நாடு

சங்ககாலத்திலேயே தொண்டை நாடு புகழ்பெற்று விளங்கியது. காலம் செல்லச் செல்ல அதன் புகழும் பெருமையும் கூடியனவே தவிரக் குறையவில்லை. புகழோங்கி வந்தது என்பதனைச் சேக்கிழார், 'பேருலகில் ஓங்குபுகழ்ப் பெருந் தொண்டை நன்னாடு'[2] என்றும், 'சொல்வி ளங்குசீர்த் தொண்டை நன்னாடு'[3] என்றும் குறிப்பிடுகிறார்.

அந்த நாடு புகழ்பெற்று விளங்குவதற்கு என்ன காரணம்? உலகத்துள்ள உயிர்களுக்கெல்லாம் தாயான அன்னை தவஞ்செய்யும் பேறு அதற்குக் கிடைத்தது; தன் தலைவரை அவள் தழுவ, அவர் குழைந்தது அந்த நாட்டில் தான்.[4] நடுநிலையிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்கள் வாழ்ந்தது. அந்தத் ''தொன்மை மேன்மையில் நிகழ்பெருந்தொண்டை நன்னாடு''[5] முன்பின் தெரியாத ஒரு வணிகனுக்குத் தாம் அளித்த வாக்கை நிறை வேற்றுவதற்காகப் பழையனூர்ப் பெருமக்கள் தீக்குளித்தனர்; அந்தப் பெருமை இந்த நாட்டுக்கே உண்டு.[6]

கொடுத்த சொல்லைக் காத்தமை மட்டுமா? சிந்தையாலும் பிறருக்குத் தீமை நினையாத பெருமக்கள் வாழ்ந்தனராம். ''தீய என்பன கனவிலும் நினைகிலாச் சிந்தை தூய மாந்தர்வாழ் தொண்டை நாட்டியல்பு சொல்வரைத்தோ?'' என்று வினவுகிறார், சேக்கிழார்.[7]

''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்பட'' வேண்டிய பொருளல்லவா? எனவே ஒழுக்கத்தைப் போற்றிய தொண்டைநாடு உயர்ந்ததில்[8] வியப்பேது? அத்தகைய தொரு நாட்டை அடைவதற்கு அருள் துணை நிற்கவேண்டுமாம். அப்பர் அணியார் தொண்டைத் திருநாட்டில் அருளால் அணைவாராயினர் (314) என்பதாகச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

ஒரு நாட்டுக்குப் பெருமை சேர்ப்பன பல. ஆறு, மலை, நகரம், வாணிகம், தொழில் முதலிய பல்வேறு கூறுகள் ஒரு நாட்டின் பெருமைக்குக் காரணமாக அமையும். தொண்டைநாட்டின் அணியாகத் திகழ்வது பாலாறு. முற்காலத்தில் இது 'பாலி' எனவும் 'பாலியாறு' எனவும் வழங்கப்பட்டது. காவிரியாற்றைப் போன்று அமையாவிட்டாலும், அதற்குள்ள ஓரிரு சிறப்புக்களைக் கொண்டது பாலாறு. அந்நதியின் கரையில் (காவிரிக்கரையில் உள்ளனபோலவே) பல திருக்கோயில்கள் அமைந்துள்ளன. ஆற்றுப் பெருக்கால் அல்லாவிட்டாலும், அருள் நிலையங்களின் அமைப்பால் புகழ்பெற்றது பாலாறு. "செப்பரிய புகழ்ப்பாலித் திருநதி"[9] என்று பெரியபுராணம் அதனைக் குறிப்பிடுகின்றது.

கங்கையாறு வற்றாது வளஞ்சுரப்பது. சிவபெருமான் திருமுடியில் திகழ்வது. அதனைவிடத் தூய்மைவாய்ந்தது காவிரியாறு என்கிறார் ஓர் ஆழ்வார். 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்பது அவர் வாக்கு. அந்த இரண்டு ஆறுகளுக்கும் இல்லாத தனிப்பெருமை பாலாற்றுக்கு உண்டு. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி, வீணே கடலிற்கலப்பதல்ல அவ்வாறு. அது தாயைப்போன்று, மக்களிடம் குறையாத அன்பு கொண்டது. தாய்ப்பால் எப்போதும் இருந்தாலும், அவளுடைய குழந்தை மார்பைப் பற்றி வருடி, வாய்வைத்துச் சுவைத்தால், தான் வேண்டுமளவுக்குச் சுரக்கும். பாலாறும் அப்படிப் பட்டதுதான். வேனிற்காலமாயிருந்தாலும்கூட, உழவர்கள் கைவைத்து ஊற்றுப் பறித்தால், அதில் நீர் சுரக்கும். பின்னர் இருகரையிலும் வாய்க்கால் வழியோடிப் பயிர்நிலங்களில் பாய்ந்து, நிரம்பும்.[10] இதைவிட வேறென்ன சிறப்பு ஓர் ஆற்றுக்கு உண்டு?

காஞ்சி

பாலாற்றால் மட்டுமே தொண்டைநாடு சிறப்புப் பெறவில்லை. காஞ்சி என்னும் ஊர் அங்கே அமைந்திருப்பதே அந்த நாட்டின் பெருமை. இறைவர்தம் பெருமை சொல்லைக் கடந்தது அல்லவா? அந்த இறைவனின்மீது கொண்ட காதலால் உமையம்மை அறம் வளர்த்த பெருமையைக் கொண்ட காஞ்சிமா நகரம் இருப்பதால்தான் அது பெருந்தொண்டை நாடாயிற்று.[11]

காஞ்சி எல்லா யுகங்களிலும் நின்று நிலவுவது.[12] தென்திசை செய்த தவத்தால் தொண்டை நாட்டில் திகழ்ந்தது; எல்லா இடங்களிலிருந்தும் அனைவரும்வந்து அடைய நிற்பது.[13] கரிகாற் பெருவளத்தான் எல்லை வகுத்து அமைத்தது.[14] மழை பொழிவது மற்ற ஊர்களில்; பொன்மழையும் நவமணிகளும் நாளும் பொழிவது காஞ்சியில்[15]; விழாக்கள் நிறைந்தது.[16]; அவ்வூர்த் தெருக்களில் ஒவ்வொரு நாளும் ஒரு திருவிழா இடம் பெறுகிறது.[17] காஞ்சிபுரம் புகழ் நிரம்பியது; பதினான்கு உலகங்களிலும் சிறந்த எல்லையற்ற போகப் பொருள்களும் அழகும் 'நிரம்பு கொள்கலமாக' இது விளங்குகிறது.[18]

ஓசைமிகுந்தது அவ்வூர். ஓடிவருந் தேர்களின் ஒலியும், யானை குதிரைகளின் ஒலியும் நிறைந்து, அவ்வொலிகள் திசைகள் எங்கணும் ஒலிக்கின்றன.[19] 'அணிநீள் காஞ்சி'[20], 'மதில் கொண்டணிந்த காஞ்சி'[21], 'சீர்வளரு மதிற் கச்சி'[22], 'மதில்சூழ் காஞ்சி'[23], 'எயில்சூழ் காஞ்சி, தேனிலவு பொழிற்கச்சி'[24], 'தொல்லைக் கச்சி'[25], 'ஆதிமுதலில் அந்நகர்'[26], 'எயிற் காஞ்சி'[27], 'கன்னி மதில் மணிமாடக் காஞ்சி'[28] என்றெல்லாம் சேக்கிழார் பாடுகிறார். அடியார்களை வரவேற்பதில் காஞ்சிநகர மக்கள் இணையற்றவர்கள். அடியவர்களைக் கண்டதும் அவர்களது முகங்கள் மலர்கின்றன. "காலை மலரும் கமலம்போல் காஞ்சிவாணர் முகமெல்லாம் சால மலர்ந்து களிசிறப்பத் தழைத்த மனங்கள் தாங்குவார்"[29] என்று புகழ்கிறது பெரிய புராணம்.

ஒரு நகருக்குப் பெருமை சேர்ப்பன எவை? அங்குள்ள இறைவன் (மூர்த்தி, திருக்கோயில்), ஊர் அமைந்துள்ள இடமும் வளமும் (தலம்) அங்குப் பாய்கின்ற ஆறு (தீர்த்தம்) ஆகியவையே ஓர் ஊருக்குச் சிறப்பாய் அமைகின்றன. காஞ்சி தலத்தால் பெயர் பெற்றது. நிலம் (பிருதுவி), நீர் (அப்பு), தீ (தேயு), காற்று (வாயு), வான் (ஆகாயம்) ஆகிய ஐம்பூதங்களின் வடிவில் இறைவன் எழுந்தருளியிருக்கிறான். இவை ஐம்பூதத் தலங்கள் (பஞ்சபூதத் தலங்கள்) எனப்படும். இவற்றுள் மணல் வடிவில் இறைவன் காட்சி தருதலால் காஞ்சிபுரம் பிருதுவித் தலம் எனப் புகழப் படுவதாயிற்று. இனி, மூர்த்தியாலும் பெயர் பெற்றுள்ளது. முனிவர், பிறர் முதலிய அனைவரும் வேண்டுவனவற்றையெல்லாம் தந்து, இறைவன் மகிழ்ந்திருக்கும் பல

திருக்கோயில்கள் அங்குள்ளன.[30] திருநெறிக் காரைக்காடு, திருக்கச்சி மயானம், திரு அனேகதங்காவதம், திரு ஓணகாந்தன்தளி, திரு ஏகம்பம், காமகோட்டம் முதலிய பற்பல கோயில்கள் நிரம்பியது காஞ்சி.[31] உண்மையில் கோயில்நகரம் என்பது அதற்கே பொருந்தும். சமயங்கள் பல வளர்ந்தன அந்நகரில். மணிமேகலை அந்நகருக்கு வந்து பல சமயங்களின் கோட்பாடுகளையும் கேட்டாள் என்று மணிமேகலை கூறுகிறது.

திருக்கோயில்கள் பலவற்றுள்ளும் நடுநாயகமாயது திரு ஏகம்பர் திருக்கோயில். அங்குள்ள இறைவன் உமையம்மையால் வழிபாடு செய்யப் பெற்றவர். "மொழிந்த ஆகமத்தின் இயல்பினால் உனை அருச்சனை புரியப் பொங்குகின்றது என் ஆசை என்றிறைஞ்சி"ப் பார்வதி தேவி வழிபாடு இயற்றினள். மாமரத்தின் அடியில் இலிங்கம் அமைத்துப் பூசை செய்ய, இறைவன் விளையாட்டாகக் கம்பை நதியைப் பெருக்க விட்டார். அஞ்சினள்போல அவள் தழுவ, இறைவன் திருமேனியில் வளைத்தழும்பும் முலைச்சுவடும் தோன்றக் காட்சிதந்தார். இதுவே இக்கோயில் சிறப்பு. இதுவே இந்நகரின் சிறப்பு.

"தையல் தழுவக் குழைந்தபிரான் தங்கும்
தெய்வப் பதிஎன்று
வையம் முழுதும் தொழுதேத்தும் மதில்சூழ்
காஞ்சி"

என்று பாடுவார் சேக்கிழார்.

ஏகம்பர்

'ஏகம்பத்துறை எந்தாய் போற்றி'; பாகம் பெண்ணுருவானாய் போற்றி' என்று திருவாசகம் ஒலிக்கிறது. 'ஏகம்பன்காண், அவன் என் எண்ணத்தானே' என்று முழங்குகிறார் திருநாவுக்கரசர். அங்குள்ள சிவபெருமான், ஏகம்பர், கம்பர் (கள்ளக் கம்பர் என்று குறிக்கிறார் சுந்தரர்) ஏகாம்பரர் முதலிய பெயர்களால் வழங்கப் பெறுவர். கோயில், ஏகம்பம், திருவேகம்பம், ஏகாம்பரம் முதலியவாறு குறிக்கப்படுகிறது. கோயிலில் அன்பர் திரண்டு நிற்பர்.[33] "கம்பை ஆறு பெருகிவர ஐயர்தமக்கு மிகவஞ்சி ஆரத் தழுவிக் கொண்டிருந்த மையுலாவு கருநெடுங்கண் மலையாள் என்றும் வழிபடும் கோயில்"[34] அது. "பாவை தழுவக் குழை கம்பர்"[35] அவர், "மாமலையாள் முலைச்சுவடும் வளைத்தழும்பும் அணிந்த மதிப்பூமலிவார் சடையார்" அப்பெருமான்.[36] "உருகிய அன்புள்ளலைப்ப உமைதழுவக் குழைந்தவர்"[37] என்றும், 'வளைத்தழும்பர்'[38] என்றும், "கருவார் கச்சி ஏகம்பர்"[39] என்றும், "மலைவல்லி தழுவக்குழைந்த மணிமேனிப் பெருவாழ்வு"[40], "மங்கை தழுவக் குழைந்தார்"[41] எனவும், "செம்பொன்மலைக் கொடிதழுவக் குழைந்தருளும் திருமேனிக் கம்பர்"[42] எனவும், "திருவேகம்பத் தமர்ந்த செழுஞ்சுடரை"[43] எனவும், திருக்கோயிலை, "தொல்லுலகம் முழுதும் அளித்தழித் தாக்கும் முதல்வர் திரு ஏகம்பம்"[44] எனவும், "அணி ஏகாம்பரம்"[45] எனவும், 'கம்பவாணர் கோயில்'[46] எனவும், "திருக்கச்சி ஏகம்பம்"[47] எனவும் திருத்தொண்டர் புராணம் குறிக்கிறது.

காமகோட்டம்

மாமரத்தின் அடியில் பெருமானை இருத்திப் பூசித்த இறைவி, காஞ்சியிலேயே தங்கி அறம் புரியவேண்டும் என்று வேண்டுகிறாள்.[48] மேலும் இவ்வூருளார் திருவடிக்குத் தவறு செய்வது தவிர வேறு ஏது தீவினை செய்யினும் அதை மறந்து அருள் செய்ய வேண்டும் என்றும் கேட்கிறாள். மாவடிப் பெருமானும் அவ்வாறே அருள் செய்கிறார். அவ்வாறு அம்மை அமர்ந்த இடமே காமகோட்டம். அவள் அங்கே இருந்து அறம் பரப்புவது, 'உயிர்களிடத்தில் ஒழியாத கருணையினால்தான்' என்கிறார் சேக்கிழார். அன்னை தவம் புரிவதற்காகக் காஞ்சி வந்தபோது, அங்கிருந்த பதுமநாகம் ஒன்று அவள் திருவடிமீது தலைவைத்து, நான் வாழும் பிலத்தில் (வளையில்) நீ கோயில்கொண்டருள வேண்டும்' என்று முறையிட்டது. அவ்வாறே செய்வதாகத் தேவி அருள் புரிந்தாள்.[49] 'மன்னுயிர் யாவையும் பல்க நாடு காதலின் நீடிய வாழ்க்கைப் புண்ணியத்திருக் காமக்கோட்டத்துப் பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும்'[50] அத்தாய். இறைவன் அருளிய இருநாழி நெல்கொண்டு முப்பத்திரண்டு அறங்களைச் செய்தாள், காம கோட்டச் செல்வி. அறம் பெருக நின்றதால் அது 'அறப்பெருஞ்செல்வக் காமகோட்டம்' என்கிறார் சேக்கிழார்.[51] இறைவன் ஏகம்பநாதனையும் காமகோட்டத்து இறைவியையும் தேவார முதலிகள் சென்று வணங்கியமையைச் சேக்கிழார் மிக அழகாக விளக்குகிறார்.

அக்கோயிலில் விளங்கும், அன்னையை, 'பிறப்பொழிப்பாள்'[52] என்றும், 'அறம்புரக்கும்

அம்மை'[53] என்றும், 'பெண்ணின் நல்லவளாய பெருங்கொழுந்து'[54] என்றும், "அலகில் நீர் தவத்து அறப்பெருஞ்செல்வி", "அண்டமாம் திருமனைக்கிடு தீபம்"[55] என்றும், "அந்தமின்றி நல்லறம்புரிந் தளிக்கும் அன்னை"[56] என்றும் சேக்கிழார் போற்றுகிறார்.

ஊர்

நெடுமதிலோங்கிய காஞ்சி பெரும்புகழ் பெற்றது. கோயில்கள் நிறைந்தது. எனவே திருவிழாக்கள் பலப்பல. மக்கள் கூட்டமும் பெருகிநிற்கும். என்றும் விழா மாறாத வீதிகள்.[57] ஏனெனில் வீதிதோறும் திருக்கோயில்கள். வீதிகளின் சிறப்பு சொல்லிமுடியாது.[58] வாயில்களில் எல்லாம் தோரணங்கள், திங்களை எட்டும் வகையில் உயர்ந்த மதில்களின் மீது முகில்கள்; வீடுகளில் எல்லாம் மங்கல முழக்கம்; தொண்டர் நிரம்பிய கோயில்களிலெல்லாம் உம்பர்கூட்ட நெருக்கம்.[59] தீ(மை) எங்கிருந்தது? வேள்வியில் மட்டும்தான். பிணி (கட்டுதல்) பெண்கள் சூடும் மாலையில்மட்டுமே; கவலை (பிரிவுகள்) நெடுந் தெருக்களில் மட்டுமே;[60] தளர்வது பெண்கள் இடை; அசைவது மாடக்கொடி; திகைப்பது யானை; பயப்பது (பயன்தருவது) சோலை[61]

அங்கே அடியார்கள் அன்பு வெள்ளம்போல் பரவிநிற்பர். குங்குமச்சேறு வழுக்கும்[62] விண்ணவர் நிரம்பியிருப்பர்; அண்ணலார் என்றும் தங்கியிருப்பர். நண்ணுவார் வேட்கை தவறுமல் நிறைவேறும்.[63] இன்னும் பலப்பல வாறுக, காஞ்சிநகர் பெருமையைத் திருத்தொண்டர் புராணம் எடுத்துரைக்கிறது.


மக்கள் :

'திருவாரூர்ப் பிறந்தார்கள் அனைவரும் சிவனடியார்களே' என்பது போலக் காஞ்சிநகரத்து மக்கள் செய்யும் செய்கைகள் யாவும், சிவனடியை அடைவதற்காகச் செய்யும் முயற்சிகளேயாகும். அவர்கள் உயர்ந்தவர்களாயினும், தாழ்ந்தவர்களாயினும்; அவர்கள் செயல் நல்வினையாயினும் தீவினையாயினும் அவை அறங்கூறும் தவமேயாகும். "கடையராகியும் உயர்ந்தவராயும் காஞ்சி வாழ்பவர் தாம் செய்தீவினையும் தடைபடாது மெய்ந்நெறியடைவதற்காந் தவங்களாகவும், உவந்தருள் செய்தார்"[64] இறைவனே இதனை ஏற்றுக்கொண்டு அருள் புரிந்தபின் காஞ்சிநகர்ப் பெருமையை வேறாக எடுத்து ஓதவும் வேண்டுமோ?

அடிக்குறிப்புகள் :

1. "ஜெயங்கொண்ட சோழமண்டலத்து........ குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் இராமதேவனை உத்தம சோழப் பல்லவராயன்"—திருமழபாடிச் சிவன்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு இவ்வாறு குறிப்பிடுகின்றது. உத்தமசோழப் பல்லவராயன் என்னும் பட்டப்பெயரை அக்காலத்துச் சோழ மன்னன் அவருக்கு இட்டான். 'அருண்மொழித்தேவர்' என்பதும் சிறப்புப் பெயரே ஆகும், என்று சிலர் கருதுவர்.
2. கலியநாயனர் புராணம். 1.
3. வாயிலார்நாயனர் புராணம், 1
4. திருக்குறிப்புத் தொண்டநாயனர் புராணம், 1; 5.
5. மேற்படி 2.
6. மேற்படி 3.
7. மேற்படி 47.
8. "உலகினில் ஒழுக்கம் என்றும் உயர்பெருந் தொண்டைநாடு"—பூசலார்நாயனர் புராணம், 2.
9. திருஞானசம்பந்தர் புராணம், 1002.
10. "பிள்ளை தைவரப் பெருகுபால் சொரி முலைத் தாய்போல் மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்துகை வருட வெள்ள நீர்இரு மருங்குகால் வழிமிதந்தேறிப் பள்ள நீள்வயல் பருமடை உடைப்பது பாலி"—திருக்குறிப்புத் தொண்டநாயனர் புராணம், 22.
11. "கறைவிளங்கிய கண்டர்பாற் காதல்செய் முறைமை, நிறைபுரிந்திட நேரிழை அறம் புரிந்ததனல், பிறையுரிஞ்சு எயிற் பதிபயில் பெருந்தொண்டை நாடு, முறைமை யாமென உலகினில் மிகுமொழி உடைத்தால்"—திருக்குறிப்புத் தொண்டர் புராணம், 5.
12. மேற்படி, 48.
13. மேற்படி, 53.
14. மேற்படி, 85.
15. மேற்படி, 94.
16. 'விழவுமலி திருக்காஞ்சி' மேற்படி 102.
17. வீதிநாளும் ஒழியா விழா அணி, மேற்படி. 104.
18. "வரம்பில் போக வனப்பின் வளமெலாம் நிரம்பு கொள்கலம்" — மேற்படி, 110.
19. மேற்படி, 113.
20. திருநாவுக்கரசர் புராணம், 319.
21. மேற்படி, 321.
22. மேற்படி, 326.

23. திருஞானசம்பந்தர் புராணம், 985.
24. ஏயர்கோன் கலிக்காமநாயனூர் புராணம், 184, 284.
25. மேற்படி, 189.
26. திருக்குறிப்புத் தொண்டநாயனூர் புராணம், 104.
27. சாக்கியநாயனூர் புராணம், 3.
28. ஏயர்கோன் கலிக்காமநாயனூர் புராணம், 283.
29. திருநாவுக்கரசர் புராணம், 318.
30. திருக்குறிப்புத் தொண்டநாயனூர் புராணம், 76.
31. "சீர்வளரு மதிற்கச்சி நகர்த்திரு மேற்றளி முதலாம், நீர்வளரும் சடையவர்தாம் நிலவியுறை ஆலயங்கள்"—திருநாவுக்கரசர் புராணம், 326; 'இறைவன் தாம்மகிழ்ந் தருளிய பதிகள் எண்ணிறந்த அத்திருநகர் எல்லை" திருக்குறிப்புத் தொண்டநாயனூர் புராணம், 76; 'காஞ்சி நெறிக்காரைக் காடிறைஞ்சி....அனேக தங்காவதம் பரவி... திருத்தானங்கள் பணிந்தேத்தி'—திருஞான சம்பந்தர் புராணம், 287; 'காமக்கோட்டம் சென்றிறைஞ்சி.....நீடுதிருமேற்றளிமேவி.... ஏயர்கோன் கலிக்காமநாயனூர் புராணம், 190; 'அனேக தங்காபதத்தை எய்தி.... பிறவுந்தானங்கள்....போற்றி — மேற்படி, 192; 'திருமயானத்தை வலங்கொண்டு' —திருநாவுக்கரசர் புராணம், 325.
32. திருநாவுக்கரசர் புராண்ம், 317.
33. ஈண்டு தொண்டர் பெருகுதிரு ஏகாம்பரம் சென்றெய்தினூர் — ஏயர்கோன் கலிக்காம நாயனூர் புராணம், 186.
34. மேற்படி, 188.
35. மேற்படி, 193.
36. மேற்படி, 29[illegible].
37. திருஞானசம்பந்த நாயனூர் புராணம், 997,
38. திருக்குறிப்புத் தொண்டநாயனூர் புராணம். 125.
39. திருநாவுக்கரசர் புராணம், 322.
40. மேற்படி.
41. ஏயர்கோன் கலிக்காமநாயனூர் புராணம், 287.
42. திருஞானசம்பந்த நாயனூர் புராணம், 994.
43. மேற்படி, 999.
44. ஏயர்கோன் கலிக்காமநாயனூர் புராணம், 285.
45. திருக்குறிப்புத் தொண்டநாயனூர் புராணம், 127.
46. திருஞானசம்பந்தர் புராணம், 993.
47. திருநாவுக்கரசுநாயனூர் புராணம், 329.
48. "ஈறிலாத இப்பதியுனுள் எல்லா அறமும் யான்செய அருள்செயவேண்டும்"—திருக் குறிப்புத் தொணடநாயனூர் புராணம், 69.
49. மேற்படி, 55.
50. மேற்படி, 71.
51. திருஞானசம்பந்தநாயனூர் புராணம், 998,
52. திருககுறிப்புத் தொண்டநாயனூர் புராணம், 69.
53. ஏயர்கோன் கலிக்காமநாயனூர் புராணம், 284.
54. திருக்குறிப்புத் தொண்டநாயனூர் புராணம். 51.
55. திருக்குறிப்புத் தொண்ட நாயனூர் புராணம், 72.
56. மேற்படி, 74.
57. 'வீதி நாளும் ஒழியா விழாவணி' — திருக் குறிப்புத்தொண்டநாயனூர் புராணம், 104.
58. மேற்படி, 99, 100, 101, 102, 103.
59. 'வாயில் எங்கனும் தோரணம் மாமதில், ஞாயில் எங்கனும் சூழ்முகில் நாண்மதி, தோயில் எங்கணும் மங்கலம் தொண்டர் சூழ் கோயில் எங்கணும் உம்பர் குலக் குழாம்"—மேற்படி, 105.
60. "வேதவேதியர் வேள்வியே தீயன; மாத ரோதி மலரே பிணியன; காதல் வீதி விலக்கே கவலைய; சூதமாதவியே புறஞ் குழ்வன" — மேற்படி, 106.
61. 'சாய லார்கள் நுசுப்பே தளர்வன; ஆயமாடக் கொடியே அசைவன, சேய ஓடைக்களிறே திகைப்பன, பாயசோலைத் தருவே பயப்பன' — மேற்படி, 107.
62. மேற்படி, 108.
63. மேற்படி. 109.
64. மேற்படி, 70.



கச்சி ஏகம்பன் கோயில் யாகசாலை



கச்சி ஏகம்பன் கோயில் யாகசாலையில் காஞ்சிப் பெரியவர்கள்

நகரத்தாரும்—காஞ்சியும்

கம்பன் அடிப்பொடி

நகரத்தார், நாட்டுக்கோட்டை நகரத்தார், தனவணிகர், தனவைசியர், மகுட தனவைசிய பூபாலர், ஏழகத்தார், மன்னர் பின்னர் போன்ற பல பட்டப் பெயர்களைக் கொண்டு விளங்குபவர்கள் செட்டிமக்கள் ஆவார்கள்.

இவர்கள் இன்று இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய இரு மாவட்டங்களிலே வசிக்கின்றார்கள். “நாட்டுக்கோட்டை நகரத்தார்” என்பதே இவர்களைக் குறிக்கும் சிறப்பான பட்டப் பெயராகும். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மன்னனோடு மாறுபட்டுக் குடிபெயர்ந்து பாண்டி நாட்டிற்கு வந்ததும் இவர்கள் தங்கியிருந்த ஊர் நாட்டரசன் கோட்டையாகும், நாட்டரசன் கோட்டை நகரமைப்பைக் கூர்ந்து நோக்கினால் அது காவிரிப்பூம்பட்டினத்தின் பண்டைய அமைப்பை அடியொற்றியதாக இருக்கக் காணலாம். ஊரின் நடுவண் சதுக்கமும், அச்சதுக்கத்தில் பல திருக்கோயில்களும் அமைக்கப் பெற்றுள்ள அருமை ஒப்பிட்டு மகிழக்கூடிய ஒன்றாகும்.

நாட்டரசன் கோட்டைதான் கண்ணகி எனும் பத்தினிக் கடவுளுக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டு களவேள்வியாற் சாந்தி செய்து, கொற்கைப் பாண்டியனை இளஞ்செழியன் விழா எடுத்துத் துயர் துடைத்த பதி. அங்குக் கோயில் கொண்ட கண்ணகிதான் கண்ணாத்தாள் ஆக வழிபட்டுவரும் தெய்வம். தமது குலக்கொடியான கண்ணகித் தாய் தன் கற்புத் திறம் காட்டிக் கடவுள் தன்மை எய்திய ஒரு புனிதப் பதிக்கே வந்து குடியேறினர் என்பது பெரிதும் பொருத்தமாகத் தோன்றுகிறது.

நாட்டரசன் கோட்டை நகரத்தார் என்பதே நாட்டுக் கோட்டை நகரத்தார் என்றாயிற்று. அங்கே சில காலம் தங்கி இருந்த பின்னர்,

இளையாத்தங்குடி,
மாற்றூர்,
வயிரவன் கோவில்
நேமங் கோவில்
இலுப்பைக்குடி
சூரக்குடி
வேலன்குடி
[பிள்ளையார் பட்டியும்
இரணிக் கோயிலும்
இளையாற்றக்குடியின் உட்பிரிவே]

ஆகிய எழுவகையாரும் பாண்டிய மன்னர்களிடம் குறிப்பிட்ட ஏழு கோயில்களையும் முழு உரிமையுடன்பெற்று, அங்கு கோயில் குளங்களை வளம்பெறத் திருப்பணி செய்து அந்த ஏழு நகரங்களிலும் மற்றும் பல நகரங்களிலும் குடியேறினர். இப்படி இவர்கள் வளம் பெறும் மாளிகைகளைக் கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்த ஊர்கள் மொத்த எண்ணிக்கை 96. ஆனதனாலே தொண்ணூற்றாறூர் நகரத்தார் எனக் குறிப்பிடப் பெறலாயினர்.

இவர்களின் பூர்வீகம் காவிரிப் பூம்பட்டினம் என்றே பலரும் கருதுவர். பல நூற்றாண்டுகள் காவிரிப்பூம் பட்டினத்தில் பெருவணிகம் செய்து வந்தமையால் அவ் எண்ணமே வலுப் பெறலாயிற்று, நாம் காவிரிப் பூம்பட்டினத்தினராக இருப்போமேல் நம்மை, பட்டினத்தார் என்றே பகர்ந்திடல் வேண்டும். பட்டினம் என்ற சொல் பூம்புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தையே குறிக்கும், “பட்டினப் பாலை” முதலிய அதற்குச் சான்றாகும்.

மாறாக, நம்மை ‘நகரத்தார்’ என்பது எக்காரணத்தால்? ஊர் எனப்படுவது உறையூராகும், பட்டினம் என்பது காவிரிப்பூம் பட்டினமாகும். நகரம் என்பது காஞ்சியாகும், ‘ நகரேஷு காஞ்சி” என்பது காளிதாஸன் கூற்றாகும்.

கரிகால் பெருவளத்தான் காலத்துச் சோழ மன்னன் ஒருவன் நாக நாட்டுக்கன்னியைக் காதலித்தான். காதலித்துக் கடிமணமும் புரிந்து கொண்டான். மணம்புரிந்து கொள்வதற்கு முன், தனக்குப் பிறக்கும் மகனுக்குச்

சோழ நாட்டில் பாதியை வழங்கி அதற்கு அவனை மன்னனுக்க வேண்டுமென்று உறுதிமொழி பெற்றுக் கொண்டான்.

அப்படியே அவன் தன் நாட்டின் வட பாதியை நாக நாட்டு நங்கைக்குப் பிறந்த நம்பிக்கு வழங்கினுன். அந்த நம்பிதான் தொண்டைமான் இளந்திரையன். அவன் பெற்ற நாடு அன்று முதல் தொண்டை நாடு என வழங்கப் பெறுவதாயிற்று. அக் காலத்தில் சோழ நாட்டின் தலைநகர் உறையூரே யாயினும் காஞ்சி துணைத் தலைநகராக இருந்திருக்கிறது.

அந்நாளில் தனவணிகர்கள் காஞ்சியில் வசித்துக் கொண்டிருந்தனர். மாமல்லைத் துறை முகத்தின் மூலம் கடல் வாணிகம் செய்து கொண்டிருந்தனர். உள் நாட்டு வாணிகமும் செழிக்கச் செய்து கொண்டிருந்தனர். நாட்டின் வளத்திற்கு வாணிகமும் ஒரு இன்றியமையாத துறையானதால், சோழ மன்னன் வடபகுதியை மைந்தன் இளந்திரையனுக்கு வழங்கிய பின்னர் தனது துறைமுகமாகக் காவிரிப்பூம் பட்டினத்தை வளர்க்கத் தொடங்கினுன்.

அப்பொழுது பல நாட்டு வாணிகமும் பரக்கச் செய்து கொண்டிருந்த தனவணிகர் களையும் தன்னுடன் இடம் பெயர்ந்து காவிரிப்பூம் பட்டினத்திற்கு வந்து குடியேறும்படி கேட்டுக் கொள்ள, இவர்களும் மன்னன் கருத்துக் கேற்பக் காவிரிப்பூம் பட்டினம் வந்து வாணிபத்தை வளர்த்து வாழ்வாராயினர்.

அக் காலத்து இவர்கள் ''நகரத்தார்'' என்று, அதாவது கச்சியம்பதியிலிருந்து வந்தவர்கள் என்று அழைக்கப் பெறலாயினர். பின்னர் 'நகரம்' என்ற சொல் வாணிகச் சபையை (Chamber of Commerce)க் குறிக்கவு மாயிற்று. இவர்கள் தங்கள் கூட்டம் முழுவதையும் கோவிலிலேயே கூட்டுவதால் நகரம்- நகர் என்ற சொல் கோவிலையும் குறிக்கலாயிற்று.

முன்னர் ஒரு குலமாக இருந்த வணிகர்கள் இன்று பலவேறு இடங்களிலும் பிரிந்து பலவேறு குலத்தவர்கள் போல வாழ்கிறுர்கள். குடந்தை, நாகை, காரைக்கால், செட்டி நாடு, மதுரை மாவட்டம், கோட்டாறு முதலிய பல பகுதிகளில் வசிப்பவர்கள் யாவரும் முன்னர் ஒரு குலமா யிருந்தவர்கள் என்றே கருத வேண்டியிருக்கிறது.

நகரத்தார்களின் மரகத விநாயகர் இன்று நாகர் கோயிலில் கோட்டாறு என்னுமிடத்தில் கோயில் கொண்டிருக்கின்றுர். தேசிவிநாயகப் பிள்ளையார் என்றே அதன் பெயர்வழங்குவதும் சிந்திக்கத் தக்கது. பிள்ளையார்பட்டிப் பிள்ளையார் பெயரும் தேசிவிநாயகப் பிள்ளையார் என்றே கல்வெட்டுக்கள் அனைத்திலும் காணப்படுவது ஒப்புநோக்கி உண்மை உணரற்பாலதாகும்.

இங்ஙனம் காஞ்சியுடன் சுமார் 2000 ஆண்டு கட்கு முன் உள்ள தொடர்பால் கச்சி ஏகம்பம் என்னும் ஏகாம்பரநாதர் திருக்கோயிலைச் சென்ற நூற்றுண்டில் இருபது லட்சம் ரூபாய்கட்கு மேல் செலவு செய்து நகரத்தார்களின் சார்பாகத் தேவகோட்டை மெ. ராம. அ. முத்தையா செட்டி யார் என்ற இராமநாதன் செட்டியார் அவர்களும் தேவகோட்டை ராம. மெ. லெட்சுமணன் செட்டி யார் அவர்களும் பெரும் பக்தியுடன் திருப்பணி செய்து புகழ்பெற்றுர்கள்.

மீண்டும் தற்பொழுது நகரத்தார்கள் பெரும் பொருட் செலவில் திருக்குடநீராட்டு விழாவை 1-2-79-இல் செய்து சிவபுண்ணியத்தைப் பெற்றுர்கள்.

மெய்கண்ட சந்தானம் ஞானப்பிரகாச சுவாமிகள் மடம்

(நிபந்தக்காரத் தெரு, பெரிய காஞ்சிபுரம்,)
இராவ்சாகிப் நல். முருகேச முதலியார், பி. ஏ.,

திருச்சிற்றம்பலம்

கயிலாய பரம்பரையோன் துகளறுபோ
தாறுபவம் காக்கும் பெம்மான்
சயிலாதி மரபுரியோன் திருச்சிற்றம்
பலநாடி ஞானச் சேயோன்
பயிலாசி நிறைஞானப் பிரகாச
குருநாதன் பாதப் பூவும்
குயிலாரும் பொழிற்காஞ்சி மாவடி
நீழலின்வாழ்வும் குறித்து வாழ்வாம்[1]

தமிழ் நாட்டில் மிகத் தொன்மையான சைவ மடம் தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சி புரத்தில் நிலவும் ஸ்ரீ ஞானப்பிரகாசர் மடமாகும். இது சுமார் ஆயிரம் ஆண்டுகட்குமுன்னர் தோற்று விக்கப்பட்ட தென்பர். அதில் வீற்றிருந்த குருக்களுள் ஒரு புராதனர் பஞ்சாக்கர தேசிக சுவாமிகள் என்னும் பெயரினர். அவரே சைவ பூஷணம்[3] என்னும் நூலை அருளியவர். அவர் வழி வந்த குருமரபு அகச்சந்தான கயிலாய பரம்பரை யாக விளங்கி மெய்கண்ட சந்தானமுமாயிற்று, ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனாரின் மாணாக்கர்களுள் ஒருவர் சீகாழி சிற்றம்பலநாடிகள். அவர் துகளறு போதம்[4] என்ற மிகவுயர்ந்த ஞான நூலின் ஆசிரி யராவர். இவர் மாயூரத்திற்கு மேற்கிலுள்ள சித்தர்காட்டில் சமாதிபடைந்தவர். இவரது சீடர் களில் ஒருவரான ஸ்ரீ ஞானப்பிரகாசரே இக்கட்டுரையில் எழுதப்படும் காஞ்சி மடத்தின் ஆதிகுருவாவர். இவர் காலம் சுமார் கி. பி. 1375[5] எனலாம். இவரும் இவருக்குப்பின் வந்த கண்ணப் பரும் சீகாழி சிற்றம்பலநாடிகளுடன் ஒரே காலத்தில் சித்தர்காட்டில் சமாதியுற்றனர். ஆதிஞானப்பிரகாசர் கச்சிக் கலம்பகம்[6] முதலிய நூல்களை இயற்றினர் என்று தொண்டை மண்டல சதகம்[7] கூறுகின்றது. அவர் வரலாற்றின் சில செய்திகள் அச் சதகத்தின் உரையாசிரியரால் எழுதப்பட்டுள்ளதிலிருந்து அறியக் கிடைக்கிறது. ஸ்ரீ ஞானப்பிரகாசர் சாபானுக்கிரக சாமர்த்தியராயும் பேரருளாளரா யும் விளங்கினர் என்ப. அவர் வழிவந்த ஞானசாரியருள் ஒருவர் நாவினால் மழுவேந்திய ஞானப்பிரகாசர் என்னும் சிவனார் ஆவர். (அவரது பெருமையைக் காஞ்சி கச்ச பாலைய தேசிகர் எழுதிய உரையுடையதும் மிகச் சிறந்த கவிநயம் உள்ளதுமாகிய வீரநாராயண விஜயம்[1a] என்னும் நூலில் காணப்படும்.)

காஞ்சியில் மடம் செய்தருளிய ஆதி ஞானப்பிரகாசர் பல அற்புதங்களைச் செய்தருளி சதா காலம் சிவபூஜையிலிருந்து சிவஞான நிஷ்டாபரராய் விளங்கினர். வருணாச்சிரம பேத மின்றி அவர் சீட பரம்பரை பரவலாயிற்று. 6000 கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் இம்மடத்துச் சீடர்களென்று ஒரு பழைய ஏட்டுச் சுவடியி லிருந்து தெரிகிறது.

தொண்டை மண்டலம் பல்லவர் காலத்தில் தொன்று தொட்டிருந்ததேபோல், சான்றோர் நன்னாடாக விளங்கிற்று- இந்த மடம் அந்தக் காலத்திலிருந்தே புராதனச் சிறப்புடையதாய் விளங்கியதாலும் ஈதொன்றே சைவ குரு பரம் பரையைச் சைவ சமயாசாரியர்கள்[7b] காலத்துக் குப் பின்பு சைவ சந்தானாசாரியர்காலம் வரை[8] வளர்த்து வந்ததால் இதற்குத் தொண்டை மண்டல ஆதீனம் எனப்பெயர் வழங்கிற்று. ஆதி ஞானப்பிரகாசர் காலத்தில் அது மெய் கண்டார் மடம் என்றே வழங்கலாயிற்று. மெய்கண்டார் மடம் என்ற பேர் கொண்ட மடம் தமிழ்நாட்டில் வேறு எங்கும் இருந்ததாகத் தெரியவில்லை. இன்றும் இம் மடத்தில் மெய்கண்டேசுவர ஆலயம் ஒன்று உள்ள தைக் காணலாம். ஆதிஞானப்பிரகாசர் சிற்றம் பல நாடிகளின் அருளால் மெய்கண்டார் கோயிலை அமைத்து வழிபட்டார் என்று ஊகிக்கக் கிடக்கிறது. இம்மடத்தில் தமிழ் வழங்கும் தொண்டைமண்டலம், சோழமண்டலம், பாண்டி மண்டலம், கொங்குமண்டலம், சேரமண்டலம் என்ற நாலுதிக்குகளிலிருந்தும் சைவ நன்மக்கள் சமய தீக்ஷை முதலிய தீக்ஷாபேதங்களை வழி வழியாகப் பெற்றுச் சமய வாழ்வெய்தினர்கள்.

இம்மடம் சைவர்கள் எல்லார்க்கும் சாதிபேத மின்றி குருபீடமாகவிளங்கி வந்தது. சிறப்பாகத் தொண்டை மண்டல முதலியார் இனத்தார் எங்கிருந்தாலும் அவர்கட்குக் குருபீடமாக இருந்தது. தொண்டை மண்டலத்திலேயே வாழ்ந்து சந்திரகிரியை ஆண்ட கிருஷ்ண தேவராயரின் முதன் மந்திரியாக இருந்த அம்பி அறம் வளர்த்தான் முதலியார்[9] என்னும் பெருமகனால் வேளாளருக்கு இந்தமடம் குருமடமாகநியமித்துக் கொள்ளப்பட்டதுஎன்பர். பின்னர் புகழ் பெற்ற அரியநாயகம் முதலியா ரால் இம்மடத்தின் கட்டடங்களைப் புதுப்பிக்கப் பட்டதாக செவிவழி செய்தியுள்ளது. தமிழ்நாடு முழுவதிலும் இம்மடத்தைச் சேர்ந்த கிளை மடங் கள் 24 இருந்தன. அதைப் பெயரளவில்கூட இப் போது அறிய இயலவில்லை. இக்காஞ்சி மடம் மிகத் தொன்மையான சைவமடம் என்பதைத் திரு கிரோல் துரை எழுதிய செங்கல்பட்டு ஜில்லா மானுவெலிலிருந்து[10] காணலாம். இப்போது வீற்றிருக்கும் குருமகா சந்நிதானம் 230-ஆம் பட்டத்தினர் என்பதிலிருந்து அதன் தொன்மை இனிது விளங்கும். இவர் பீடாரோகணம் 1978-ஆம் ஆண்டு.

இம்மடத்தின் இடைக்கால வரலாற்றை உருவாக்கப் போதுமான தகவல்கள் எளிதில் கிடைக்கவில்லை. மடத்தின் நிலபுலங்களும் இதர சொத்துக்களும் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்பதிலிருந்து சைவர்கள் இம்மடத்தைப் போற்றிக்காப்பாற்றவில்லை என்று புலனாகிறது. யதாஸ்துகளும் கைசோரவிடப்பட்டன. 1963-ஆம் ஆண்டுக்கு முன்பு சுமார் ஏழு ஆண்டுகள் மடாதி பதியின்றி பாதிக்கப்படலாயிற்று. 1978 வரை வீற்றிருந்த சிவஞானசாத்திர வித்தியாலங்கார விற்பன்னரும், சைவப் பிரகாச பெரு ஒளியாயும் விளங்கிய குருமகா சந்நிதானம் அவர்களின் இடையறு ஞானத்தொண்டினால் இம்மடம் மறந்தவர்கள் மனத்தையும், அறியாதவர்கள் மனத்தையும் கவர்ந்து வருகிறது. ஆனால் பொருளாதார நிலையும் நிர்வாக முறையும் சீர் படவில்லை.

இம்மடத்தின் பெருமை சீடர் குழாத்தின் கணக்கில் உட்படும் சைவப்பெரியார்களின் பெயர்களே சான்றாகும். தெய்வ மிகு சென்னையில் பல சைவப் பெரியார்களும் கல்விமான்களும் இம் மடத்துச் சீடர்களே. மகாவித்துவான் அஷ்டாவ தானம் சபாபதி முதலியார், காஞ்சிபுரம் மகா வித்துவான் சபாபதி முதலியார்[12] பெரும்புலவர் திருமயிலை சண்முகம் பிள்ளை, சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர், தவத்திரு மறைமலை அடிகள், பூவை அஷ்டாவதானம் கலியாணசுந்தரம் பிள்ளை (யதீந்திரர்)[13], காஞ்சி ஆலாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் மோசூர் கந்தசாமி முதலியார், இருக்கம் ஆதிமூலம் முதலியார், கொன்றைமா நகரம் அழகப்ப முதலியார், வல்லை சண்முக சுந்தர முதலியார, ஈக்காடு இரத்தினவேலு முதலியார் (ஜீவியத் திலிருக்கும் பல உயர்ந்த பதவியிலிருக்கும் சீடர்களின் பெயர் ஈண்டு தரப்படவில்லை) முத லாய பெரும் புலவர்களும், சைவ சித்தாந்திகளும்[13] குறிப்பிடத்தக்கவர்கள்.

இடைக்காலத்தில் மதுரை சொக்கநாதருலா[14] பாடிய புராணத் திருமலை நாதர் என்பார் இம்மடத்துச்சீடபரம்பரையைச் சேர்ந்தவர். இவர் காலம் மதுரை வீரமாறன் காலம் கி. பி. 1507. மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் பதிப்பித்த இந்நூலில், 'இவர் காஞ்சிபுரம் ஞானப் பிரகாச மடத்து சிஷ்ய பரம்பரையைச் சார்ந்தவர்'[15] என்று எழுதியுள்ளார். மேலும் திருமலைநாதர் தாமியற்றிய சிதம்பரபுராணத்தில் இதைத் தாமே பகர்ந்துள்ளார்:

"பூமன்னு பொழில் வெண்ணை
மெய்கண்டான் கச்சிப்
புகழ் புனைதத் துவஞான
ப்ரகாசமாய் வந்து
பாமன்ன வுரையென்ன
வவனருளா லவன்றன்
பதம் பரவிச் சிதம்பரப்பாட்
டியலெனப்பேர் வகுத்தான்"[16]

வித்துவான் மு. இராகவையங்கார் பதிப் பித்த சிதம்பரப் பாட்டியலிலும் இதற்குஆதாரம் உளது.

இந்த ஆதீனத்தில் 229-ஆம் மகாசந்நிதான மாக வீற்றிருந்த சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் பூர்வா சிரமத்தில் முத்து சு. மாணிக்கவாசக முதலியார் என்ற பெயருடன் விளங்கி தருமபுர மடத்தைச் சார்ந்த தமிழ்க் கல் லூரியில் பேராசிரியராகவும் முதல்வராகவும் விளங்கினார்கள். தமிழ்ப் புலமையும் சைவ சித் தாந்த அறிவும் நிரம்பப் பெற்றிருந்தார்கள். தொல்காப்பியம், திருக்குறள், சைவ சமய நூல் கள் ஆகியவற்றில் அழுத்தமான பயிற்சி பெற் றிருந்தார்கள். மகிபாலன்பட்டி திருநெறிப் புலவர் சிவநெறிச் செம்மல் திரு. சி. இராம நாகப்பச்

செட்டியார் அவர்கள் தம் தந்தையார் சித்தாந்த மணிமொழிச் செல்வர் சி. ராம இராமசாமிச் செட்டியார் பெயரால் ஏற்படுத்தியுள்ள அறக் கொடையின் சார்பில் சிவஞான சித்தியார் குறித்துத் தொடர் விரிவுரைகள் நிகழ்த்தினர்கள். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பல நூற்றுவர்கட்கு தீக்ஷை அருளியும், தமிழ் நாட்டிலும் கொழும்பு யாழ்ப்பாணம் நகரங்களிலும் சித்தாந்த சாத்திர வகுப்புக்கள் நடாத்தியும் வந்தார்கள்.

மேற்படி சுவாமிகள் காலத்திற்குப் பிறகு திருக்கயிலாய பரம்பரை திருநந்தி மரபு மெய்கண்ட சந்தானம் தொண்டை மண்டல ஆதினம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் மடத்தின் 230-ஆவது குரு மகா சந்நிதானமாக ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் அவர்கள் 12-2-1978 இல் பட்டம் ஏற்றுள்ளார்கள். இவர்கள் சிலமும் பூர்வா சிரமத்திலேயே நல்ல புலமையும் சிவக் கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் பரம்பரை தொடர்பும் உடையவர்கள்.

இந்தத் திருமடம் காஞ்சிபுரத்தில் குமர கோட்டத்திற்கருகாமையில் செமந்தகார வீதியில் அமைதியாக விளங்கிவருகிறது; அடியார்கள் பலர் அதையணுகி மகாசந்நிதானத்தினிடம் பாடம் கேட்டுப் பயனடைகிறூர்கள். 229-ஆவது சுவாமிகள் எழுதிய உரை நூல்கள் வெளிவந்துள்ளன. மடாலயத்தில் மகாலிங்கமும், மெய்கண்டார், சிற்றம்பல நாடிகள் விக்கிரகங்களும் உள்ளன. முன்னே அடைந்த குருமார்களின் சில சமாதிகள் வெளிப்புறத்தில் உள்ளன. எல்லோருக்கும் சித்தாந்த சாத்திர அறிவும், சிவ தீக்ஷையும் பெறக்கூடிய மடம் தமிழ் நாட்டில் தற்போது இஃதொன்றே எனலாம்.

இந்த வரலாற்றுச் சுருக்கம், செய்திகள் கிடைத்த அளவு எழுதப்பட்டுள்ளது. மேலும் ஆதாரமுள்ள குறிப்புக்களையும் திருத்தங்களையும் அன்பர்களும் அறநிலைய நிர்வாகத் துறையினரும் நல்கினால் விரித்து எழுதலாம். இத்திருமடம் நீடு வாழி. குருமகா சந்நிதானங்களின் திருவடிகள் வாழ்க. மெய்யடியார்கள் உய்க.

குறிப்புகள்

1-2. இவை 229-ஆவது குருபீடத்திலிருந்த மகா சந்நிதானத்தால் இயற்றப் பட்டதுதிகள்.

3. இந்நூல் தேவகோட்டை வேதாகம சங்கத்தாரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

4. இந்நூல் தருமை ஆதீனம் மெய்கண்ட சாத்திரம். 1942-ஆம் பதிப்பில் சேர்க்கப்பட்டுளது. சமாஜத்தின் சித்தாந்த சாத்திரம் முதல் பதிப்பில் (1934) முதன் முறையாகச் சேர்க்கப்பட்டது.

5. தமிழ் இலக்கிய வரலாறு 14-ஆம் நூற்றூண்டு (மு. அருணசலம். 1969) பக்கம் 164, பி. சே 3; அபிதான சிந்தாமணி (ஆ. சிங்காரவேலு முதலியார், 1910). பக்கம்-480.

6. இந்நூல் கிடைத்திலது.

7. உரையாசிரியர் பெருநகர் அகத்தீசுவர முதலியார் (1898).

7a. இந்நூல் அச்சில் உள்ளது. (தொண்டை மண்டலத்தை ஆண்ட அரசன் பெயர்) பிற்காலத்து செங்குந்தர் புராணம் இயற்றியவர் வேறு.

7b. ஏழாம் நூற்றூண்டு.

8. பதின்மூன்றும் நூற்றூண்டு.

9. அபிதான சிந்தாமணி, பக்கம் 480.

10. Chingleput District Manual by C. S. Crole (1879)

11. பூர்வாச்சிரமத்தில் இவர் மகாவித்துவான் முத்து சு. மாணிக்கவாசக முதலியார், பீடாரோகணம் 1963 நவம்பர் (விஜயதசமி நன்னள்)

12-13 இவர்கள் இயற்றிய குரு துதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

13a இவர்களைப்பற்றி 19-ஆம் நூற்றூண்டில் தமிழ் இலக்கியம் (மயிலை சீனி வேங்கடசாமி, 1962) என்ற நூலில் கண்டுகொள்க.

14-15 மதுரை சொக்கநாதருலா (1931) பக்கம்-15.

16. ,, ,, பக்கம்-16.

காஞ்சி காமகோடி பீடம்

காஞ்சியில் அமைந்துள்ள இந்த மடம், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இந்துக்களிடமும் ஏனையோரிடமும் புகழ் பெற்று விளங்குகிறது. ஆதி சங்கரருடைய கொள்கைகளையும் அவர் புகழையும் இந்து மதத்தின் பெருமையையும் பழமையையும் சமஸ்கிருதக் கல்வியையும் பரப்புவதில் இந்த மடம் செய்திருக்கும், செய்துவரும் தொண்டுகள் அளவிடற்கரியன.

இந்தப் பீடத்தின் தலைமை அலுவலகம் பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது. அங்கு பிரதிட்டை செய்யப்பெற்றுள்ள ஆதிசங்கரர் திருவுருவத்துக்குப் பெரியவர்கள் நாள்தோறும் செய்துவரும் விரிவான பூஜைகள் மக்கள் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்து வருகின்றன. இந்த மடத்துப் பெரியவர்கள் தலயாத்திரையாகவும் பக்தர்களுக்கு அருள்பாலிக்கவும் பல மாதங்கள் வெளியூர்களில் சுற்றுப்பயணம் செய்வதால், அவர்கள் இருக்கும் இடமே மடத்தின் தலைமையிடம் என்று சொல்லுவது பொருந்தும். இராமன் இருக்கும் இடம் அயோத்தி அல்லவா?

இந்தப் பீடத்தை அலங்கரித்திருப்பவர்கள் தொன்றுதொட்டு எளிய வாழ்வுக்கும் உயர்ந்த சிந்தனைக்கும் பன்மொழிப் புலமைக்கும் சாஸ்திர அறிவுக்கும் வேத ஞானத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிவருகிறார்கள். வேதம் தழைக்கவும் சைவ - வைணவ பேதங்கள் நீங்கவும் இவர்கள் மேற்கொண்டுவரும் முயற்சிகளையும் அனைவரும் அறிவர்.

பிரம்மசாரிகள் (மணமாகாதவர்கள்) மட்டுமே இங்குப் பட்டத்திற்கு வருவது மரபு. அவர்கள் பிஞ்சிளம் பருவத்திலேயே பல சாத்திரங்களும் கற்றுத் துறவு பூணுகின்றனர்.

இந்த ஆதீனத்தின் தலைவர்கள் கால் நடையாகவும், பல்லக்கிலும், படகிலும் மட்டுமே யாத்திரை மேற்கொள்வர். மோட்டார் கார், இரயில் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில்லை.

இன்றுவரை இந்த பீடத்தில் 69 ஆசாரியர்கள் இருந்து வந்திருக்கின்றனர். இவர்களில் நினைவுக்குத் தெரிந்த சிலரையும் அவர்கள் ஆற்றிய செயல்களையும் கூறினால், பீடத்தின் அருமையை அறியலாம்.

65-ஆவது பட்டம் ஸ்ரீமகாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகள் என்ற இளையாற்றக்குடி சுவாமிகள் தம் அருளாட்சிக் காலத்தில் விரிவாக யாத்திரை செய்து சென்ற இடமெல்லாம் வித்துவான்களைக் கூட்டிச் சர்ச்சை செய்தார்கள். வேத பாராயணங்களை நடத்தினார்கள். ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்தார்கள். தக்கவர்களைக்கொண்டு சிவபுராணம் சொல்லக் கேட்பதில் இவர்களுக்கு ஈடுபாடு இருந்தது. நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வாழும் ஊர்களில் விரிவாகச் சுற்றுப் பயணம் செய்தார்கள். கி. பி. 1890-இல் இளையாற்றக்குடியில் இளைப்பாறினார்கள்.

66-ஆவது பட்டம் கலவைப் பெரியவர் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் 1,000 கிராமங்களுக்குமேல் விஜயம் செய்தார்கள். புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சு கவர்னர் இந்த சுவாமிகளுக்கு இராணுவ மரியாதை செய்தார். கலவை என்னும் ஊரில் சுவாமிகள் மகாசமாதி அடைந்தார்கள்.

67-ஆவது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள், பீடமேறி எட்டு நாட்களிலேயே விதேஹமுக்தர்களாகி விட்டார்கள்.

68-ஆவது பீடம் ஆச்சாரிய சுவாமிகளாக இப்போது இருந்துவரும் பெரியவர்கள் 1894-இல் விழுப்புரத்தில் சுவாமிநாதன் என்ற பெயருடன் அவதரித்தார்கள். திண்டிவனத்தில் உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்த போது 1907-ஆம் ஆண்டு பிப்ரவரி ஏழாம் நாளில் துறவறம் ஏற்று 9—5—1907-இல் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளாகப் பட்டம் ஏற்றார்கள். அடுத்த ஆண்டிலேயே திருவானைக்கா சென்று அகிலாண்டநாயகி ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார்கள். அதன்பிறகு இந்த 70 ஆண்டுகளில்

ஓராயிரத்துக்கும் மேற்பட்ட கும்பாபிஷேகங்களை நடத்திவைத்திருக்கிறார்கள்.

ஏழைகளின் பசி தீர, ஒரு பிடி அரிசியை ஒவ்வொரு குடும்பத்திலும் நாள்தோறும் ஒதுக்கி வைக்கவேண்டும் என்பது பெரியவர்களின் அறிவுரையாகும். வரதட்சிணை ஒழிப்பு, பெண்கள் பட்டு ஆடைகளைத் தவிர்த்தல், அனாதைப் பிரேதங்களைக் கண்டெடுத்து அடக்கம் செய்தல் ஆகியவற்றையும் வற்புறுத்தி வருகிறார்கள். திருப்பாவை - திருவெம்பாவை இரண்டையும் பரப்பி வந்திருக்கிறார்கள். இதற்காக மனனப் பயிற்சிப் போட்டிகளை ஊக்கி வருகிறார்கள். நாடெங்கும் இந்து சமய மன்றங்களை அமைக்க ஆதரவு கொடுத்து வருகிறார்கள்.

அகிலாண்டேசுவரி அம்மனுக்குக் காதில் அணியும் தாடகங்கள் ஆதிசங்கரரால் வழங்கப் பெற்றவை என்பது நம்பிக்கை. அவற்றுக்குப் பழுது ஏற்பட்டபோது, 1923-இல் பெரியவர்கள் தாடகங்களைப் புதுப்பித்து அம்பிகைக்கு அணிவித்தார்கள்.

ஆஸ்திகர்களை ஒன்றுபடுத்தவும் வைதிக மதம் மறுமலர்ச்சி பெறவும் மங்கிக் கிடந்த கோயில்களைப் புதுப்பிக்கவும் புதிய கோயில்கள் கட்டவும் மக்களை ஊக்கப்படுத்தி, காஷ்மீரம் முதல் கன்னியாகுமரிவரை தனி மனிதராக நின்று சுவாமிகள் வியத்தகு சாதனை புரிந்துள்ளார்கள்.

கடவுளை ஒப்புக்கொண்ட மதம் எந்த மதமாக இருந்தாலும், அந்த மதத்துக்கு மதிப்புத் தருகிற பரந்த நோக்கம் பெரியவர்களுக்கு உண்டு. அனைத்து மதங்களைப்பற்றியும் நுணுகி அறிந்து கொண்டும் உள்ளார்கள். இதனால் மேலை நாடுகளில் பிற மதங்களைச் சேர்ந்தவர்களாக உள்ள பெரும் அறிஞர்களும் பெரியவர்களைக் கண்டு வணங்கி, இந்து மதத்தைப்பற்றி உரையாடி விளக்கம் பெற்று வருகின்றனர்.

பால் பிரண்டன், ஆர்தர் கோயஸ்ட்லர் போன்ற உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் சுவாமிகளை அணுகி, புராதன வேத மதத்தைப் பற்றித் தெளிவு பெற்றுள்ளனர்.

நம் நாட்டில் மகாத்மா காந்தியடிகளும் குடியரசின் தலைவர்களும், பிரதம மந்திரிகளும், அரசியல் தலைவர்களும், முன்னாள் மன்னர்களும், பிறரும் சுவாமிகளைத் தரிசிக்கத் தவறியதில்லை.

சமஸ்கிருதம், தமிழ் வித்துவான்களுக்கு சுவாமிகள் விருதுகள் வழங்கியும் தோடா, பீதாம்பரம், சால்வை முதலியன அளித்தும் உள்ளனர். இசைப்புலவர்கட்கும் கலைஞர்களுக்கும், பக்தர்களுக்கும் பட்டங்கள் வழங்கியுள்ளார்கள்.

சுவாமிகள் பாதம் படாத ஊரோ, வழிபடாத தலமோ, அவர்கள் நீராடாத புண்ணிய தீர்த்தமோ, பார்த்து மகிழாத மூர்த்தங்களோ பாரத நாட்டில் இல்லை என்று சொல்லலாம். அவர்களுடைய கருணையாலும் பணியாலும் நடமாடும் தெய்வமாக லட்சக்கணக்கான மக்கள் அவர்களைக் கருதுவதோடு அவர்கள் அருள் பாலிக்க வேண்டுமென்றும் விரும்புகிறார்கள்.

தஞ்சையிலுள்ள பங்காரு காமாட்சியின் அடையாளமாக அதன் பாதங்களைப் போலத் தங்கத்தில் செய்து, சுவாமிகள் காஞ்சி காமாட்சி கோயிலில் பிரதிட்டை செய்திருக்கிறார்கள்.

இளையாற்றங்குடியில் ஒரு பெரிய சதசை நடத்தினார்கள். ஆகமப் படிப்புக்கும் கிராமியக் கலைகளுக்கும் ஆதரவு தந்து வருகிறார்கள்.

சென்னையில் திருவான்மியூரில் - பெசன்ட் நகர்ப் பகுதியில் கடலோரமாக மகாலட்சுமி கோயில் நிறுவ யோசனை கூறி, அதை நிறைவேற்றி வைத்தவர்களும் பெரியவர்களே ஆவார்கள்.

இராமேசுவரத்தில், சுவாமிகள் மூன்று தளங்கள் கொண்ட ஸ்ரீ சங்கர மண்டபம் கட்டி ஆதி சங்கரர் புகழையும் அவருடைய நான்கு சீடர்களின் புகழையும் நிலைநாட்டியிருக்கிறார்கள். 12 ஜோதிர் லிங்கத் தலங்களின் காட்சியையும் இங்கே காணலாம். சோடச கணபதி ஆலயம், வெள்ளைச் சலவைக் கல்லில் சரசுவதி ஆலயம் ஆகியவையும் உள்ளன. வேத, பாஷ்ய பாராயண வகுப்புகள் இங்கு நடத்தப்படுகின்றன.

இவ்வாறே காசியிலும் பிரயாகையிலும் பெரியவர்கள், நின்று நிலைக்கும் பணிகளைச் செய்துள்ளார்கள். மொகலாயப் பேரரசர் அக்பர் கட்டிய வரலாற்றுப் புகழ் பெற்ற கோட்டைக்கு அருகே ரூ. 25 லட்சம் செலவில் ஆதி சங்கரர் நினைவு மண்டபம் 31.5 மீட்டர் உயரத்தில் சோழர் கட்டிடக் கலைப்பாணியில் எழுப்பப்பட்டு வருகிறது. இங்கு நாள்தோறும் பூசைகளை நடத்த வேதத்தில் வல்லவர்களைக் காஞ்சிப் பெரியவர்கள் அனுப்பிவைப்பார்கள்.

69-ஆவது பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் இருள் நீக்கி என்ற கிராமத்தில் 18-7-1935-இல் அவதரித்தார்கள். பூர்வாசிரமப் பெயர் சுப்பிரமணியம். தந்தையார் மகாதேவ ஐயர். தாயார் சரசுவதி அம்மாள். 1944 முதல் 6 ஆண்டுகள்

திருவிடைமருதூரில் இருந்து அத்யயனம் முடித்துக்கொண்டார். சமஸ்கிருதத்தில் தேர்ச்சியும் பெற்றார்.

1950 முதல் 1954 வரை உபநிஷத்துக்களையும் இளைஞர் சுப்பிரமணியம் கேட்டு அறிந்தார். 19-3-1954-இல் ஆசிரம உபதேசத்தை ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சுவாமிகள் செய்துவைத்து, இவர்களை அடுத்த பீடாதிபதியாக நியமித்தார்கள். புதுப் பெரியவர்கள் என்ற சிறப்புப் பெயரில் 25 ஆண்டுகளாக மடத்து நிர்வாகத்தை இவர்கள் திறம்பட நடத்தி வருகிறார்கள். (பெரியவர்களோடு சேர்ந்தும், பின்னர்ப் பெரியவர்கள் ஆணைப்படி தனித்தும்) புதுப் பெரியவர்கள் நாடெங்கும் யாத்திரை செய்துள்ளார்கள். நாகரிகமும் நவீன வசதிகளும் இருந்தும் பாத யாத்திரையையே மேற்கொண்டிருக்கிறார்கள்.


அனைத்துலக இந்து சமய மாநாட்டை நடத்தியும், காசி-இராமேச்சுர யாத்திரைகள் செய்தும், வேத சம்ரட்சணப் பாடசாலைகள் ஏற்படுத்தியும், புதிய கோயில்கள் கட்டுபவர்களுக்கும் பழைய கோயில்களில் புதிய மூர்த்திகளைப் பிரதிட்டை செய்ய விரும்புபவர்களுக்கும் ஆலோசனைகளைக் கூறியும் வந்திருக்கிறார்கள்.

காஞ்சி காமாட்சி கோயில் இவர்களுடைய ஆட்சியில் மேலும் சிறப்பாக விளங்கிவருகிறது. காஞ்சியிலும் பிற ஊர்களிலும் எத்தனையோ கோயில்களுக்குப் புதுப் பெரியவர்கள் விருப்பப்படி பக்தர்கள் புதுப்பொலிவு ஊட்டி வருகிறார்கள். காஞ்சி காமாட்சி அம்மன் கோயில் கோபுரத்துக்குத் தங்கத் தகடுகள் அணிவித்துக் குடமுழுக்குச் செய்து அதே நாளில் இறைவன் கோயிலான ஏகாம்பரேசுவரர் கோயிலுக்கும் குடமுழுக்கு நடைபெற ஏற்பாடு செய்தது, புதுப் பெரியவர்களின் சாதனை என்று சொல்லலாம்.

சர்வ தேசக் குழந்தைகள் ஆண்டான இந்த 1979-ஆம் ஆண்டில், சிறுவர் சிறுமியரின் சிந்தனையைச் செம்மைப்படுத்தும் வகையில் தமிழில் சிறுகதை, கட்டுரை, கவிதை, இலக்கியம் வளர வேண்டும் என்ற சீரிய கருத்துடன் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதன்படி 12 முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் உள்ளத்தில் கடவுள் பக்தி, நாட்டுப்பற்று, நல்லொழுக்கம், நற்பண்புகள், வீர உணர்ச்சி முதலியவற்றைப் பதியச் செய்யும் படைப்புக்களுக்குப் போட்டி ஏற்படுத்தி அதில் சிறந்தவர்க்கு நற்சான்றிதழ் வழங்கவும் சுவாமிகள் முன் வந்திருக்கிறார்கள்.

புதுப் பெரியவர்கள் கருத்துக்கிணங்க, செல்வர்களும் நிர்வாகப் பொறுப்புள்ள ஏனையோரும் கோயில் காரியங்களுக்கு வாரி வழங்குவது கண்கூடு. நாள் தவறாமல் தம்மை நாடிவரும் நூற்றுக் கணக்கானவர்களுக்குப் புதுப்பெரியவர்கள் இன்முகத்தோடு ஆறுதல் கூறியும் அறிவுரை நல்கியும் ஆசி வழங்கியும் வருகிறார்கள்.

இந்து சமய நெறி தழைத்தோங்கவும், புண்ணியத் தலங்கள் சிறப்போடு நிலவவும், நாளும் பணிபுரியும் இரு பெரியவர்களையும் வாழ்த்தி வணங்குவோமாக.



கோவிலூர் ஆதீன கர்த்தர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ இராமநாத ஞான தேசிகர் அவர்கள்



தேவகோட்டை
ராம. மெ. அ. இராமநாதன் செட்டியார் அவர்கள்

*1900-ஆம் ஆண்டில் கச்சி ஏகம்பர் கோயில் திருப்பணியை
20 லட்சம் ரூபாய்ச் செலவில் இவர்களும்,
ராம. மெ. அ. லெட்சுமணன் செட்டியார் அவர்களும்
செய்து முடித்துக் கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தார்கள்.
(இவர்கள் படம் மட்டுமே எமக்குக் கிடைத்துள்ளது.)*

19, 20-ஆம் நூற்றுண்டுகளில் காஞ்சியில் நகரத்தார் திருப்பணிகள்

சோமலெ

சென்னையின் முன்னுள் மேயர்
திரு. ஆர். இராமநாதன் செட்டியார் அவர்கள் 1953-இல் வெளியிட்ட
"நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு"
என்ற நூலில் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்
பின்வருமாறு எழுதியுள்ளார்கள்.

திருக்கச்சி ஏகம்பம்

(காஞ்சிபுரம்)

சுவாமி பெயர் ஏகாம்பர நாதர்
அம்மை பெயர் காமாக்ஷியம்மை

"பனிமலைவல்லி தம் தலைவனைத் தழுவத் தவம் செய்த இப்பதியில் உள்ள சிவாலயம் தேவகோட்டை மெ. ராம. அ. முத்தையா செட்டியார் என்ற இராமநாதன் செட்டியார், ராம. மெ. இலக்குமணன் செட்டியார் இவர்களால் ரூபாய் இருபது லட்சம் (20,00,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று விகாரி தை 23-ஆம் தேதி (4-2-1900)-ல் முதற் கும்பாபிடேகம் செய்யப்பெற்றது.

சுரகரீசுரர் கோயில், கண்டனூர் சி. ராம. சு. இராமன் செட்டியார் மனைவி சிவகாமி ஆச்சியால் ரூபாய் எண்ணுயிரம் (8,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று நள வருடம் (1916)-ல் கும்பாபிடேகம் செய்யப் பெற்றது.

கண்டனூர் வயி. ராம. குடும்பத்தாரால் ரூபாய் எழுபதாயிரம் (70,000) செலவில் சில திருப்பணிகள் செய்யப்பெற்றுத் துந்துபி வைகாசி 25-ஆம் தேதி (7-6-1922)-ல் இரண்டாவது கும்பாபிடேகம் செய்யப்பெற்றது.

குறிப்பு: ரூபாய் ஆருயிரம் (6,000) செலவில் கண்டனூர் வயி. ராம. குடும்பத்தினரால் வேத பாடசாலையும், ரூபாய் பதினுயிரம் (10,000) செலவில் தேவகோட்டை ராம. மெ. லெ. குடும்பத்தாரால் ஆகம பாடசாலையும், ரூபாய் மூவாயிரம் (3,000) செலவில் கண்டனூர் ராம. வயி. அரு. குடும்பத்தாரால் பசுமடமும், திருநந்தன வனமும், ரூபாய் பதினுயிரம் (10,000) செலவில் தேவகோட்டை நா. ராம. அ., மெ. லெ. ராம., இவர்களால் குருபூசை மடமும் நிறுவப்பெற்றுள்ளன."

கச்சி ஏகம்பன் கோயிலில் இவ்வாறு நகரத்தார்கள் எண்பது ஆண்டுகளுக்குமுன் செய்த இருபது லட்சம் ரூபாய் இன்றைய விலை மதிப்பில் ரூபாய் நான்கு கோடிக்கும் மேற்பட்டதாகும். இவ்வாறு சிறந்த முறையில் திருப்பணி செய்த இந்தக் குடும்பத்தினருக்கு, பர்மாவில் அரிக்கனில் (அக்யாப்) மிகப்பெரிய அரிசி ஆலை இருந்தது. பர்மாவிலிருந்து அங்கருக்கு நெல்லை வரவழைத்து, அறைத்து, அந்தத் துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பி அந்த நாட்டிலுள்ள ரப்பர், தேயிலைத் தோட்டங்களுக்கு விற்றுவந்தனர். தஞ்சை மாவட்டத்திலும் பல ஊர்களில் நெல் அறைக்கும் ஆலைகள் இருந்தன. இவை தவிர தமிழ் நாட்டில் 30, 40 ஊர்களில் கொடுக்கல் வாங்கல் தொழில் நடந்துவந்தது. இந்த வருமானங்களைக் கொண்டு ஏகாம்பர ஈசுவரர் கோயில் திருப்பணியை நிறைவேற்றினர்கள்.

கச்சி ஏகம்பன் கோயிலில் இரண்டாம் பிராகாரம் என்றும் மாவடிப் பிராகாரம் என்றும் சொல்லப்படும் பிராகாரத்தை, இராமேசுவரம் இராமநாத சுவாமி கோயிலிலுள்ள உலகப் புகழ்

பெற்ற மூன்றும் பிராகாரத்தைப் பின்பற்றி இவர்கள் கட்டினார்கள்.

அர்த்த மண்டபத்தில், சரவிளக்குகளின் இருபுறங்களிலும் திருப்பணியாளர் ராம. மெ. லெட்சுமணன் செட்டியாரும் மேற்படியார் மனைவி திருமதி அல்மேலு ஆச்சியும் பாவை விளக்கு வடிவத்தில் அமைந்து கச்சி ஏகம்பனை வழிபடுகின்றனர்.

இத்திருப்பணியாளர்கள் 16-கால் மண்டபத்துக்கு எதிரில், (திருப்பணி வேலைக்கு வாங்கிய கற்களில் மீதம் இருந்தவற்றைக்கொண்டு ஒரு கட்டிடம் கட்டி அதில் வேதபாடசாலை நடத்தி வந்தார்கள். 1930-ஆம் ஆண்டு வரை அந்தப் பாடசாலை இயங்கி வந்தது. அதன் பிறகு ஒருவரும் வேதம் படிக்க முன்வரவில்லை. அக்கட்டிடத்தில் இப்போது காஞ்சிபுரம் நகராண்மைக் கழகத்தார் ஒரு நடுநிலைப் பள்ளியை நடத்தி வருகிறார்கள்.

ராம. மெ. அ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் 1910-ஆம் ஆண்டு அளவில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்கள்.

ராம. மெ. அ. இராமநாதன் செட்டியார் அவர்கள் 1920 அளவில் சிவபதவி அடைந்தார்கள். இவர்கள், காரைக்காலுக்கு அருகேயுள்ள தக்களூர் என்ற பாடல் பெற்ற தலத்திலும் திருப்பணி செய்திருக்கிறார்கள்.

ராம. மெ. லெ. ராம. குடும்பத்தார் செய்துள்ள ஏனைய திருப்பணிகள் வருமாறு:

1927-ஆம் ஆண்டு—திருவேட்டக்குடி
(காரைக்கால் அருகே)

„ „ —திருவைகல்
(தஞ்சை மாவட்டம்)

1930 „ —திலதைப்பதி
(தஞ்சை மாவட்டம்)

இக்குடும்பத்தார் கச்சி ஏகம்பன் கோயில் திருப்பணியை இனிது நிறைவேற்றிவைத்ததைத் தொடர்ந்து, இவர்களுடைய அடுத்த பங்காளிகளான மெ. லெ. மெ. குடும்பத்தார் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயிலையும், பெரிய மைனர் மெ. அரு. நா. குடும்பத்தார் திருக்காளத்தி கோயிலையும், ராம. மெ. சித. குடும்பத்தார் திருமருகல் கோயிலையும் போட்டி போட்டுக்கொண்டு திருப்பணி செய்து லட்சக்கணக்கான ரூபாய்களை வாரி இறைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கச்சி ஏகம்பன் கோயில் திருப்பணியைச் செய்த குடும்பத்தினரின் வழியினரில் இப்போது காஞ்சிபுரத்துத் தொடர்பு உடையவர் திருவாளர் மெ. லெ. ராம. லெ. நாராயணன் என்பவர் ஆவார். இவர் 1972-ஆம் ஆண்டு மே மாதத்தில் பெரிய காஞ்சிபுரத்தில் பாவாசாகிப் தெரு (கச்சி ஏகம்பன் கோயில் இராசகோபுரத்துக்கு எதிரில் உள்ளது) 22-ஆம் இலக்கம் உள்ள கட்டிடத்தில் விஜயலெட்சுமி கல்யாண மண்டபம் கட்டி அதை நடத்தி வருகிறார்.

அர்த்த சாமத்தில் பள்ளியறைப் பூசைகளுக்குப் பால் நைவேத்ய பிரசாதக் கட்டளைக்கும் இவர் திட்டம் வைத்து, அதை நடத்தி வருகிறார்.

சமய குரவர் நால்வர், சேக்கிழார், பட்டினத்தார் திருநட்சத்திரங்களில் அபிஷேக ஆராதனை அன்னதானங்களையும் திரு. நாராயணன் 1973 முதல் செய்து வருகிறார்.

குமரகோட்டம்

இக்கோயில், கண்டனூர் வயி. ராம. குடும்பத்தினரால் திருப்பணி செய்யப்பெற்று இராட்சச ஆனி 11-ம் நாள் (25—7—1915) கும்பாபிடேகம் நடத்தப்பெற்றது.

குறிப்பு: கண்டனூர் வயி. ராம. குடும்பத்தாரால் திருநந்தனவனமும், வேத பாடசாலையும், பசுமடமும், தேவகோட்டை ராம. மெ. லெ. குடும்பத்தாரால் ஆகம பாடசாலையும் நிறுவப் பெற்றுள்ளன.

திருக்கச்சிநெறிக் காரைக்காடு

சுவாமி பெயர் காரைத் திருநாதேசுரர்
அம்மை பெயர் காமாட்சியம்மை

இத்தலச் சிவாலயம், தேவகோட்டை ராம. மெ. மெய்யப்ப செட்டியாரால் ரூபாய் எழுபதினாயிரம் (70.000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றுச் சித்தார்த்தி தை 21-ஆம் நாள் (3—2—1920) கும்பாபிடேகம் நடத்தி வைக்கப் பெற்றது.

1903-ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற 'கம்பைச்சந்நிதி முறை' என்ற நூலில் ஆசிரியர் எழுதிய முகவுரை

"திருத்தொண்டை நாட்டின்கண் பிரதான க்ஷேத்திரமாகிய ஸ்ரீகாஞ்சி மாநகரத்தில் ஸ்ரீஏகாம் பரநாதர் திருவாலயத்துக்கும் ஸ்ரீ காமாட்சி யம்மையார் திருவாலயத்துக்கும் நடுவில் சோமாஸ்கந்த சொரூபமாய் விளங்கும் ஸ்ரீகுமர கோட்டத்துள் அடியார்கள் உய்யும்பொருட்டு வீற்றிருந்தருளும் ஸ்ரீவல்லி கல்யாணசுந்தர ராகிய ஸ்ரீசுப்பிரமணியப் பெருமானுக்கு நித்திய நைமித்திய பூசை முட்டின்றி நடந்தேறும்படி செந்நெல் விளையும் நன்னிலக்கிராமம் ஒன்று பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று எண்ணி, யான் இரங்கோன் நகரத்துக்கு வந்து அந்நக ரத்திற் கனதன வியாபாரஞ் செய்கின்றவரும் பாண்டிநாட்டில் வசிக்கும் எழுகுலவணி கோத்தமர்களென்று பெயர்பெற்றவரும் சிவாலயத் திருப்பணி கும்பாபிஷேகம் நித்தி யநைமித்திய பூசைக் கிராமம் திருவிழா சொர்ண விமானம் வெள்ளிவாகனம் தங்கவாகனம் முதலான பல தருமங்களைத்தலங்களுணும் புரிகின்றவரும் சிவபக்தி குருபத்தி அடியார் பத்தி பூதிசாதன ஒழுக்கமுடையவரும் ஆகிய நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களென்னும் நகரத்தாரை அடுத்து வினவிக்கொள்ள, நகரத் தாரும் அன்புகொண்டு முயற்சித்துப் பதினா யிரம் ரூபா சேகரித்து இன்னும் பதினாயிரம் ரூபா முயற்சித்துக் கிராமபிரதிட்டை இன்னும் செய்யச் சிரத்தையுடையவர்களாயிருக்கின்றனர். இத்தகு புண்ணியசீலர்கள் இரங்கோன் நகரத்திற்கு அடுத்த ஸ்ரீகம்பையென்னும் நகரத்தில் ஸ்ரீகாஞ்சிக் குமரகோட்டம்போல் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசுப்பிரமணியக் கடவுள் திருவாலயம் நூதன, மாக அற்புத கோபுர முதலான அளவில்லாத திருப்பணியும் நித்திய பூசை திருவிழாவும் இனிது நடத்திக்கொண்டு வருகின்ற தரும வான்கள் ஆதலால், அவர்கள் அத்திருக்கம்பை முருகப்பிரான்மீது பிள்ளைத்தமிழ் ஒன்று பாட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள, அவர்களது அன்பைநோக்கி அக் கந்தபிரான்திருவருளால் எனது சிற்றறிவுக்கு எட்டியமட்டும் சந்நிதி முறையாகப்பாடி யச்சிடுவித்தனன். அதில் சொற்குற்றம் பொருட்குற்றம் அச்சுக்குற்றம் இருந்தபோதினும் அறிஞர்கள் பொறுத்துத் திருத்திக்கொள்ளுவதுமன்றி தயைகூர்ந்து தெரிவிப்பார்களாயின் பின்வரும் பதிப்பில் சேர்த்து அச்சிடுவிக்கின்றனன். வந்தனம்.

இங்ஙனம்

காஞ்சிபுரம் குமரகோட்டம்

சோணாசல பாரதி."

இவ்வாறு நகரத்தார்களால் வழங்கப்பெற்ற தொகையைக் கொண்டு, சின்னக் காஞ்சிபுரத் துக்கு அருகே வேடல் என்ற கிராமம் 1904-இல் வாங்கப் பெற்றது. 1968 வரை இது, குமர கோட்டத்தின் அனுபவத்தில் இருந்தது.

அந்த ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரம், செங்கற்பட்டிலிருந்து காஞ்சிபுரத் துக்கு மாற்றப்பெற்றது. மாவட்ட ஆட்சியாளர் (கலெக்டர்) அலுவலகமும் ஏனைய அலுவலகங் களும் கட்டுவதற்காகவும் அந்த அலுவலர் களுக்கான குடியிருப்புக்களைக் கட்டுவதற் காகவும், தமிழ்நாடு அரசினர் இந்தக் கிராமத்தை ஒப்புக்கொண்டு, கோயிலுக்கு தஸ்திக் அலவன்சாக ஆண்டுதோறும் ரூபாய் 2,066—05 கொடுத்துவருகின்றனர்.

காஞ்சியில் உள்ள கோயில்கள்

(காஞ்சியில் கட்டப்பெற்றுள்ள கோயில்களை எண்ணி முடியாது. அவற்றுள் முக்கியமான எழுபத்து ஒன்றின் பெயர்களை அகர வரிசையில் தந்திருக்கிறோம்.)

1. அகஸ்தீஸ்வரர் கோயில்
2. அபிராமீஸ்வரர் கோயில்
3. அமரேஸ்வரர் கோயில்
4. அஷ்டபுஜர் கோயில்
5, ஆலடிப்பிள்ளையார் கோயில்
6. இராமேஸ்வரர் கோயில்
7. இலட்சுமணேஸ்வரர் கோயில்
8. இறவாஸ்தானீஸ்வரர் கோயில்
9. ஈயகோஷ்டேஸ்வரர் கோயில்
10 ஈஸ்வரர் கோயில் (செவிலிமேடு)
11. உருத்ரகோடீஸ்வரர் கோயில்
12. உலகளந்த பெருமாள் கோயில்
13. ஏகாம்பரேஸ்வரர் கோயில்
14. ஐராவதேஸ்வரர் கோயில்
15. ஓணகாந்தேஸ்வரர் கோயில்
16. கங்கணேஸ்வரர் கோயில்
17. கங்காதரேஸ்வரர் கோயில் (ஒக்கப் பிறந்தான் குளக்கரையில் உள்ளது)
18. கங்காதேஸ்வரர்கோயில் (சர்வதீர்த்தக் குளத்தின் கீழ்க்கரையில் உள்ளது)
19. கச்சபேஸ்வரர் கோயில்
20. கடகேஸ்வரர் கோயில்
21. கயிலாசநாதர் கோயில்
22. காசி விசுவநாதர் கோயில்
23. காஞ்சி காமாட்சி கோயில்
24. காயாரோஹணேஸ்வரர் கோயில்
25. காளிகாம்பாள் கோயில்
26. குமரகோட்டம்
27. சங்குபாணிப் பிள்ளையார் கோயில்
28. சதுர்புஜ ஆஞ்சநேயர் கோயில்
29. சித்தீஸ்வரர் கோயில்
30. சித்ரகுப்தசுவாமி கோயில்
31. சிவாஸ்தானம் கோயில்
32. சிதேஸ்வரர் கோயில்
33. தவளேஸ்வரர் கோயில்
34. தான்தோன்றீச்வரர் கோயில்
35. திருக்கச்சி அநேக தங்காவதம்
36. திருக்கச்சி மயானம்
37. திருக்காஞ்சீஸ்வரர் கோயில்
38. திருக்காளீஸ்வரர் கோயில்
3?. திருமேற்றளி (பிள்ளையார் பாளையம்)
40 திருவெட்டானீஸ்வரர் கோயில்
31. தீபப்பிரகாசர் கோயில்
42. தீர்த்தேஸ்வரர் கோயில்
43. திரிகால ஞானேச்வரர் கோயில்
44. நகரீச்வரர் கோயில்
45. நரஸிம்மஸ்வாமி கோயில்
46. பச்சைவண்ணர் கோயில்
47. பவழவண்ணர் கோயில்
48. பணாதரேஸ்வரர் கோயில்
4-. பாகீஸ்வரர் கோயில் (தும்பவனம்)
50. பாண்டவப் பெருமாள் கோயில்
51. பிறவாஸ்தானீஸ்வரர் கோயில்
52. புண்யகோடீஸ்வரர் கோயில்
53. பெருமாள் கோயில் (செவிலிமேடு)
54. மச்சேஸ்வரர் கோயில்
55. மணிகண்டேஸ்வரர் கோயில்
56. மதங்கேஸ்வரர் கோயில்
57. மல்லிகார்ஜுனன் கோயில்
58. மன்மதேஸ்வரர் கோயில்
59. மாண்டகன்னீஸ்வரர் கோயில்
60. முக்தீஸ்வரர் கோயில் (அடிஸன் பேட்டை, காந்தி ரோடு)
61. முக்தீஸ்வரர் கோயில் (கீழண்டை ராஜ வீதி)
62. யதோத்காரி கோயில்
63. வரதராஜர் கோயில்
64. வரதராஜர் சந்நிதி ஆஞ்சநேயர்கோயில்
65. வளத்தீஸ்வரர் கோயில்
66. வியாஸ சாந்தாலீஸ்வரர் கோயில்
67. விருபாட்சீஸ்வரர் கோயில் (உத்திர மேரூர்ச் சாலை)
68. வைகுண்டப் பெருமாள் கோயில்
69. வைரவேஸ்வரர்(சோமீச்வரர்) கோயில்
70. ஜுரஹரேஸ்வரர் கோயில்
71. ஹிரண்யேஸ்வரர் கோயில்

கச்சி ஏகம்பம்

நடன. காசிநாதன்,
பதிவு அலுவலர், தொல்பொருள் ஆய்வுத்துறை

முன்னுரை

இற்றைக்குச் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சீரும் சிறப்பும் பெற்ற முக்கிய தமிழ்நாட்டுத் தலங்களுள் ஒன்ருக இக்கச்சி யேகம்பம் திகழ்ந்திருக்கிறது. உறுதியாகப் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலம் முதல் இது புகழோடு விளங்கியிருக்கிறது என்று கூற லாம்.

காஞ்சிபுரம் பல சமயத்தைச் சார்ந்த மக்க ளுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்திருக்கிறது. சமணர்களும் பௌத்தர்களும் செல்வாக்கோடு காஞ்சியில் திகழ்ந்த காலத்தும் சைவமும், வைணவமும் புறக்கணிக்கப்பட்டு விடவில்லை. சைவசமயமும் செல்வாக்கோடு தழைத்தோங்கி யுள்ளது என்பதை நிலைநாட்டுவதுதான் காஞ்சி யில் இன்று காணப்பெறும் சிவாலயங்களாகும்.

கோயிலின் பழமை

காஞ்சியில் உள்ள சிவாலயங்களில் மிகப் பழமையானது ஊரின் மேற்புறத்தே உயர்ந் தோங்கி நிற்கும் கயிலாசநாதர் கோயில்தான் என்று கூறுவர் வரலாற்ருசிரியர்கள். இக் கோயில் இரண்டாம் நரசிம்மவர்மனுகிய இராஜ சிம்மன் காலத்தியதாகும். ஆனுல், அவன் காலத்துக்கு முந்திய கல்வெட்டுக்கள் பொறிக்க பெற்ற தூண்கள் ஏகாம்பரேசுவரர் கோயிலின் வெளித்திருச்சுற்றில் இருந்தது கண்டு பிடிக்கப் பெற்று, சென்னை அருங்காட்சி யகத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதிலிருந்துகயிலாச நாதர் ஆலயம் அமைக்கப்படுவதற்கு முன்ன மேயே சிறு மண்டப அளவிலோ அல்லது சிறு கோயில் அளவிலோ, ஒருசிவன் கோயில் ஏகாம்ப ரேசுவரர் கோயிலில் இருந்திருக்கிறது என்பது வெள்ளிடைமலை. அச்சிறு கோயில் செங்கற் களால் கட்டப்பெற்று முன் மண்டபம் மட்டும் கருங்கல் தூண்களால் தாங்கப்பெற்றதாகக் கூட இருந்திருக்கலாம்.

பல்லவர் காலக் கோயில்

மேலும் இவ்வேகாம்பரேஸ்வரர் கோயிலி லேயே சிவகங்கை தீர்த்தத்தின் மேற்குக் கரை யில் ஒரு பல்லவர் கால ஆலயம் உள்ளது. இவ்வாலயமும் மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்ததாக இருந்தாலும் இருக்கலாம் என்றும் இராஜ சிம்மன் காலத்ததே என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. எவ்வாரு யினும் காஞ்சி ஏகாம்பரேசுவரர் ஆலயம் கி.பி. ஏழாம் நூற்ருண்டின் தொடக்க காலத்தி லேயே தமிழ்நாட்டின் முக்கிய சிவத்தலங்களுள் ஒன்ருக ஆகிவிட்டது என்று உறுதியாகக் கூற லாம்.

திருக்கச்சி மயானம்

இக்கோயிலின் பழமைக்கு மற்ருெரு எடுத்துக்காட்டு, தற்பொழுது ஏகாம்பரேசுவர ரின் கொடிக்கம்பத்தின் அருகில் மேற்குப் பக்கம் பார்த்திருக்கும் சிறு சந்நிதியாகும். இச்சந்நிதி அப்பரின் திருவாக்கில் '**திருக்கச்சி மயானம்**' என்று பாடப்பட்டுள்ளது.

'மைப்படிந்த கண்ணுளும் தானும் கச்சி
மயானத்தான்
வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருருவனல்லன்
ஓரூரனல்லன்
ஓர் உவமனில்லி''

என்று கச்சிமயானத்திறைவனை வாயாராப் புகழ்ந்திருக்கிருர் அப்பர் பெருமான். ஆகவே, அப்பர் காலமான கி.பி. ஏழாம் நூற்ருண்டு முதலே இங்குக் கோயில் இருந்திருக்கிறதென்பது தெளிவு.

இக்கச்சிமயானம் இன்று முற்காலச் சோழர் கலைப்பாணியில் அமைக்கப்பட்டுத் திகழ்கிறது. இதன் உண்ணுழி, அர்த்தமண்டபச் சுவர்களில்

உள்ள மாடங்களில் காணப்பெறும் சிற்பங்களின் கலையழகும், கோயில் கட்டடக் கலைப் பாணியும் முற்காலச் சோழர்தம் கலைப் படைப்பைப் பறை சாற்றுவனவாக விளங்குகின்றன.

பிற்காலச் சோழர் பணி

பிற்காலச் சோழர் காலத்திலும் இக்கோயிலுக்குப் பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன், மூன்றும் இராஜராஜன், மூன்றும் குலோத்துங்கன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன. காகதீய மன்னன் கணபதி காலத்திய கல்வெட்டு ஒன்றுகூட இங்கு உள்ளது. இம் மன்னர்கள் காலத்தில் பலர் இவ்விறைவனுக்குப் பல்விதக் கொடைகள் அளித்து மகிழ்ந்திருக்கின்றனர். பிற்காலச் சோழர் காலத்தில்தான் தற்போதைய ஏகாம்பரேசுவரர் சந்நிதி அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

நூற்றுக்கால் மண்டபம்

பிற்காலச் சோழர் காலத்தில் இக்கோயிலில் நூற்றுக்கால் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அம்மண்டபம்தான் விஜயநகர மன்னர்கள் காலத்தில் ஆயிரக்கால் மண்டபமாக மாற்றப்பட்டுவிட்டது போன்று தெரிகிறது. ஏனெனில் தற்போதைய ஆயிரக்கால் மண்டபத்திலும், ஏகாம்பரேசுவரர் சந்நிதியினை ஒட்டி வடபக்கம் அமைந்துள்ள திருச்சுற்று மாளிகையிலும் காணப்படும் தூண்கள் சிலவற்றில் ''விக்கிரம சோழன்'' நூற்றுக்கால் மண்டபம்'' என்றும் ''குலோத்துங்கன் நூற்றுக் கால் மண்டபம்'' என்றும் எழுதப்பட்டிருப்பதாகும்.

விஜயநகர மன்னர் புக்கராயர் காலத்திலும் இவ்விறைவனுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

இராஜ கோபுரம்

விஜயநகரப் பேரரசன் கிருஷ்ணதேவராயர் காலத்தில்தான் இக்கோயிலின் தெற்கு வாயில் ராஜகோபுரம் அமைக்கப்பட்டிருக்கிறது. இக் கோபுரம் கி.பி. 1509-ஆம் ஆண்டில் எழுப்பப் பட்டதென்பதை விதானத்தில் காணப்பெறும் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் உள்ள இரு கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

வண்ண ஓவியம்

விஜயநகர மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட ஆயிரக்கால் மண்டபத்தின் விதானத்தில் வண்ண ஓவியம் தீட்டப்பட்டிருக்கிறது. அவ்வோவியம் இன்று அழிந்து காணப்பட்டாலும் தன் கலையழகை, விஜயநகரகாலத்து ஓவியர்களின் கலைத்திறமையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. அதேபோன்று ஏகாம்பரேசுவரர் சந்நிதியை அடுத்து வடக்குப் பக்கம் காணப்படும் திருச்சுற்று மாளிகையிலும் விஜயநகர காலத்து ஓவியம் தீட்டப்பட்டிருக்கிறது. விஜயநகர காலத்து ஓவியத்துக்கே உரிய மஞ்சள், காவி, கருமை ஆகிய நிறங்களிலும் உருவங்களின் விழிகள் நீண்டும், உருவங்கள் பக்க வாட்டிலும் வரையப்பெற்றுள்ளன.

ஆயிரக்கால் மண்டபத்தின் முன்னால்உள்ள யானைகட்டி மண்டபத்தின் விதானத்திலும் வண்ண ஓவியம் காணப்படுகிறது. மேற்போக்காகப் பார்த்தால் நாயக்கர் கால ஓவியம் மட்டும் கண்ணுக்குப் புலப்படும். ஆழ்ந்து பார்த்தால் விஜயநகரஓவியத்தைப்பழுதடைந்த நிலையில் சில இடங்களில் காணலாம்.

செப்புத் திருமேனிகள்

இக்கோயிலில் ஆடவல்லான், சிவகாமியம்மன், சோமாஸ்கந்தர் மற்றும் பிரதோஷ நாயகர், விநாயகர் ஆகிய செப்புத் திருமேனிகளும் நாயன்மார்கள் செப்புத் திருமேனிகளும் உள்ளன. அனைத்துச் செப்புத் திருமேனிகளிலும் சோமாஸ்கந்தர் திருமேனிதான் மிகவும் பழமையானது. இது முற்காலச் சோழர் கலைப் பாணியில் காணப்படுகிறது. ஆனால், பளபளப்பு ஏற்றுகிறோம் என்று கூறி, நாளும் திருநீற்றால் திருமேனிகளைத் தேய்த்தும், பொட்டு இடுகிறோம் என்று நாளும் சந்தனத்தைத் திருமேனிகளின் நெற்றியில் வைத்தும் திருமேனிகளின் பழமைத் தன்மையையும், கலையழகையும் கெடுத்து வருகிறார்கள். சந்தனம் வைக்கப்படும் இடம் நாளாவட்டத்தில் தேய்ந்து ஒரு பள்ளமே ஏற்பட்டுவிடுகிறது. சந்தனப்பொட்டு இட நினைப்பவர்கள் வெள்ளியினாலோ செம்பினாலோ ஒரு நெற்றிப்பட்டை செய்து அதைத் திருமேனியின் நெற்றியில் கட்டிவிட்டு அதன் மீது பொட்டு இட்டு மகிழலாம். அது திருமேனிக்கு அலங்காரத்தையும் நல்கும். திருமேனிக்கு அழிவு ஏற்படாமலும் பாதுகாக்கும்.

நாயன்மார்களின் வரலாறு

சிவகெங்கை தீர்த்தத்தின் மேற்குக் கரையில் அமைந்துள்ள ஒரு மண்டபத்தின் பீடப் பகுதியில் தம்மைச் சோதிக்க வந்த இறைவனுக்குப் பிள்ளைக்கறி சமைத்தளித்த சிறுத்தொண்டரின் புராணம் சிற்ப வடிவில் அழகாக வடிக்கப்பட்டுள்ளது.

சிறுத்தொண்டரும் அவரது துணைவியாரும் தம் குழந்தையை அரிவாள்மனையில் இட்டு அரியும் காட்சி தத்ரூபமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அதனைக் காணும் பக்தர் யாராயினும் ஒருகணம் அந்நாயனரின் உள்ள உறுதியை உணர்ந்து போற்றாமல் இருந்திட இயலாது.

தீர்த்தங்கரர்களின் உருவங்கள்

வெளித் திருச்சுற்றின் தெற்குப் பக்கச் சுவரின் உட்புறம் தீர்த்தங்கரர் சிற்பங்கள் சில பொருத்தி வைக்கப்பட்டுள்ளன. அவை கி.பி. 10,11-ஆம் நூற்றாண்டுகளைச்சார்ந்தவையாக இருக்கலாம். அவை எப்படி இக்கோயிலில் வந்தன என்பது புதிராக இருக்கிறது. திருப்பருத்திக் குன்றத்திலே உள்ள தீர்த்தங்கரர் கோயிலைச் சார்ந்தவைகளாக அவைஇருக்கலாம். ஏகாம்பரேசுவரர் கோயில் திருப்பணி நிகழ்ந்தபோது அவை இங்கு கொண்டுவந்து பொருத்தப்பட்டிருக்கலாம் போன்று தோன்றுகிறது.

முடிவுரை

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து பல்லவர், சோழர், விஜயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள் ஆகிய எல்லாருடைய காலத்திலும் சிறப்பாக மதிக்கப்பெற்றும் போற்றப் பெற்றும் வந்த இக்கோயில் இந்த நூற்றாண்டிலும் தனக்கெனத் தனியானதொரு இடத்தை வகித்து வருகிறது. அத்தகைய புகழ் வாய்ந்த கோயிலுக்கு நாமும் நம்மாலான திருப்பணிகளைச் செய்து இறைவனருள் பெறுவோமாக.

கலைவாழ் காஞ்சி

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரைப் பிள்ளை,
எம். ஏ., எல். டி.

1

காஞ்சியின் பழஞ்சிறப்பு

தமிழகத்தில் பண்டைநாள்தொட்டு இன்று காறும் இடையறாச் சிறப்புடன் விளங்கிவரும் நகரங்களுள் காஞ்சி ஒன்று. 'கலைவாழ் காஞ்சி' என்றும், 'என்றுமுள காஞ்சி' என்றும் அது தமிழ்நூல்களில் புகழப் பெறுகிறது. திருநாவுக்கரசர் அதனைக் 'கல்வியில் கரையிலாத காஞ்சி' என்று பாராட்டியுள்ளார்.

பல நூற்றாண்டுகளாகக் காஞ்சி தமிழகத்து அரசர் பேரரசர் ஆகியவர்களின் தலைநகராயிருந்து வந்திருக்கிறது. அதோடு இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டுச் சமய வாழ்விலும், கலைவாழ்விலும், இலக்கியத்திலும் அது பெரும் பங்கு கொண்டுள்ளது. இவ்வகையில் அதன்பெருமை மதுரை மாநகர் ஒன்றுடனேயே ஒப்பிடத் தக்கது.

மதுரையும் காஞ்சியும்

மதுரை மாநகர் பாண்டியர் தலைநகராக மட்டுமின்றித் தமிழ் வளர்த்த இடமாகவும் தமிழ்க் கலையுலகின் தலைநகராகவும் இயங்கிற்று. காஞ்சியோ எனில் சோழ அரசர் காலத்தில் துணைத்தலைநகர் ஆகவும் பல்லவ அரசர் காலத்தில் தலைநகராகவும் விளங்கிற்று. அத்துடன் தமிழ்க்கலை உலகுக்கும் மதுரைக் கடுத்தபடியான இரண்டாவது தலைநகராக விளங்கிற்று. தமிழரசர் தலைநகரம் என்ற முறையில் இஃது இயற்கையே. ஆனால், காஞ்சியின் புகழ் இத்துடன் நின்றுவிடவில்லை. தமிழ்ப் பண்பாட்டில் விளைந்த அதன் புகழ் வடமொழிக் கலை யுலகெங்கும் பரவிற்று. தமிழ்நாட்டுக் கலையுலகில் இரண்டாம் தலைநகராயிருந்த அது, வடமொழிக் கலையுலகில் முதல் தலைநகராகும் பேறு பெற்றது.


தமிழகக் கலைவானத்துக்கு மதுரையை ஞாயிறாகவும், காஞ்சியைத் தண்மதியமாகவும் கூறுவது மிகவும் பொருத்தமுடையதாகும். தமிழகநகராகிய மதுரை, தமிழ்ப் பண்பாட்டை வளர்த்துத் தமிழ்நாட்டுக்கே அதனை உரிமையாக்கிற்று. காஞ்சி அதில் பெரிதும் பங்கு கொண்டதாயினும், அவ்வொளியைத் தமிழகத்திற்குப் புறம்பான வடமொழி உலகெங்கும் பரப்பி வடமொழிக்கலையை வளர்க்கும் தலை ஊற்றாகவும் நிலவிற்று.

காஞ்சியும் வடமொழியும்


வடநாட்டில் திருத்தமான மொழியான வடமொழி பிறந்து நல் இலக்கியம் தோன்றத் தொடங்கியது கி.பி. 5-ஆம் நூற்றாண்டில்தான். அதற்குமுன்பிருந்த மொழி வேதமொழி எனப் பெயர்பெறும். அதிலுள்ள நூல்கள் வேத, புராண, இதிகாசங்கள் ஆகும். இவை நல் இலக்கியப் பண்பாடுடையவை அல்ல. இவ்விதிகாச காலத்திலேயே, பாண்டிய நாடும் மலைய மலையும் (பொதியமும்) பாண்டிய நாட்டு முத்தும் வடமொழியில் புகழ்வீசத் தொடங்கி விட்டன. ஆனால், அக்காலத்தில் மதுரை பாண்டியர் தலைநகராக இல்லை. கபாடபுரமும், மணலூருமே தலைநகரங்களாயிருந்தன. மதுரை தலைநகராய்விட்ட வரலாற்றுக்கு உட்பட்ட காலத்தில், மதுரையின் வாழ்வு தமிழ் நாட்டுடனே அமைந்துவிட்டது. காஞ்சி நெடுநாளைய பயிரான இத்தமிழ்ப் பண்பாட்டை வடபுல நிலத்துக்கு ஊட்டியதன் பயனாகவே இலக்கண அமைப்புடைய வடமொழியும், கலை அமைப்புடைய இலக்கியமும் வடக்கே வளர்ந்தோங்கின.

காளிதாசன் புகழ்ந்த காஞ்சி

வடமொழி இலக்கியத்தில் காலத்தாலும் சிறப்பாலும் முதன்மை வாய்ந்த கவிஞன் காளிதாசன். 5-ஆம் நூற்றாண்டினனாகிய அவன்



அருள்மிகு கச்சி ஏகம்பன் கோயில் குட நீராட்டு விழா



அருள் தரும் அன்னை காமாட்சி திருக்கோயில்
கோபுரக் குட நீராட்டு விழா

காலத்திலேயே காஞ்சி இந்திய நாட்டின் கலைத் தலைநகராய் விளங்கிற்று. 'பூ வெனப் படுவது பொறிவாழ் பூவே' எனத் தமிழர் கூறும் முறையிலேயே அவன் நகரெனப்படுவது காஞ்சி நகரே' (நகரேஷு காஞ்சி) என்று காஞ்சியைச் சிறப்பித்துள்ளான்.

வரலாற்றுச் சிறப்புடைய காஞ்சி

வடமொழிவாணர் காஞ்சிக்கு அக்காலத்திலேயே கொடுத்த உயர்வினை வேறொரு வகையிலும் காட்டலாம். இந்தியப் பெருநாட்டில் தெய்வத்தன்மை வாய்ந்த நகரங்கள் என்று அவர்கள் வகுத்தவை ஏழு. அவை அயோத்தி, (வட)மதுரை, மாயா (ஹரித்துவார்), காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பவை ஆகும். இவற்றுள் காசி, காஞ்சி, அவந்தி நீங்கலாக மற்றையநான்கும் புராணப்புகழ் உடையனவேயன்றி வரலாற்றின் மெய்ப்புகழ் உடையவை அல்ல. இம்மூன்றனுள்ளும்கூட, இவ்வகுப்பு ஏற்பட்ட காலத்தில், அவந்தி சற்றுப் புகழடைந்திருக்கலாம். வரலாற்றில் அது நிலையான எப்புகழும் பெறவில்லை. ஆகவே, ஏழு நகரங்களுள் வரலாற்றுப் புகழ் உடையவை காசியும் காஞ்சியுமே.

காசியிலும் சிறந்த காஞ்சி

சமயத்துறையில் காஞ்சியின் சிறப்புக் காசியை ஒத்ததேயாயினும் தமிழர் வாழ்வு குன்றிவரும்தோறும் அச்சிறப்பு மறக்கப்பட்டே வந்துள்ளது. ஆனால், வரலாற்றுக்கண் கொண்டும் கலைக்கண் கொண்டும் நோக்குபவர்க்கு அது காசியுடன் ஒப்புடையது மட்டுமன்று, பலமடங்கு விஞ்சியது என்பது தெரியவரும். காசி, என்றும் காஞ்சிபோல அரசர் பேரரசர் தலைநகரா யிருந்ததில்லை. வடமொழிக் கலையுலகிலும் வடநாட்டில் தொடக்க காலத்தில் தக்கசிலையும் (பஞ்சாபிலுள்ள தக்ஷசிலை)இடைக் காலத்தில் (வடபீகாரிலுள்ள) நாலந்தாவும் பிற்காலத்திலேயே காசியும் தலைமையிடமாயிருந்து வந்துள்ளன. ஆனால் காஞ்சியோ திருந்திய வடமொழியும் நல் இலக்கியமும் ஏற்பட்ட காலத்துக்கு முன்னிருந்தே அவற்றின் வளர்ப்புத் தாயாயிருந்து வந்திருக்கிறது. காசிக் கோயில்கள் சிறு குடில்களே. காஞ்சிக் கோயில்கள் சிறு நகர்கள். அவை கலைக்கழகங்கள், நூல்நிலையங்கள் ஆகியவற்றின் இருப்பிடமாகவும், பிற்காலத்தில் கருநாடகப்போர்களில் ஆங்கிலேயர் காவற்கோட்டைகளாகவும் விளங்கின.

2

காஞ்சியின் வரலாறு

மதுரை தமிழர் வாழ்வோங்கிய காலத்தில் மட்டுமன்றித் தாழ்வுற்ற காலத்தும் பெரிதும் தன்னிலை மாறாது ஞாயிறு போல் ஒளி வீசியுள்ளது. ஆனால், காஞ்சியோ தண்மதியத்தின் இயற்கையோடொத்துத் தமிழர் வாழ்வுக் காலத்தில் வளர்பிறை என ஓங்கி வளர்ந்து, தாழ்வுக் காலத்தில் அழியாது, நிலவின் தேய்பிறை என நலிந்து வந்திருக்கிறது. தமிழின் மறுமலர்ச்சி ஏற்பட்டுவரும் இக்காலத்தில் அது மீண்டும் வளர்ச்சியுறத் தொடங்கிவிட்டது என்று கூறலாம்.

காஞ்சியும் காஞ்சியைச் சுற்றியுள்ள தமிழகப் பகுதியும் தமிழரால் தொண்டைமண்டலம் என்று குறிக்கப்பட்டுள்ளன. இதில், தொடக்கத்தில் குறும்பர் என்ற வகுப்பினர் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் அதன் உள் நாட்டுப் பகுதி காடுகள் நிறைந்திருந்தது. அவர்கள் ஆயர் மரபினர். ஆயர் வாழ்வு வாழ்ந்த வேளிர் தலைவர் பலர் குறுநில ஆட்சிக்கு உரியவராயிருந்தனர். காஞ்சியைச் சுற்றிலும் தொண்டை நாட்டின் பல பகுதிகளிலும் குறும்பர் மேடுகள் என்ற கல்லடுக்குகள் காணப்படுகின்றன. இவற்றுட் சில, பண்டைக் கற்கால மனிதன் கல்லறைகள் என்றும், சில அவன் வழிபட்ட முதற் கோயில் இடங்கள் என்றும் கருதப்படுகின்றன. இவற்றில் காணப்படும் செம்மண் கலங்கள் சிந்துவெளி நாகரிகத்தை நினைவூட்டுவன என்று அறிஞர் கூறுகின்றனர். முதற் கரிகால் வளவன் (கி.மு. முதல் நூற்றாண்டு) அதனை நாடாக்கி அதைச் சோழநாட்டின் பகுதியாக்கினான். சோழர் குடியில் வந்த இளவரசர் அதில் தலைவராயிருந்து ஆண்டனர். கி.பி. 300 முதல் கி.பி. 900 வரை பல்லவர் அதில் ஆண்டனர். 900 முதல் 1300 வரை சோழப் பேரரசர் மீண்டும் அப்பகுதியைத் தம் ஆட்சியில் கொண்டுவந்தனர். கோதாவரிஆறு வரையும் அதற்கப்பாலும் பரந்த அவர்கள் ஆட்சிப் பகுதியில் வடபகுதிக்கு அது துணைத் தலைநகராய் அமைந்தது.

1300 முதல் 1700 வரை அது பல தடவை வடநாட்டு முகம்திய மன்னர், படைத்தலைவர்களால் படையெடுப்புக்கு ஆளாயிற்று. அவ்வப்

போது முஸ்லிம்ஆட்சியும் நடைபெற்று வந்தது. சிலகாலம் மராட்டியரும் அதனைக்கைக்கொண்டிருந்தனர். 18-ஆம் நூற்றாண்டில் பிரஞ்சுக்காரர்-ஆங்கிலேயர் போராட்டங்களினிடையே அது அவ்விருவர் கைக்கும் மாறி மாறி வந்து அவர்கள் படைத்தளம் ஆயிற்று. 1758 முதல் அதில் ஆங்கில ஆட்சி நிலைபெற்றது.

1866-இல் காஞ்சியில் நகரவை ஆட்சி ஏற்பட்டது.

நாகரிகத்தின் தலையூற்று

இங்ஙனம், தமிழர் பேரரசுகளின் தலைநகராகவும் கலைத்தலைநகராகவும் இந்தியப் பெருநாட்டின் நாகரிகத் தலையூற்றாகவும் விளங்கிய காஞ்சி நகர், இன்று தமிழகத்தின் ஒரு மாவட்டத் தலைநகராகமட்டுமே நிலவுகின்றது. தொண்டை நாட்டின் பழம்பதிகளான மயிலை, திருவல்லிக் கேணி ஆகியவையும் இடைக்காலச் சிறு நகரங்கள் பலவும் சேர்ந்து அமைந்த புதிய சென்னை மாநகர் தமிழ்நாட்டின் தலைநகரானதோடன்றி தொண்டை நாட்டின் தலைமை நிலையையும் கைக்கொண்டுவிட்டது. கலை உலகிலும் அது புதுமைக்கு இருப்பிடமாய்க் காஞ்சியின் பழம் புகழுடன் இனப்போட்டி மேற்கொண்டுள்ளது.

தொண்டை நாட்டில் 24 கோட்டங்களுக்கும் தலைநகராக விளங்கிய இந்நகரம், ஒரு கோட்டத்தின் தலைநகர் என்ற நிலையைக்கூடச் சில காலம் இழந்துவிட்டது. காஞ்சியை உட்கொண்ட செங்கற்பட்டுக் கோட்டத்திற்கு செங்கற்பட்டே தலைநகராக இருந்தது.

ஆங்கில ஆட்சித் தொடக்கத்தில் போர்களால் அலைக்கழிந்து காஞ்சியின் மக்கள்தொகை மிகவும் குறைந்துவிட்டது. 1881-ல் அதில் 37,000 மக்களே இருந்தனர். ஆனால், அதன்பின் பிரிட்டிஷ் ஆட்சியில் அமைதி நிலவியதனால் அது மீண்டும் வளர்ச்சியுற்றது. இன்று அதன் மக்கள்தொகை 1,25,000ஆகும். தமிழ்க் கல்வியும் இலக்கியமும் மீண்டும் மறுமலர்ச்சி அடைந்து வருகின்றன. பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி போன்ற பல பள்ளிகள், சிறந்த மருத்துவ நிலையங்கள், கழகங்கள் ஏற்பட்டுள்ளன. காஞ்சியில் சிறந்த கல்லூரிகளும் அமைந்துள்ளன.

புராணிகர் காஞ்சிநகரைப் புறநகர், அகநகர், உள்நகர் என்று மூன்று பகுதிகளாக (ஆவரணங்களாக) வகுத்துக் கூறுகின்றனர். இன்றைய காஞ்சி அதன் உள்நகர் அளவிலும் தேய்ந்துவிட்டது என்பதைப் பழம் பகுதிகள் மண்மேடிட்டுக் கிடக்குமிடங்களும் நகர்ப் புறத்தில் பழம்பெருமையுடைய கோயில்கள் அழிவுற்றுக் கிடப்பதும் நன்கு காட்டும். மன்னரும் மக்களும் வழிபாட்டிற்காக எழுப்பிய கந்தழிகள் (சிவலிங்கங்கள்) கோயில்கள் பல இன்று குத்துக்கல்களாகவும் குட்டிச்சுவர்களாகவும் காட்சியளிக்கின்றன. அவற்றுட் பலவற்றின் வரலாறும் பெயரும் மறக்கப்பட்டுள்ளன. காஞ்சி வண்ணக்களஞ்சியம் நாகலிங்க முனிவர் தம் வாழ்க்கை வரலாற்றில் அவற்றின் விவரங்களை அறிந்த ஒன்றிரண்டு பேர் இன்றும் இருப்பதாகக் குறித்துள்ளார். அவற்றின் மரபு முற்றிலும் அழியுமுன் அவற்றை அவர்கள் எழுதிவைத்துத் தமிழகத்திற்களிப்பர் என்று நம்பலாம்.

இன்றைய காஞ்சிநகரம் இருபெரும் பகுதிகளாகப் பிரிந்துகிடக்கின்றது. இவற்றுள் வடக்கிலுள்ளது சிவகாஞ்சி என்னும் பெரிய காஞ்சி. சிவன் கோயில்களுள் பெரும்பாலானவை இங்கேயே உள்ளன. தெற்கிலுள்ள சிறுகாஞ்சியில் (பெரும்பாலான) திருமால் கோயில்கள் உள்ளன. நகரின் பெரும்பான்மைக் குடியினரும் தமிழ் வளர்த்த செல்வருமான செங்குந்த மரபினர் பெருக்கமாக வாழும் பகுதி பிள்ளையார்பாளையம். இது நகரில் சற்றொதுங்கிக் கிடக்கின்றது. இதனின்றும் இரண்டு கல் தொலைவில் திருப்பருத்திக்குன்றம் உள்ளது. பழஞ் சிறப்புடைய சமணர் கோயில் இங்கேயே உள்ளது. தமிழ்நாட்டில் எஞ்சியுள்ள சமணர்களில் பலர் நூற்றுக்கணக்கிலேனும் இப்பகுதியில் இன்றும் வாழ்கின்றனர்.

நகர மக்களின் பெரும்பான்மைச் சமயம் சிவநெறியும் அதற்கடுத்த அளவில் திருமால் நெறியும் ஆகும். சில ஆயிரத்துக்கு மேற்பட்ட இஸ்லாமியரும் இங்கு வாழ்கின்றனர். கோயில்களை அடுத்தும் பழங்கோயில் பகுதிகளின்மேல் புதியவையாகக் கட்டப்பட்டும் அவர்கள் திருப்பள்ளிகள் ஆங்காங்கு உள்ளன. சாவாவிலுள்ள புலவர்களும் சீன யாத்திரிகரான ஹியூன்சாங்கும் கூறுபவற்றால் பண்டு பேரளவில் சமணரும்

புத்தரும், சமண மடங்களும், புத்த மடங்களும் இருந்தன என்று அறிகிறோம். ஆனல், இன்று சில புத்தர் சிலைகளன்றிப் புத்தநெறிச் சின்னங் கள் அழிந்துவிட்டன.

காஞ்சியின் பழம்பெருமையின் எஞ்சிய பகுதிகள், அந்நகரத்தில் அழிந்தும் அழியாமலும் இன்றுள்ள பெரிய சிறிய கோயில்களும், அந் நகர மக்களிடை இன்றும் வளர்ந்துவரும் தமிழ்ப் பற்றும், இலக்கியப் பண்பாடும், இன்றும் பெயர்கெடாது தமிழகத்தில் புகழ்வீசிவரும் அதன் நெசவுத்தொழில் சிறப்பும் ஆடை வாணிகச் சிறப்பும் ஆகும்.

கோயில்களில் பல அழிவு நிலையிலும் ஆதரிப்பாரற்ற நிலையிலும் இருப்பினும், பல இன்றும் சிறப்புடன் விளங்குகின்றன. எல்லாக் கோயில்களிலும் அவற்றை எழுப்பியவர்கள், புதுக்கியவர்கள், கொடை நேர்ந்தவர்கள் ஆகிய அரசர், பெருநிலக்கிழார், அலுவலாளர் ஆகிய வர்கள் கல்வெட்டுக்கள் உள்ளன. ஆராய்ச்சி அறிஞராலும், அரசியலாரின் பழம்பொரு ளாராய்ச்சி யாளராலும், அவை ஆய்ந்து தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியம், வடமொழி நூல்கள் ஆகியவற்றுடன் இவையும் தமிழகத்தின் பண்டை வரலாற்றை விளக்கப் பேருதவி புரிகின்றன.

நீர்வளம்

1866-இல் நிறுவப்பட்ட காஞ்சி நகரஅவை யினரால் 1895-ல் அதற்கு நீர்த்தேக்கத்திட்டம் அமைக்கப்பட்டது. தமிழ்ப்பாடலுக்கு இலக்க மான வேகவதியாற்றின் உள்ளூற்றில் குழாய் இறக்கி இரண்டரை நூறுயிர வெள்ளிச் செல வில் இத்தேக்கம் நிறுவப்பட்டது. ஆண்டு தோறும் அதன் நடைமுறைச் செலவு மூவாயிரம் வெள்ளிகள். அதன் நீர்தரும் ஆற்றல் நாள் ஒன்றுக்கு 84,000 காலன் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. புறம்வற்றினும் உள் ளூறை ஊற்று வற்றாத ஆறுகளாகவே பொருநை, வைகை, பாலாறு, வேகவதி முதலிய ஆறுகள் திகழ்வன, புறம் நலிந்தும் உள்ளூற்று நலியாத தமிழ்ப் பண்பாட்டின் உயிர்ப்புக்கு உரிய சின் னங்கள் எனலாம்.

3

புராணப் பெருமை

புராணப் பெருமைமட்டிலுமே ஒரு நகரின் பெருமைக்கு அறிகுறியாகாது. எனினும், புராண மேற்பட்ட காலத்தில் அதன் மெய்ப் பெருமைக்கு அது ஒரு சான்று ஆகும் என்பதில் ஐயமில்லை. ''பதக்கில் உழக்கு'' என்ற மெய்ம்மைப்படி கொண்டால்கூட, காஞ்சி பற்றிப் புராணங்கள் தரும் 'அண்டமளக்கும்' சிறப்புக்கள் காஞ்சியின் பெருமையை மறை முகமாகச் சுட்டுபவையே.

காஞ்சிப் பதியில் கண்காணுக் கோயில்கள் புராணிகர் கற்பனை எண்களாலும் கணிக்கப் படாத எண்ணிலா அளவின (அனந்தம்) என்றும், கண்கண்ட பருஉருவக் கோயில்களும் 64,000 ஆகும் என்றும் புராணிகர் கூறுகின்ற னர். இதில் மிகையுரை இருக்கக்கூடுமாயினும், இன்றுள்ள கோயில்களே ஆயிரம் என அறிஞர் கணித்துள்ள நிலையில், அத்தொகை அக்காலக் கோயில்களின் அளவை முற்றிலும் புனைந்துரைப் பதன்று என்று கொள்ளலாம்.

காஞ்சிக் கோயில்களின் தனிச்சிறப்பு

காஞ்சிநகர்க் கோயில்களுக்குச் சிறப்பான பல செய்திகள் புராணங்களிலும் காட்சியிலும் காணப்படுகின்றன. சிவன் கோயில்களில் சிவ னுருவுடன் உமையுரு ஒருங்குயாண்டும் காணப் படாதது, உமையுரு தனித்துக் காணப்படுவது, மும்மை இறைநிலை (மும்மூர்த்தங்)களுக்கு உரு அமைந்திருப்பது, இந்தியப் பெருநாட்டிலேயே யாண்டும் இல்லாத முறையில் நான்முகனுக்குக் கோயில் அமைந்திருப்பது, அதுபோலவே இந்திய நாடெங்கும் காணப்படாத வழக்க காகச் சிவநெறி திருமால்நெறி சாராத (சுமார்த்த நெறிப்) பார்ப்பனர் (காமகோட்ட மொன்றில்) அர்ச்சகராயிருப்பது, திருமால் கோயிலில் தமிழ்நாட்டில் பெரும்பாலான கோயில்களின் வழக்கிற்கு மாறாகச் சீவைணவர் என்னும் தென்கலை அர்ச்சகரன்றிப் பிறர், கோயிலில் ஆட்சி பெற்றிருப்பது, காளிகோயில் கள் மிகுதியிருப்பது, புத்தர் கோயில்களிருப்ப தாகக் குறிக்கப்படுவது, அருகன் கோயில்கள் இருப்பது ஆகியவை இவற்றுட் சில. புராணி கர் இவ்வருங்காட்சிகளுக்கு மனம்போன விளக்

கங்கள் கூறினும், உண்மையில் இவ்விளக்கங்கள் நீக்கமுடியாத மாறுபாடுகளை மக்கள் ஆராய்ச்சிக் கண்களில் படாமல் மறைக்கும் திரைகளேயாகும். வீரசைவமும் சமணமும் யோகி வடிவாய்க் காமனை வென்ற சிவபிரானைச் சத்தியில்லா வடிவில் வணங்குவது தென்னாட்டிலும் வடநாட்டிலும் வழக்கே. (இன்றும்) நகரின் பெரும்பான்மைக் குடியினராகிய செங்குந்தர் வீரசைவ மரபினரே. உமைவடிவமில்லாமையின் காரணம் இதுவேயாகும்.

கொற்றவை வணக்கம்

அதுபோலக் கன்னித்தாய்க் கடவுள், (கொற்றவை, அல்லது துர்க்கை) வணக்கமும் பண்டைய பழங்குடி மக்கள் மரபேயாகும். தமிழ் நாடெங்கணும் வட இந்தியாவிலும் இவ்வழக்குப் பெரும்பாலும் அழிக்கப்பட்டது. பல அன்னை வழிபாடுகள் தமிழ்மக்களிற் சில பகுதியினரிடையே சிறுதெய்வ வழிபாடுகளாக இன்றும் நிலவுகின்றன. வங்க நாட்டிலும் காஞ்சியிலும் பழைய மரபு அழிக்கமுடியாதபடி வேரூன்றி விட்டதனால் அஃது இன்னும் உயர்குலத்தார்க்கு விலக்கப்படாத வீரத்தாய் அல்லது கொற்றவை வணக்கமாய் நிலவுகின்றது. தமிழ்நாட்டிலும் இந்தியப் பெருநாட்டிலும் மேலோங்கிவிட்ட பிற்காலச் சமயநெறிகள் வருமுன்பே, காஞ்சி பழந்தமிழ் மக்கள் பண்பாட்டில் வேரூன்றிவிட்ட பண்டைய நகரம் என்பதற்கு இச்செய்தி சான்றாகும்.

சிறந்த கோயில்கள் சில

காஞ்சிக் கோயில்களில் பழமைமிக்கதெனக் கருதக்கூடியவை ஏகாம்பரர் கோயில், காமகோட்டம், திருவெஃகா என்னும் திருமால் கோயில் ஆகிய மூன்றுமே. குமரகோட்டமும் இவற்றுடன் ஒத்த பழமையுடையதாயிருக்கக் கூடும். திருவெஃகா பத்துப்பாட்டில் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படையில் குறிக்கப்பட்டுள்ளது. திருவேகம்பம் தேவார மூவராலும், மாணிக்கவாசகராலும், பட்டினத்தடிகளாலும் பல பதிகங்களால் பாடப்பட்ட பெருமை உடையது. திருமேற்றளி, திருஅனேகதங் காவதம் எனப்படும் திரு அனேயபதம் காவுடையார் கோயில், திருநெறிக்காரைக்காடு, திருவோணகாந்தன்தளி ஆகியவையும் தேவாரப் பாடல் பெற்றவையே. காமகோட்டம், குமரகோட்டம், கச்சபர் கோயில் ஆகியவை திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரால் பாடப்பெற்றவை. வரதராசப் பெருமாள் கோயில், திருஅட்டபுயகரம், திருவூரகம், உலகளந்த பெருமாள் கோயில், திருக்கள்வனூர், ஆதிவராகப் பெருமாள் கோயில் முதலிய பல கோயில்கள் ஆழ்வார்களால் பாடப்பெற்றவை.

பல்லவரும் கற்கோயிலும்

கயிலாசநாதர் கோயில் என்ற இராசசிம்மேச்சுவரக் கோயிலும், வைகுண்டப் பெருமாள் கோயிலும் பல்லவரால் கட்டப்பட்டவை. பல்லவர் காலத்துக்குமுன், கோயில்கள் மண்ணாலும் மரத்தாலும் இயன்றன என்றும், கல் கோயில்கள் (கல்தளிகள்) ஏற்பட்டது பல்லவர் காலத்திலேயே என்றும் வரலாற்றறிஞர் கூறுகின்றனர். பல்லவன் இராசசிம்மன் கட்டிய கயிலாசநாதர் கோயிலே தமிழ்நாட்டின் முதல் கற்றளி எனப்படுகிறது. பழங்கோயில்களில் பலவும் பிற்காலப் பல்லவராலும் சோழப் பெரும் பேரரசராலும், விசயநகர அரசராலும் மன்னர் அரண்மனையிலும் பெரியவையாகவும் கோட்டை போன்ற மதிற்சுவர்களுடையவையாகவும் பெரிதாக்கப்பட்டன. கயிலாசநாதர் கோயிலுக்குப் பல்லவர் தந்த பெருஞ் செல்வம் எவ்வகையிலோ முதல் குலோத்துங்க சோழன் காலமுதற் பிற கோயில்களாலும் மக்களாலும் கைக்கொள்ளப்பட்டுச் சீரழிந்து கோயிலும் அடைபட்டதென்றும், விசயநகர அரசர் காலத்திலேயே மீண்டும் திறக்கப்பட்டதென்றும் விசயநகரக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. வரதராசப் பெருமாள் கோயிலும் விசயநகர அரசர் காலத்திலேயே மிக விரிவாக்கப்பட்டுச் சிறப்புற்றது.

ஏகம்பர் கோயிலின் ஆயிரக்கால் மண்டபம்

திருவேகம்பர் கோயிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபம் தமிழ்நாட்டுப் புலவர் பெருமக்கள் கூடுமிடமாகவும், நூல்கள் அரங்கேற்றுமிடமாகவும், இலக்கிய இலக்கணம் பயிலுமிடமாகவும் இருந்து வந்துள்ளது. தமிழ்நாட்டின் தமிழ்ப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றாக இது விளங்கியது. அதோடு காசி முதலிய வடநாட்டுக் கோயில்களை ஒப்ப இது கோட்டை போல் அகன்ற பரப்பும் காவலும் உடையதாதலாலும், முஸ்லிம் ஆட்சியிலும், ஆங்கில பிரெஞ்சு ஆட்சிகளிலும் போரில் படைகள் தங்கிப் பீரங்கிகளுடனும் துப்பாக்கிகளுடனும்

போரிடும் தளமாகவும் விளங்கியுள்ளது. இன்றும், இறைவன் திருமணக்கோல விழாவின் போது, பல்லாயிரக்கணக்கான ஏழை எளியவர்கள் சிறு செலவில் தம் திருமண விழா நிகழ்த்த இம்மண்டபம் உதவுவதாகத் தெரிகிறது.

காம கோட்டம்

காம கோட்டத்தின் ஒருபாலுள்ள காம பீடம் வடமொழிக் கலைக்கழகமா இலங்கிவந்துள்ளது. 8-ஆம் நூற்றுண்டினரான சங்கராச்சாரியார் பண்டைத் தமிழ்நாடாகிய மலையாள நாட்டுக் காலடியில் பிறந்தவராயினும், பயின்றதும் பெருமையடைந்ததும் இவ்விடத்திலேயே. இவர் விருப்புடைத் தெய்வம் காம கோட்டத்து அம்மனே. அவர் சியாமளா தண்டகம், சிவானந்தலகரி ஆகிய வடமொழிப் பாசுரங்களுக்கு இலக்கான இடம் இதுவே. இக்கோயிலில் அக்காலம் மனிதப்பலி நடைபெற்றதென்றும், அதனை அவர் நிறுத்தினுர் என்றும், சைவ அருச்சகருக்குப் புறம்பாகச் சுமார்த்தரையும், மலையாள அருச்சகக் குடியினரான நம்பூதிரிமாரையும் கோயிலாட்சிக்கு அமைத்தனர் என்றும் கூறப்படுகிறது. காளியாயிருந்த அம்மனை, சக்கரத்தின் ஆற்றலால் இவர் அடக்கியதாகவும் இவர் சமயத்தினரான சுமார்த்தர் கூறுகின்றனர். இன்று, முழுவதும் சுமார்த்தர் ஆட்சியிலிருக்கும் கோயில் இந்திய நாட்டில் இஃது ஒன்றே.

காஞ்சிநகர்க் காளிகோயிலில் வலங்கை மண்டபம், இடங்கை மண்டபம் என இரண்டு மண்டபங்கள் உள்ளன. வலங்கைக் கட்சி, இடங்கைக்கட்சி என்னும் பிரிவுகள் இக்கோயிலிலிருந்தே எழுந்ததாகக் கூறப்படுகிறது.

சமணர் கோயில்

திருப்பருத்திக்குன்றம் சமணர் கோயில் கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டு வரலாற்றின் ஒரு சிறு பதிப்பு என்னும்படி வன்மையுடையவை.

காஞ்சியில் ஆண்ட எல்லா அரசர் குடியினராலும் அளிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன.

பல்லவர் மேடு

காஞ்சியில் உள்ள பல்லவர் மேடு எதிர்காலத்தில் தமிழர் வரலாற்றுக்கு மிகவும் பயன்படக்கூடிய புதைபொருளாராய்ச்சிக்குரிய இடமெனக் கருதப்படுகிறது.

4

காஞ்சி நகரம் தமிழிலக்கியத்துடன் பல வகைத் தொடர்புடையது. (1) காஞ்சி பற்றிய புராணங்கள் (2) காஞ்சியைப்பற்றியும் காஞ்சியையாண்ட அரசர் பற்றியும் எழுந்த பாடல்கள் (3) காஞ்சியிலுள்ள கோயில்கள்மீது பாடப்பட்ட பாடல்கள் (4) காஞ்சியிற் பிறந்த புலவர்களும், காஞ்சியில் வாழ்ந்த புலவர்களும், காஞ்சியில் பாடிய புலவர்களும் என அத்தொடர்புகளை வகுக்கலாம்.

காஞ்சிப் புராணங்கள் மூன்று

நகர்ப் புராணமாகக் கருதப்படாமல், சமய நூலாகவும், இலக்கியமாகவும் கருதப்படும் மதுரைநகர்ப் புராணமாகிய திருவிளையாடற் புராணம் நீங்கலாக நகர்ப்புராணங்களில் பெருஞ்சிறப்புடையது காஞ்சிப்புராணமே யாகும். அதற்கேற்பத் திருவிளையாடற் கதைகளைப் போலவே, இந்நகர்ப் புராணக் கதையும் அடிக்கடி புதிய முறையில் பாடப்பட்டு வந்துள்ளது. திருவிளையாடற் புராணங்கள் தமிழில் மூன்று அமைந்துள்ளது போலவே, காஞ்சிப் புராணங்களும் மூன்று ஏற்பட்டுள்ளன. முதற் காஞ்சிப் புராணம் பண்டைய காஞ்சிப்புராணம் எனப்படுவது. இதனை வாலியூர்ப் பிரதாப முதலியார் பாடினதாக அறிகிறோம். அடுத்தபடி இன்று பெருவழக்காயுள்ள காஞ்சிப்புராணம் சிவஞான யோகிகள் என்றழைக்கப்படும் சிவஞான முனிவராலும், அவர் மாணவர் கச்சியப்ப முனிவராலும், பாடப்பட்டது. சிவஞான முனிவர் 18-ஆம் நூற்றுண்டின் இறுதியில் தென்பாண்டி நாட்டு விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்தவராயினும், வாழ்க்கையின் பெரும்பகுதியையும் காஞ்சியில் கழித்துச் சிவஞான போதத்திற்குத் தமிழ்ப் பேருரை (திராவிடமாபாடியம்) செய்தவர். இவர் முதற்காண்டமியற்றிய பின், இவர் விருப்பப்படி சென்னையிலிருந்த இவர் மாணவராகிய கச்சியப்ப முனிவர் காஞ்சியில்

வந்து தங்கி, இரண்டாம் காண்டத்தைப் பாடி முடித்தனர் என்று கூறப்படுகிறது. திருத்தணிகையில் பிறந்து, திருத்தணிகை, திருவானைக்கா, பூவாளூர், பேரூர், சென்னை ஆகிய ஊர்களில் நகர்ப்புராணங்களும் பாடல்களும் இயற்றிய கச்சியப்ப முனிவர் தம் வாழ்க்கையின் பிற்பகுதி முழுவதையும் காஞ்சியிலே கழித்துக் காஞ்சியிலேயே இயற்கை எய்தியவர். தம் ஆசிரியரை மறுத்தோரைத் திருவேகம்பத்தில் எதிர்த்து ஆசிரியர் கோட்பாட்டை நிறுவியவர். கச்சியானந்த ருத்திரேசர் வண்டு விடுதூது, கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிற்றுப்பத் தந்தாதி, பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி முதலிய பல சிறு நூல்களும் இவரால் காஞ்சிக் கோயில் இறைவன் மீது பாடப்பெற்றன.

மூன்றாவது காஞ்சிப்புராணம் கலித்துறைக் காஞ்சிப்புராணம் எனப்படும். இதனைப் பாடியவர் காஞ்சிப் பிள்ளையார்பாளையத்தைச் சேர்ந்த ஆளவந்த தேசிகர் ஆதீனத்துச் சிதம்பர தேசிகர் ஆவர்.

காஞ்சி நகர்க் கடவுள்மீதமைந்த பாடல்கள்

இப்புராணங்கள் நீங்கலாக, காஞ்சியில் கோயில்கொண்ட தெய்வங்கள்மீது பாடல்களும் சிறு நூல்களும் இயற்றியவர்கள் எண்ணற்றவர். இவற்றுட் பழமையும் சிறப்பும் மிக்கவை நாயன்மார்கள் பாடல்களும்ஆழ்வார்கள் பாடல்களுமேயாகும். நாயன்மார்களுள் தேவார மூவரேயன்றி, திருவாசகம், திருவிசைப்பா பாடிய திருமுறை அடியார்களும், பட்டினத்தடிகளும், திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரும் காஞ்சிக் கோயில்களைப் பாடியுள்ளனர்.

சிவஞான முனிவர் மாணவரான காஞ்சி சிதம்பர முனிவர் பாடிய காஞ்சிக் காமாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அவர் துணை மாணவராகிய காஞ்சி முத்துக்குமாரசாமி தேசிகர் பாடிய திருவேகம்பர் வெண்பா அந்தாதி, திருவேகம்பர் பதிற்றுப்பத்தந்தாதி ஆகியவை இவ்வகையில் குறிப்பிடத்தக்க பிற்கால நூல்கள்.

கரிகாலனும் தொண்டைமானும்

காஞ்சி, தமிழிலக்கியத்தில் அடைந்த பெருமை புராண, சமயச் சார்பானது மட்டுமன்று. சங்க காலத்திலேயே கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார், கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார், கச்சிப்பேட்டு இளந்தச்சனார் முதலிய பல புலவர்கள் காஞ்சியிற் பிறந்தவராகப்பெயர்கள் மூலமே அறியப்படுபவர் ஆவர். காஞ்சியையும் தொண்டை நாட்டையும் உட்படுத்திக் கோதாவரி ஆறுவரை நேரடியாக ஆண்டதுடன் வடவிமயத்தும் புலிபொறித்த முதற் கரிகால் வளவனைப் (கி.மு. 1 அல்லது கி.பி. 1-ஆம் நூற்றாண்டு) பாடியவர்களும், இரண்டாம் கரிகாலனைப் பாடியவர்களும் பலர். முன்னவனைச் சங்ககாலத்திலேயே பழம் புலவர்களான மாமூலனார், பரணர் ஆகியவர்களும், வெண்ணிக் குயத்தியார் என்ற பெண்பாற் புலவரும் பாடினர். பெரிதும் காடாயிருந்த தொண்டை நாட்டின் உட்பகுதியைத் திருத்தி நாடாக்கியவன் என இப்பேரரசன் புகழப் பெறுகிறான். பிந்திய கரிகாலனைப் பாடியவர்களுள் நக்கீரர் மிகவும் சிறப்புடையவர். அதியமான் நெடுமான் அஞ்சியின் சார்பில் ஔவையார் அக்காலத்துக் காஞ்சியை ஆண்ட தொண்டைமானிடம் தூது சென்று அவன் படைக்கலக் கொட்டிலைப் பார்வையிட்டதைப் புறநானூற்றின் 95-வது பாடல் குறிப்பிடுகின்றது.

தொண்டைமான் இளந்திரையன்

பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் காஞ்சியிலிருந்து தொண்டைநாட்டை ஆண்ட தொண்டைமான் இளந்திரையன். அவனைப் பாடியவர் கடியலூர் உருத்திரன்கண்ணனார். இவனே புராணங்களிலும் தொண்டைநாட்டு மரபுரைகளிலும் கூறப்படும் தொண்டைச் சக்கரவர்த்தியாவன் என்று அறிஞர் கருதுகின்றனர். மணிமேகலை நூலில் அவன் சோழனுக்கு நாககன்னிகையிடம் பிறந்து தொண்டைக்கொடி சுற்றி அனுப்பப் பட்டதனால் தொண்டைமான் எனப்பட்டான் எனவும், திரை தவழ்ந்து வந்ததனால் திரையன் எனப்பட்டான் எனவும், நாககன்னி புதல்வனை அவன் கரையேறிய இடம் நாகப்பட்டினமாயிற்று எனவும் கூறப்படுகிறது. ஆயினும், பெரும்பாணாற்றுப்படை அவனைத் திரையர் குடியினன் என்றே கூறுகிறது. இளந்திரையனை அவனையன்றி வேறொரு திரையன் தொண்டைநாட்டின் வடபகுதியில் ஆண்டதாகக் குறிப்பிடுகிறது. இக்காலத்தில் தொண்டைநாடு வடபெண்ணை ஆறுவரை பரந்

திருந்தது. பிற்காலத்தில் கரிகாலன் மரபினர் என்று தம்மைப் பெருமையுடன் குறித்துக் கொண்ட தெலுங்கு ரேனாட்டுச் சோழர் இப் பகுதியில் பவத்திரியை (நெல்லூர்க்கோட்டத்து ரெட்டிப்பாளையத்தை)த் தலைநகராகக்கொண்டு ஆண்டனர்.

காஞ்சியின் பண்டை அமைப்பு

கடியலூர் உருத்திரன் கண்ணனார் திரையன் வீரத்தையும் கொடையையும் பாராட்டுவதுடன் காஞ்சிநகரையும், அதிலுள்ள இளந்திரையன் அரண்மனையையும், திருவெஃகாக் கோயிலையும், தேரோடிய தெருக்களையும், மன்னர், கள்ளடு மகளிர், அந்தணர், ஆயர், எயினர் குடியிருப்புப் பகுதிகளையும் நம்முன் படம் பிடித்துக் காட்டுகிறார். காஞ்சியிலும் அதைச் சுற்றிலும் அந்நாளில் பல கோட்டைகள் இருந்ததால் காஞ்சியை உள்ளிட்ட தொண்டைநாட்டுச் சிறுபகுதி எயிற்கோட்டம் என்றும், காஞ்சிநகர் எயிற்பதி என்றும் அழைக்கப்பட்டது. பழைய வெண்பா ஒன்று காஞ்சி நகரின் அக்காலத்திய வடிவை உவமை மூலம் விளக்குகின்றது.

எரி இரண்டும் சிறகா, எயில்வயிருக்
காருடைய பீலி கடிகாவாச்—சீருடைய
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு'

இங்கே அத்தியூர் எனப்படுவது வரதராசப் பெருமாள் கோயிற் பகுதியையே. யானை வடிவமான சிறுமலை அடுத்துள்ளதனால் இஃது இப்பெயர் பெற்றது.

மணிமேகலையில் காஞ்சி

மணிமேகலையில் சோழர் குடியினனாகிய இளங்கிள்ளி உறையூரிலிருந்தாண்ட நெடுமுடிக் கிள்ளியின் பேரால் காஞ்சியிலிருந்து ஆண்டதாகக் குறிக்கப்படுகிறது. கோவலன் காதற் கிழத்தியான மாதவியும், கோவலன் தந்தையாகிய மாசாத்துவானும் இந்நகரிலுள்ள புத்த துறவியாகிய அறவணவடிகளுடன் சென்று தவம் செய்தனர். இந்நகரில் அக்காலை ஏற்பட்ட பஞ்சந்தீரக், கோவலன்மகள் மணிமேகலை புத்த துறவியாக அழியாக் கலத்துடன் (அட்சய பாத்திரத்துடன்) சென்று அறம் செய்து, பிற சமயவாதிகளை வென்று அறவண அடிகள்பால் அறவுரை கேட்டு வீடுபெற்றதாக இந்நூல் கூறுகிறது.

இருபெரும் புலவர்கள்

சங்ககாலத்திலோ அதை அடுத்தோ இருந்திருக்கக்கூடும் புலவருள் பாரதம் பாடிய பெருந்தேவனாரும், பொய்கையாரும் காஞ்சிநகரத்தவர்களே எனப் பலர் கருதுகின்றனர். பழைய உரையாசிரியர்களுள் திருக்குறளுக்கும் பிற நூல்களுக்கும் உரைகள் எழுதிய பரிமேலழகர் காஞ்சியில் திருமால்கோயில் அருச்சகர் மரபில் பிறந்தவர் எனப்படுகின்றார். 'காஞ்சி வாழ் பரிமேலழகன், வள்ளுவனூற்கு வழிகாட்டியதும் தொண்டை மண்டலமே' என்பது தொண்டை மண்டல சதகக் கூற்று.

காஞ்சியை ஆண்ட பல்லவர்கள்

பல்லவர்கள் தமிழர் அல்லர் என்ற கொள்கை வரலாற்றாசிரியர் பலரிடையே நிலவி வருகிறது. அவர்கள் தமிழ் இலக்கியத்தை வளர்க்கவில்லை என்றும் அவர்கள் கருதுகின்றனர். தமிழ்நாடெங்கும் பல்லவர் பெயரால் ஊர்களும் கோயில்களும் உள்ளன. பல்லவ மன்னர்கள் நாயன்மாராலும் ஆழ்வார்களாலும் பாடப்பட்டுள்ளனர். ஆனால், இவை சமயப்பற்றைக் காட்டுமேயன்றி மொழிப் பற்றைக் காட்டா என்கின்றனர். இதுவும் தவறான கருத்தே. பல்லவர் வரலாறு முற்றிலும் ஆராயப்படின் இக்கொள்கைக்கு மாறான செய்திகள் பல காணப்படலாம். தமிழிலக்கியம் பற்றியவரை பல்லவ அரசர்பேரில் பாடப்பட்ட நூல்களில் இயற்றியவர் பெயர் அறியப்படாத நந்திக் கலம்பகம் ஒன்று. இவை பேர்க நாயன்மார் இருவர் காஞ்சியில் இருந்து ஆண்ட பல்லவ அரசர் ஆவர். இவர்கள் ஐயடிகள் காடவர்கோன் நாயனாரும், கழற்சிங்க நாயனாருமே ஆவர்.

பல்லவருள் சிவனடியார்கள்

ஐயடிகள் காடவர்கோன் அப்பரால் பாடப்பட்டவன். அப்பர் காலமாகிய ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதிக்கு முந்தியவன். இவனே ஆறும் நூற்றாண்டில் ஆண்ட மூன்றாம் சிம்மவர்மன் ஆகிய பஞ்சபாதசிம்ஹன் ஆவான். இவன் தன் மகனுக்கு அரசுரிமையை அளித்து விட்டுத் தமிழ்நாட்டுக் கோயில்கள் தோறும் சென்று கோயிலுக்கு ஒரு வெண்பாவாக க்ஷேத்திர வெண்பாப் பாடினான். இந்நூல்

இன்று முழு உருவில் அகப்படவில்லை. சிதைந்த உருவில் 23 வெண்பாக்களே கிடைத்துள்ளன.

நாயன்மாருள் இன்னொருவன் சுந்தரர் காலத்திய பல்லவ அரசன் கழற்சிங்கன். சுந்தரர் இவனைக் 'கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்' என்று தம் காலத்தில் ஆண்டவனைக் குறிப்பிடுகிறார். இவ்வரசன் கி.பி. 840 முதல் 865 வரை ஆண்ட மூன்றாம் நந்திவர்மன் ஆவான். திருப்பதிகம் ஓதும் வழக்கமும், திருவாதிரை விழாவாற்றும் வழக்கமும் இவன் காலத்திலிருந்தனவாகக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. நந்திக்கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவனும் இவனே. இவன் மனைவியர் பலருள் உரிமை அரசியாயிருந்தவள் இரட்டையப் பேரரசனை அமோகவர்சன் மகளான கங்கா என்ற சமணப் பெண்மணி. அவள் கல்விச் சிறப்புப் பற்றிப் பெரியபுராணமும் கல்வெட்டுக்களும் பலபடப் புகழ்கின்றன.

பல்லவருள் திருமாலடியார்கள்

கி.பி. 725 முதல் 790 வரை ஆண்ட பல்லவமல்லன் சிறந்த திருமாலன்பன்.

பிற்காலப் புலவர்கள்

காஞ்சியிற் பிறந்த பெரும் புலவர்களுள் கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார் குறிப்பிடத்தக்கவர். இவர் குமரகோட்டத்தில் அர்ச்சகராயிருந்தவர். இவர் பாடல்கள் பழம் பாடற் பண்பும் சுவையும் மலிந்தவை ஆகும்.

வீரசைவ சமயப் பெரியாரும் தமிழ்க் கவிஞர் பெருமானுமாகிய சிவப்பிரகாச அடிகளும், அவரைப்போலவே பெருங்கவிஞர்களாயமைந்த அவர் உடன்பிறந்தாராகிய கருணையர், வேலையர் ஆகியவர்களும் காஞ்சியிலேயே பிறந்தவர்கள். அவர்கள் மூவரும் எழுதிய நூல்கள் எண்ணற்றவை. சிவப்பிரகாசர் எழுதிய நூல்களில் பிரபுலிங்க லீலை, நால்வர் நான்மணிமாலை, கூவப்புராணம், வெங்கைக் கோவை முதலியவை சிறப்பானவை. சீகாளத்திப் புராணத்திலும் இரு சருக்கங்கள் இவரால் பாடப்பட்டன.

பிற புலவர்கள்

நெற்குன்றவாணர், கூழங்கைத் தம்பிரான் ஆகியவர் காஞ்சியில் பிறந்து சிறப்புற்றவர். திருமழிசையாழ்வார் காஞ்சியில் கணிகண்ணன் என்ற நன் மாணவனுடன் வாழ்ந்து அரசனுடன் பிணங்கியதனால் பெருமாளைப் பாய் சுருட்டி உடன்வரப் பண்ணிய கதை தமிழகம் நன்கறிந்ததே. கவி வீரராகவ முதலியார் பயின்ற இடம் காஞ்சித் திருவேகம்பமே.

இன்றும் காஞ்சியில் பெரும்புலவராக விளங்குபவர் வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முனிவர் ஆவார்.

5

திருவிளையாடற் புராணம் வடமொழியில் சிவ ரகசியத்திலுள்ள ஹாலாஸ்ய மாகாத்மியத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதென்று கூறப்படுவது போலவே, காஞ்சிப்புராணமும் ஸ்காந்தம், சிவபுராணம், பிரமாண்ட புராணம் மார்க்கண்டேயம் முதலிய புராணப் பகுதிகளின் மொழிபெயர்ப்புக்கள் என்று கூறப்படுகின்றன. முதலில் எழுதப்பட்ட புராணங்கள் தமிழ் மூலங்களே என்றும், வடமொழியில் அவை புதுக்கப்பட்டுப் புராணங்களிடையே செருகப்பட்டபின் பிற்காலத்தார் மொழிபெயர்க்கப் புறப்பட்டனர் என்றும், புதுமொழிபெயர்ப்புகள் பழைய நூல்களை மங்கவைக்கவோ மறக்கடிக்கவோ செய்தன என்றும் கூறலாம். பெரியபுராணம் ஒன்று இத்தகைய சால வித்தைக்கு இரையாகாத் தமிழ்ப் புராணம் ஆகும். வடமொழியில் இவை தனி நூல்களாக எழுதப்படாமல் பிற நூல்களில் நுழைக்கப்பட்டிருப்பதே அவற்றிற்குப் போலிப் பழைமை அளிக்கச் செய்யப்பட்ட முயற்சியை விளக்குவதாகும்.

காஞ்சியின் பெருமை கூறும் வடமொழி நூற்பகுதிகள் ஸ்காந்தம் சனத்குமார சம்ஹிதை காளிகா காண்டம் தீர்த்த மான்மியத்திலுள்ள 'பஞ்சாசத்' என்ற 55 - அத்தியாயங்களும், சிவபுராணத்திலும் பிரமாண்ட புராணத்திலும் உள்ள 'சதாத்தியாயம்' என்ற 100 அத்தியாயங்களும், மார்க்கண்டேய புராணம் வித்தியா காண்டத்திலுள்ள 'காமாட்சி விலாசம்' என்ற 14- அத்தியாயங்களும் என்பர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சீன நாட்டிலிருந்து வட இந்தியாவிலும் தென் இந்தியா

விலும் சுற்றிக் காஞ்சிபுரத்தில் சில காலம் தங்கித் தாம் கண்டதையும் கேட்டதையும் எழுதிவைத்த புத்த துறவியான ஹியூன்ஸாங் கி.மு. 5-ஆம் நூற்றுண்டு முதலே காஞ்சியில் புத்த சமயம் தழைத்து வந்ததாகக் குறிப்பிடுகிருர். அசோகன் புத்த சமயத்தைக் காஞ்சியிலும் பரப்ப ஏற்பாடு செய்திருந்தான் என்றும் அவன் காஞ்சியில் நாட்டிய தூபி ஒன்று தம் நாளிலும் அங்கிருப்பதாகவும் அவர் எழுதியுள்ளார். இஃது எவ்வாருயினும் புத்த சமயத்துக்கும் சமண சமயக் கிளையாகிய திகம்பர சமணசமயத்துக்கும் காஞ்சி 2000 ஆண்டுகட்கு முன்பிருந்தே இருப்பிடமாயிற்று என்றும்,சமய வாதம் நிகழ்த்துபவர் மணிமேகலை காலமாகிய கி.பி. 2-ஆம் நூற்ருண்டு முதல் இராமானுசர் காலமாகிய கி.பி. 1200 வரை, காஞ்சியில் சென்றே தம் கைவரிசையைக் காட்டினர் என்றும் அறிகிறோம்.

கி.மு. 150-ல் வாழ்ந்த இலக்கண உரையாசிரியரான பதஞ்சலி காலத்தில் காஞ்சி புகழ்மிக்க நகராயிருந்தது. வடமொழியின் முதற் பெருங் கவிஞனை காளிதாசன் காலத்தில் வடமொழியுலகில் காஞ்சியே ஒப்புயர்வற்ற நகரமாயிருந்தது என்பது மேலே குறிக்கப்பட்டது.

குண்டலகேசி என்னும் புத்த நூலிலும் அதற்கு மறுப்பாக எழுந்த நீலகேசி என்ற நூலிலும் காஞ்சியே சமயப்போர்களின் நடுநாயக மேடையாயிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

ஹியூன்சாங் காலத்தில் காஞ்சி 6-கல் சுற்றளவுடையதாக இருந்தது. இந்தியப் பரப்பின் மற்றப் பகுதியிலுள்ள மக்களைவிடக் காஞ்சி மக்கள் வீரத்திலும், நடுநிலை நெறியிலும், அன்புமுறையிலும் எவ்வளவோ மேம்பட்டிருந்தனர் என்று அவர் குறிப்பிடுகிருர். சமணரே அந் நகரில் மிகப் பெரும் செல்வாக்குடையவர்களாயிருந்தனர். 80 சமணப் பள்ளிகள் அக் காலத்திலிருந்தன. 100 புத்த மடங்கள் இருந்தன. அவற்றில் ஆண்பெண் துறவியர் 10,000 பேர் வரை இருந்தனர்.

சிறுத்தொண்டரைத் தானைத் தலைவராகக் கொண்டு வடநாட்டுப் பேரரசனும் ஹர்ஷனை வென்ற, சாளுக்கியப் பேரரசன் புலிகேசியை முரியடித்து 'வாதாபித் தொன்னகரம் துகளாக்கிய' பல்லவ அரசன் முதல் நரசிம்மவர்மன் ஆவான். அப்பரால் இவன் சமண சமயத்திலிருந்து சைவசமயத்துக்கு மாற்றப்பட்டான். இவன் வடமொழியில் பெரும் புலவன். சமணனுயிருக்கும்போது இவன் புத்தர் காபாலிகர் முதலிய சமயத்தவரை இகழ்ந்து எழுதிய நகைச்சுவை நாடகம் (ப்ரஹஸனம்) இன்றளவும் உள்ளது. காஞ்சியின் அக்காலச் சமய நிலையை அது விளக்குவது.

வடநாடு மட்டுமன்றி உலகெங்குமே காஞ்சியின் பெருமையை நிலைநாட்டிய பேரறிஞன் தீங்-நாகன் என்றழைக்கப்படுபவன். இவன் பிறந்த இடம் காஞ்சியின் புறநகர் ஆன சிம்ஹவக்தரம் (புலியூர்) என்று குறிக்கப்படுகிறது. இவன் இளமையிலேயே துறவியாகி யபோரசாலிக் குகையில் தவமேற்கொண்டொழுகினன். அச்சமயம் தென்னுட்டினன் (காஞ்சி ?) ஆகிய சுதூர்ஜயன் என்ற தர்க்க அறிஞன் வட இந்தியாவின் தலைசிறந்த புத்த பல்கலைக்கழகமான நாலந்தாவின் புலவர்களையெல்லாம் தன் சொற்போர்களால் நிலைகலங்கவைத்தான். அப்புலவர்கள் அழைப்பின் பேரில் தீங்-நாகன் அங்கே சென்று அவனையும் பிற மாறுபட்ட சமயத்தவரையும் வென்று நூற்றுக்கு மேற்பட்ட புத்த சமயத் தருக்க நூல்கள் எழுதிக் குவித்தான். புத்த சமயத்தில் பெருங்கலம் (மகாயானம்) என்ற கிளையைச் சுமார்த்தர் (பிராமணர்) நெறிக்கும், புத்த சிறுகல (ஹீனயான) நெறிக்கும் எதிராக நிலைநாட்டிய முதற்பெருந் தலைவன் இவனே. சமய வேறுபாடு காரணமாகக் காஞ்சியும், தமிழகமும், இந்தியாவும் இவனை மறந்துவிட்டதாயினும், இன்றுவரை சப்பானிலும் சீனத்திலும் தருக்க நூல் துறையில் அவன் பெயருக்கிணையான பெயர் எதுவுமில்லை என்ற புகழை அவன் பெற்றுள்ளான். வடமொழி இலக்கிய சமய உலகையே கலக்கிய காஞ்சிபுரத்து மதயானைகள் மூன்றனுள் இவனே முதல் மதயானை. இவனை ஒத்த மற்ற இருவரும் சங்கராசாரியரும் இராமானுசாச்சாரியரும் ஆவர்.

காஞ்சியின் தலைசிறந்த புதல்வன், ஹியூன் சாங் காலத்தில் நாலந்தாப் பல்கலைக்கழகத்தின் தலைவனுயிருந்த, தருமபாலன். இவன் காஞ்சி நகரவை ஆட்சியில் உயர் அலுவலில் ஈடுபட்டிருந்த ஒருவர் புதல்வன். இவன் 20 ஆண்டு நிறையுமுன்பே புத்த துறவியாகி வேறுசமயத்

துறையில் சிக்கியிருந்த அரசனை (?பல்லவனைப்) புத்த சமயத்துக்கு மீட்டவன். நாலந்தாவிலும் தீங்நாகரைப் போலவே பெருங்கலக் கட்சியை எதிர்த்த சிறுகலத் துறவியர் 100 பேரை வாதிட்டு வென்று நாலந்தாத் தலைவனுய்ச் சில காலம் ஆட்சி புரிந்தான்.

வடமொழியில் திருவள்ளுவர் முப்பால் நூலைப்போன்ற ('முந்நூறுகள்') சிருங்கார சதகம், நீதிசதகம், வைராக்கிய சதகம் என்ற முச்சதகங்கள் பாடிய பர்த்ருஹரிக்கு இவன் நண்பன். பர்த்ருஹரி எழுதிய 'பேதவிருத்தி' என்ற நூலுக்குச் சூத்திரப்பகுதி எழுதியவன் இவனே என்று கூறப்படுகிறது.

தருமபாலரையும் எதிர்க்கத் துணிந்து அவர் மாணவரால் சொற்போரில் வெல்லப் பட்டதாகக் கூறப்படும் 'புறச்சமயப் புலவனும்' தென்னுட்டவன் என்றே குறிக்கப்படுகிருன்.

நாலந்தாவில் தொலைநாடுகளிலிருந்து சென்று பயின்ற முதல் மாணவன் என்ற பெருமையுடையவனும், காஞ்சியைச் சார்ந்த 'கோசலம்' என்ற பகுதியில் பிறந்த நாகார்ச் சுனன் என்பவன் இவனே. நாலந்தாவை உலகப் புகழ்பெறச் செய்தவனும் தீங்நாதரைப் போலப் பெருங்கலப் புத்தநெறியை உலகில் நாட்டிய வனும் இவனே.

இங்ஙனமாகப் புத்த சமயத்தின் உலகக் கிளையாகிய பெருங்கல புத்தத்தை நிலைநாட்டி யவர்களும் வளர்த்தவர்களும் பெரும்பாலும் காஞ்சி நகரத்தவரேயாவர்.

சமண சமயத்திலும் திகம்பர சமண சமயத்தை நாட்டியவர்கள் பலர் காஞ்சியில் வாழ்ந்தனர். அவர்களில் பலர் தமிழில் இலக் கண நூல்கள் எழுதினர்.

காஞ்சிநகர்ச் செல்வர்களாலேயே இந்தியா வெங்கும்-உலகெங்கும் காட்டுத் தீயெனப் பரப்பப்பட்ட பெருங்கலநெறியை எதிர்க்கத் துணிந்தவர்களும், காஞ்சிநகரத்தவரும் தென் னுட்டினருமே யாவர் என்பதும், அதனை இந்தியாவில் வேரறத் தொலைத்த பெருமை கூடத் தமிழ்நாட்டில் பிறந்து காஞ்சியில்பயின்று காஞ்சியையே தலைமையிடமாகவும் போர்த்தள மாகவும் கொண்ட சங்கரரும் இராமானுசரும் ஆவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சங்கரர் கி.பி. 800-க்குச் சற்று முன்பு, பண்டு செந்தமிழ் நாடாகவும் அன்று கொடுந் தமிழ் நாடாகவுமிருந்த மலையாள நாட்டில் காலடி என்னும் ஊரில் பிறந்தவர். இளமையி லேயே காஞ்சியில் வந்து அங்கே வாழ்ந்த வியா சர் மரபினரான குமாரிலரிடம் பயின்று, அந் நகரில் கல்வியில் சிறந்த மாதொருத்தியைப் போரில் வென்று, அதன்பின் இந்தியாவெங் கும் வெற்றிவலம் செய்து புத்த சமயத்தை அழித்தவர் அவர். அவர் காமகோட்டத்தில் பயின்று அதில் தலைமைபெற்றவர். வடமொழி யில் உரைநடைமொழி மன்னர் என்று இவர் போற்றப்படுவதுடன் வடமொழியில், என்று மில்லாத முறையில் செம்பாகமான பாடல் களும் திருவாசகம் திருக்கோவையாரை ஒத்த இனிய பாசுரங்களும் இசைப்பாடல்களும் பாடி யவர். இவர் உரைநடையிலும் சரி, பாட்டி லும் சரி, வடமொழியில் அன்றும் இன்றும் கூடக் காணப்பெருத அரிய கருத்துக்களையும் மொழிநடையையும் பாமுறையையும் காண லாம். எதுகை மோனைகளை, சிறப்பாக அடி முதல் எதுகை, அடி அடைமோனை ஆகியவற் றையும், இனிய சதகங்களையும் வடமொழியில் கையாண்ட முதல் பெரியார் இவரே. இத் துறையில் இவரை ஒட்டிச் சிறப்படைந்தவர் வரருசியும், வங்கநாட்டின் வடமொழிக் கவிஞ ரும் சமய ஆசாரியருமான சைதன்யருமே. வட மொழியில் தமிழின் இழுமென் மொழிச் சுவை ததும்பிய பாடல்கள் இம்மூவரன்றி இதுவரை யாரும் பாடியறியார்.

இவர், தம் பாடல்களில் சம்பந்தர், அப்பர், சண்டேசர் ஆகிய மூன்று நாயன்மார்களைப் பரவியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சுமார்த்தரால் இவர் சிவபிரான் திருப்பிறவி என்று கொள்ளப்பட்டுச் சங்கர பகவான், பகவத்பாதர் என்று பூசிக்கப்படுகிருர்.

தமிழர் அறிவுச் செல்வத்தையும் மொழிச் செல்வத்தையும் வடமொழிக்கு அருளியவர் சங்கரர்; தமிழரின் சமய உணர்ச்சியையும் ஒப்புரவு (சமரச) நெறியையும் வடநாட் டுக்கு அளித்தவர் இராமானுசர். இவர் திருமால் நெறியினரால் எம்பெருமானுர் என்று குறிக்கப் படுபவர். தொண்டை நாட்டில் திருப்பெரும் பூதூரில் பிறந்து காஞ்சியில் வளர்ந்தவர். இவர் நம்மாழ்வார் மரபில் வந்தவர். அவரையே கடவுளாக வணங்கி வந்தார். காஞ்சி அரச

னுடன் மாறுபட்டு இவர் வாழ்நாளின் பிற் பகுதியைக் கன்னட நாட்டில் கழித்தார். கன்னட நாட்டில் இவர் எழுப்பிய சமய எழுச்சியின் பயனாகவே அந்நாட்டில் திருமால் நெறியின் இன்னொரு கிளை நெறியாகிய மாத்துவநெறி மாத்துவாசாரியரால் தோற்றுவிக்கப்பட்டது.

வடமொழி இலக்கியத்துறையில் மட்டு மின்றி இலக்கணத் துறையிலும் காஞ்சி தமிழ்ப் பண்பைப் புகுத்தி முதலிடம் பெறலாயிற்று. காளிதாசன் வடமொழியில் முற்காலக் கவிஞனா யினும், அவன் காலத்திலேயே காஞ்சி தலைமை நிலை பெற்றுவிட்டது. இரண்டு நூற்றாண்டு களுக்குள் வடமொழி இலக்கிய நடையில் பெரு மாறுதல் ஏற்பட்டது. சங்க இலக்கியம்போல் இயற்கைக் கவிதைநலம் வாய்ந்த, காளிதாசன் காலத்து இலக்கியம் மறைந்து நீண்ட கடுந் தொடர்கள், அரிதில் தேடி எடுத்த அணிநலன் கள் வாய்ந்த தமிழில் பிற்காலக் கவிராயர் நடையையும், கம்பன் நடையையும் ஒத்த நடை எழுந்தது. இந்நடை ஏற்படுவதற்குக்காரணமா யிருந்த புலவர்கள் இருவர். ஒருவர் பாரவி ; மற்றவர் தண்டி, இருவரும் காஞ்சிநகரத்தவரே யாவர்.

இவர்களுள் தண்டியின் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு ஆகும். பாரவி அவன் முப்பாட்டன் ஆவான். ஆகவே, அவன் காலம் 6-ஆம் நூற் றாண்டு ஆகும். வடமொழியில் இவர்களை ஒத்த கவிஞர் முதற்காலத்தில் காளிதாசனும் பிற் காலத்தில் பவபூதியும் மட்டுமே யாவர்.

தமிழ் நூல்களையொத்த பொருளாழம் பாரவியின் பெருஞ்சிறப்பை வடமொழிச் செய்யுள் குறிப்பிடுகின்றது. தண்டி வட மொழியில் முதல் அணி இலக்கண நூல் செய் தவர். வடமொழியில் இலக்கணம் என்பது மொழிக்கு இலக்கணமாயமைந்த எழுத்தும் சொல்லும் மட்டுமே. இலக்கியம் வளர்ச்சி யடைந்த பின்தான் யாப்பு, அணி ஆகியவை வேண்டி வந்தன. ஆனால், அப்போதும் அவற் றிற்கு இலக்கணத்தில் இடம் ஏற்படவில்லை. ஆகவே, இவை தனியான நூல் துறையாக வகுக்கப்பட்டன. இப்புது முயற்சியில் ஈடுபட் டவர் தமிழர் ஆதலின், தமிழின் பழைய இலக்கணக் கருத்துக்களைக் கையாளுதல் இயல்பு தானே !

ஆனால், தண்டியாசிரியருக்குப் பின் 200 ஆண்டுகட்குப் பின்தான் (கி.பி. 900-ல்) பாவங்கள், ரஸங்கள் அணிக்குப் புறம்பாக வகுக்கப்பட்டன. தமிழில் 1000 ஆண்டு கட்கும் நெடுநாள் முன்பாகவே இவை மெய்ப் பாடுகள் ஆக வகுக்கப்பட்டிருந்தன என்பதைத் தொல்காப்பியம் காட்டும்.

முடிவுரை

தமிழகத்தில் காஞ்சியைப் போன்ற பழம் பண்பாடுமிக்க நகரங்கள் பல. ஆனால் அவற்றுட் பல தடந்தெரியாமற் போயிருக்கின்றன. பல பெயரளவில் நிலவும் சிற்றூர்களாக மட்டுமே யியங்குகின்றன. மீந்தவற்றின் வரலாறுகளும் தெளிவாக விளங்குமாறில்லை. சங்க இலக்கிய மூலம் பண்டைய நிலைமைகள் பலவற்றை அறிகிறோமாயினும், அதன் பெரும்பகுதி எவ்வாறோ அழிந்துபட்டதனால், நாம் அறிய விரும்பும் பல செய்திகளை விளங்க அறியமுடியா திருக்கிறது. எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டு அரசியல் வகையில் திருக்குறளும் மற்ற நூல் களும் பொதுக்கருத்துக்களும் ஆங்காங்கு தொடர்பற்ற முறையில் சில செய்திகளும் தருகின்றனவேயன்றி, நடைமுறைத் திட்டங் கள் எதுவும் தரவில்லை. தமிழ்நாட்டின் கல் வெட்டுக்கள், பட்டயங்கள், காசுகள் ஆகியவற் றில் வேள்விக்குடிப் பட்டயத்துக்கு முந்திய காலத்தவை எவையும் இதுகாறும் கிடைக்க வில்லை. இவ்வகையில் காஞ்சியில் ஆண்ட பல்லவர் வடபுலக் கல்வெட்டுக்களும் பட்டயங் களும் அக்கால நாட்டுப் பகுப்பு, ஆட்சிமுறை, அரசியல் துறையில் வழங்கிய கலைச்சொற்கள், இசை முதலிய கலைகளின் நிலைமை ஆகியவற்றை அறிவிக்கின்றன. காஞ்சியின் இலக்கியத்தில் ஒரு பெரும்பகுதி சமயச் சார்பாயிருந்ததும், அது வடமொழிக்கலைகளிலும் தன் பொறிப்பைப் பதிப்பித்தும், பல சமய வாதங் களுமே இங்ஙனம் அதன் கலைச் சின்னங்கள் அழியாதிருக்க உதவியிருக்கக்கூடும். எங்ஙன மாயினும் தமிழர் வாழ்விற்குக் காஞ்சி தந்த செல்வம் அரும்பெறற் செல்வங்களே யாகும்.

தமிழரின் பண்பாடு இந்தியப் பெருநாட்டுப் பண்பாட்டின் கடைகாலமாக விளங்கினும், அது தன் வழிவந்த அதனைச் சாராது தனி வாழ்வே வாழ்ந்துள்ளது. இக்காரணத்தால் அதன் தனிச் சிறப்பு இந்திய நாட்டினர் உணரக்கூடாம

விருக்கிறது. காஞ்சி தென்னாட்டுடன் வட நாட்டுப் பண்பாட்டை இணைத்துக் காட்டுவ தாகும். ஆகவே, இந்திய வாழ்வில் தமிழகத் தின் தலைசிறந்த பங்கை விளக்கக் காஞ்சியின் பெருமை உதவுவதாகும்.

இந்திய மாநிலங்களிலும் அதற்கப்பாலும் தமிழரும், தமிழும், தமிழ்ப் பண்பாடும் பரந் திருந்ததென்பதற்குப் பல சின்னங்கள் உள்ளன. இச்சின்னங்கள் வடமேற்கிலும் வடகிழக்கிலும் வடக்கிலும் போகப் போகக் குறைவுற்றும் வண்மை குன்றியும் காணப்படுவதொன்றே அப்பண்பாட்டின் தலை ஊற்றுத் தென்னாடு என்பதைக் காட்டும். காஞ்சியின் வரலாறும் தொண்டைநாட்டு வரலாறும் இதனை மேலும் வலியுறுத்துவனவாகும். காஞ்சியின் நாகரிகம் மிகப் பழைமையானதாயினும் அதனை அவ்வப் போது புதுப்பித்த புது வெள்ளம் வடக்கு நின்றும் வராது தெற்கில் நின்றே வந்தது காண லாம். அதனைக் காஞ்சி ஏற்றுத் தானே வளர்ந்து வடபுலத்துக்கு வழங்கிப் புகழ்பெற்றது. கரிகாலன் புதுக்குடியேற்றம் இந்திய நாகரிகத் தின் தென்-வடப் போக்கின் ஒரு பகுதியே யாகும்.

வளர்ச்சி மீண்டும் தமிழகப் புகழை உல கிற்கு விளக்கும் விளக்கமாய் ஓங்குமாக.

கவிஞர் திலகம்
கச்சியப்ப முனிவர்

மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

கவிஞர் கச்சியப்ப முனிவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தகைமைசான்ற கவிஞர். சங்கநூல்களிலும் சைவசித்தாந்த நூல்களிலும் நன்கு புலமையெய்தியவர்; திருத்தணிகை வேளாண்குடியிற்றோன்றியவர். இலக்கிய இலக்கணங்களில் வல்லவராய் விளங்கிய சிவஞான முனிவரிடம் கற்பன கற்றுப் பெருங்கவிஞராய்த் திகழ்ந்தவர்.

இவரிடம் கல்வி பயின்றவர்கள் கந்தப்ப ஐயர் முதலியவர்கள்.

இவர், "செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வௌவிய கவிஞர்" எனக் கம்பநாடர் கூறிய கவிஞர் இலக்கணத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் இலங்கியவர்.

இவர் இயற்றிய நூல்கள்: தணிகைப் புராணம், விநாயக புராணம், பூவாளூர்ப் புராணம், பேரூர்ப் புராணம், திருவானைக்காப் புராணம், சிவஞான முனிவர் இயற்றிய காஞ்சிப் புராணத்தின் பிற்பகுதி, சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ், கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது, திருத்தணிகை ஆற்றுப்படை, பஞ்சாக்கர அந்தாதி என்பன.

இவர் இயற்றிய நூல்களில் சங்கவிலக்கியக் கருத்துகளும், அகப்பொருள் இலக்கண அருஞ் செய்திகளும், சைவசித்தாந்த நுண்பொருள்களும் பரக்கக் காணலாம்.

செந்தமிழ் நடையில் சிறந்து விளங்கும் இந்நூல்களில் இவர் ஊனுடல் அழிந்தும் புகழுடம்பு அழியாது பொற்புடன் திகழ்கிறது.

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு.

என்னும் செய்யுளுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் கச்சியப்ப முனிவரின் புகழ் என்றென்றும் பொலிக.

காஞ்சிச் சிவ தலங்கள்

மகாவித்துவான் சி. அருணை வடிவேலு முதலியார்

திருச்சிற்றம்பலம்

கருவார் கச்சித் — திருவே கம்பத்
தொருவா என்ன — மருவா வினையே

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

திருவருள் நிலமாக விளங்கும் நம் பாரத நாட்டிற்குப் பெருமை தந்து நிற்பன தெய்வத் திருத்தலங்களும், புண்ணிய தீர்த்தங்களுமாம். அத்தகைய தலங்களுள் ஏழு தலங்கள் '**முத்தி நகரங்கள்**' எனச் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன. 'காஞ்சி அவற்றுள் ஒன்று' என்பது மட்டுமன்று; அவை எல்லாவற்றினும் சிறந்த ஒன்றுகும். இதனை, 'நகரேஷு காஞ்சி' என்னும் வடமொழி வாசகத்தாலும் நன்கு உணரலாம்.

நகரங்கள் எல்லாவற்றுள்ளும் காஞ்சி நகரம் சிறந்ததாக விளங்குவதற்குக் காரணம், அவ்வொரு நகரத்திற்குள்ளே அனேக திவ்வியத் தலங்கள் அமைந்திருத்தலேயாம். இத்தகைய சிறப்புப் பிற எந்த நகரத்திற்கும் இல்லை. 'காஞ்சியில் இல்லங்களைவிடக் கோயில்கள் மிகுதி' என்று கூறுவது ஒரு பொதுவான வழக்கம். காஞ்சித் தலத்தை வந்துவணங்கிப் பாடல் பாடியருளிய **திருநாவுக்கரசு நாயனர்,**

> **"கச்சிப் பலதளியும் ஏகம் பத்தும்**
> **கயிலாய நாதனையே காண லாமே"**

என, காஞ்சியில் அளவற்ற தலங்கள் இருத்தலைக் குறிப்பிட்டருளினர்.

தலங்கள் பலவாக இருத்தல் மட்டுமன்று; பல கடவுளர்க்கும் காஞ்சியில் கோயில்கள் உண்டு. சிறப்பாகச் **சிவாலயங்கள், திருமால் திருப்பதிகள், அம்பிகை கோட்டம், முருகன் கோட்டம், காளி கோயில், கொற்றவை கோயில்** முதலியவை குறிப்பிடத்தக்கன.

அதுவன்றியும் **சமண, பௌத்தம்** முதலாக அனைத்துச் சமயங்கட்கும் காஞ்சி ஒரு காலத்தில் இடமாய் இருந்தது. அதன் அறிகுறிகளை இன்றும் காஞ்சியில் காணலாம். அவற்றுள் **சிவ தலங்கள் சிலவற்றை** இங்குக் குறிப்பிடுவோம்.

தல புராணம்

காஞ்சித் தலத்திற்கு நல்ல செந்தமிழ்ப் புராணங்கள் இரண்டு உள்ளன. அவை திருவாவடுதுறை ஆதீனத்து முனிவர்களால் இயற்றப் பெற்றவை. அவ் இருவருள், **மாதவச் சிவஞான யோகிகள்** ஆசிரியர். **கச்சியப்ப முனிவர்** அவ்வாசிரியருக்கு மாணவர். இவ் இருவராலும் ஒரே காலத்தில் இயற்றப்பெற்ற காஞ்சிப் புராணங்கள், '**முதற் காண்டம்**', '**இரண்டாம் காண்டம்**' எனக் கூறப்பட்டாலும், உண்மையில் இரண்டும் இரண்டு தனிப் புராணங்களே. அவை யிரண்டினும் காஞ்சியில் உள்ள பல தலங்களின் சிறப்பையும் நன்கு உணரலாம்.

பலரும் வழிபட்டமை

தலங்கள் மிகுதியாகஇருத்தல் மட்டுமன்று; பல காலங்களில் பலர் வழிபட்டுப் பல பயன்களை அடைந்த பெருமையும் காஞ்சிக்கு உண்டு. 'தேவர், முனிவர்' எனச் சிறப்பித்துக் கூறப்படுவோருள் காஞ்சியில் வந்து வழிபடாதவர் ஒருவரும் இலர். 'தேவர், முனிவர்' என்போருக்கு மேற்பட்ட **இந்திரன், பிரமன், மால்** என்னும் இவர்களேயன்றி உருத்திரர் பலர் வந்து வழிபட்ட தலங்களும் காஞ்சியில் உள்ளன. மற்றும் தேவமாதர்களும், அவர்கட்குத் தலைவியராகிய '**திருமகள், கலைமகள்**'

என்னும் சக்திகளும் காஞ்சியம்பதியில் வந்து வழிபாடு செய்தனர்.

அம்பிகை வழிபாடு

இவ்வனைத்திற்கும் சிகரமாகக் காஞ்சியம் பதிக்குள்ள சிறப்பு, அம்பிகை கயிலாயத்தினின் றும் வந்து தவம் செய்து இலிங்கம் கண்டு ஒரு முறை வழிபட்டதேயன்றி, இன்றும், என்றும் வழிபட்டுக் கொண்டிருத்தலும், அதனுடன் அவள் அறச்சாலை நிறுவி முப்பத்திரண்டு அறங் களையும் என்றும் வளர்த்து வருதலுமாகும்.

காமக் கோட்டம்

'இறைவி திருக்கயிலையில் இறைவன் திருக் கண்களை மூடிய பாவம் நீங்கக் கழுவாய் (பிராயச்சித்தம்) செய்துகொள்ள வேண்டிக் காஞ்சிபுரத்துக்கு வந்தாள்' என்பது காஞ்சிப் புராணம். 'அவ்வாறு அவள் காஞ்சிக்கு வந்த நாள் **ஐப்பசி பூசம்**' என்பது ஒரு கொள்கை; 'ஐப்பசிப் பூரம்' என்பது மற்றொரு கொள்கை.

வந்த இறைவி முதலில் **காப்பீசப் பெருமானை** நிறுவி வழிபட்டுக் **காப்பணிந்து,** பின் கடகேசப் பெருமானை வழிபட்டுக் கடக மும் அணிந்துகொண்டு, உலகிற்கு முதற் காரணமாகிய பஞ்ச பூதங்களால் உண்டாக்கப் பட்டமையால் **'பஞ்ச தீர்த்தம்'** என்றும், **'உலகாணித் தீர்த்தம்'** என்றும் பெயர்பெற்று விளங்கும் தீர்த்தக்கரையில் **'பதுமன்'** என்னும் நாகம் வசிக்கும் பிலத்தின் பக்கத்தில் **பீடமும், தவச்சாலை, தருமசாலைகளும்** அமைத்து அறங் களை வளர்த்துத் தவமும் புரிந்தாள். அவ் விடமே **' காமக் கோட்டம் '** எனப்படுகின்றது. அம்மையும், **'காமக் கண்ணி' ,காமாட்சி'** எனப் பெயர் பெற்று விளங்குகின்றாள்.

ஆதி பீடம்

அம்பிகைக்குத் தனியாகக் கோயில் தோன் றியது முதலில் இவ்விடத்தில்தான். அதனால் தான், சத்தி பீடங்கள், அறுபத்து நான்கில் இக் காமகோடி பீடம் **' ஆதி பீடம் '** எனப்படு கின்றது.

பிலாகாசம்

காமக் கோட்டமே காஞ்சிபுரத்தில் நடு விடத்தில் இருதயம்போல அமைந்துள்ளது. அதனால் விழாக் கொள்கின்ற மூர்த்திகள் யாவரும் இக் காமக் கோட்டத்தை வலம்வந்தே திரும்ப வேண்டியவர்களாகின்றனர். மேற் கூறிய நாகத்தின் பிலம் இருப்பதால் காமக் கோட்டம், **'பிலாகாசம்'** என்றும் கூறப்படு கின்றது.

அன்னபூரணி, சாத்தா

இங்கு அம்மை, வீற்றிருந்த கோலமாய் இருத்தல் சிறப்பு. மகத நாட்டில் அன்ன மிட்டுப் பஞ்சந் தீர்த்த **அன்ன பூரணியாகவும்** இவள் இக்கோயிலில் வேறோரிடத்தில் காட்சி யளிக்கின்றாள். காமாட்சியிடமிருந்து **'செண்டு'** என்னும் ஆயுதத்தைப் பெற்ற **சாத்தா**வும் (ஐயனாரும்) இங்கிருக்கின்றார்.

காயத்திரி மண்டபம்

காமாட்சியம்மை எழுந்தருளியிருக்கின்ற மண்டபம் காயத்திரி மந்திரத்தின் எழுத்து இருபத்து நான்கினையும் இருபத்து நான்கு தூண்களாகப் பெற்று, காயத்திரியின் மூன்று பாகங்கள்போல மூன்று பகுதியாய் அமைந்து, **'காயத்திரி மண்டபம்'** எனப் பெயர்பெற்று விளங்குகின்றது. அதில் காமாட்சியம்மைக்கு இடப்பக்கத்தில் திருமகளின் கருஞ்சட்டை, சாந்தாகக் கழிக்கப்பட்டு விளங்கு கின்றது. அதனைத் தொட்டு அணிந்துகொண் டவர்கட்கு வறுமை நீங்கிச் செல்வம் மிகும்.

கருஞ்சாந்துச் சட்டை

திருமகள் திருமாலால் ஒருமுறை சபிக்கப் பட்டுக் கரியவளாயினாள். பின்பு அவர் சொற் படியே காமக்கோட்டத்தை அடைந்து தவம் புரிந்து, காமாட்சி யம்மையால் கருநிற உருவம் கருஞ்சாந்தாகிக் கழிய, முன்போல அழகிய உருவத்தைப் பெற்றாள். அப்பொழுது காமாட்சி யம்மை கொடுத்த வரத்தின்படியே மேற் குறித்த பெருமையுடன் கருஞ்சாந்துச் சட்டை விளங்குகின்றது.

கலைமகள்

அம்பிகைக்கு எப்பொழுதும் இனிய தோழிமார்களாய் விளங்குகின்ற **'இலக்குமி, சரசுவதி'** என்னும் இருவருள் இலக்குமி இவ்வா றிருக்க, சரசுவதி இக்கோயிலில் தனி ஓர் இடத் தில் இருந்து அன்பர்கட்குக் கல்வியையும் ஞானத்தையும் தருகிறாள்.

திருமகள் செய்த தவம் காரணமாகக் காமாட்சியம்மை அவட்கு வெளி நின்று அவளுடன் அளவளாவியபொழுது அவ்விருவர் பேச்சுக்களையும் மறைந்திருந்து கேட்டமையால் **'கள்வன்'** என்ற பெயருடன் **'திருமாலும்'** இங்கு இருக்கின்றார். இவரை ஆழ்வார்களும் பாடியுள்ளார்கள்.

நின்றான், இருந்தான், கிடந்தான்

'காஞ்சியில் திருமால் திருப்பதிகளும் பல உள' என்று சொன்னோம். அத் திருப்பதிகளில் **உலகளந்தார் கோயிலில்** நின்றவராகவும், **'பாண்டவ தூதர்'** கோயிலில் இருந்தவராகவும், **சொன்ன வண்ணம் செய்தார்** (யதோத்காரி) கோயிலில் கிடந்தவராகவும் பெருமாள் காட்சியளிக்கின்றார். ஆயினும், அவர் அம்மூன்று கோலமாகவும் இக் காமக் கோட்டத்தின் தீர்த்தக் கரையில் விளங்குகின்றார்.

காமாட்சியம்மை செய்யும் அறச் செயல்களுக்குப் பூதம் ஒன்று இடையூறாக இருந்தது. அதனை அடக்கும்படி அம்மையார் இட்ட கட்டளைப்படி திருமால் அதனைக் கீழே வீழ்த்தி முதலில் அதன்மேல் **நின்றும்,** பின்பு அதன் மேல் **இருந்தும்,** கடைசியில் அதன்மேலே **படுத்தும்** அதன் வலிமையை அடக்கினார். அம்மூன்று கோலங்களும் உலகாணித் தீர்த்தக் கரையில் ஒன்றன்மேல் ஒன்றாக மூன்று அடுக்குக் கோயில்களில் காட்சி தருகின்றன.

திருமாலால் அடக்கப்பட்ட பூதம் ஆண்டிற்கு ஒருமுறை ஒரு கர்ப்பிணியைப் பலிகேட்டு அதன்படி அரசனால் கொடுக்கப்பெற்று வந்ததாகவும் வரலாறு உண்டு. 'கர்ப்பிணி, கோபுரத்தின் மேலிருந்து உலகாணித் தீர்த்தத்தில் குதிக்க அப்பூதம் அவளைப் பற்றி உண்ணும்' என்று சொல்லித் தீர்த்தத்தில் அந்த இடம் **கருமாறிப் பாய்ச்சல்** என்று காட்டப்படுகின்றது.

திருவேகம்பம்

அம்மை, தான் விரும்பி வந்தபடி இறைவனைப் பூசித்த இடமே **திருவேகம்பம்**. இதுவே காஞ்சியின் **தலைமைத் தலம்.**

"மல்லல் தலங்கட்கு அரசாம் மணித்
தெய்வக் கோயில்
செல்வத் திருவேகம்பம்"

என்பது **காஞ்சிப் புராணம். 'பெரிய கோயில்'** என வழங்கப்படுவது. இங்கு வேதமே மாமரமாகக் காட்சியளிக்கின்றது. ஒற்றைமாமரத்தை உடைமையால் இத்தலம் **'ஏகாம்பரம்'** என்றும், இங்குள்ள இறைவன் **'ஏகாம்பரநாதன், ஏம்பரேசுரன்'** என்றும் சொல்லப்படுகின்றனன்.


இலலிதா தேவியும் மும்மூர்த்தியும்

இங்கு வேதத்தை மாமரமாக இருக்கச் செய்த இறைவன் பின்பு அதன் அடியில் தான் இலிங்கமாய்த் தோன்றி, அவ் இலிங்கத்தினின்றும் **இலலிதா தேவி**யைத் தோற்றுவித்தான். அவள் தனது வலக்கண், இடக்கண், நெற்றிக் கண் இவைகளினின்றும் முறையே **'பிரமன், மால், உருத்திரன்'** என்னும் மும்மூர்த்திகளைத் தோற்றுவித்து, உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் செய்ய வைத்தாள்.

'இந்த இலிங்க மூர்த்தியையே அவள் பின்பு கயிலாயத்திலிருந்து வந்து பூசிக்கத் தேடிய பொழுது சிவபெருமான் ஒரு திருவிளையாட்டாகக் காணப்படாது மறைந்திருக்க, அம்பிகை தவஞ் செய்தபின் காணப்பட்டார்' என்று **பெரிய புராணம்** கூறுகின்றது. அது, 'சிவபெருமானை வழிபடப் பெறுதல் தவத்தினாலே தான் கிடைக்கும்' என்னும் உண்மையைப் புலப்படுத்துகின்றது.

கம்பை யாற்றின் கரையில் ஒற்றை மாவடிக்கீழ்க் காணப்பட்ட இவ் இலிங்கத்தையே அம்பிகை பூசித்தாள். 'புதிதாக ஒரு மணல் இலிங்கத்தைச் செய்து பூசித்தாள்' என்பதும் பழைய செய்தி. அம்மையின் பூசைக்கு இடையே ஒருநாள் சிவபெருமான் கம்பா நதியைப் பெருக்கெடுத்து வரச்செய்ய, அதனைக் கண்ட அம்மை, 'ஐயனுக்குத் தீங்கு வருமே' என்று அஞ்சி ஐயனைத் தழுவிக் கொண்டாள். கம்பையாறு விலகிச் சென்றது; இறைவன் காட்சி கொடுத்து, 'உனது பூசைக்கு என்றும் முடிவில்லை' என்று சொல்லித் திருமணம் நிகழும் வரங்கொடுத்து மறைந்தான்.

பின் அப்பெருமானது கட்டளையின்படி திருமால் முதலிய தேவர்கள் **ஏகாம்பர நாதருக்கும், காமாட்சி** யம்மைக்கும் **பங்குனி உத்திர**



கச்சி ஏகம்பன் கோயிலில் வரலாற்றுப் புகழ் மாவடி



போதி தருமர்

காஞ்சிபுரத்தில் தோன்றியவர்.
புத்தர் பெருமானின் 28-ஆவது அம்சமாகக் கருதப்பெறுபவர்.
கி.பி. 520-ல் சீனாவுக்குச் சென்று, ஜென் பௌத்த மதத்தைப் பரப்பியவர்.

(சீனாவிலுள்ள பழமையான ஓவியத்திலிருந்து படி எடுக்கப்பெற்ற படம்)

நாளில் திருமணத்தைச் சிறப்பாகச் செய்து மகிழ்ந்தனர். இறைவனைப் பூசித்த நிலையில் அம்பிகை பெற்ற திருப்பெயர் '**ஏலவார் குழலி**' என்பது.

திருவேகம்பத்தில் உள்ள பிற தலங்கள்

இங்குப் பிரமன் பூசித்த **வெள்ளக் கம்பர்** திருமால் பூசித்த **கள்ளக் கம்பர்**, உருத்திரர் பூசித்த **நல்ல கம்பர்** உள்ளனர். அம்மை பூசித்த மூர்த்தி **பெரிய கம்பர்**. இவரே மூலத் தானத்தில் உள்ளார்.

இவருக்குத் தெற்கில் வெள்ளக் கம்பரும், வடக்கில் கள்ளக் கம்பரும், வடகிழக்கு மூலையில் நல்ல கம்பரும் உள்ளனர். கள்ளக் கம்பருக்கு மேற்கில் **மத்தள மாதவேசரும்**, அவருக்கு மேற்கில் மார்க்கண்டர் பூசித்த **மார்க்கண்டேசுரரும்** உள்ளனர். வெள்ளக் கம்பருக்குத் தெற்கில் அகத்தியர் பூசித்த **அகத்தீசுரர்** உள்ளார்.

நல்ல கம்பருக்கு அடுத்தாற்போல் **நிலாத் திங்கள் துண்டப் பெருமாள்** நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். இவர் இறைவன் சடையிலுள்ள பிறைச்சந்திரனது நிலவை ஏற்று இன்புறுகின்றனர். இவரையும் ஆழ்வார்கள் பாடியிருக்கின்றனர்.

திருவேகம்பத்தில் உள்ள **நடராசரது** சபை மற்றத் தலங்களில் உள்ள நடராசரது இடம் போல் இல்லாமல், ஒரு தனிச் சிறப்புப் பெற்றது. திருமாலின் தவத்துக்கு இரங்கி அவருக்கு மத்தளம் முழக்கும் வரம் தந்து, '**மத்தள மாதவன்**' என்ற பெயரையும் அளித்து, அவருக்காகக் காப்பு நடனம் செய்து களிப்பித்ததும் இச்சபை.

கச்சி மயானம்

'திருவேகம்பம் உலகத்தைத் தோற்றுவித்த இடம்' என்றால், அதற்கு எதிரே கொடிக் கம்பத்து அடியில் மேற்கு நோக்கியுள்ள **கச்சி மயானம்** உலகத்தை ஒடுக்கிய இடமாகும். '**பண்டாசுரன்**' என்பவனை அழிச்தற்பொருட்டுச் சிவபெருமானே எல்லா உயிர்களையும் அவிப் பொருள்களாக ஆக்கிய வேள்வியில் இட்டு ஒடுக்கிய இடம் இது. அந்த வேள்விக்கு உதவிய **நெய்க் குண்டத்தையே** பின்பு இங்குள்ள '**சிவ கங்கை**' என்னும் தீர்த்தமாக இறைவன் செய்தான். இதன் மேற்குக்கரையில் இடபம் பூசித்த **இடபேச்சுரம்** உள்ளது. தெற்குப் பிராகாரத்தில் விட்டுணு பூசித்த **விண்டுவீச்சுரம்** உள்ளது.

வாலீச்சரம்

கச்சி மயானத்தின் கிழக்குப் பக்கத்தில் **வாலி** பூசித்த **வாலீச்சரம்** உள்ளது. இதுவும் மேற்கு நோக்கியது. 'பெரிய கம்பர்' முதலிய நான்கு இலிங்கங்களோடு இந்த வாலீசுரரும் சேர, '**பஞ்ச லிங்கங்கள்** என்று சொல்லப்படும் சிறப்பினையுடையது திருவேகம்பத் தலம்.

காயா ரோகணம்

அம்பிகையால் பூசிக்கப் பெற்ற இத் திருவேகம்பத்திற்கு அடுத்த நிலையில் உள்ளது **இலக்குமியால்** பூசிக்கப் பெற்ற **காயா ரோகணம்**. இது வேகவதி நதியின் வடகரையில உள்ளது. இங்குத் **தேவ குரு**வும் பூசித்துப் பயன்பெற்றார். இத்தலம் செலவத்தைத் தரும் சிறப்புடையது. **வியாழக்கிழமை** இதற்குரிய சிறப்புநாள்.

இதற்குரிய '**காயாரோகண தீர்த்தம்**, என்பது '**தாயார் குளம்**' என வழங்கப்படுகிறது. இத்தீர்த்தம் இறந்தார் கடன் செய்தற்குச் சிறந்தது. வேகவதி யாற்றின் தென் கரையில் காயாரோகண தலத்திற்கு நேரே உள்ளது. இதன் மேற்குக் கரையில் யமன் பூசித்த '**யமேசுரம்**' உள்ளது.

கச்ச பேசுரம்

அதற்கு அடுத்த நிலையில் சொல்லப்பெறுவது '**கச்ச பாலயம்**' என்னும் **கச்சபேசுரம்**. இது **பிரமன், சரசுவதி** என்னும் இருவராலும், பூசிக்கப் பெற்றது. கல்வியைத் தரும் சிறப்புடையது. திருமால் **கச்சப** (ஆமை) அவதாரத்தை அடைந்து பூசித்தது.

கங்கை நதிக் கரையில் விளங்கும் '**நைமி சாரணியம்**' என்னும் வனம் அத்தகைய சிறப்பைப் பெற்று விளங்கியதற்கும், முனிவர் பலர் அதனையே தாம் தவம் செய்வதற்குரிய வனமாகத் தேர்ந்துகொண்டு அங்கே அமர்ந்து பல தவச் செயல்களில் ஈடுபட்டதற்கும் இக் கச்சபாலயமே காரணமாயிருந்தது எனக் **கந்த புராணம்** கூறும்.

இட்டசித்தீசுரம்

கச்சபேசருக்கு வடக்கில் உள்ளது **இட்ட சித்தீசம்.** விரும்புவார் விரும்பும் பயனைக் கொடுத்தல் பற்றி இத்தலம் இப் பெயர் பெற்றது. இத்தலத்திற்குரிய **இட்டசித்தித் தீர்த்தமே** கச்சபேசுரர் கோயிலில் விளங்குவது. இத் தீர்த்தத்தில் வடக்கு முதல் வலமாக, '**தரும தீர்த்தம் அருத்த தீர்த்தம், காம தீர்த்தம், முத்தி தீர்த்தம்**' என்னும் நான்கு தீர்த்தங்கள் உள்ளன. அந்தத் திக்கில் இறங்கி அவற்றில் மூழ்கினோர் அந்த அந்தப் பயனைப் பெறுவர். ஞாயிற்றுக் கிழமை இத்தீர்த்தத்திற்குச் **சிறப்பு நாள்**. அதிலும் கார்த்திகை மாதத்து ஞாயிறு மிகச் சிறந்தது.

காஞ்சிப் புராண **இரண்டாம் காண்டத்தில்** காஞ்சித் தலங்கள் பல ற்றி '**திருவேகம்பம், காயாரோகணம், கச்சபேசுரம்**' என்னும் மூன்றும் மிகச் சிறந்தன என்று சொல்லப்பட்டுள்ளது. இவற்றுள் கச்சபேசுரமே நகரின் நடுவில் மிகச் சிறப்பாக விளங்குகின்றது.

பாடல்பெற்ற தலங்கள்

காஞ்சியம்பதிக் குள்ளே தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஐந்து உள்ளன். அவை **திருவேகம்பம், திருநெறிக் காரைக்காடு, திரு மேற்றளி, திருஅனேகதங்காவதம், திரு ஓண காந்தன் றளி** என்பன.

திருநெறிக் காரைக்காடு கிழக்குத் திசையில் '**திருக்காலி மேடு**' என வழங்கப்படுகிறது. **புதனும் சிபி** என்னும் இந்திரனும் பூசிக்கப்பட்டது. சுவாமி **சத்திய விரதேசர்; தீர்த்தம் சத்திய விரத தீர்த்தம்**. இத்தலத்திற்கு உரிய சிறப்பு நாள் **புதன் கிழமை.**

திருமேற்றளி பிள்ளையார்பாளையம் சாலைத் தெருவிற்கு மேற்கில் உள்ளது. திருமால் சம்பந்தர் பாடலால் '**சிவ சாரூபம்**' பெற்ற தலம் இங்குத் தனியாக மேற்கு நோக்கி விளங்குகின்றது.

திருஅனேகதங்காவதம் கயிலாய நாதர் கோயிலுக்கு அண்மையில் தென் கிழக்கில் உள்ளது. இதற்குத் தனித் தீர்த்தமும் உண்டு.

திருஓண காந்தன் றளி சருவ தீர்த்தத்தின் வடக்கில் உள்ளது. '**ஓணன், காந்தன்**' என்னும் இரு அசுரர் பூசித்த இரண்டு மூர்த்திகள் இங்கு விளங்குகின்றார்கள். **சுந்தரர்** இங்குப் பதிகம் பாடிப் பொன் பெற்றார்.

இங்கேயே தென்பாகத்தில் '**சலந்தரன்**' என்னும் அசுரன் பூசித்த சலந்தரேசுரரையும் கொணர்ந்து தனிக் கோயிலில் பிரதிட்டித்துள்ளார்கள்.

பல தலங்கள்

இவை தவிரப் பிரமன் பூசித்த சிவாத்தானம் '**தேனம்பாக்கம்**' என்னும் இடத்தில் உள்ளது. காஞ்சியிற் சிறந்து விளங்கும் வரதராசப் பெருமாள் பூசித்து '**வரதன்**' எனப் பெயர்பெற்ற '**புண்ணிய கோடீசம்**', அப் பெருமாள் இருக்கும் **அத்தி கிரிக்கு** மேற்கில் அண்மையில் உள்ளது.

'**தீபப் பிரகாசர்**' என்னும் விளக்கொளிப் பெருமாள் பூசித்த '**ஆதிபீதீசம்**' அப்பெருமாள் கோயிலுக்கு மேற்கில் விளக்கம் இல்லாமல் இருக்கின்றது.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் **திருக் குறிப்புத் தொண்ட நாயனார்** முத்திபெற்ற **முத்தீச்சரம்** கடைவீதியில் பலரும் அறிய நன்கு விளங்குகின்றது.

சாக்கிய நாயனார் பேறுபெற்ற '**வீராட்டகாசம்**' என்பது கோனேரி குப்பம் வடகோடியில் உள்ளது.

தேவர்கள் இறைவனை நஞ்சுண்ணச் செய்த பாவம் நீங்கப் பூசித்த '**மணிகண்டேசம்**' சின்ன காஞ்சிபுரத்தில் சிறப்புற்று விளங்குகின்றது.

மற்றும் உள்ள சிவ தலங்கள் அளவற்றன. அவைகளைப் புராண வாயிலாக அறிதல்வேண்டுமன்றி, இங்கு முற்ற எடுத்து மொழிதல் இயலாது.

திருமால் **பச்சை வண்ணராய்** இருந்து இங்கு இறைவனைப் பூசித்துப் **பவள நிறம்** பெற்றார். அப் பச்சை வண்ணர் கோயில் பவள வண்ணர் கோயில்கள் காலாண்டார் வீதியில் உள்ளன.

கயிலாயம், வைகுண்டம்

காஞ்சியில் பலரும் கண்டும், கேட்டும் உணர்ந்துள்ள சிற்பச் சிறப்பு மிக்கது **கயிலாய நாதர் கோயில்.** அது நகரின் மேற்குக் கோடியில் உள்ளது. அதற்கு நேரே கிழக்கு ராச வீதியை அடுத்துள்ளது சிற்பம் நிறைந்த **வைகுண்டப் பெருமாள் கோயில்.**

விநாயகர்

காஞ்சியில் சிவ விட்டுணு ஆலயங்களேயன்றிப் புகழ்பெற்ற **விநாயகர், முருகர், காளி, துர்க்கை** முதலியோர்து ஆலயங்களும் ஆங்காங்கு உள்ளன.

காஞ்சித் **தலவிநாயகர் விகடசக்கரவிநாயகர்.** இவர் ஏகாம்பரநாதர் கோயிலில ஆயிரக்கால் மண்டபத்தில் இருக்கின்றார். இவரது வரலாறு காஞ்சிப் புராணம் முதற்காண்டம் **விடுவச்சேனேச படலத்தில்** கூறப்பட்டுள்ளது.

வீரபத்திரர் தக்கன் வேள்வியை அழித்த பொழுது அவர்மேல் திருமால் ஏவிய சக்கரத்தை அவரது மார்பில் அணியப்பட்டிருந்த வெண்டலை ஒன்று வாயில் கௌவிக் கொண்டது. பின்பு தேவர் யாவரும் சிவபெருமான் அருள்பெற்றுத் தத்தம் இடம் சென்ற காலத்தில், திருமாலுக்காக அவரது சேனைத் தலைவன் **விடுவச்சேனன்** காஞ்சியை அடைந்து தன் பெயரால் இலிங்கம் நிறுவி வழிபட்டிருந்த பொழுது, சில அசுரரை அழிக்க வேண்டி வீரபத்திரர் காஞ்சி வழியாகச் சென்றார். அவரை விடுவச்சேனன் வணங்கி விண்ணப்பித்தபொழுது, 'திருமால் சக்கரம் நம் வெண்டலையின் வாயில் உள்ளது ; எவ்வாறேனும் பெறுக' என்று அருளிச் செய்தார். விடுவச்சேனன், பார்த்தவர்களுக்கு நகைப்பு உண்டாகும்படி சில விகடக் கூத்துக்களை ஆட, வீரபத்திரர் சிறிது சிரித்தார். யாவரும் பெரு நகைப்பாகச் சிரித்தபொழுது, வெண்டலையும் சிரிக்கச் சக்கரம் கீழே விழுந்தது. அதை **விநாயகர்** விரைந்து எடுத்துக்கொண்டு, ஒன்றும் அறியாதவர்போல் இருந்தார். விடுவச்சேனன் வருந்திப்பின்பு ஒருமுறை முன்பு ஆடிய விகடக் கூத்தை விநாயகர் முன்னும் ஆடினான். அதைக் கண்டு மகிழ்ந்து விநாயகர் சக்கரத்தை அளித்தருளினார். விகட நடனத்தை விரும்பிக்கண்டு சக்கரத்தைக் கொடுத்தமையால், **'விகடசக்கர விநாயகர்'** என்னும் பெயருடன் அவர் விளங்குகின்றார்.

இவரது திருவுருவம் ஆயிரக்கால்மண்டபத்தோடு ஒருகாலத்தில் மண்மேட்டில் மறைந்து யாவராலும் அறியப்படாது இருந்தது. அக்காலத்தில் **இரட்டையர்** தாங்கள் பாடிய **ஏகாம்பரநாதர் உலா**வில் இவ் விநாயகரை ஆயிரக்கால மண்டபத்துடன் காப்புச் செய்யுளில் பாடினார்கள். அதையறிந்த அரசன் முதலானவர்கள் பின்னொரு காலத்தில் மணல் மேட்டை அகழ்ந்து ஆயிரக்கால் மண்டபத்துடன், விகட சக்கர விநாயகரையும் கண்டு மகிழ்ந்தார்கள்.

வலம்புரி விநாயகர்

சக்கரம் கொடுத்த விநாயகர்போலச் சங்கு கொடுத்த விநாயகரும் இருக்கின்றார். அவரது திருப்பெயர், **வலம்புரி விநாயகர்** என்பது. இவர் வரதராசப் பெருமாள கோயிலில் தெற்குப் பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் இருக்கின்றார். வைணவர்கள் இவருக்கு நாமம் போட்டு வைத்திருக்கின்றார்கள். இவரது வரலாறு மேற்படிப் புராணம் **வலம்புரி விநாயகப் படலத்தில்** சொல்லப்பட்டுள்ளது.

சங்குபாணி விநாயகர்

காஞ்சி ராச வீதி நான்கிற்கும் நடுவில் காமாட்சியம்மையைப் போலக் காமக்கோட்டத்திற்குத் தென் கிழக்கில் உலகளந்த பெருமாளுக்குத் தெற்கில் **சங்குபாணி விநாயகர்** விளங்குகிறார். இவரைப்பற்றிப் புராணக் குறிப்பு எதுவும் தெரியவில்லை. ஆனால், 'காஞ்சி நகர நிருமாணத்தின்பொழுது சங்குத் தாபனம் செய்யும் காலத்தில் இவர் முதற்கண் நிறுவப் பட்டு வழிபடப்பட்டார்' என்பது **ஐதிகம்.** புகழ்பெற்று விளங்குபவர். **'சப்பாணிப் பிள்ளையார்'** என வழங்கப்படுகிறார்.

பஞ்ச சந்தி விநாயகர்

கச்சபேசுரர் ஆலயத்தில் நுழையும் பொழுதே முதலில் நேர் நின்று காட்சி வழங்குபவர் **பஞ்ச சந்தி விநாயகர்.** கோபுரத்திற்கு வெளியில் வீதியில் இருந்தே கூட இவரைத் தரிசிக்கலாம். இட்டசித்தித் தீர்த்தத்தின் கீழ்க் கரையில் வடக்கு நோக்கி யிருக்கின்றார்.

கச்சபாலயத்தில், **'துர்க்கை, ஐயனார், சூரியன், வயிரவர்'** என்னும் நால்வர் சூழ இவர் நடுவில் இருத்தலால் **"பஞ்ச சந்தி விநாயகர்"** என வழங்கப்படுகிறார். இவருக்கு மிகுந்த சிறப்பு உண்டு.

பொய்யாமொழி விநாயகர்

அக் கச்சபேசர் கோயிலிலே தென்மேற்கு மூலையில் திருமாலால் வழிபடப்பட்ட **பொய்யா மொழி விநாயகர்** வீற்றிருக்கின்றார். இவருக்கு, **'சத்தியமொழி விநாயகர்'** என்பதும் பெயராகும். 'இவரை வழிபட்டவர் இடையூறுகள் யாவும் நீங்கி, நினைத்த காரியம் கைகூடப் பெறுவர்' எனப் புராணம் கூறுகின்றது.

குமர கோட்டம்

காஞ்சியில் மிகவும் பிரசித்திபெற்ற முருகன் கோயில் **குமர கோட்டம்**. ஏகாம்பர நாதருக்கும், காமாட்சியம்மைக்கும் நடுவில் இங்கு முருகப் பெருமான் எழுந்தருளியிருப்பதால், காஞ்சித் தலமே **சோமாஸ் கந்தத் தல**மாய் விளங்குகிறது.

இங்கு முருகப் பெருமான் பிரமனைச் சிறையில் இட்டுத் தாமே சிருட்டித் தொழிலைச் செய்த கோலத்துடன் இருக்கின்றார். அது பிரம்மசாரியநிலை ஆதலால், வள்ளி தெய்வயானையர் இருவரும் உத்ஸவ வடிவிலேயே இருக்கின்றார்கள். முருகப்பெருமானுக்கு வள்ளியம்மையை மணம்புரிவிக்க விநாயகர் யானையாய் வந்ததை நினைவூட்டி, விநாயகர் இரண்டு தந்தங்களுடன் **'இருகோட்டு விநாயகர்'** என்னும் பெயரோடு இங்கு விளங்குகின்றார்.

இங்கு முருகப்பெருமான் வழிபட்ட **தேவ சேனாபதீசர்** கோயிலும் சிறிய அளவில் உள்ளது. தேவசேனாபதீசரை வழிபட்டு அன்பு பெருகும் உள்ளத்தை அடைந்த **'உருகும் உள்ளத்தார்'** என்ற பெருமானும் இக் குமரகோட்டத்தில் முருகப்பெருமான் அருகில் பிராகாரத்தில் மகிழ்ந்திருக்கின்றார்.

சத்திகள் கோயில்

காஞ்சி எல்லையில் உள்ள காளி, துர்க்கைகளது கோயில் பற்றி இரண்டாம் காண்டம் குறிப்பிடுகின்றது. காமாட்சியம்மையை அடுத்து வடபக்கத்தில் விளங்கும் **காளி கோயில்**, வேகவதி யாற்றின் வடகரையில்விளங்கும் **கருக்கினில் அமர்ந்தவள்** கோயில், ஏகாம்பர நாதர் சந்நிதித் தெருவில் உள்ள **அரசாத்தாள் கோயில்** இவை பலரும் அறியச் சிறந்து விளங்குகின்றன. இவைபற்றிப் புராணத்தில் திட்டமான குறிப்பு இல்லை.

ஏகாம்பரநாதர் கோயிலில் உட்கோபுர வாயிலின் தெற்குப் பக்கத்தில் **பிரளயங் காத்தாள்'** என்னும் சத்தி விளங்குகின்றாள். இவளைப்பற்றி இரண்டாங் காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. அம்மை இறைவனை வழிபட்டுக் கொண்டிருக்கும்பொழுது பெருக்கெடுத்து வந்த வெள்ளத்தை இவள் தடுத்துக் காத்ததோடு, காஞ்சியை ஒருமுறை அழிக்கவந்த பிரளய வெள்ளத்தையும் தடுத்துக் காத்தாள்.

தீர்த்தங்கள்

காஞ்சிபுரத்தில் இப்படிப்பட்ட அளவற்ற கோயில்களோடு தீர்த்தங்களும் பல உள. அவற்றில் **'உலகாணித் தீர்த்தம், சத்தியவிரத தீர்த்தம், இட்டசித்தி தீர்த்தம், காயாரோகண தீர்த்தம், சிவகங்கை** என்பனவற்றி முன்னே கூறினோம். மற்றும் **'சருவ தீர்த்தம்'** என்ற ஒன்று சிறப்புடையது. இது அம்மையின் பூசைக்கு இடையில் இறைவன் கட்டளையால் சருவ தீர்த்தங்களும் ஒன்றாய்த் திரண்டுவந்த வெள்ளத்தை அம்மை தடுத்து நிறுத்தித் தீர்த்தமாகச் செய்தது.

கம்பாநதி அந்தர் வாகனியாய்ப் பூமிக்கு உள்ளே ஓடினாலும், ஏகாம்பரநாதர் கோயிலில் மட்டும் ஒரு தீர்த்தமாய்க் காட்சியளிக்கின்றது.

'காஞ்சியில் ஏழு கிழமையிலும் நீராட ஏழு தீர்த்தங்கள் உள்ளன' என்பர். ஞாயிறு இட்ட சித்தித் தீர்த்தம் ; திங்கள் சிவகங்கை ; செவ்வாய் மங்கள தீர்த்தம்; புதன் சத்தியவிரத தீர்த்தம் ; வியாழன் காயாரோகண தீர்த்தம் ; வெள்ளி உலகாணித் தீர்த்தம்.; சனி சருவ தீர்த்தம் ; என்று இவ்வாறு அமைந்துள்ளன. 'ஒக்கப் பிறந்தான் குளம்' என வழங்கும் சகோதர தீர்த்தமும் சிறப்புடைய ஒன்று.

இவற்றுள் 'மங்கள தீர்த்தம்' என்பது அம்பிகையின் தோழியர்களில் 'மங்கள' என்பவளால் உண்டாக்கப்பட்டது. ஏகாம்பர நாதர் தேரடிக்குத் தென்மேற்கில் உள்ளது. இதன் கரையில் அத்தோழியால் வழிபடப்பட்ட 'மங்களேசுரர்' என்ற **சூரிய தீர்த்தம் (பருதிக் குளம்)**, **சந்திர தீர்த்தம் (வெள்ளைக் குளம்)**, சூல தீர்த்தம் முதலியவைகளும் உள்ளன.

வேகவதி நதி, மஞ்சள் நதி என்னும் நதிகளும் காஞ்சியில் உள்ள புண்ணிய நதிகள் என்பவை பலரும் அறிந்தது.

காஞ்சிபுரத்துத் தெய்வப் பெருவிழாக்கள்

நகைச்சுவைபரசு புலவர் க. சம்பந்த முதலியார்,
தலைமைத் தமிழாசிரியர், ஓய்வு,
பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

உலகில் மக்கள் மேற்கொள்ளும் விழாக்கள் பலவாகும். நவநாகரிக வாழ்க்கையில் எல்லாம் விழாக்களாகவே கொள்ளப்படுகின்றன. உதாரணமாகக் கல்வி வாரவிழா - கூட்டுறவு வாரவிழா - தியணைப்பு வார விழா - காவல் துறை வார விழா - தேசிய சேமிப்பு வார விழா செஞ்சிலுவைச் சங்கம், சாரணர் இயக்கம் போன்ற அமைப்புக்களின் வார விழாக்கள். இப்படி இப்படி இன்னும் எத்தனையோ விழாக்கள். அவைபற்றி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமன்று.

திருத்தொண்டர்புராணம் பாடியருளிய தெய்வச் சேக்கிழார் சுவாமிகள், திருமயிலையில் திருஞானசம்பந்த சுவாமிகள் எலும்பைப்பெண்ணுக்கிய பகுதியைக் கூறவந்தபோது,

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினுல்அவர் நல்விழாப்பொலிவு
கண்டார்தல்
உண்மையாம் எனின்உலகர்முன் வருகென
உரைப்பார்

என்று கூறுகின்றார். இதனுல் மக்களாகப் பிறந்தவர்கள் மெய்யடியார்களுக்கு உணவிட்டு உபசரிப்பதும், **ஐயன் உலாக் காட்சி கண்டு உள்ளம் மகிழ்வதும்** இன்றியமையாது செய்யத் தக்கன என அறிகின்றோம். ஆகவே, ஈங்குக் காஞ்சிபுரத்தின் தெய்வப் பெருவிழாக்கள் பற்றிச் சிறிது விரிவாக ஆராய்வோம்.

உச்சிமேற் புலவர் கண்டு மெச்சும் கச்சிப் பதியைக் **கோயில் மாநகர்** எனக் கூறுவர். இதன் காரணம் வெள்ளிடைமலை. காஞ்சிபுரத்தின் கண் அமைந்துள்ள கோயில்களின் எண்ணிக்கை மிகமிக அதிகமாகும். இவைகளின் திருவிழாக்களும் மிகப் பலவாகும். இதனுல் அன்றோ **'விழவருக் காஞ்சி'** என்னும் வாக்கும் எழுந்தது.

இங்குள்ள திருக்கோயில்களின் அத்துணை விழாக்களையும் எஞ்சாமற் கூறுவதும் இயலாத தொன்றும். எனவே, சில திருக்கோயில்களின் முக்கிய விழாக்கள் பற்றியே ஈண்டு நோக்குவோமாக.

காஞ்சிபுரத்தில் இப்போதைக்கு விளக்க முற்றிருப்பவை வைதிகச் சார்பான இருபெருஞ் சமயங்களே; அவை **சைவம், வைணவம்** என்பன. தொன்றுதொட்டு இருந்துவருவனவும் இவையே. பிறவெல்லாம் இடையே வந்து தோன்றி மறைந்தனவாம். மேலே குறிப்பிட்ட சைவ வைணவத் திருக்கோயில்களும் சிறியவும் பெரியவுமாக எண்ணிறந்தவை உள்ளன. ஆகவே, அவை அனைத்தையும் கொள்ளாமல் சில பெரிய ஆலயங்களின் விழாக்களை மட்டும் ஈண்டு எடுத்துக் கொள்வோம்.

சைவ சமயச் சார்பாகத் **திருவேகம்பம், திருக்குமர கோட்டம், திருக்காமக் கோட்டம், திருக்கச்சபேசம்** ஆகியவற்றின் பெருவிழாக்களையும், வைணவத் திருக்கோயில்களாக அத்தி வரதர் என்னும் **தேவராஜப் பெருமாள், வைகுண்டப் பெருமாள், உலகளந்த பெருமாள், வேதாந்த தேசிகர்** முதலிய மூர்த்திகளின் பெருவிழாக்களையும் பற்றி ஆராய்வோம்.

வையகம் எல்லாம் கழனியா வையகத்தின்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள் -
செய்யகத்தின்
வான்கரும்பே தொண்டை வளநாடு -
வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் - சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம் கச்சியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றுன் கச்சி அகம்.'

என்றபடி, உமையம்மை வழிபட்ட மாவடிக் கீழ்த் திருவேகம்பர் வீற்றிருந்து வழிபடும் அன்பர்கட்கு அருள்பாலிக்கின்றார். அவர்க்கு

நித்தியோத்ஸவமே உண்டு. அதாவது தினமும் கொடிக்கம்பம் வரை நடைபெறுத்தும் விழா. பஞ்சபருவ விழாக்கள் - நவராத்திரி முடிவில் நடக்கும் விஜயதசமி விழா - பவித்ரோத்ஸவ விழா முதலியனவும் உண்டு. இவற்றுக்கெல்லாம் சிகரமாக இருப்பது பங்குனி உத்திரத் திருக்கல்யாணப் பெருவிழாவாகும். இது, பதினன்கு நாட்கள் நடைபெறும். இப்போதெல்லாம் விழாச் செய்யும் புண்ணிய சீலர்கள் போட்டி போட்டுக்கொண்டு பெரும் பொருட் செலவில் காலை மாலை உற்சவம் ஒவ்வொன்றையும் மிகச் சிறப்பாக நடாத்துகின்றார்கள். இவற்றுள் நான்காம் நாள் இரவு நடைபெறும் முதல் இடபக் காட்சியும், ஆறும்நாட்காலை அறுபத்து மூவர் விழாவும், இரவு வெள்ளிரதக்காட்சியும், ஒன்பதாம் நாள் இரவு நடக்கும் வெள்ளி மாவடி சேவையும், பத்தாம் நாள் இரவு **ஏலவார்குழலி யம்மை, காமாட்சி யம்மை, கருக்கினில் அமர்ந்த அம்மை திருமணக் கோலம்** புனைந்து ஒன்றாகச் சேர்ந்து உலா வருங்காட்சியும் பின் **தங்க இடப திருக்கல்யாணக் கோலக் காட்சியும்** பன்னிரண்டாம் நாள் **தோள் சுமையாகத் தோன்றும் பஞ்சமூர்த்திகள் காட்சியும்** கண்கொள்ளாக் காட்சிகளாகும். கண்டவர்கள் அவற்றைக் **'காணாத கண் என்ன கண்ணே'** எனக் கூறத் தோன்றும். இந்த மகோன்னத விழாக்களைப் பல்லாயிரவர் கண்டு கண்பெற்ற பயனை அடைவர்.

இனித் திருக்குமர கோட்டப் பெருவிழாப் பற்றிச் சிந்திப்போம். மாதந்தோறும் கிருத்திகைத் திருவிழா சிறப்பாக நடைபெறும். இங்கு இருபெரு விழாக்கள் உண்டு. ஒன்று **வைகாசி விசாக தீர்த்தப் பெருவிழா**. மற்றது **ஐப்பசி மகா கந்தசஷ்டிப் பெருவிழா**. முன்னது சொற்பொழிவு, கலை நிகழ்ச்சி முதலிய அங்கங்களுடனும், பின்னது இலட்சார்ச்சனை, கந்த புராணச் சொற்பொழிவு, வீரவாகுதேவர் முதலிய நவவீரர்களாக விரதம் மேற்கொள்ளும் சிறுவர்கள் உலாக்காட்சி, ஆறு நாட்களும் விரதம் மேற்கொண்டிருக்கும் மெய்யடியார்கள் காட்சி முதலிய சிறப்புக்களோடும் காணத்தக்க பேறுகளாக விளங்கும். இங்குச் **சண்முகநாதர் வைகாசி விசாகப் பெருநாட்காலையும், மகா கந்த சஷ்டி** இரவும், மார்கழித் **திருவாதிரைத்** திருநாட் காலையும். உலாப் போந்து அருள் பாலிப்பது மிகச் சிறப்பாக இருக்கும்.

மூன்றாவதாகத் **திருக்காமக்கோட்டப்** பெருவிழாவைப்பற்றி ஆராய்வோம். இத் திருக்கோயில் அம்பிகை வெள்ளிக்கிழமைதோறும் வீதியுலாப் போந்து, 'வேண்டுவார்க்கு வேண்டும் வரம்' அருளுகின்றாள். இதன் பெருவிழா மாசிமாதத்தில் நடைபெற்றுப் பௌர்ணமித் தீர்த்தவாரியாக முடியும். இதில் ஒன்பதாம் நாள் இரவு நடைபெறும் **வெள்ளித்தேர்த் திருவிழா** மிகச் சிறப்பானது ; பல்லாயிரவர் கண்டு தரிசிப்பது ; மேலும் ஆடி, தை மாத வெள்ளிக்கிழமைகள், பௌர்ணமி பூசைவிழாக்கள் முதலியனவும் சீரோடும் சிறப்போடும் நடைபெறுவனவாகும்.

நான்காவதாகத் **திருக்கச்சபேசத் திருவிழாக்கள்:** இங்குச் சித்திரை மாதம் பெருவிழா நடைபெறும். விழாவின் ஐந்தாம் நாள் உத்திர நட்சத்திரத் திருக்கல்யாண மகோற்சவம் வரும். இஃது ஓர் **பிரார்த்தனைத் தலம்.** மண்டைக் குடைச்சல், காதில் சீழ்வடிதல் போன்ற நோய்கள் **நேர்ச்சிக்கடனால்** (பிரார்த்தனையால்) தீரப்பெறும். ஆகவே, கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகள் மிக விசேடமானவை. ஆயிரக்கணக்கானவர்கள் இஷ்டசித்தித் தீர்த்தத்தில் மூழ்கி மாவிளக்கிடுதலும், அவற்றைத் தலையிற் சுமந்து கோயில் வலம் வருதலும், இரவு சோமாஸ்கந்தர் திருவீதி உலா வருதலும் மிகச்சிறந்த காட்சிகளாகும்.

இவையே யன்றி மார்கழித் திருவாதிரை நன்னாட்காலை விநாயகர், முருகர், அம்பிகை, ஈசுவரர் என்ற பாகுபாடின்றி எல்லாத் திருக்கோயில்களின் உற்சவமூர்த்திகளின் வீதி உலாக் காட்சி காணத்தக்க ஒன்றாகும்.

இனி, வைணவத் திருக்கோயில் விழாக்கள் பற்றி எடுத்துக் கொள்வோம் : சின்ன காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் அத்தி வரதர் பெருவிழா பிற எல்லாவற்றையும் விஞ்சி நிற்பது. இவர்க்கு நடைபெறும் பற்பல விழாக்களில் வைகாசி விசாக நட்சத்திரக் **கருடோற்சவம்** மிகமிகச் சிறப்பானது. பல்லாயிரவர் இப்பெருவிழாவினைக் கண்டு களிகூர்வர். அடுத்து ஏழாம்நாள் நடைபெறும்விழா **தேர்த் திருவிழா** மிகப் பெரிய வானளாவிய சித்திர வேலைப்பாடுகள் அமைந்த மரத்தாலான திருத்தேர் விழாக்கள் தமிழ்நாட்டில் அருகிவிட்டன. (இதற்குக் காரணங்கள் பல. அவற்றை இங்கு விரிக்கக்கூடவில்லை.) இந்நிலையில், **கச்சிவரதர் திருத்தேர்க்காட்சி** மிகவும் மெச்சக்கூடிய ஒன்று

கும். பல்லாயிரவர் தேர்வடந் தொட்டு இழுப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இத்தேர்த் திருவிழா பற்றிய - நடந்த செய்தி ஒன்றுண்டு : செங்கற்பட்டுக்கடுத்துள்ள பொன்விளைந்தகளத்தூரில் **அந்தகக்கவி வீரராகவ முதலியார்** என்னும் ஒரு பெரும்புலவர் சுமார் 300 வருடங்கட்கு முன்பிருந்தார். இவர் நூல்களைப் படிக்கக் கேட்டு, ''கேட்டவை கேட்டவை விடாது உளத்து அமைத்து''ப் புலவரானவர். இவர்தம் மாணவர்களுள் **காஞ்சி புரத்து அம்மைச்சி** என்னும் நங்கையும் ஒருவராவர். இவ்வம்மை கவிபாடும் வன்மையும் உடையராயிருந்தார்.

ஸ்ரீ அத்திவரதர் திருத்தேர் ஓட்டம், மூலைத் திருப்பங்கள் முதலிய இடங்களில் தடைப்பட்டு நிற்பதுண்டு. ஒருசமயம் இத்திருத்தேர், மேலே குறிப்பிட்டுள்ள அம்மைச்சியார் வீட்டைத் தகர்த்தெறியும் அளவுக்குத் தடம் புரண்டு விட்டது. யாவரும் அஞ்சித் தேரை மேற்கொண்டு இழுக்காது நிறுத்தினர். அம்மைச்சியார் கண்டு கீழ்வருங் கவி பாடினார் :

'பார்ப்பார்க் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே - கோப்பாகக்
கொம்மைச் சிகரிலங்கை கோட்டைஎன்று வந்தீரோ
அம்மைச்சி வாழும் அகம்,'

இந்தப் பாட்டுப் பாடி முடித்தவுடன் அப் **பெருந்தேர் அப்பால் விலகி நின்றதாம்.** அம்மைச்சியார் வீடு அழிவினின்றும் காக்கப் பட்டது. **என்னே அத்திவரதர் அருந்தமிழ்க் களித்த சிறப்பு !**

அடுத்து ஸ்ரீவைகுண்டப் பெருமாள் பெருவிழாப் பற்றிப் பார்ப்போம் :

கச்சிப்பதியின் இரு பழம்பெருந்திருக் கோயில்கள் ஸ்ரீ கயிலாசநாதர் திருக்கோயிலும் ஸ்ரீவைகுண்டப்பெருமாள் திருக்கோயிலும் ஆகும். இவை இரண்டுமே அற்புதச் சிற்பங்கள் உடையவை. வைகுண்ட சந்நிதியில் **பல்லவ வமிச வரலாற்றுச் சிற்பங்கள்** மிகவும் சிறப்புடையவை.

ஸ்ரீவைகுண்டப் பெருமாள் திருக்கோயிற் பெருவிழா ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் தொடங்கி நடைபெறும். இதில் **கருடசேவை** மிகவும் சிறப்பானது. மார்கழி மாதம் **முக்கோடி ஏகாதசமி** உற்சவமும் இத்திருக்கோயிலின தனிச்சிறப்பாகும். அன்று இத்திருக்கோயிலின் தரிசனத்திற்கு வருவோர் பல்லாயிரவராவர்.

மாசித் திங்கள் **மகாசிவராத்திரி** யன்றும் காஞ்சிபுரம் திருக்கயிலாயநாதர் உற்சவமும், பல்லாயிரம் மக்கள் போந்து தரிசனம் செய்யும் காட்சி காணும் கண்களுக்கு நல்விருந்தாகும். இப்படியாகச் சைவமும் வைணவமும் ஒருங்கிணைந்துள்ள பெருமையும் அருமையும் காஞ்சியிற்போல அத்துணைச் சிறப்போடு பிற இடங்களிற் காண்டல் அரிதென்பது மிகையாகாது.

ஸ்ரீ உலகளந்தார் திருக்கோயில் மகோற்சவம் தைத் திங்களில் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் தொடங்கப்பெறும். கருடசேவை, திருத்தேர் விழாக்கள் சிறப்பானவை. மூலவரான திரிவிக்கிரம மூர்த்தியாகிய உலகளந்த பெருமாளைக் கண்டு கைதொழுதற்கு நாடோறும் யாத்திரிகர்கள் அணிஅணியாக இத்திருத்தலத் திருக்கோயிற்குப் போதருவர்.

கடைசியாகத் திருவேதாந்த தேசிகர் திருக் கோயிற் பெருவிழா : **''தேசிகர் கோயில், தேசிகர் திருவிழா''** என்று சுருக்கமாக வழங்கும் முறை மக்களிடையே உண்டு. ஸ்ரீ வேதாந்த தேசிகர் புரட்டாசித் திங்களில் திருவோண நட்சத்திரத்தில் அவதரித்தருளினர். ஆகவே, அந்நாளே, ஆண்டுதோறும் பிரம்மோற்சவ கடைநாளாகக் கொண்டு பெருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மேலே குறிப்பிட்ட பெருவிழாக்களே யன்றிக் கச்சிப் பதியிற் கோயில் கொண்டுள்ள மூர்த்திகள் பலவும் சிறப்பு நாட்களில் வீதியுலாப் போதரும். அவை எல்லாம் விரிப்பிற் பெருகும் என இவ்வளவோடு இக்கட்டுரை நிறைவு செய்யப்பெறுகின்றது.

இதுகாறுங் கூறியவற்றால், காஞ்சிபுரம் எண்ணிறந்த திருக்கோயில்கள் நிறைந்த பதி என்பதும், சைவம், வைணவம் என்னும் இரு பெரும் வைதிக சமயத் திருக்கோயிற் பெருவிழாக்களே சிறந்தன என்பதும், அவை இன்னின்ன என்பதும் இவையேயன்றிச் சிறு கோயிற் சார்பான பல விழாக்களும் உண்டென்பதும், இவற்றால் கச்சிப்பதி, **''விழவருக் காஞ்சி''** என்று மெச்சும் சிறப்பை முக்காலத்துக்கும் உடையது என்பதும் அறிகின்றோம்.

காஞ்சிப் புராணம்

பெரும்புலவர் கா. சி. தனக்கோடி, எம்.ஏ.,
மேனாள் முதல்வர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்.

**" ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி"**

காஞ்சிப் புராணம் என்னும் பெயரில் மூன்று நூல்கள் தெரிய வருகின்றன. காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் ஆளவந்த தேசிகர் ஆதீனத்துச் சிதம்பர தேசிகர் இயற்றிய கலித் துறைக் காஞ்சிப் புராணம் ஒன்றும், வாலியூர் பிரதாப முதலியார் இயற்றிய பழைய காஞ்சிப் புராணம் ஒன்றும், சிவஞான முனிவரும் அவர் மாணாக்கராகிய கச்சியப்ப முனிவரும் சேர்ந்து முதல் இரண்டு காண்டங்களாக இயற்றிய காஞ்சிப் புராணம் ஒன்றும் ஆகும்.

சிவஞான முனிவர் வடமொழிக் காந்த புராணத்தின் ஒரு பகுதியாகிய **பஞ்சாசத்** என்னும் நூலில் கூறும் காஞ்சி மான்மியத்தைக் காஞ்சிப் புராணம் முதற்காண்டம் என்னும் பெயரில் மொழிபெயர்த்தார். கச்சியப்ப முனிவர் சிவபுராணம், பிரம்மாண்ட புராணம் முதலிய பல் புராணங்களிலிருந்து திரட்டப் பட்ட **சதாத்தியாயம்** என்னும் வடமொழி நூலிலுள்ள காஞ்சி மான்மியத்தைத் தென் மொழியில் மொழி பெயர்த்தார். இதுவே காஞ்சிப் புராணம் இரண்டாங்காண்டம் ஆகும்.

மகாவித்துவான் பிள்ளையவர்கள் காலத் துக்கும் முன்பிருந்தே காஞ்சிப்புராணம் இரண்டு காண்டங்களை யுடையது என்னும் கருத்து நிலவி வந்திருக்கின்றது. ஆனால் அண்மைக் காலத்தில் பதிப்பித்தவர்கள், இவ்விரு காண்டங்களையும் தனித்தனிப் புராணமாகவே கருதிச் சிவஞான முனிவர் காஞ்சிப் புராணம் என்றும், கச்சியப்ப முனிவர் காஞ்சிப் புராணம் என்றும் பதிப்பித் துள்ளனர். இறைவி இறைவனைத் திருக்கண் புதைத்தலும், தவமியற்றலும், தழுவக் குழை தலும், திருமணம் புரிதலும் இரண்டு காண்டங் களுக்கும் பொதுவாக அமைந்திருப்பதால் இவ் வாறு கருதுவது இயல்பாகின்றது.

முதற்காண்டம் திருநாட்டுப் படலம் முதல் சிவபுண்ணியப் படலம் ஈறாக 66 படலங்களை யுடையது. 2742 பாடல்களை யுடையது. இரண் டாங் காண்டம் திருக்கண் புதைத்த படலம் முதல் இருபத்தெண்டளிப் படலம் முடிய 2110 பாடல்களை யுடையது. நூலாசிரியர் இருவரும் வடமொழியில் வல்லுநராயினும், வட சொற்களைத் தமிழ் மரபிற் கேற்பவும் இலக்கண நெறிக்கேற்பவும் தமிழ்ப்படுத்தியுள் ளனர். இருவர் நடையும் செம்பாகமான நடையாகும்.

'காஞ்சிப் புராண முதற் காண்டத்தின் அமைப்பு செப்பமாக அமைந்துள்ளது. முதற் கண் நாட்டுப்படலம், நகரப் படலம் முதலிய வற்றை அழகுபெறச் செய்து, பின்பு தல வரலாறுகளைக் கிழக்குத் திசையில், ஆளுடைய பிள்ளையார் திருப்பாடல் பெற்ற திருத்தல மாகிய திருநெறிக் காரைக் காட்டிலிருந்து தொடங்கி முறைப்படி வலமாகச் சென்று முடிவில் திருவேகம்ப வரலாற்றையும், அம்மை யார் வழிபட்டு வெள்ளம் கண்டு வெருவி இறை வனைத் தழுவிக்கொள்ள இறைவன் தன் திருமேனி குழைந்து காட்டிய வரலாற்றையும் கூறிப் பின் திருமணம் மொழிந்து, அதன்பின் காஞ்சிப் பதிக்கண் உள்ள அற்புதங்களைக் கூறி, அதன்பிறகு புராணங் கேட்டதற்குப் பயன் ஒழுக்க நெறியில் நிற்றலேயாதலால் அவ் வொழுக்கத்தையும் விளக்கிப் பின் அவ்வொழுக் கத்திற்குப் பயனும், இறைவன் திருவடிப் பேற் றிற்கு முடிந்த சாதனமும் சிவபுண்ணியப்பேறே யாதலால்அதனை இறுதியிற் கூறி முடிக்கின்றார்' 1

ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தாம் வட மொழியிலும் உபநிடதங்களிலும், புராணங் களிலும் கண்ட அரிய கருத்துக்களையும் சிவா கமப் பொருள்களையும் சைவமுறைகளையும் இப் புராணத்துள் நிறைத்து வைத்திருக்கின்றார்கள். பல உபநிடத வாக்கியங்களையும் புராண வசனங் களையும், உண்மைப் பொருள் விளங்க மொழி பெயர்த்தும், பல வடசொற்களுக்குரிய சொல்

மூலங்களையும் அவற்றிற்குரிய பொருள்களையும் இதன்கண் கூறியுள்ளார். சில மந்திரங்களுக்கும் பொருள் உரைத்துள்ளார்' 1

சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தெளிவாக விளக்குதற் பொருட்டு எளிய பொருள்களைக் கூறிச் செல்லுமிடத்தும் ஓர் அழகிய உவமையில் அரும்பெரும் பொருளை ஆசிரியர் அமைத்து விளக்குவது அவர்தம் நுண்மாண் நுழைபுலத்துக்கு ஒரு சான்றாகும்.

எடுத்துக்காட்டாக,

''மாயை காரிய உருக்களும்
எம்பெருமான் வடிவம்
ஆயவேல் அவை அருள்மயமாகும்
மற்றதுபோல்
பேயனேன் பிதற்றுரையும்
ஏகம்பர்தம் பெருமை
தூய காதையுள் உறுதலால்
துகள்றத் தோன்றும்

'போதமே லாகப் பண்டே
புல்லிய மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்குமா போல்
மழைப்பெயல் மாறித் தீர்ந்தும்
காதல்செய் துறையும் புள்ளும்
மாக்களும் கவன்று நெஞ்சம்
நோதக மரங்களெல்லாம்
நுண்துளி துவற்று மாதோ''

என்னும் பாடல்களைக் காணலாம்.

'பாஞ்சராத்திரிகள் முதலியோர் சிவ பரத்துவத்தை மறைத்தற்கு வடமொழி வாக்கியங்களுக்குக் கூறும் பொருள்களை மறுத்து உண்மைப் பொருள் கூறிச் சைவத்தை நிலைநாட்டுதல் வேண்டும் என்பது ஆசிரியர் இப்புராணத்தை இயற்றிய நோக்கங்களில் முதன்மையான தொன்றாகும். **திருமுறைகளின் பொருளை அறிதற்குப் பெரியபுராணம் இன்றியமையாதவாறு போல, மெய்கண்ட சாத்திரங்களின் பொருளையறிதற்கும் உபநிடதம் முதலிய வடநூற்களுக்கு உண்மைப் பொருள் காண்டற்கும் இக்காஞ்சிப் புராணம் இன்றியமையாததாகும் 2**

இலக்கியச் சுவைக்கும், காப்பியச் சுவைக்கும் இந்நூல் மிகச் சிறந்து விளங்குகின்றது. கற்பனை, உவமை முதலிய அணிகள், பெருமிதம் வெகுளி முதலிய சுவைகள், சொல்லணிகள், ஆங்காங்கு விரவியுள்ளன.

காஞ்சிப் புராணம் உணர்த்தும் உண்மைகளாவன **(1) Every saint had a past, every sinner has a future** என்னும் ஆங்கில முதுமொழிப்படி, எத்தகைய கொடியோரும் தாம் செய்த பாவத்துக்கு அஞ்சி இறைவன் திருமுன் நின்று வருந்தி மனமுருகி நிற்பரேல், இறைவன் அவர்களைத் தன் இன்னருளால் ஆட்கொண்டு அருளுகின்றான் என்பதும் (2) இறைவன் ஒரு கூற்றில் விளங்கும் இறைவியே ஆயினும் விளையாட்டாகவேனும் ஒரு தவறு செய்தாலும் அதற்குரிய தண்டனையை ஏற்றே தீர வேண்டும் என்பதும் (3) எத்தகைய இடர்வரினும் இறைவனை விடாது உறுதியாகப் பற்றுதலே உண்மை அன்பர்களது இயல்பு என்பதும், அங்ஙனம் பற்றும் பற்றுடையார்க்கே இறைவன் குழைந்து வெளிப்பட்டு அருள்புரிவான் என்பதும் ஆம்.

'புன்புலைக் குலத்தோர் உலகமர் ஒழுக்கம்
புறந்தரா இழுதைய ரேனும்
அன்பின ராகி ஒருபொழு தடுத்துப்
போற்றுவ ராயிடின் அவர்க்கும்
வன்பழ மலங்கள் முழுவதும் துமித்து
மாலயற் கறிவரு முத்தி
இன்பருள் இராச மகேந்திர வரைப்பின்
இலங்குமாற் கண்டேசன் எனவும்! 3

நூலுட் கூறப்படும் பொருளை ஒருவாறு தொகுத்துக் கூறுதல் சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் ஆதலால் கடவுள் வாழ்த்துப் பகுதியில்,

'தணந்தபெருந் துயர்க்கடல்மீக் கூர்தலினால்
மலைபயந்த தரள மூரல்
கணங்குழையாள் புரிபூசை முடிவளவும்
தரியாமல் இடையே கம்பை
அணங்கினைத்தா தெனவிடுத்து வலிந்திறுகத்
தழீஇக்கொள்ள அமையாக் காதல்
மணந்தருளிக் குறிபூண்ட ஒருமாவின்
பெருமானை வணக்கம் செய்வாம்'

என்று பாடுகின்றார்.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் நால்வர் துதியாக அமைந்துள்ள பாடல்கள், சைவசமயாசாரியர்களாகிய நால்வரிடத்தும், அவர் வாக்குகள் மீதும் சிவஞான சுவாமிகள் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பும், பற்றுதலும் தெற்றென

விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக அப்பர் பெருமானைப் பற்றிப் பாடிய பாடல்வருமாறு:

**'இடையருப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவா ரத்திண்
படையருத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே
பதித்த நெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன்
ஞானப் பாடல்
தொடையருச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும்
துதித்து வாழ்வாம்'**

சேக்கிழார் சுவாமிகளைச் சிவஞான முனிவர் பல வழிகளில் பின்பற்றியுள்ளார். திருநாட்டுப் படலத்தில் அவரை,

**'திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைந்
திணைவளமும் தெரித்துக் காட்ட
மருத்தொண்டை வாய்ச்சியர்சூழ் குன்றைநகர்க்
குலக்கவியே வல்லரன்'**

என்று புகழ்ந்து போற்றுகின்றார்.

இடையிடையே திருவேகம்பர் துதியாக வரும் பாடல்கள் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மை வாய்ந்தவை.

காஞ்சிப் புராணம் உணர்த்தும் பஞ்சாக்கரம் **"ஏகம்பநாத"** என்பது. இஃது, காயத்திரி மந்திரத்தைக் காட்டிலும், அம்ச மந்திரத்தைக் காட்டிலும், பன்னிரண்டு எழுத்துக்களாலான வைணவ மந்திரத்தைக் காட்டிலும், திருவெட்டெழுத்தைக் காட்டிலும் சிறந்தது.

**'அன்ன தன்மையின் மனுஎவற் றினுக்கும்
அதிக மாகிய ஏகம்ப நாதன்
என்னு மத்திரம் இயம்புநா உடையாற்கு
இப்பி றப்புறும் பெரும்பயன் எய்தும்
பன்ன ரும்பெருங் கீர்த்தியும் ஊக்கப்
பாடும் ஆக்கமும் ஆயுளும் வளரும்
மன்னு கல்வியும் கேள்வியும் ஒழுக்கமும்
வழுக்கி லானவ னேயெனத் துணிவீர்'**

திருக்காஞ்சியில் அம்மையார் இயற்றிய முப்பத்திரண்டறங்களுள் **சைவநூல் புராணம் நல்கலும்** ஒன்றாகும். ஆதலால், இலக்கியச் சுவை, பக்திச் சுவை, காப்பியச் சுவை முதலிய சுவைகளில் சிறந்து வீடு பேற்றிற்கு வழிகாட்டும் இவ்வரிய புராணத்தைப் 'புராணந்தானே' என்று உதாசீனம் செய்யாமல், செல்வர்கள் சீரிய முறையில் அச்சிட்டு அடக்கவிலைக்குத் தருதலும், பேரறிஞர்கள் இந்நூலைக் கற்றுத்தாமும் உணர்ந்து பிறர்க்கும் உணர்த்திப் **பாகம் பெண்ணுருவானன் திருவருளுக்கு** உரியவராதல், சைவமும் தமிழும் தழைத்தற்குரிய நெறிமுறைகளாகும்.

**'வாழி நான்மறை; வாழிய சைவ நூல்;
வாழி மன்னவர்; செங்கோல், மனுநெறி,
வாழி நீண்முகில்; வையகம் யாவையும்
வாழி; வாழி வளநகர்க் காஞ்சியே'**

1, 2. மகாவித்துவான் திரு. அருணை வடிவேல் முதலியார் பதிப்பித்த காஞ்சிப் புராணம் முதற்காண்டம் முன்னுரை.

3. காஞ்சிப் புராணம் - இரண்டாங் காண்டம் — இருபத்தெண்டளிப் படலம் பாடல்-53.

காஞ்சி காமாட்சி

டாக்டர் வெ. தெ. மாணிக்கம், எம்., ஏ., பிஎச். டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பர் கல்லூரி, சென்னை-600030.

காஞ்சி மாநகர்

மாதவம் செய்த தென் திசை எனச் சேக்கிழார் போற்றிய தென்னாட்டில், பாலாறு வளஞ் சுரப்பப் பண்பாடு தலை சிறக்கும் தொண்டை நாட்டில், வேகவதியாற்றின் கரையில் அமைந்திருக்கும் பழம் பெருமை மிக்க பதி காஞ்சிபுரம். காஞ்சிமரம் (ஆற்றுப் பூவரசு) மிக்கதால் இப்பகுதி காஞ்சிபுரம் எனப் பெற்றது. நில மகளுக்கு ஒட்டியாணம் (காஞ்சி-ஒட்டியாணம்) போன்று விளங்குவதால் இப் பெயர் வந்ததெனவும், (காஞ்சி- நிலையாமை) நிலையா உலகில் நிலைத்தது பரம் பொருள் ஒன்றே என அன்னை காமாட்சி உணர்த்தியதால் இப்பெயர் பெற்றதெனவும் கூறுவர். தொன்று தொட்டு ஆட்சித் தலைநகராக விளங்கி வரும் சிறப்புடையது. கல்விக்கும், கலைக்கும், பட்டுக்கும் பெயர் பெற்றது இப்பண்டைய நகரம். ஆதி சங்கரர், அறவண அடிகள், மணிமேகலை, தின்னாகர், தருமபாலர், சீன யுவான்சுவாங், கௌடில்யர், இராமானுசர், வேதாந்த தேசிகர், கணிகண்ணன், மகேந்திர பல்லவன், நந்திவர்மன், கச்சியப்ப சிவாச்சாரியார், சிவஞான சுவாமிகள், கச்சியப்ப முனிவர், பரிமேலழகர், சியாமா சாத்திரிகள், நயினாப்பிள்ளை, எல்லப்ப பிள்ளை, பச்சையப்பர் ஆகியோர் புகழ்மிக்க இந்நகரின் புகழை வளர்த்த பெருமக்கள் பலருள் சிலராவர்.

எட்டுத் திக்கும் கோயில்களும், கோட்டங்களும் நிறைந்து பட்டொளி வீசும் இந்நகர், தெய்வ மணங்கமழும் திருநகராகத் திகழ்கிறது. வடநாட்டவரும் தென்னாட்டவரும் வணங்கி ஏத்தும் பெருமை மிக்கது இவ் வளநகரம். சைவர், வைணவர், சமணர், சாக்கியர் (புத்த மதத்தவர்) அனைவருக்கும் பொதுவான புண்ணிய பூமி.

நறுமலர்களில் தாமரையும், நன்னதிகளில் கங்கையும்போல் நகரங்களுள் தலையாயதாக மதிக்கப் பெறுவது கச்சியம்பதி. முத்திதரும் தலம் ஏழினுள் முதன்மையானது. நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் முதற்பொருள் ஐந்தால் பெருமை பெறும் இடங்கள் (பஞ்ச பூதத்தலங்கள்) ஐந்து. அவை முறையே காஞ்சிபுரம், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, தில்லை என்பன. இவற்றுள் முன்னின்றிலங்குவது காஞ்சி. பல திருப்பதிகளைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டிருக்கும் சிறப்பு காஞ்சி நகருக்கு மட்டுமே உரியது. இங்கு 108 சிவாலயங்களும், 18 திருமால் தலங்களும் உள்ளன. அறுவகைப்பட்ட வைதிக சமயங்களை நிலைநிறுத்தி அத்வைத மதக் கொள்கைகளைப் பரப்பிய அண்ணல் ஆதிசங்கரர் நிறுவிய காமகோடி பீடம் அமைந்தது.

அம்பிகையின் பஞ்சபீடத் தலங்களுள் ஒன்றாகிய பிலாகாசத்தலமாக விளங்கும் இத்தலம் சக்தி பீடங்களில் தலை சிறந்தது. திருவாரூர் பிறக்க முத்தி, திருவண்ணாமலை நினைக்க முத்தி, திருக்காஞ்சி வசிக்க முத்தி, திருத்தில்லை வழிபட முத்தி, திருக்காசி இறக்க முத்தி என்பதற்கிணங்க தன்னகத்தே வாழ்வோரனைவருக்கும் முத்தியருளும் மோட்சபுரி கச்சிமூதூர். யாவற்றுக்கும் மேலாக அரனைக் குறித்து அன்னை காமாட்சி மாதவம் செய்த மாண்புடையது இம்மாநகரம். காஞ்சியின் பெருமை விரிப்பின் அசலும்; தொகுப்பின் எஞ்சும். கோயில் மாநகர் என்ற சிறப்புக்குரிய இக்காஞ்சி நகரில் எத்திக்கும் வானளாவி நிற்கும் கோபுரங்கள் எண்ணற்றவை. காஞ்சி நகரின் கிழக்கெல்லையில் வரதராசப் பெருமாளும், மேற்கெல்லையில் ஏகாம்பரநாதரும் நடுவே காமாட்சியம்மையும் கோயில் கொண்டிருக்கும் விதம் மலைமகளின் மணக்கோலத்தை அகக்கண்ணில் நிலைநிறுத்துவதாகும். சிவகாஞ்சியில். திருவேகம்பம், குமர கோட்டம், காம கோட்டம் என்ற முறையில் கோயில்கள் அமைந்திருப்பவை சோதிவடிவான சுந்தரரின் சோமாஸ்கந்த வடிவத்தை நினைவுறுத்துகிறது.

காமாட்சி யம்மன் கோயில்

பெருமைமிக்க காஞ்சியில் உள்ள அருமை மிக்க கோயில்கள் பலவற்றின் மத்தியில் நடு நாயகமாகத் திகழ்வது காமாட்சியம்மன் ஆலயம். தொன்மையும் புகழும் உடைய இக் கோயிலில் காஞ்சியின் இதயமாக இருந்து இயக் கும் அன்னை காமாட்சி காமகோடி பீடத்தவர்க் குக் குலதெய்வம் ; காஞ்சி மாநகரை ஆளும் தெய்வம். (1) கறைமிடற்றோன் கண்ணைப் பொத்திய கறையகலக் கயிலையிலிருந்து காஞ்சி வந்து கம்பை நதிக்கரையில் கடுந்தவம் புரிந் தாள் அன்னை. வீறு கொண்டோடி வந்த வெள்ளத்தைக் கண்டு வெருவி ஓடாது, நில்லா உலகில் நிலைத்தது பரம்பொருள் ஒன்றே என உலகோர்க்குக் காட்ட, மணல் இலிங்கத்தை இறுகப் பற்றி உளம் உருகி மெய் மறந்து நின்று ஒன்றினாள் ; வெள்ளம் தணிந்தது. தழுவி மகிழ்ந்தாள் தலைவி, தழுவக் குழைந்தார் தலைவர். கா-நோன்பு நோற்றல், மாட்சி- பெருமை, நோன்பு நோற்ற பெருமைக்குரிய வள்-தவம் செய்த தவமாம்மையல்-காமாட்சி யானாள். (2)சிவனால் எரிக்கப்பட்ட மன்மதனை உயிர்ப்பித்துக் காத்தவள் தேவி. உலகில் (காம- ஆட்சி) காமனுடைய ஆட்சி மீண்டும் ஏற்படக் காரணமாக இருந்தவள் காமாட்சியானாள். (3) பிரமன், விட்டுணு, உருத்திரன் என்னும் மூவரையும் தன்னுடைய இச்சாசக்தி, ஞான சக்தி, கிரியாசக்திகளால் தோற்றுவித்து ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் உலக விளையாட்டைத் தடையின்றி நடத்தி வருபவள் பராசக்தி. க-நான்முகன். அ-திருமால், ம-சிவன். ஆட்சி-கண். ஆட்சி-ஆளுதல். மும் மூர்த்திகளையும் மூன்று கண்களாகக் கொண்ட முக்கண்ணி - மூவரையும் ஏவல் கொள்ளும் மூலசக்தி - காமாட்சி எனப்பட்டாள். (4)கமம்- நிறைதல். கமம்-காமம். காம-ஆட்சி-காமாட்சி தடங்கண்ணியின் பெருகருணை என்னே ; தன் திரு நோக்கால் உயிர்களின் விருப்பங்களை நிறை வேற்றி வைப்பவள் காமாட்சியாளுள். வழிபடு வோர் விரும்பியவற்றையெல்லாம் வாரி வழங் கும் அன்னை உறையுமிடம் ''காமபீடம்'' எனப் பட்டது.

நாற்றிசையிலும் நான்கு கோபுரங்களையும், உள்ளே இரண்டு திருச்சுற்றுக்களையும் உடைய இக்கோயிலில் அன்னை காமாட்சி அருளாட்சி புரிகிறாள். ஆலயத்தின் உட்சுற்றின் நடுவே அமைந்துள்ள அரங்கம் காயத்திரி மண்டபம் எனப்படும். இம்மண்டபத்தை ஆதாரமாகக் கொண்டு கருவறை (மூலத்தானம்) அமைந் துள்ளது. கருவறையில் 'ஓம்' எனும் பிரணவ வடிவில் அமைந்த பீடத்தின் மீது காமாட்சி யம்மன் திருவுருவம் உள்ளது. சித்தாசன நிலையில், இராசராசேச்வரிவடிவில் அமைந் துள்ளாள். அன்னையின் காலிற் சதங்கை; இடுப் பில் ஒட்டியாணம். கடகம் செறிந்த நான்கு கைகளில் அங்குசம், பாசம், மலர்க்கணை, கரும்பு வில். கழுத்தில் மங்கல அணி. மூக்கின் வலப் புறத்தில் மூக்குத்தி ; இடப் புறத்தில் வளையம் ; மூக்கு நுனியில் புல்லாக்கு. காதுகளில் சூரிய சந்திர ராம் தோடுகள். தலையில் பிறைமதி உருப் பொருந்திய மணிமுடி, நெற்றியில் குங்குமம். மின்னலென ஒளியுமிழும் மேன்மைமிகு கண்கள். புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாய். முழுமதியை விஞ்சும் மோகன வடிவழகு. அருள் நோக்கால் அடியவர்தம் ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப வாழ்வு தரக் காத்திருக்கும் வாழ்வரசி அன்னை. செந் தார்ப் பைங்கிளி முன்கையேந்திச் செம்பட் டுடை உடலினில் இலங்க, முத்தார மார்பும் முறுவலிக்கும் முகமுமாய் எத்திக்கும் பொலிவு பெற இருப்பவளே காமாட்சி. எதிரே நின்று காணுங்கால் அன்னை நம்முன்னே எழுந்தோடி வருவது போன்ற உணர்ச்சியுண்டாகும்.

அழகார்ந்த காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும் அன்னை காமாட்சி இங்கு மூவகை உருவில் அமைந்து அருள் தருகின்றாள். உலக உயிர் களுக்கு இன்றியமையாத இன்பம், செல்வம் முதலிய அனுபவப் பொருள்கள் அனைத்தையும் தருபவளாகச் சுவர்ண காமாட்சி விளங்குகிறாள். இப்போது இத்தேவியின் ஆதாரபீடம் மட் டுமே இங்குள்ளது. நல்லொழுக்கத்தைக்கடைப் பிடித்து நன்னெறியில் நிற்கும் உயிர்களின் மும் மலக்கட்டு அறுத்தற்குத் துணை புரிபவளாகத் தபசு காமாட்சி உள்ளாள். பக்குவமடைந்த ஆன்மாவில் மெய்ஞ்ஞானச் சுடர் விளக்கேற்று பவளாகக் காட்சி தருகிறாள் காமாட்சியம்மை,

முக்கண்ணியின் மூலத் திருவுருவுக்கு முன்னர் அமைந்துள்ளது ஸ்ரீ சக்கரம். அட்ட லட்சுமிகள் அமைந்த பீடத்தில் ஆதி சங்கரர் இம் மந்திர சக்கரத்தை அமைத்தார் என்ப. இத்திருத்தகட்டில் மறைப்பொருளாக அன்னை விளங்குவதால் அருச்சனை தீபாராதனைபோன்ற யாவும் இதற்குத்தான் நடைபெறுகின்றன. இத்திருச்சக்கரத்தின் கீழே கட்புலனாகாப்

பாதாள குகை (பிலா காசம்) உள்ளது. அருவ வடிவான இக்குகையே அன்னையின் நிரந்தர இருப்பிடம்; ஆதலால் இதனை மனத்தால் கருதி வழிபட வேண்டும்.

காமாட்சியம்மை சந்நிதியிற் பெற்ற குங்குமத்தை, கருவறைக்கு வெளியே இடப் புறத்தே அமைந்துள்ள அரூபலக்குமி திருமுன் இட்டு வழிபட்டு அணிவது மரபாக உள்ளது. காமாட்சியம்மையைச்சுற்றி எத்தனை தேவியர்! வாராகி, அரூபலக்குமி, அர்த்தநாரி, ரூபஇலக் குமி, அன்னபூரணி, மாதங்கி - இப்படித் தேவி யர் வழிபடும் பெருந்தேவியாகத் திகழ்கிறாள் காமாட்சி. மேலும் இக்கோயிலில் சந்தான கணபதி, கருவாசர், கள்ளப் பெருமாள், தரும சாத்தா, ஆதிசங்கரர், துன்டிர மகாராசா, ஆதிசேடன், காசி விசுவநாதர், கால பைரவர், துர்க்கை முதலிய உருவத்திருமேனிகளும் உள. கள்ளப் பெருமாள் வீற்றிருக்கும் திருக்கள்வ னூர் என்னும் இங்குள்ள சந்நிதி ஆழ்வார் களால் மங்களா சாசனம் பெற்ற தலங்களுள் காஞ்சியைச் சேர்ந்த பதினெண் திருப்பதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

விழாக் காலத்தே உலாப் போந்து அருள் புரிய ஏற்பட்டுள்ள மூர்த்தம் உத்சவ காமாட்சி யாகும். நின்ற திருக்கோல வடிவினளாகிய இவ்வம்பிகையின் இரு பக்கத்திலும் நாமகளும் திருமகளும் நின்று வழிபடுகின்றனர். விழவருந் திருக்காஞ்சியில் திகழும் இத்திருக்கோயிலில் ஓவ்வொரு வெள்ளிக்கிழமையும் திருவிழா தான். நவராத்திரி விழாவும், மாசிமகப்பெரு விழாவும் சிறப்பானவை. பஞ்ச தீர்த்தத்தைத் தன்னகத்தே கொண்ட இக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்பும் ஒருங்கே பெற்ற பெருமைக் குரியது.

காமாட்சியம்மையின் சிறப்பு

காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி என மூவரையும் கருணையின் திருவுருவாகக் கருதி ஒருங்கிணைத்துப் பேசும் உலக வழக்கில் காமாட்சி முதலில் வைத்து எண்ணப்படுகிறாள். இம் மூவரும் ஆதிபரா சக்தியின் மூன்று விதமான வடிவங்களே. இருக்குமிடத்தையும் கொடுக்கும் பலனையும் கருதி மூவிதமாக வருணிக்கப்படுகின்றனர். இம் மூவருள் காமாட்சியம்மை மட்டும் இருந்த திருக் கோலம் என்பது நினைவுக்குரியது. சிவனார் மனம் மகிழ இருநாழி நெல் பெற்று முப்பத் திரண்டு அறம் வளர்த்து உலகெலாம் படியளக் கும் உயர்தெய்வம் உட்கார்ந்த நிலையிலிருப்பது இயல்பே யன்றோ! அளப்பருஞ் சிறப்புடைய இத்திருநகரில் அறப்பெருஞ்செல்வியின் வழி யிலே வாழையடி வாழையென வந்து தோன்றி அட்சய பாத்திரத்தின் துணையால் அறம் வளர்த்த ஆரணங்கே மணிமேகலை.

காஞ்சிபுரத்தில் எந்தச் சிவன்கோயிலிலும் அம்பிகைக்கெனத் தனியாகக்கருவறையோ உருவத் திருமேனியோ இல்லை. காஞ்சி மாநகர் முழுமைக்கும் காமாட்சியம்மையே ஒப்பற்ற பெண் தெய்வமாக இலங்குகிறாள். மேலும் இந் நகரிலுள்ள கோயில்களின் பெரிய கோபுரங்கள் அனைத்தும் இவ்வன்னையின் ஆலயத்தை நோக் கியவாறே அமைந்துள்ளன. விழாக்காலங் களில் உலா வரும் சைவ, வைணவ மூர்த்திகள் யாவும் இக்கோயிலைச் சுற்றியுள்ள பெருவீதிகள் வழியாகக் காம கோட்டத்தை வலம் வந்து செல்வது 'கடவுளரும் வழிபடும் காமாட்சி' என்பதை உறுதிப் படுத்துகிறது.

எல்லாம் வல்ல பொருள், எல்லாம் கடந்த பொருள், எங்கும் உள்ள பொருள், என்றும் அழியாப் பொருள், பேரருளான பெரும் பொருள்-அதுவே அன்னை காமாட்சி. நம் குறை மறந்து குணம்கருதி, தேவையறிந்து தருவன தந்து, இன்புறுத்தி அன்பு வழி நடத்துவது. நாமும் நம் குடியும், உறவும், ஊரும், நாடும், உலகும் செந்நெறி நிற்கத் தோன்றாத் துணை யாக விளங்குவது.

காஞ்சி காமகோடி பீடத்தின் தலைவர், தவப்பெருந்திரு சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் ஆளுகைக்குட்பட்ட இக்கோயிலில் பெருமைகளுக்கெல்லாம் தலையாய பெருமை யாகவும், நன்மைகளுக்கெல்லாம் மேலான தெய்வமாகவும் விளங்கும் காமாட்சியம்ம னுக்குத் துறவுநெறி பற்றிய அத்தூயவரின் கை களால் 5-4-1976ல் குடமுழுக்குச் சிறப்பாக நடைபெற்றது. விண்ணோரும் வழிபடும் வேத முதல்வியைப் பணிந்து அவளுடைய திருவரு ளுக்கு ஆளாகி உயர்வோமாக.

> **" எங்கெல்லாம் என்னெண்ணம் செல்கின்றதோ**
> **அங்கெல்லாம் உன்னுருவம் நிற்கட்டுமே**
> **எங்கெல்லாம் என்சென்னி பணிகின்றதோ**
> **அங்கெல்லாம் உன்பாதம் நிலைக்கட்டுமே."**
>
> — சங்கரர்.

காஞ்சிப் புராணமும் சைவ சித்தாந்தமும்

க. வச்சிரவேல் முதலியார்,
தனி அலுவலர், சைவசித்தாந்த தத்துவத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை 625 021

காஞ்சிப் புராணம் உயர்ந்த தத்துவக் கருத்துக்களைக் கொண்டது. அதனைச் செந்தமிழில் மொழிபெயர்த்து அமைத்துக்கொடுத்த ஆசிரியர் இருமொழிக்கடலும் நிலைகண்டு உணர்ந்த மாதவச் சிவஞான முனிவர் ஆவர். ஆதலால், அஃது இலக்கியச் சுவைமட்டும் பொருந்தியதாக அமையாமல், உயர்ந்த சாத்திரக் கருத்துக்களும் வேதாகம நுண் பொருள்களும் அமைந்து சிறந்து விளங்குவதில் அருமை ஒன்றும் இல்லை. ஆயின், அவ்வுயர்ந்த கருத்துக்களைத் தக்கவர்கள் உணர்ந்து மகிழ்தலும் பயன்கொள்ளுதலும் கடப்பாடு ஆகும்.

காஞ்சிப் புராண அவையடக்கத்தில் ஓர் உயர்ந்த கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. கல், மண், செம்பு முதலிய பொருள்கள் எவ்வளவு கலைத்திறனோடு அமைக்கப்படினும் அவை அழகிய பொருள்கள் எனப் பாராட்டப்படுமே யன்றிப் போற்றப்படமாட்டா; உலகப் பொருள் உலகப்பொருள்தான். அவை அனைத்தும் மாயையின் காரியமே எனக் கொள்ளப் படும். ஆயின், அவையே தெய்வ உருவாக அமையின் போற்றி வழிபடப்படும் பொருள்கள் ஆகின்றன; அவை திருவருள் வடிவம் எனவே கொள்ளப்படும். அதுபோல, இப் புராண வடிவில் வரும் என் உரை பிதற்றுரையே ஆயினும், அதன்கண் திருவேகம்பநாதனது பொருள்சேர் புகழ் அமைந்திருத்தலின், அஃது அறிஞர்களுக்குக் குற்றம் அற்றதாகவே விளங்கும் என்கிறார் :—

மாயை காரிய உருக்களும்
எம்பிரான் வடிவம்
ஆய வேல்அவை அருள்மயம்
ஆகும்மற் றதுபோல்
பேய னேன்பிதற் றுரையும்
ஏகம்பர்தம் பெருமைத்
தூய காதையுள் உறுதலால்
துகளறத் தோன்றும்

(பாயிரம், 1)

திருநாட்டுப் படலத்தில் மழைச் சிறப்பு உரைக்கும்போது பின்வரும் பாட்டு வருகின்றது :-

" போதம் மேலாகப் பண்டே
புல்லிய மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்கு மாபோல்
மழைப்பெயல் மாறித் தீர்ந்தும்
காதல்செய் துறையும் புள்ளும்
மாக்களும் கவன்று நெஞ்சம்
நோதக மரங்கள் எல்லாம்
நுண்துளி துவற்றும் மாதோ"

(திருநாட்டு, 12)

'அடைமழை விட்டும் செடிமழை விடவில்லை' என்பது பழமொழி. மழைக்காலம் நீங்கிப் பின் குளிர்காலம் வருகிறது. மரங்களில் பறவைகளும், அவற்றின்கீழ் விலங்குகளும் தங்குகின்றன. பனித்துளிகள் இலைகளிலிருந்து அவற்றின் உடம்பின்மேல் வீழ்தலினால், அவை பெரிதும் துன்புறுகின்றன. இதற்குச் சிவஞான முனிவர் எடுத்துக்காட்டும் உவமை, சிவஞானம் மிகுந்தபோது மூலமலம் அறவே நீங்குகிறது; ஆயினும், பழைய பயிற்சிபற்றி மலவாதனை அவர்களை உலக முகப்பட வைக்கும்; அப்போது அவர்கள் பெரிதும் அவ்வாதனைக்கு அஞ்சி இறைவனையே சார்பாகக் கொண்டு நிற்பார்கள். இவ்வுவமை சாத்திர நூல்களில் பயின்ற சிவஞான முனிவர் முதலியோர்க்கு அன்றிப் பிறர்க்குச் சொல்ல வருதல் அரிது.

மேட்டு நிலத்தில் விழும் நீர்த்துளிகள் பல அருவிகளாகப் பாய்ந்து இறுதியில் பாலியாறு என்னும் பெருவெள்ளமாக வந்து சேர்கின்றன. இவ்வாறு வந்து சேர்வது, ஒருவன் பல பிறவிகளில் பல உலகங்களில் செய்தவினைகளெல்லாம் ஒரு பிறவியில் அவன் எடுத்துள்ள உடம்பின்கண் இன்ப துன்பங்களை உண்டு பண்ணுதற் பொருட்டு ஒருங்கே சேர்தல் போலும் எனக் கூறுகிறார் முனிவர்.

" பாரிடம் குழித்து வீழும் பல்வயின்
அருவி யெல்லாம்
ஓரிரும் பாலி யாற்றின் ஒருங்குசென்(று)
அணையும் தோற்றம்
சீரிய புவனம் தோறும் சிதறிய
வினைகள் எல்லாம்
ஓரிடத் தொருவன் தன்பால்
உடங்குசென்(று) உறுதல் போலும் "
(திருநாட்டு, 15)

மேல் இரண்டு செய்யுள்களிலும் முறையே அணைந்தோர் தன்மையும், இருவினைகள் இறைவன் ஆணையாற்றால் ஒருவனை வந்து சேரும் முறைமையும் உரைக்கப்பட்டன.

முனிவர் சுவேதாசுவதரம் என்னும் உபநிடதத்தில் ஆறும் அத்தியாயத்தின் இறுதியில் வரும் ஒரு மந்திரத்தின் பொருளைத் தம் புராணத்தில் வைத்து உறுதி உரைக்கின்றார் :- அம்மந்திரம்,

' யதா சர்மவத் ஆகாசம்
வேஷ்டயிஷ் யந்தி மானவா
ததா சிவம்(தேவம்) அவிஜ்ஞாய
துஃகச் யாந்தோ பவிஷ்யதி '

என்பது. அதற்கு முனிவர் கொடுக்கும் மொழி பெயர்ப்பு :

' மானிடன் விசும்பைத் தோல்போல்
சுருட்டுதல் வல்லோனாயின்
ஈனமில் சிவனைக் காணாது
இடும்பைநீர் வீடும எய்தும் '

என்பது. அப்பாட்டைப் பின்வருமாறு அவர் முடிக்கிறார் :

' மானமார் சுருதி கூறும்
வழக்கிவை ஆதலாலே
ஆனமர் இறையைக் காணும்
உபாயமே அறிதல் வேண்டும் '
(சனற்குமார 43)

மகாநாராயண உபநிடதத்தில் தகர வித்தை பேசப்படுகிறது. நெஞ்சக் கமலம் ; அதனுள் வெளி ; அதன் நடுவில் ஒளிவடிவச் சுடர் ; அதன் முடியில் பரமான்மா உளர் என்று அது பேசுகிறது. இங்கு நாராயணருடைய நெஞ்சக் கமலமே வருணிக்கப்படுகிறது என்பது சைவர்கள் கொள்கை. இக்கருத்தை வேள்விச் சாலையில், ஓமகுண்டத்தில் சிவாக்கினியை வளர்த்து அதன்கண் இறைவனை ஆவாகனம் செய்து வழிபடும் அந்தணர்களின் செய்கையில் வைத்துப் பேசுகிறார் சிவஞான முனிவர். பின் வருவது திருநகரப் படலத்தில் உள்ள 119-வது செய்யுள் :

' சேந்தபொற் குண்டத் தோங்கும் சிகைத்
தழல் மிசை ஏகம்ப
வேந்தைஆ வாகித் தேத்தும்
புகைபொதி வேள்விச் சாலை
ஏய்ந்தசீர்த் தகரவித்தை
முறைப்படி இதயக் கஞ்சப்
பூந்தழல் சிகைமேல் ஈசற்போற்றும்
மாயவனை ஒக்கும் "

புகைபொதி வேள்விச்சாலை நீலமேக சாமளவண்ணம் உடைய திருமாலையும், ஓம குண்டம் அவர் தம் நெஞ்சக்கமலத்தையும் ஒக்கும் என்கிறார்.

பிருகத் ஆரண்யக உபநிடதத்தில் பின் வரும் செய்தி வருகிறது. விதேக மன்னன் சனகன் ஒரு பெருவேள்வியைச் செய்தான். அவ்வேள்வியில் ஆயிரம் ஆக்களைக் கொணர்ந்து, அவை ஒவ்வொன்றன் கொம்புகளிலும் பப்பத்துப் பொன் நாணயங்களைக் கட்டி, பிரம்ம ஞானத்தில் வல்லவர் அவற்றை ஓட்டிச் செல்லலாம் என்று கூறினான். அங்கு வந்திருந்த பிராம்மணர் பலரும் தயங்கி நிற்கும்போது, யாஞ்ஞ வல்கியர் தமது மாணவன் ஒருவனை அழைத்து, அவற்றைத் தம் ஆச்சிரமத்துக்கு ஓட்டிச் செல்லும்படி உத்தரவிட்டார். அதைக் கண்டு அங்கிருந்த மற்றைய பிராம்மணர் பல வகையான வினாக்களை வினவினர். அவற்றிற் கெல்லாம் யாஞ்ஞவல்கியர் விடை சொல்லிக் கொண்டு வருகிறார். அப்போது உத்தாலக அருணி என்பவர் அந்தரியாமியின் இலக்கணம் பற்றி வினவினர். அவ்வினாவிற்கு 21 மந்திரங்களால் பல பொருள்களைச் சுட்டி விடை தருகிறார் யாஞ்ஞவல்கியர். அவற்றுள் ஒன்று :

' யோ விஞ்ஞானே திஷ்டந்
விஞ்ஞாநாத் அந்தர:
யம் விஞ்ஞாநம் நவேத,
யாஸ்யவிஞ்ஞாநம் சரீரம்
யோ விஞ்ஞாநம் அந்தரோ
யமயதி, ஏஷத
ஆத்மாந்தர்யாமி அம்ருத:"

என்பது. இஃது இருபதாவது தொடர். இப்படியே பிறவும் உள்ளன.

'எவர், அறிவில் தங்கி அதனுள் இருக்கிறரோ, யாரை அறிவு அறிந்துகொள்ள வில்லையோ, யாருக்கு அறிவு உடம்போ, யார் அறிவினுள் இருந்து அதனை ஆளுகிருரோ, அவர் உன் ஆன்மா,-அந்தரியாமி-அமுதம்' என்பது இதன் பொருள். இவ் அந்தரியாமிப் பொருளைச் சிவஞான முனிவர் மூன்று திருவிருத்தங்களில் அடக்கிக் கூறுகிருர். இக்கருத்தைக்கொண்டு வேதங்கள் திருவேகம்பநாதரை ஆதிகாலத்தில் போற்றியதாகப் பாடுகின்ருர். பாட்டுக்கள் பின்வருபவை :

''பாரின் மேயினை பாரொரு வடிவினை
பாரினுக் கறியொண்ணுய்
பாரும் மற்றைய் பாரிடைப் பொருளும்நின்
ஆணையிற் பயில்வித்தாய்
நீரின் மேயினைநீரொரு வடிவினை
நீரினுக் கறியொண்ணுய்
நீரும் மற்றையந் நீரிடைப் பொருளும்நின்
ஆணையின் நிலைப்பித்தாய்

நெருப்பின் மேயினை நெருப்பொரு வடிவினை
நெருப்பினுக் கறியொண்ணுய்
நெருப்பும் மற்றையந் நெருப்பிடைப்பொருளும்நின்
ஆணையின் நிறுவித்தாய்.
மருத்தின் மேயினை மருத்தொரு வுடிவினை
மருத்தினுக் கறியொண்ணுய்
மருத்தும் மற்றையம் மருத்திடைப் பொருளும்நின்
ஆணையின் வதிவித்தாய்

விண்ணின் மேயினை விண்ணொரு வடிவினை
விண்ணினுக் கறி யொண்ணுய்
விண்ணும்மற்றையவ் விண்ணிடைப்பொருளும்நின்
ஆணையின் நிறுவித்தாய்
கண்ணும் ஆருயிர் இருசுடர் எவற்றினும்
இம்முறை கலந்தோங்கி
எண்ணினுல்அறி வரும்பெரு முதல்வநின்
இணையடி மலர் போற்றி!''

(திருவேகம்ப, 17-19)

உண்மையில் இப்பாட்டுக்கள் பிருகத் ஆரணியகத்தில் வரும் அந்தரியாமிப் பிரகரணத்தை உள்நிறைந்து பொழிந்துஎழுந்த உயர்ஞானத் திருமொழியால் சொற்செய்து அமைத்துள்ளார் நம் முனி முதல்வர், என்றே வியந்து போற்றித் தொழும்படி அமைந்துள்ளன. சங்கரர் உலகத்தை வெறுந்தோற்றமே என்றனர். இராமானுசர், உலகுயிர்கள் முதல்வனுக்கு உடம்பாக உள்ளன என்றனர். மத்துவர், உலகுயிர்களும் வேறே முதல்வனும் வேறே என்றனர். வேதம் முதற்பொருள் உலகுயிர்களின் உள் நிற்பது ; அவற்ருல் அறியப்படாததாக உள்ளது, உலகுயிர்களை உடம்பாகமட்டும் கொள்ளாமல் உள்நின்றும் இயக்குகின்றது எனக் கூறுகின்றது. சைவர்கள் இம் மூன்று சம்பந்தத்தையும் முற்றக் கொண்டு, 'உலகெலாமாகி வேறுய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி' இறைவன் இருக்கின்ருன் என்பதை விளக்கி வருகிருர்கள். இக்கருத்து வேதங்களை அடிப்படையாகக்கொண்டதுதான், இதுவே சரியான கருத்து என்பதைப் புராண வாயிலாக வலியுறுத்தவே நம் முனிவர் பெருமான் இம்மூன்று பாட்டுக்களை வேதங்களின் துதிமொழியாகத் திருவேகம்பப்படலத்தில் வைத்துள்ளார்.

இன்னும் ஒரு பாட்டு நமது முனிவர்தம் வேத ஆகம நுண்பொருள் நுழைவை அறிந்து இன்புறுதற்பொருட்டு எடுத்துக்கொள்கிறேன். அஃது,

' அகிலநாமமும் எமக்குரிப் பெயராம் அவற்றினும்
பவன்முதற் பெயர் சிறப்பாத்
தகுமவற்றினும் சம்புவே மயோபு சங்கரன்
மயககரன் சிவன் மற்றை
இகழரும் சிவதரன் எனும்பெயர்கள் இனியவாகும்
அங்கெவற்றினும் மேலாய்ப்
புகழ்படைத்தர ஏகாம்பரநாதன் எனப்புகல்
பெயரெமக்குமிக் கினிதாம். (திருவேகம்ப, 44)

என வரும். இஃது இறைவனே கூறுவது. எல்லாப் பெயர்களும் சிவபிரானுக்கு உரியவை தாம். ஆயினும் பவன், சருவன், ஈசானன் பசுபதி, உருத்திரன், உக்கிரன், பீமன், மகாதேவன் என்னும் எட்டுப் பெயர்கள் சிறந்தவை. அவற்றினும் சீருத்திரத்தில் திருவைந்தெழுத்து கூறுமிடத்து வரும் சம்பு, மயோபு, சங்கரன், மயற்கரன், சிவன், சிவதரன் என்னும் பெயர்கள் சிவபிரானுக்கு இனிமையைத் தருவன. எல்லாப் பெயர்களுள்ளும் ஏகாம்பரநாதன் என்னும் பெயர் இறைவனுக்கு மிகவும் இனிதாகும் என்பது இப்பாட்டின் பொருள். சம்பு முதலிய ஆறுபெயர்களும் சீருத்திரத்தில் ''நமஸ்தாராய'' என்னும் பெயருக்குப்பின், நமஸ்சம்பவேச, மயோபவேச, நமஸ்சங்கராயச, மயஸ்கராயச, நமஸ்சிவாயச, சிவதராயச என வருவன என்பதை உணர்தல் வேண்டும். ஏகாம்பரநாதன் என்னும் சொல் ஒற்றை மாவின் தலைவன் என்னும் பொருளைத் தரும். இங்கு ஒற்றைமா என்பது வேதங்களைக் குறிக்கும் ஆதலால், அப்பெயர் வேத உள்ளுறையாகவும், வேத மூலமாகவும் உள்ள வேத முதல்வன் என்னும் கருத்தைத் தெரிவித்து மக்களைத் தன்பால் அன்பு பூண்டு ஒழுகச் செய்தலின் அப்பெயர், எப்பெயரினும் இறைவனுக்கு இனிமை உடையதாயிற்று.

மணிமேகலை காட்டும் காஞ்சி

டாக்டர் சோ. ந. கந்தசாமி எம். ஏ., எம். லிட், பிஎச். டி.,
தமிழ்த்துணைப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

காஞ்சி-மதிற்பெயர்

நாகரிகத்தின் அடையாளமாகத் திகழ்வது நகரமாகும். இந்திய நாகரிகத்தின் கேந்திரத் தலங்களுள் மேலோங்கி நிற்பது காஞ்சி மாநகராகும். தமிழகம் சேரமண்டலம், சோழ மண்டலம், பாண்டிமண்டலம், கொங்குமண்டலம், தொண்டைமண்டலம் என்று ஐந்து நிலப் பகுதிகளாக ஆளப்பெற்று வந்துள்ளது. இவ் வைந்தனுள் தொண்டை மண்டலம் என்பது தமிழகத்தின் வடபகுதியைச் சுட்டுவதாகும். தொண்டைமான் என்னும் அரச பரம்பரையினர் ஆண்டதால் தொண்டை மண்டலம் எனப்பட்டது. **பெரும்பாணாற்றுப் படை** என்னும் சங்க இலக்கியத்தில்,

'கொண்டி உண்டித் தொண்டையோர் மருக'
(454)

(பகைவர் நாட்டிலிருந்து கொண்டு வந்த பொருள்களை நுகரும் தொண்டைமான்களின் பரம்பரையில் வந்தவனே !)

என வரும் பகுதி இங்கு எண்ணத் தக்கது. தொண்டை நாட்டின் தலைநகரமாகக் காஞ்சி திகழ்ந்துள்ளது. இந் நகரினைக் கச்சி என்றும் சுட்டுதல் உண்டு. காஞ்சி என்னும் தாவர விசேடத்தால் இம்மாநகர் இப்பெயர் பெற்றிருத்தல் கூடும். காஞ்சி என்ற சொல்லிற்கு மதில் என்றும் பொருள் இருப்பதால் மதில் விசேடத்தாலும் இப்பெயர் இந்நகர்க்கு ஏற்பட்டிருக்கலாம். மதில் என்ற சொல்லினடியாகத் தான் மதுரை தோன்றியுள்ளது. நல்லியக் கோடன் என்னும் குறுநிலத் தலைவனுக்குரிய எயிற்பட்டினம் என்னும் எழில் பட்டினம் கூட மதிற் சிறப்பினால்தான் இப்பெயர் எய்தியது எனலாம். பெரும்பாணாற்றுப்படை, மணிமேகலை ஆகிய இலக்கியங்கள்,

'அடையா வாயில் மிளைசூழ் படப்பை'
(பெரும்பாண – 401)
'பொன்னெயிற் காஞ்சி' (மணி, 28-156)

என்று காஞ்சிமாநகரின் மதிற் சிறப்பினைக் குறிப்பிடுகின்றன.

உலகப் பெருநகர்

வடமொழியின் ஆதி இலக்கண நூலாகிய பாணினீயத்திற்குப் பேருரை வகுத்த பதஞ்சலியார் தில்லைப்பதியைச் சேர்ந்த தமிழராவர். இப்பெரியார் தம் உரையில் காஞ்சியைச் சுட்டிக் கூறியுள்ளார். பௌத்த நெறியினைப் பாரெங்கும் பரப்பிய மாமன்னன் அசோகன் காஞ்சி மாநகரில் நிறுவிய பௌத்த விகாரத்தில் இருந்துதான் தம்மபாலர் என்னும் தேரவாதப் பௌத்தப் பேரறிஞர் திரிபிடகங்களின் பல பகுதிகளுக்கு உரை வரைந்தார் என்று சீனப் பயணி யுவான்சுவாங்கு தன் பயணக் குறிப்பில் சுட்டியுள்ளான். ஆதலின், காஞ்சி மாநகர்க்கு உலக அரங்கில் ஒருபெரும் சிறப்பு தொன்று தொட்டு ஏற்பட்டுள்ள உண்மை புலனாகும். எனவேதான் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

'மலர்தலை உலகத் துள்ளும் பலர் தொழ
விழவுமேம் பட்ட பழவிறல் மூதூர் (410, 411)
கச்சி யோனே கைவண் தோன்றல்.
(420)

என்று பாராட்டுகின்றார். விழாக்களால் மேம்பட்ட பழமையும் வலிமையும் படைத்த மூதூராகியகாஞ்சி, உலகத்தவர்களின் பாராட்டினைப் பெற்றமைக்கு வாணிப வளத்துடன் கலைச் சிறப்பும் ஒரு காரணமாக இருத்தல் வேண்டும். இடைக் காலத்தில் பன்மாண் சிறப்புக்களும் பெறத்தக்க அடிப்படைக் கூறுகளைக் காஞ்சி மாநகர் சங்க காலத்திலேயே பெற்றிருந்தமை தெளிவு.

காஞ்சி மாநகரின் அமைப்பு

சங்க காலத்துத் தலைநகரங்கள் பெரும்பாலும் தாமரை இதழ் போலும் அமைப்புடையனவாகத் திகழ்ந்தன எனலாம். பரிபாடலில் மதுரை மாநகரின் அமைப்பும், பெரும்பாணாற்

றுப்படையில் காஞ்சியின் அமைப்பும் இவ்வாறு தான் சுட்டப்பெற்றுள்ளன. காஞ்சியின் அமைப்பும் அழகும் குறித்துப் பெரும் பாணாற்றுப்படை சொல்லோவியம் செய்து காட்டும் பகுதியைக் காண்போம்.

'திண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிற்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையும் கோளும் வழங்குநர்த் தடுத்த
அடையா வாயில் மிளைசூழ் படப்பை
நீனிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற் பயந்த பல்விதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்
இழுமென் புள்ளின் ஈண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானம் சூடிய
மலர்தலை உலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறல் மூதூர்...
கச்சி யோனே ஈகவண் தோன்றல்' *(397-420)*

காஞ்சி மாநகரம் தேரோடும் திருவீதிகளைக் கொண்டது. வீரக் குடிமக்கள் பெரும் புகழ் விளைத்து வாழும் குடியிருப்புக்கள் நிலவின. கொடைக் குணத்தால் அடையா வாயிலும் அரண் சிறப்பும் அமைந்தது. நான்முகனை ஈன்ற திருமாலின் உந்தித் தாமரை போன்ற அமைப்பினை உடையது காஞ்சி. தாமரை மலரில் காணப்படும் இதழ்களின் வரிசையினைப் போல, காஞ்சிமாநகரின் வீதிகளின் வரிசை விளங்கியது. தாமரை மலரின் நடுவே திகழும் பொகுட்டினைப்போல, காஞ்சிமாநகரின் நடுநாயகமாக மன்னனின் கோயில் விளங்கியது. செங்கற்களால் கட்டப்பட்ட பெரிய மாளிகைகள் திகழ்ந்தன. பலவகை ஓசைகளையும் எழுப்பிப் பல்வேறு பறவைத் தொகுதிகள் தேடிச் செல்லும் பழுத்த ஆலமரத்தைப்போல பல திசை மக்களும் நாடிச் செல்லும் நகரமாகக் காஞ்சி விளங்கியது என்று அறிகிறோம்.

காஞ்சியின் கல்விச் சிறப்பு

சங்க காலத்திற்குப்பின் தொண்டைநாடு பல்லவர்களால் ஆளப்பெற்றது. பல்லவர்ஆட்சியில் காஞ்சி மாநகர் பல புதிய சிறப்புக்களைப் படைத்தது. வைதிக தரிசனங்களுடன் அவைதிகத் தத்துவங்களாகிய பௌத்தம், சமணம் முதலிய நெறிகளும், சைவம் வைணவம் ஆகிய பக்தி மார்க்கங்களும் தழைத்துச் செழித்து எங்குகற்குரிய உயர் ஆய்வியல் நிலையமாக (Centre for the Advanced studies in Religion and Philosophy) ஒளிவீசியது. கலைச்சிறப்பு வாய்ந்த கற்கோயில்கள் பல இந்நகரில் எழுந்தன. சமய தத்துவ மேதைகளின் சிந்தனை மேடையாகக் காஞ்சி திகழ்ந்தது. இந்நகரினை நோக்கி உலகின் பல பாகங்களிலிருந்தும் முது மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கு வந்தனர். பௌத்த தருக்கத்திலும், தத்துவத்திலும் பல புதிய வளர்ச்சிகளைக் கண்ட திக்கநாகரும் அவர் மாணவர் தருமகீர்த்தியும் காஞ்சியம் பதியைச் சார்ந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. திக்கநாகரின் பிரமாண சமுச்சயம், நியாயமுகம், ஏதுசக்கரஹமரு, ஆலம்பன பரீட்சை முதலியனவும் தருமகீர்த்தியின் நியாய பிந்தும் ஒப்பற்ற தருக்க நூல்களாகும். இவ்விருவரும் சௌத்திராந்திக யோகாசாரப் பௌத்தத்தின் தூண்களாவர். சாத்தனார் இந்நெறியைத்தான் மணிமேகலையில் பிழிந்து கொடுத்துள்ளார். தேரவாத பௌத்தத்தினைச் சேர்ந்த தம்மபாலர் என்பவரும், யோகாசார பௌத்தராகிய தருமபாலரும் காஞ்சித் தமிழர்கள் ஆவர். இவருள் முன்னவர் பிடக உரையாசிரியர் என்பதை, முன்னரே சுட்டினோம். பின்னவர்தான் வடக்கே உள்ள நாளந்தா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக விளங்கியவராவார். இவர்களைப் பற்றி யுவான்சுவாங்கின் பயணக் குறிப்பும் பாலி இலக்கிய வரலாறும் பாரித்துப் பேசுகின்றன. இவ் விருவரையும் நினைவுகூரும் பாங்கிற் போலும் சாத்தனார் அறவண அடிகள் என்னும் போதிசத்துவரைப் பௌத்தக் காப்பியமாகிய மணிமேகலையில் படைத்துள்ளார். அறவணர் நெடுங்காலம் காஞ்சியில் வாழ்ந்தவர். பௌத்த தருக்க தத்துவங்களில் முற்றிய மாமேதை. மணிமேகலைக்கு இவ்விரு துறைகளையும் குறைவறக் கூறியவர். இவர் வாழ்ந்த காஞ்சிப் பகுதியை நினைவுறுத்தும் பாங்கில் அறப்பணஞ்சேரி என்னும் வீதி உள்ளது. பாலி மொழியின் தொல்காப்பியர் எனப்போற்றப்பெறும் கச்சாயனர் கச்சியில் வாழ்ந்தவர் என்பது பௌத்தவியலாரின் துணிபாகும். மகாயான பௌத்தத்தின் ஒரு பிரிவாகிய தியானபௌத்தத்தினைச் சீனம், சப்பான், ஆகிய நாடுகளிலும் பரவச் செய்த போதிதருமர் என்பார் காஞ்சிப் பல்லவ

வேந்தனின் இளவல் என்று அறிஞர்கள் ஆராய்ந்துணர்த்தியுள்ளனர். காஞ்சியில் வாழ்ந்த இப்பௌத்தப் பேரறிஞர்கள் தமிழராக இருந்தும் பாலி, வடமொழி ஆகிய இந்திய மொழிகளில் தான் தம் சிந்தனைகளை முழுமையாக வெளிப்படுத்தினர். அதனால்தான், இவர்கள் பெருமை தமிழகத்தின் அளவில் நில்லாது இமயம்முதல் இலங்கை வரையும் பரவியது. அன்றியும் இவர்கள் எழுதிய நூல்களைத் திபெத்து, சீனம், சப்பானியம், சிங்களம் முதலிய அயல்மொழிகளிலும் அக்காலத்து அயல்நாட்டு அறிஞர்கள் மொழிபெயர்த்துக் கொண்டுள்ளனர். சப்பானிய எழுத்து முறையினைச் செப்பம் செய்தளித்தவர் கூட தமிழகத்துப் பௌத்தப் பெரியார் தான் என்று கூறப்படுகிறது. தமிழிலும் தெலுங்கிலும்கூட திரிபிடகங்களுக்கு உரை வரையப்பெற்றன என்று பௌத்தப் பேரறிஞர் டாக்டர் பி. சி. லா. குறிப்பிட்டுள்ளார். அவை இப்போது நமக்கு அகப்படவில்லை. சாங்கிய காரிகைக்குப் புத்துரை கண்ட பௌத்த பிட்சு பரமார்த்தரும் காஞ்சியில் வாழ்ந்த தமிழரே யாவார். இவரைப் பின்பற்றியே சாத்தனார் சாங்கியக் கொள்கைகளைக் கூறியுள்ளார். யுவான்சுவாங்கு இந்நகரின் விகாரையில் தங்கிப் பல நூல்களைப் பயின்றுள்ளான். பௌத்தத்தினைப் பொறுத்தமட்டில் வடக்கே சாஞ்சியைப் போலத் தெற்கே காஞ்சி திகழ்ந்துள்ளது. சமணர்களுக்கும் காஞ்சி மாநகர் தலைமை நிலையமாக விளங்கியுள்ளது. ஜினகாஞ்சி என்பதுதான் சின்னகாஞ்சிபுரம் என்று இன்று விளங்குகிறது என்பர். அத்துவிதத்தைஇந்தியா முழுதும் பரப்பிய சேரநாட்டுத் தமிழராகிய ஆதிசங்கரர்கூட தம் பிரச்சாரத்தின் தலைமைக் கூடாரத்தினைக் காஞ்சியில்தான் அமைத்துக் கொண்டார். காவியாதர்சம் என்னும் அணி இலக்கண நூலினை உருவாக்கிய தண்டியும் காஞ்சிப் பதியில் வாழ்ந்தவரே. வைணவ சமயத்திற்கும் சைவத்திற்கும் காஞ்சிமாநகர்தான் அடித்தளமாக அமைந்துள்ளது. சிறந்த வடமொழிக் கவிஞராகிய பாரவி,

'புஷ்பேஷு ஜாதி புருஷேஷு விஷ்ணு
நாரீஷு ரம்பா நகரேஷு காஞ்சி'

என்று காஞ்சியின் சிறப்பினைப் பாடியுள்ளார். இப்பகுதியின் பொருள் 'மலர்களில் சிறந்தது பாரிசாதம்; மனிதருள் சிறந்தவர் திருமால் (-பாரவி சைவராதலின் இப்படிக் கூறினார் போலும்!) நங்கையருள் சிறந்தவள் அரம்பை, நகரங்களுள் சிறந்தது காஞ்சி' என்பதாகும். முதலாம் மகேந்திரவர்மனைக் காண்பதற்காகப் பலமுறை காஞ்சி மாநகர்க்கு வந்து பழகிய அப்பர் பெருமானின் அனுபவமொழியாக,

''செல்வியைப் பாகம்கொண்டார் சேந்தனை மகனுக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத காஞ்சிமா நகர்தன் உள்ளால்
எல்லியை விளங்க நின்றார் இலங்குமேற் றளிய னாரே'' (4. 431)

என வரும் தேவாரப் பாசுரம் அமைந்துள்ளது. காஞ்சிமாநகரின் கல்வி மாட்சிக்கு இத்தேவாரப் பாடல் ஒன்றே போதும்.

சாத்தனார் காலத்தில் காஞ்சி

பௌத்த சமயத்தின் பொற்காலம் கி.பி. 400-700 ஆகும். இக்காலப் பகுதியில் தான் (கி.பி. 450 - 550) சாத்தனார் மணிமேகலையினைப் பாடியிருத்தல் வேண்டும். இவர் காட்டும் காஞ்சியில் இளங்கிள்ளி என்பவன் அரசோச்சினான். இவன் வரலாற்று மனிதனா என்பது கேள்விக்குறி. இவன் கழற்கிள்ளியின் இளவல். புத்தபகவனிடத்தில் பக்திமிக்கவன். காஞ்சிமாநகரின் நடுவே புத்தர் பிரானுக்கு ஒரு சேதியம் கட்டியிருந்த செய்தியை,

பொற்கொடி மூதூர்ப் புரிசை வலங்கொண்டு
நடுநகர் எல்லை நண்ணினள் இழிந்து
தொடுகழற் கிள்ளி துணையிளங்கிள்ளி
சொம்பொன் மாச்சினைத் திருமணிப் பாசடைப்
பைம்பூம் போதிப் பகவற் கியற்றிய
சேதியம் தொழுது' (28:170-175)

என வரும் மணிமேகலைப் பகுதி புலப்படுத்துகிறது. காஞ்சியில் தருமதவனம் என்னும் ஆராமமும் இருந்தது (28:182). இங்குத்தான் தேரர்களும் தேரிகளும் தங்கியிருந்து தத்துவச் சிந்தனையில் ஈடுபடுவர். இத்தகைய தருமதவனம் பௌத்தத் துறவியர்க்குரியதாக மிருச்சகடிகத்திலும் சுட்டப்பட்டது. வருவதுரைக்கும் கந்திற்பாவை என்னும் தூணுறையும் பௌத்தச் சிறுதெய்வம் காஞ்சியிலும் திகழ்ந்தது (28 : 189). பௌத்தத் தலங்களில் சிறப்புடையதாகத் திகழ்ந்த மணிபல்லவத்தில் விளங்கிய புத்தரின் பாதபீடிகை, கோமுகி இலஞ்சி ஆகியவற்றின் பிரதிமைகள் (Replicas) காஞ்சியிலும் இளங்கிள்ளியினால் அமைக்கப

பட்டன. வளம் மிக்க காஞ்சியில் கொடிய பஞ்சம் ஏற்பட்ட நிலையினையும் சாத்தனார் சுட்டியுள்ளார். இப்பஞ்சத்திற்கு முன்பு தேவேந்திரனின் தலைநகராகிய அமராவதி மண்ணுலகில் வந்து கிடந்ததுபோல் காஞ்சி காட்சி தந்தது. இதனை,

'தேவர் கோமான் காவல் மாநகர்
மண்மிசைக் கிடந்தென வளந்தலை மயங்கிய
பொன்னகர் வறிதாப் புல்லென் றுயது'
(28,166-168)

எனவரும் பௌத்தக் காப்பியப் பகுதி புலப்படுத்துகிறது. இக்கொடிய பஞ்சத்தினால் காஞ்சியில் வாழ்ந்துவந்த பல்வேறு சமய, தத்துவங்களையும் கற்றுத் துறைபோகிய அறிஞர்கள் இந்நகரினை விடுத்துச் சேரநாட்டின் தலைநகராகிய வஞ்சிமாநகர்க்கு வந்து குடியேறிவிட்டனர் என்பதையும் மணிமேகலை சுட்டுகிறது. இத்திறத்தினை வஞ்சியில் வைகியுள்ள மாசாத்துவான் தன் பேர்த்தியாகிய அறச்செல்விக்கு,

'பொன்னெயிற் காஞ்சி நாடுகவின் அழிந்து
மன்னுயிர் மடிய மழைவளம் கரத்தலின்
அந்நகர் மாதவர்க்கு ஐயம் இடுவோர்
இன்மையின் இந்நகர் எய்தினர் காணாய்'
(28,156-9)

என்று எடுத்துரைப்பதால் உய்த்துணரலாம். அவந்தி சுந்தரி கதா என்னும் வடமொழி நூலிலும் இத்தகையதொரு பஞ்சக் குறிப்புக் காணப்படுகிறது.

மாசாத்துவான் கோவலனின் தந்தை. தன்முன்னோன் வஞ்சி மாநகரில் கட்டியிருந்த புத்த சேதியத்தினை நாளும் வணங்குதற்பொருட்டுத் துறவு மேற்கொண்ட மாதவன். தன்னைக் காணவந்த பேர்த்திக்குக் காஞ்சி நகரின் பஞ்சத்தைப் போக்கி அறம் புரியுமாறு ஆற்றுப்படுத்துகிறான். அவனுடைய அருள் கனிந்த உள்ளத்தை,

'ஆருயிர் மருந்தே! அந்நாட் டகவயின்
காரெனத் தோன்றிக் காத்தல் நின்கடனென
அருந்தவன் அருள' ***(28,161-162)***

எனவரும் பகுதி சுட்டுகிறது. பயிருக்கு மழைபோல, பசித்த உயிருக்கு உணவூட்டி உய்விக்கத் தூண்டும் அமுதமொழியைக் கேட்டு,வஞ்சியை விட்டு வான்வழியாக காஞ்சி மாநகர் வந்து சேர்ந்தாள். புத்த சேதியத்தைப் பணிந்தாள். அரசன் தன் சுற்றத்துடன் அறச்செல்வியை வரவேற்றான். தன் நாட்டுப் பஞ்சத்திற்குத் தன்னையும் அறியாது நாட்டு ஆட்சியிலும், துறவியர் தவத்திலும், பெண்டிர் கற்பிலும் ஏற்பட்ட பிழை காரணமோ என்று கலங்கினான். அறச்செல்வியின் அமுதசுரபியால் மக்களின் பசி நீங்கும் ; மழை பொழிந்து பயிர் தழைக்கும் என்று மாதெய்வம் தனக்குக் கூறியதை எடுத்துரைத்தான். இத்தெய்வத்தின் கட்டளையால் தான் மணிபல்லவத்தில் உள்ள பாதபீடிகை, கோமுகி இலஞ்சி ஆகியவற்றின் மாதிரிகளைக் காஞ்சியில் அமைத்து, தீவதிலகை, மணிமேகலா தெய்வம் ஆகிய தேவகணங்கள்கூட வழிபடத்தக்க விழுமிய புத்தர்கோயிலை எடுப்பித்துச் சிறப்பொடு பூசனை நிகழ்ந்துவர நிவந்தங்கள் அமைத்தான். மணிமேகலை இவ்வேந்தன் அமைத்த புத்தக் கோயிலில் உள்ள பாதபீடிகையில் அமுதசுரபியை வைத்து வணங்கி, எல்லா உயிர்களையும் அருகழைத்து, அன்புடன் அன்னம்அளித்துப் பசிப்பிணி போக்கினாள். பசித்தோர் பட்டியலை,

'மொய்த்த மூவறு பாடை மாக்களிற்
காணார் கேளார் கால்முட மானோர்
பேணா மாக்கள் பேசார், பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்
மடிநல் கூர்ந்த மக்கள் யாவரும்
பன்னூ றாயிரம் விலங்கின் தொகுதியும்
மன்னுயிர் அடங்கலும் வந்தொருங் கீண்டி
அருந்தியோர்க் கெல்லாம் ஆருயிர் மருந்தாய்ப்
பசிப்பிணி தீர்த்த பாவையை ஏத்தி'
(28,221-234)

எனவரும் பகுதியில் பார்க்கிறோம். பதினெட்டு மொழிகள் பேசியவர்கள் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தனர் என்பது அறிந்து இன்புறத்தக்கது. தமிழகத்தின் அண்டை மாநிலங்களிலிருந்தும் அலைகடலுக்கு அப்பால் உள்ள அயல்நாடுகளிலிருந்தும் காஞ்சி மாநகர்க்கு மக்கள் வந்தவண்ணம் இருந்தனர் என்றால், இந்நகரின் சிறப்பிற்கு வேறு சான்றும் வேண்டுமோ ? பெரும்பாணாற்றுப்படையில், 'மலர்தலை உலகத்துள்ளும் பலர்தொழ, விழவுமேம்பட்ட பழவிறல் மூதூர்' எனவரும் பகுதி சுட்டும் உண்மையினை மணிமேகலை உறுதிப் படுத்துகிறது. அமுதசுரபியைத் தாங்கியவள் பௌத்த நெறிக்கு உரியவள் எனினும், நிலம், இனம், மொழி,

சமயம் என்னும் பேதம் பாராது இயலாமை யுடைய யாவர்க்கும் - விலங்கினங்களுக்கும்கூட ஒப்ப உவந்து மன்னுயிர் அனைத்திற்கும் உண வூட்டிய அறச்செல்வியின் அருள்கனிந்த தொண் டினைச் சாத்தனார் மூன்று உவமைகளின் வாயி லாகச் சிறப்பிக்கிறார் :

'அருந்தியோர்க் கெல்லாம் ஆருயிர் மருந்தாய்ப்
பெருந்தவர் கைப்பெய் பிச்சையின் பயனும்
நீரும் நிலனும் காலமும் கருவியும்
சீர்பெற வித்திய வித்தின் விளைவும்
பெருகிய தென்னப் பெருவளஞ் சுரப்ப
வசித்தொழில் உதவி வளந்தந் ததுவெனப்
பசிப்பிணி தீர்த்த பாவையை ஏத்தி'

(28:228-234)

தக்கவர்க்கு இட்ட பிச்சை அறப்பயனைப் பெருக் குதல் போலவும், நீர்வளம் நிலவளம் பருவ காலம் உழவு முதலியன பதப்பட்டபொழுது வித்திய விதை பெருவிளைவைத் தருதல் போல வும், மழைபொழிவதால் வளம் பெருகுதல் போலவும் அமுத சுரபியினால் அறம் தழைத்த திறனைக் காப்பியக் கவிஞர் கவினுறக் காட்டி யுள்ளார். 'மன்னுயிர் அடங்கலும்' பசிநீங்க வேண்டும் என்ற குறிக்கோளினைச் சுட்டும் சாத் தனாரின் உலகம் தழுவிய அருள்நோக்கினை எவ்வளவு பாராட்டினாலும் தகும். 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக' எனவரும் ஆதிரை யின் உரையிலும் இப்பரந்த நோக்கினைப் பார்க் கிறோம். அறச்செல்வி தங்கியுள்ள தருமசாலைக்கு மாதவி, சுதமதியுடன் அறவண அடிகளும் வந்தனர். அவர்களைப் பணிந்து பாதம் விளக்கி, ஆசனத்து இருத்தி, அறுசுவை நால்வகைப் போனகம் அருத்தி, பாசிலைத்திரையலும் பச்சைக் கருப்பூரமும் வழங்கி மணிமேகலை பணி விடை புரிந்தனள். இளமையிலேயே தொண்டு மனப்பான்மையும் உறைத்த புத்த பக்தியும் சீலமும் நிரம்பிய அறச் செல்விக்குப் பௌத்த தருக்கத்தினையும் பௌத்த தத்துவத் தினையும் அறவண அடிகள் ஆகிய போதிசத்து வர் போதித்தனர். மெய்ஞ்ஞானம் பெற்ற மணிமேகலை பவத்திறம் அறும்படி காஞ்சியில் இறுதி நாள்வரையும் நோன்பு மேற்கொண் டனள். மணிமேகலையில் இடம் பெற்றுள்ள இறுதி இரண்டு காதைகளும் பௌத்த தருக் கம், பௌத்த தத்துவம் ஆகிய இருபகுதியை யும் சுருக்க விளக்கமாகச் சுட்டிக்கூறும் மெய்ப் பொருட் சிறப்பமைந்த தனித்தனி நூல்களாகக் கருதற்குரியவை. இவ்விரு காதைகளிலும் காஞ்சியில் விளங்கிய திக்கநாகர், தருமபாலர் முதலிய பௌத்தப் பேரறிஞர்களின் சிந்தனை களும் இடம் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது. சாத்தனார் மதுரைக் கூலவாணிகராயினும் காஞ்சிமாநகரில் வாழ்ந்த பௌத்தச் சான்றோர் பலரின் கூட்டுறவில் தன் வாழ்வின் பெரும் பகுதியைப் பயன்படுத்தியவர் என்று தோன்று கின்றது.

பூலோக கயிலாயம்

எஸ். சிவபாதசுந்தரம்
சென்னை

தமிழ்நாட்டு வரலாற்றில் காஞ்சியின் பங்கு என்ன என்பதைப் பற்றிச் சிறிது பார்க்கலாம் என்று தோன்றுகிறது. அரசியல் துறை, சமயத் துறை, கல்வித் துறை இந்த மூன்று துறைகளிலும் தமிழ்நாட்டுக்கு வழிகாட்டியாயிருந்தது காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டை மண்டலம் என்பதைச் சரித்திரச் சான்றுகளோடு நாம் காண்கிறோம். பழைய சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில், ''மலர்தலையுலகத்துள்ளும் பலர் தொழ விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்'' என்று காஞ்சிமாநகர் எப்பொழுதும் விழாக்கள் நிறைந்தது என்று வருணிக்கப்படுகிறது. மணிமேகலை, ''தேவர் கோமான் காவல்மாநகர் மண்மிசைக் கிடந்தென வளந்தலை மயங்கிய பொன்னகர்''. அதாவது இந்திர லோகமே பூமியில் வந்திறங்கியது போன்றது என்று வருணிக்கிறது. அப்பர் சுவாமிகள், ''கல்வியைக் கரையிலாத காஞ்சிமாநகர்'' என்று சொல்கிறார்.

இப்படிப் பழம் பெருமையில் பல நூற்றாண்டுக் காலமாக சிறப்புற்றோங்கிய காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டைநாட்டில், கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே கரிகால் சோழனின் இனத்தவனான தொண்டைமான் இளந்திரையன், சிறுசிறு கூட்டங்களாயிருந்த குறும்பர்களை வென்று தனி அரசு ஸ்தாபித்தான். கரிகாலன் தொடர்புக்குச் சான்றாக காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் சந்நிதியில் அவன் சிலையொன்று காட்சியளிக்கிறது. ஒரு சில ஆண்டுகளே இளந்திரையன் ஆட்சியிலிருக்க வடக்கேயிருந்து சதவாகனர் என்ற ஓர் இனத்தவர் தமது சாம்ராஜ்யத்தை விஸ்தரித்து வரும்போது தொண்டைமண்டலத்தையும் தம தாணைக்குள் அடக்கி, தெலுங்கு நாட்டிலிருந்த பல்லவ வீரனான பப்பசாமி என்பவனை ராஜப் பிரதிநிதியாக வைத்து அரசாண்டார்கள். ஆனால், சதவாகனர் பலமும் குன்றத்தொடங்கி கி.பி. மூன்றாம் நூற்றாண்டில், ராஜப்பிரதிநிதிகளாயிருந்த பல்லவர்களே ஆளத் தொடங்கினார்கள். மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுவரை தொண்டை மண்டலத்தில் பல்லவர்களின் தனிக்கொடி பறந்தது. இடையிலே கி.பி.ஆறாம் நூற்றாண்டளவில் களப்பிரர் என்ற அரசர்களின் குறுக்கீடு இருந்தாலும் தெற்கே கடுங்கோன் என்ற பாண்டியனும் சிம்மவிஷ்ணு என்ற பல்லவனும் களப்பிரரை முறியடித்து அவர்கள் இருந்த இடம் தெரியாமல் செய்துவிட்டனர். சிம்மவிஷ்ணுவிலிருந்து தொடர்ந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை நடந்த பல்லவர் ஆட்சிதான் அரசியல், சமயம், கல்வி ஆகிய மூன்று துறைகளிலும் ஒப்பற்ற சாதனைகளைப் புரிந்துள்ளது.

சிம்ம விஷ்ணுவின் மகன்தான் சரித்திரப் புகழ்பெற்ற முதலாம் மகேந்திர வர்மன் (கி.பி. 600-630). மகேந்திர விக்ரமன், மத்த விலாசன், விசித்திர சித்தன், சித்திரக்காரப்புலி என்றெல்லாம் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் பல விருதுகளைப் பெற்றிருந்த இந்த மன்னன்தான் முதன்முதலில் தமிழ்நாட்டில் மலையைக் குடைந்து குடைவரை கோயில்களைக் கட்டச் செய்த மேதாவி. பல்லாவரம், வல்லம், மாமண்டூர், மகேந்திரவாடி, தளவானூர், சீயமங்கலம், மண்டகப்பட்டு, திருச்சிராப்பள்ளி, நாமக்கல் ஆகிய இடங்களில் இவன் கண்ணுற்ற குன்றுகளில் குடைவரைகள் தோண்டி இறைவனுக்கு இருப்பிடம் அமைத்தான். இவன்தான் திருநாவுக்கரசரால் சமணத்திலிருந்து மீட்கப்பட்டு சைவத்தில் சேர்ந்து திருவதிகையில் குணதரவீச்சுரம் கட்டியவன். இவன் மகன் முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி. 630-668) வைஷ்ணவ பக்தன். சாளுக்கிய மன்னன்மேல் படையெடுத்து (கி.பி. 642) வாதாபியைக் கைப்பற்றிய மாவீரன். இந்த வெற்றிப் படையை நடத்திய சேனாதிபதிதான் சிவத்தொண்டரான பரஞ்சோதி, சிறுத்தொண்டர். இவருடைய சிவத்தொண்டை மெச்சிய வைஷ்ணவ பக்தனான நரசிம்மவர்மன் அவருக்கு மரியாதை செலுத்தி அவருடைய சிவத் தொண்டைத் தொடர்ந்து செய்யப் படைத் தொழிலிலிருந்து ஓய்வு கொடுத்தனுப்பினான். மாமல்லன் என்று புகழ்பெற்ற நரசிம்மன்

கட்டிய சிற்பப் பொக்கிஷம்தான் மாமல்ல புரத்துக் குகைக் கோயில்களும், பகீரதன் தபசு என்ற ஒப்பற்ற சிற்பமும் ஆம்.

நரசிம்மனின் மகன் இரண்டாம் மகேந்திர வர்மன் தனது பாட்டன் வழியில் சைவ மதத்தைப் பின்பற்றியதோடு சிவத் தொண்டிலும் ஈடுபட்டு, இரண்டு ஆண்டுகளே அரசியல் நடத்தி, மகனுக்குப் பட்டம் கட்டிவிட்டுத் துறவுபூண்டு ஐயடிகள் காடவர்கோன் என்ற நாயனுர் பதவியைப் பெற்ருன். இந்த அரசன் பாடியதுதான் சைவத்திருமுறையில் பதினேராம் திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கும் க்ஷேத்திரத் திருவெண்பா என்பதாகும்.

இரண்டாம் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் பரமேஸ்வர வர்மன் காலத்தில் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி, தன் பாட்டனைப் பல்லவர் தோற்கடித்ததற்கு நஷ்டஈடாக வந்து காஞ்சியைப் பிடித்துக் கொண்டான். ஆனுல், பரமேஸ்வரன் சில நாட்களில் திருப்பித் தாக்கித் தலைநகரை மீட்டுக்கொண்டான். இந்த முதலாம் பரமேஸ்வர வர்மனின் மகன்தான் ராஜ சிம்ம பல்லவன் என்ற இரண்டாம் நரசிம்மவர்மன் (கி.பி. 680-720) சுந்தர மூர்த்தியின் சமகால நண்பனுன ''கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற்சிங்கன்.''

சோழ மன்னர்களில் கோச்செங்கணுன், புகழ்ச்சோழர் ஆகியோரைப்போல சிவத் தொண்டில் நின்று நாயனுராகிய பல்லவர்கள் இருவரில் ஐயடிகள் காடவர்கோனைப் பற்றி முன்பே அறிந்தோம். காடவர்கோன் கழற்சிங்கனைப் பற்றியும் திருவாரூரில் செருத்துணை நாயனுர் வரலாறு காணும்போதும் திருநின்றவூரில் பூசலார் நாயனுரைக் கண்டபோதும் ஓரளவு தெரிந்துகொண்டோம். திருவாரூரில் இவன் பட்டத்தரசி கங்கா, திருக்கோயிற் பிராகாரத்தில் ஒரு புஷ்பத்தை எடுத்து முகர்ந்ததற்காக அவள் கையையே துணித்தவன். திருநின்றவூரில் பூசலார் நாயனுர் கட்டிய மனக்கோயிலைக் காணச் சென்று அங்கே கோயில் பூசலார் நெஞ்சில்தான் உருவாயிருந்ததைக் கண்டு வியந்தவன். இந்த இரு சம்பவங்களும் தான் கழற்சிங்கனை நாயனுர் பதவிக்கு உயர்த்தியது. ஆனுல் இவன் உலகியல் வாழ்வில் சாதித்த மகோன்னதமான காரியங்கள் புராணத்தில் அகப்படாமல் கல்வெட்டுச் சாசனங்களில் அழியாத சரித்திரமாய், பல்லவர் பெருமைக்குச் சான்ருக நிற்கின்றன.

காஞ்சி கயிலாசநாதர் கோயில் ஒன்றே போதும் ராஜசிம்ம பல்லவனின் பெருமையை விளக்க. கயிலாசநாதனையே பூலோகத்தில் கொண்டுவந்து இருத்தி, அவனுக்கு ஒருகோயில் கட்டி, அந்தக் கடவுளின் அனந்த மூர்த்தங்களை யெல்லாம் சிலை சிலையாக வடித்து ஓர் அற்புத உலகத்தைச் சிருஷ்டித்துத் தந்திருக்கிருன் ராஜ சிம்மன். கல்லைக்கொண்டு கோயில் கட்டிய முதல் கற்றளி இது. எத்தனை கல்தச்சர்கள், என்னென்ன புதுமைகள்! மனிதன் கண்ட அழகுணர்ச்சிகளை யெல்லாம் ஒன்று சேர்த்துக் குழைத்த அழகு சொரூபம் இந்தக் கயிலாச நாதர் கோயில். கங்காதரர், பிக்ஷாடனர், திரிபுராந்தகர், சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்தங்கள் அங்கங்கே காட்சியளிக்கின்றன. தேவாசுரர்கள் பாற்கடல் கடையும் காட்சி, முப்புரங்கள் எரியும் காட்சி, எமனை உதைத்து மார்க்கண்டனைக் காத்த காட்சி, கிராத வேடத்தில் அர்ச்சுனனுடன் போட்டியிட்ட காட்சி, திருக்கயிலையை இராவணேஸ்வரன் தன் இருபது கைகளாலும் பேர்த்தெடுக்க முயலும் காட்சி இவையெல்லாம் பக்கம் பக்கமாக எப்படித் தான் சிற்பிகளின் கையுளியில் கடைசல் பெற்றனவோ? கூத்தாடும் பெருமானின் நடனக் கோலங்கள்தாம் எத்தனையெத்தனை? அம்மையின் மகிஷாசுரமர்த்தனம், வீணுகானம், அர்த்தநாரி உருவம், இவையெல்லாம் எத்துணை அழகு பொழிகின்றன!

புராணங்கள், இதிகாசங்கள், சரித்திரங்கள் எல்லாம் பிரத்தியக்ஷ ஏடுகளாகக் குவிந்திருக்கின்றன காஞ்சி கயிலாசநாதர் ஆலயத்தில். சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் இங்கு வந்து பல்லவரை வென்றபோதும் கயிலாச நாதர் ஆலயத்தைத் தொடவில்லை, அதன் சிற்பச் செல்வங்களை அபகரிக்கவும் அவன் விரும்பவில்லை. தமிழர் பண்பாட்டுக்கு அவன் மதிப்புக் கொடுத்தான். ஆனுல் பின்னுல் வந்த முதலாவது குலோத்துங்கன் என்ற தமிழன் தான் கயிலாசநாதர் கோயிலை இழுத்து மூடி, அதன் நிலங்களையெல்லாம் பக்கத்திலுள்ள அனேகதங்காவதம் என்ற கோயிலுக்கு மாற்றினுன் என்று கல்வெட்டுச் சாசனம் சாட்சி கூறுகிறது. மூடிய கோயிலைத் திறந்தவனும்

கி. பி. பதினைலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு தெலுங்கு நாயக்கனான கம்பண உடையார்.

கயிலாசநாதர் ஆலயத்தைச் சுற்றிச் சுற்றி ஆயிரம் தடவை வந்தாலும் அதன் சிற்ப அழகை ரசித்து முடியாது. ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளாகக் காற்றிலும் வெயிலிலும் சிறிது கரையுண்டுபோனாலும் இந்தச் சிற்பங்களின் குழைவும் அழுத்தமும் மெருகும் மாறவில்லை. முதலாம் மகேந்திரவர்மனுக்கும் ராஜசிம்ம பல்லவனுக்கும் இடைத்தூரம் சுமார் எண்பது ஆண்டுகள். மாமல்லபுரத்திலும் பல்லாவரத்திலும் மற்றும் இரண்டோரிடத்திலும் காணப்படும் சிற்பவடிவங்களுக்குப் பின்னர் மற்றைய அரசர் காலத்தில் தமிழ்நாட்டுச் சிற்பிகள் உளியைக் கையிலெடுக்காமல் சும்மா இருந்தார்களா ? ராஜசிம்மன் காலத்தில் கயிலாசநாதர் கோயில் சிற்பங்களை ஆயிரக்கணக்காக, பல்வேறு நிலைகளில் பல்வேறு கற்பனையில் வடித்தெடுத்த பாங்கைப் பார்க்கும்போது இந்தச் சிற்பிகளுக்குக் குறைந்தது மூன்று நான்கு தலைமுறை அனுபவம் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அப்படியானால் இவர்கள் முன்னோர்கள் செய்த கலைப் பொருள்களெல்லாம் எங்கே ?

இந்தச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு ராஜசிம்மனின் மற்றொரு கலைச்சின்னமான மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலைப் பற்றிய ஒரு கதை இருக்கிறது. மாமல்லபுரத்தில் காணப்படும் பாண்டவர் ரதங்கள் என வழங்கும் சிற்பங்களுக்கு மாமல்லன் என்ற முதலாம் நரசிம்மவர்மன் காரகன் என்பதை யறிவோம். ஆனால் கடற்கரையில் எழுந்திருக்கும் அனந்த சயனப் பெருமாள் கோயிலைக் கட்டியவன் கயிலாசநாதர் கோயில் தலைவன் ராஜசிம்ம பல்லவன். இவன் காலத்தில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த ஒரு பெரும் புலவன் காவ்யதர்சம் என்ற வடமொழி அலங்கார சாஸ்திரத்தை எழுதிய தண்டி. இது தமிழில் தண்டியலங்காரம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தண்டி ஒரு மகாமேதை. பலவித சாஸ்திரங்களிலும் பேரறிவு படைத்தவர். கட்டிடக் கலை, சிற்பக்கலை முதலியவற்றுடன் மற்றும் பல நுண்கலைகளை யறிந்தவர். வடமொழியில் வல்லவர். அத்துடன் தமிழிலும் மொழியியல் தெரிந்தவர். வடமொழிக் கவிதையைத் தமிழ் எழுத்திலே எழுதுவதை இவர் ஒரு சாதனையாகப் பயின்றிருந்தார் என்றும் சொல்வர். இவர் எழுதிய அவந்தி சுந்தரி கதா என்ற காவியத்தில் பல்லவர்களின் பெருமையைச் சொல்லும்போது மாமல்லபுரக் கடற்கரைக் கோயிலில் நடந்த ஒரு சம்பவத்தையும் சொல்லிப் போகிறார். காஞ்சியிலே இவர் காலத்தில், அதாவது ராஜசிம்ம பல்லவன் காலத்திலேயே, மிகத் திறமையுடைய லலிதாலயன் என்ற கலைஞன் இருந்தான். இவன் நவீனமான பறக்கும் யந்திரங்கள் செய்வது முதல் கட்டிடம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளிலும் நிபுணன் என்று சொல்வார்கள். ஒருநாள் இந்த லலிதாலயன், மாமல்லபுரத்து அனந்தசயனப் பெருமானின் கையில் காணப்பட்ட ஒரு சிறு வெடிப்பை மறைத்துச் செப்பனிட்டுத் திருத்தினான். பின்னர், மகாமேதையான தண்டியிடம் போய் வணங்கி, ''அடியேன் அனந்தசயனப் பெருமாள் சிலையில் கண்ட ஒரு பின்னத்தைச் செப்பனிட்டு நிறைவு செய்திருக்கிறேன். தாங்கள் அதை வந்து பார்க்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான். இதைத் தண்டி அவ்வளவு முக்கியமானதாகக் கருதவில்லையாகையால் கவனத்தில் கொள்ளவில்லை. பக்கத்திலிருந்த சில பண்டிதர்கள் லலிதாலயனின் திறமையை எடுத்துச் சொன்னதின் பேரில் தண்டி மாமல்லபுரத்துக்குச் சென்று அனந்தசயனப் பெருமாள் விக்கிரகத்தைப் பார்த்துவிட்டு, ''எந்த இடத்தில் செப்பனிட்டிருக்கிறீர் ?'' என்று லலிதாலயனைக் கேட்டபோது, லலிதாலயன், ''எனது கலை வீண்போகவில்லை ; செப்பனிட்ட இடம் தெரியாது. அவ்வளவு நுட்பமாக முடித்திருக்கிறேன் என்பது தங்கள் கேள்வியிலிருந்தே தெரிகிறது'' என்று சொல்லி மகிழ்ந்து ஒரு கையில்தான் பின்னமிருந்ததாகவும் அதைச் செப்பனிட்டதாகவும் தெரிவித்தான். இத்தகைய சிறந்த கலைஞர் வாழ்ந்திருந்தும் மூன்று நான்கு தலைமுறைகள் கண்ட சிற்பச் சின்னங்களோ கலைச்சின்னங்களோ காணக் கிடைக்கவில்லை.

கயிலாசநாதர் கோயில் கர்ப்ப கிருகத்தின் வாயிலில் நின்று பதினாறு பட்டை லிங்கத்தை வணங்குகிறோம். தீபாராதனையில் ஒன்றிப் பிரசாதம் வாங்கிக் கொண்டவுடன் அருச்சகர், பக்கத்திலே இரண்டு கற்பாறைகளுக்கிடையிலுள்ள குறுகிய வழியைக் காண்பித்து, ''இதில் நுழைந்து உள்ளே போய் கர்ப்பக் கிருகத்தை வலம் வந்து மறுபடியும் வெளியே வருவதற்

குள்ள குறுகிய சந்து வழியே நுழைந்து வாருங்கள். இதுதான் ''புனரபிமரணம், புனரபி ஜனனம் என்ற சொர்க்கப் பிரதக்ஷணம்'' என்ருர். படுத்திருந்து ஊர்ந்து புறப்பட்டு, குறுகிய பிராகாரத்தில் நடந்து மறுபடியும் படுத்திருந்து ஊர்ந்து வெளியே வரவேண்டும். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு மிக இளமையுடன் இருந்தபோது இந்தச் சொர்க்கப் பிரதக்ஷணத்தை ஒருதரம் அனுபவித்த எனக்கு அது அச்சந்தரவில்லையாகையால், தனியே வலம் வந்து சொர்க்கத்தின் இன்பத்தைப் பெற்றேன்!

பல்லவர் ஆட்சி தொண்டைமண்டலத்தில் கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டுடன் ஆட்டம் கண்டது. ராஷ்டிரகூடர் வந்து நுழைந்து பல்லவ அரசைச் சின்னபின்னப்படுத்தினுர்கள். ஆனுல், அவர்களும் வெகுநாள் தங்க முடியவில்லை. ஆதித்ய சோழன் படையெடுத்து வந்து ராஷ்டிரகூடரை முரியடித்து, சோழப்பேரரசை நிலைநாட்டினுன். நான்கு நூற்ருண்டுகளாகவே சோழர் ஆதிக்கம் செலுத்தினர். பெரும்பாலும் பழைய பல்லவர் வழித் தோன்றல்களையே ராஜப்பிரதிநிதிகளாக வைத்து ஆண்டார்கள். கருணுகரத் தொண்டைமானும் கோப்பெருஞ்சிங்கனும் அப்படி ஆண்டவர்கள். கோப்பெருஞ்சிங்கன் கி.பி. பதின்மூன்ரும் நூற்ருண்டில் தனி ராஜ்யம் நடத்தியவன்.

இனி, அறுபத்துமூவரில் ஒருவராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனுரைப் பற்றிச் சிந்திப்போம்.

இந்த நாயனுர் ஒரு ஏகாலியர், அதாவது துணிவெளுக்கும் வண்ணுரக்குலத்தைச் சேர்ந்தவர். தமது தொழிலில் பலருக்குத் துணி வெளுத்துக் கொடுப்பதுடன், சிவனடியார்களுக்குக் கூலிபெருமல் வெளுத்துச் சேவை செய்வதையும் ஒரு சிவத்தொண்டாகக் கருதிச் செய்துவந்தார். ஒருநாள் சிவபெருமானே ஒரு அடியார் வேடத்தில் அழுக்கடைந்த கந்தல் துணியைப் போர்த்திக்கொண்டு வந்தார். அவரைக் கண்ட திருக்குறிப்புத் தொண்டர், ''சுவாமி, தங்கள் ஆடை அழுக்கடைந்திருக்கிறது. என்னிடம்கொடுங்கள். நான் சுத்தமாய் தோய்த்துத் தருகிறேன்'' என்ருர். அடியார் அதற்கு, ''என்னிடம் மாற்றுடையாக எதுவும் கிடையாது. இதைத் தோய்த்து இன்றே திருப்பித் தருவதாஞல் செய்யும். இல்லாவிட்டால் என்ஞல் குளிர் தாங்கமுடியாது'' என்ருர். திருக்குறிப்புத் தொண்டர், ''இன்று மாலையே நான் கொடுத்துவிடுகிறேன்'' என்று சொல்லி, அடியாரின் கந்தலை வாங்கிக் குளக்கரைக்குச் சென்று சுத்தமாகத் தோய்த்தார். இதற்கிடையில் பெருமழை பெய்ய ஆரம்பித்து, விடாமல் நாள்முழுவதும் பெய்தது. தோய்த்த துணியைக் காயவிட இடமில்லை. மாலையாகி விட்டதும் நாயனுர் மனம் சஞ்சலப் பட்டது. சிவனடியாருக்குக் கொடுத்த வாக்கை எப்படி நிறைவேற்றுவது என்று வருத்தமடைந்து, ஒரு வழியும் தோன்ருமல், ''என் வாக்கைக் காப்பாற்ற முடியாத நான், இனி இவ்வுலகில் இருந்தென்ன ?'' என்று சொல்லிக்கொண்டு துணி தோய்க்கும் கல்லில் தம் தலையை முட்டி இறக்கத் துணிந்தார். கச்சி ஏகம்பன் காட்சி தந்து தடுத்து அவரை ஆசீர்வதித்தார்.

காஞ்சிபுரத்து விண்ணகரங்கள்

கே. வி. சௌந்தரராஜன்,
டைரக்டர், தொல்லியல் ஆய்வுத்துறை, புதுடில்லி.

''முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி தனில் அத்திகிரி அருளாளர்க்கு அடைக்கலம் நான் புகுந்தேனே'' என்று பாடியபடி நம் பரந்த பாரதத்தில் கச்சி நகர் எனப்படும் காஞ்சிபுரத்துக்குத் தனிச் சிறப்பு தொன்று தொட்டு இருந்து வருகிறது. நகரமைப்பில் இன்று அது மூன்று பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இம்மூன்றில் பெரிய காஞ்சி புரம் (அல்லது சிவகாஞ்சி) பல்லவர்களின் தலை நகராகத் திகழ்ந்த பகுதி. இங்கே தான் சடை முடியோன் கச்சி ஏகம்பனாக (இன்றைய ஏகாம் பரநாதராகக் குறிப்பிடப்படுவது) பிருத்விலிங்க வடிவில் பொலிகிறான். சின்னக் காஞ்சிபுரம் (அல்லது விஷ்ணு காஞ்சி) பண்டைய அத்தியூர் எனப்படும் நகரண்மை (Suburb) கிராமப் பகுதியாக விளங்கி, கரிவரதன் கருணைபொழி யும் களமாக இலங்குகிறது. ஹாட்ஸன்பேட் எனும் பரங்கியின் பெயர்கொண்ட இடைப் பகுதிதான் வெஃகா, அட்டபுயகரம், பரமேச் சுர விண்ணகரம், பாடகம் முதலிய திருக் கோயில்களை மையமாகக் கொண்ட நகர்ப்பகுதி யாக விளங்கியது. நகரின் தென்கிழக்குத் தலை வாயிலில் நுழைந்தவுடன் திருவெஃகாவில் பள்ளிகொண்ட பெருமானைக் காண்பதாகப் **பெரும்பாணாற்றுப்படை** சான்று பகர்கிறது.

காஞ்சிபுரத்து விண்ணகரங்களைப் பாடிப் பரவிய ஆழ்வார் பலர். இவர்களுள் முதலாழ் வார்களாகக் கருதிப் போற்றப்படுகிற பொய்கை, பூதம், பேய் என்பவருள் முதல்வர் பிறப்பு எடுத்த தலம் காஞ்சித் திருவெஃகா வாகும். மற்ற இருவரும் முறையே அத்திகிரி வரதன், பாடகம், அட்டபுயகரம், வேளுக்கை, ஊரகம், திருவெஃகா இவற்றைப் பற்றிப் பாசுரம் அருளியிருக்கிறார்கள். மேலும், திரு மங்கை, திருமழிசை, நம்மாழ்வார் முதலி யவர்கள் பாடிய திருப்பதிகள், அட்டபுயகரம், திருத்தண்கா, வேளுக்கை, பாடகம், நீரகம், நிலாத் திங்கள் துண்டம், ஊரகம், வெஃகா, காரகம், பவளவண்ணம், பரமேச்சுர விண்ண கரம் முதலியவை. இவற்றுள் சில இன்றைய சூழ்நிலையில் குறிப்பாக இலக்குக் காண்பிக்க இயலாத நிலையில் இருக்கின்றன. ஆயினும், அருமை பெருமைகளோடு இன்றும் சிறந்த முறையில் பூசனைகளில் விழாப்பொலிவுடன் கூடித் திகழும் திருக்கோயில்கள் அத்திகிரி, வெஃகா, பரமேச்சுர விண்ணகரம், பாடகம், அட்டபுயகரம் இவையாகும். கால நிலையில் இவை ஏறத்தாழ கி.பி. ஆறும் நூற்றுண்டின் இறுதிப் பகுதியிலிருந்து தொடங்கி கி. பி. பத்தாம் நூற்றுண்டின் இடைப்பகுதி வரை யாகக் கொள்ளத்தக்கவை. அத்திகிரியும், வெஃகாவும், அட்டபுயகரமும் ஆரம்ப காலத் தில் செங்கல்லும் சுதையும் கொண்டு எழுப்பப் பட்டு, பின்னர் கற்கோயில்களாக மாற்றப் பட்டன. பரமேச்சுர விண்ணகரம் பிற்காலப் பல்லவ மன்னனால் எழுப்பப்பட்ட மிகச் சிறந்த கற்கோயிலாகும். பாடகம் கல்லும் சுதையும் கொண்டு இன்று காணப்பட்டாலும் ஆரம்ப காலத்தில் செங்கல்லாலும் சுதையாலுமே கட்டப்பட்டிருக்கலாம் என்பதற்குத் தடை யங்கள் காணப்படுகின்றன.

சரித்திர முக்கியத்துவத்தில் தலைசிறந்து விளங்கும் இரு விண்ணகரங்கள் அத்திகிரியும், பரமேச்சுரவிண்ணகரமெனப்படும் வைகுண்டப் பெருமாள் கோயிலும் ஆகும். அத்திகிரிக்கு ஹஸ்திசைலம், கரிகிரி என்ற பெயர்களும் உண்டென்றாலும் அதனில் கோயில் கொண் டுள்ள கடவுள் ஆரம்பகாலத்திலிருந்து பிற் காலச் சோழர் ஆட்சிவரை அத்தியூராழ்வார் என்றே அழைக்கப்படுகிறார். முதலாழ்வார் களின் இயற்பாவிலும் அத்தியூரான் என்று குறிக்கப்படுகிறான். இக்கோயிலின் வளர்ச்சி யில் மிக முக்கியமான கட்டம் 13-ஆம் நூற் றுண்டில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. அப்போது தான் இக்கோயிலின் மரத்தாலாய மூலப்படிமம் பத்திரமாக அகற்றப்பட்டு, அதன் மாற்றாக கல் திருவுருவம் வரதனுக்கு மூலஸ்தானத்தில் அமைக்கப்பட்டது. மரத்தாலாய வரதனின் படிமம்தான் ''அத்திவரதன்'' என்று பேசப் பட்டு, கோயிலின் அனந்தசரஸ் புஷ்கரிணியுள்

நன்கு பத்திரப்படுத்தப்பட்டு, பல ஆண்டுகளுக்கு ஒரு தடவை தரிசனத்துக்காக வெளிக்கொணரப் படும் மரப்பதுமை வடிவில் நமக்குக் காட்சி தரும் கடவுள் உருவில் நாம் காண்கிறோம். இதைப் பற்றிய குறிப்பு இக்கோயிலில் ஆகம வழிபாட்டில் பாஞ்சராத்ர ஆகம சாஸ்திரத் தின் மூன்று ரத்தினங்களாகப் போற்றப்படும் பௌஷ்கர, சாத்வத, ஜயாக்யா என்னும் மூன்றில் இறுதியாகக் கூறப்பட்ட ஜயாக்யா சம்ஹிதையில் இடைச்செருகல் வடிவில் நாம் காண்கிறோம். இந்த ஜயாக்யா சம்ஹிதை வடநாட்டில் சுமார் கி. பி. 5-ஆம், 6-ஆம் நூற் றூண்டுகளில் இயற்றப்பட்ட சாத்திர நூலா கும். இது பாஞ்சராத்ர ஆகம விதி முறைகள் விரைவில் தென்னுட்டில் பரவியபோது முறைப் படி காஞ்சி அத்தியூராழ்வாரின் கோயிலிலும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு, பின்னர் இத்தலம் கட்டிடக்கலையம்சங்களிலும், தெய்வ சாந்நித்யத்திலும் சிறந்த வளர்ச்சியுற்ற நிலை யில், 13-ஆம் நூற்றுண்டில் இதற்குப் பாத்ம தந்திரம் என்ற நித்ய பூசனைக்கான வழிநூல் ஏற்பட்ட காலத்தில் முதல் நூலில் இக்கோயி லின் மாண்புகளைப்பற்றிய இடைச்செருகலாக புகுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த இடைச்செருகல் ஏறக்குறைய இன்று உள் கோபுரத்துக்குள் நாம் காணும் கோயிலின் வடிவை விரிவாக வர்ணிக்கிறது. கோயிலின் திருவிழாக்களைப் பற்றியும், முக்கியமாக வைகாசி மாதத்துக் கருடசேவை திருவிழாவில், பத்து நாட்களிலும் கொண்டாடப்படும் கடவுள் மூர்த்திகளும் வாகனங்களும் பேசப் படுகின்றன. இதன்மூலம், வட இந்திய தென் னிந்திய வைணவ, ஆகம விதிகளிலும், கோயில் கட்டுமானங்களிலும் காணப்படும் தொடர்பு களைச் சரித்திரபூர்வமாக நாம் அறிய முடி கிறது. **ஜகதி** என்னும் உயர்ந்த அடிமட்ட சதுக்கத்தின்மேல், மையத்தில் கோயில் எழுப் பப்படும் வட இந்தியக் கோயில் கட்டுமானப் பாணியின் உத்திகளையும் இங்கு நாம் கண்டு வியக்க முடிகிறது. இந்த அடித்தளம் விக்கிரமச் சோழன் காலத்துக்கு முற்பட்டிருக்க வேண்டு மென்று அவன் காலத்திய கல்வெட்டுகள் இதன் மேல் இருப்பதிலிருந்து நாம் அறிகிறோம். இதற் கும் முன்னரே, உள் கோபுரத்தின் அடித்தளத் திலிருக்கும் முதலாம் குலோத்துங்க சோழ னின் கல்வெட்டு மூலம், பிரதானக் கோயில் குலோத்துங்கனுக்கும் முன்னர் சிறந்த முறை யில் வழக்கத்திலிருந்ததைப் பறைசாற்றுகிறது.

உள்கோயிலின் கருவறையைச் சுற்றி நாம் இன்றும் கண்டும் காணமுடியாதபடி மறைந்து கிடக்கும் **உண்ணுழிச்சுற்றலை** மூலம் இதன் ஆரம்ப காலத்தில் கற்கோயில் நிலையின் குறிப்பு கள் நமக்குக் கிட்டுகின்றன. சதுர வடிவான கருவறையின் மேல் உண்ணுழியின் அகலத்தை யும் சேர்த்து நீண்ட சதுரமான நிலை ஏற்படுத்தி அதன் கூரையில் அதற்கேற்ப நீண்டசதுர **சாலைச் சிகரத்தை** எழுப்ப வேண்டிய நிர்ப் பந்தம், கருவறைக் கடவுள் ஒருவராக இருந்த நிலை மாறி இருதேவியருடன் மூவராகக் காட்சி தரும் நிலை ஏற்பட்டபோது விளைந்திருக்க வேண் டும் என்பதும் நன்கு விளங்குகிறது. கருவறைக் கடவுள் மேற்குநோக்கி வீற்றிருந்தும் கோயி லில் பிரதான தாயார் சந்நிதியான பெருந் தேவித் தாயார் கோயில் மூன்றும் பிரகாரத் தின் தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கி விஜயநகரப்பாணியில் இன்று நமக்குக் காட்சி தருவது பாஞ்சராத்திர ஆகமம் இங்கு வேரூன் றுவதற்கு முன்னரே இக்கோயில் தோன்றியிருப் பதையும், வைகானஸ ஆகம முறைப்படி ஸ்ரீ என்னும் லக்ஷ்மியின் பரிவாரக்கோயில் மூன்றும் ஆவரணத்தில் தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கி அமைக்கப்படவேண்டியதை குறிப்பிடு வதைப்போல அமைந்திருப்பதும் நமக்குத் தக்க கட்டிட உருவிலுள்ள சான்றுகள்மூலம் எடுத் துரைக்கிறது. இவற்றின் மூலம் இக்கோயில் மிகத் தொன்றுதொட்டு இத்தலைநகரின் அண்டைப் பகுதியில் விளங்கிவருவதை உணர்த் துகிறது. இக்கோயில் தமிழ்நாட்டின் கோயில் களில் சரித்திரத் தொன்மையிலும், தொடர்ச்சி யான சரித்திர, ஆகம, கோயில் கட்டுமான, சமய, கலை வளர்ச்சிகளிலும் ஒரு கலங்கரை விளக்கமாக இருந்து வந்திருக்கிறது.

இரண்டாவதான பரமேச்சுர விண்ணகரம் பல்லவர் கோயிற்கலையின் தலைசிறந்த படைப்பு களில் ஒன்றுகத் திகழ்கிறது. எட்டாம் நூற் றூண்டின் பிற்பகுதியின் ஆரம்பத்தில் கட்டப் பட்ட இக்கோயிலில் **திராவிட ஜாதி** பாணியில், எட்டுப்பட்டைச் சிகரத்துடனும், மூன்று தளங் களுடனும் கூடிய கட்டிட அமைப்புடன் ஒவ் வொரு தளத்திலும் ஒரு கருவறையைக் கொண் டும், அதைச்சுற்றி உண்ணுழிச்சுற்றைக் கொண் டும், சுவர்களுக்கு ஊடே செல்லும் தளங்களின் மாடிப்படிகளைக் கொண்டும், ஒவ்வொரு தளத் தின் முகப்பில் **ஹார வரிசை** களேனும் கைப் பிடிச்சுவருடனும் கூடிய சிறந்த மேடையைக்

கொண்டும் விளங்குவதன்மூலம், பல்லவ - சாளுக்கிய 'கலைப் பாணிகளின் ஒருமைப்பாட்டை பல்லவ மன்னர்கள் ஏற்கெனவே இங்கு விளைவித்ததைப் பறைசாற்றுகிறது. இதன் நிலப்பட அமைப்பும் மிகநேர்த்தியான கட்டுப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. கருவறை, **அர்த்தமண்டபம்,** இருபுறமும் அழகிய சிங்கத்தூண் வரிசைகளைக் கொண்ட '**மகா மண்டபம்** அதன் வெளியில் மேலும் இதேபோன்ற தூண்களால் விளிம்பில் அலங்கரிக்கப்பட்ட **திருமாளிகைச் சுற்று** இதைச் சுற்றி வெளிப்புறத்தில் பரந்த **பிராகாரச் சுற்று,** மேற்குப் பக்கத்தில் மட்டும் நுழைவாயிலாததால் **கோபுரம்** இவற்றுடன்கூடி விளங்குகிறது. மேற்கு நோக்கிய கோயிலாதலால் ஆகம விதிப்படி இதன் பண்டைய திருமடைப்பள்ளி தென்கிழக்கு மூலையில் இடிபாடுகளுடன் காணப்படுகின்றது. இக்கோயிலின் கலைஅம்சங்களில் மிகச் சிறந்தவை, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சிற்ப வரிசைகளின்மூலம் இக்கோயிலைக் கட்டிய மன்னன் அரசனைத் தேர்ந்தெடுக்கப்பட்ட தருணத்தில் பல்லவப் பேரரசின் இக்கட்டான நிலையும், இம்மன்னன் கடல்கடந்த கிழக்காசிய நாட்டிலிருந்த கிளை வம்சத்திலிருந்து காஞ்சி சிம்மாசனத்துக்கு வாரிசாக வரவழைக்கப்பட்டதும், 12 வயது நிரம்பிய பாலகனை இவ்விளவல் கடல், மலை, காடு இவற்றையும், எதிர்ப்புத் தெரிவிக்கும் சிற்றரசர், தலைவர்களின் தடுப்புகளையும் விலக்கிக்கொண்டு பல்லவப் பேரரசின் மணிமகுடத்தை அணிந்து, பிறகு 65 ஆண்டுகள் அமைதியுடனும் சிறப்புடனும் அரசாண்ட சரித்திரத்தை நிகழ்ச்சிக் கோவையாக, கற்சிற்பங்களின் மூலம் **திருமாளிகைச் சுற்றில்** கோயில் கட்டிய காலத்திலிருந்து தொடங்கி சுவர்களில் செதுக்கப்பட்டிருப்பதுதான். இவற்றில், மகுடத்தை ஏற்றதிலிருந்து தொடங்கும் இவன் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த சிற்ப வரிசைகள், கல்வெட்டுக் குறிப்புகளையும் கொண்டு விளங்குகின்றன. கருவறையின் வெளிச்சுவரில் மிகச் சிறந்த வைணவ சிற்பகோஷ்டங்களும், மாடச் சிற்பங்களும் தொடர்ந்து இடம் பெறுகின்றன. இப்படி தொடர்ச்சியாக சுவரில் பெரிய அளவில் சிற்பங்களை நாம் வியப்படையும் வகையில் செதுக்கி அமைப்பதும் மேலைச் சாளுக்கியக் கோயில்களில்தாம் மிகுதியாகக் காணலாம். ராஜசிம்மனுக்கு முந்திய காலத்தில் இது பல்லவர் கோயில்களில் அதிகப்படியாக வழக்கத்தில் இல்லை. ராஜசிம்மன் கோயில்களிலும், பிறகு முக்கியமாக நந்திவர்ம பல்லவ மன்னன் காலத்திலிருந்தும் இவை பல்லவர் கோயில்களில் காஞ்சியிலும் ஏனைய இடங்களிலும் பெரிதும் கையாளப்பட்டு வந்திருக்கின்றன. மூன்றுவது அம்சமானகருவறை மூர்த்தங்கள் மூன்றடுக்குத் தளவரிசையில் முறையே இருந்து, கிடந்த, நின்ற திருக்கோலங்களைக் காண்பிக்கின்றன. இத்தகைய வைணவ கோயில்கள், பாண்டிய நாட்டில், மதுரையிலுள்ள கூடலழகர் கோயிலிலும் திருக்கோஷ்டியூரிலிருக்கும் ஸௌம்ய நாராயணர் ஆலயத்திலும், மன்னார்குடியிலுள்ள திருமால் கோயிலிலும் நாம் காணலாம். மேலும், சோழர்காலத்தில் இவை, எண்ணாயிரத்திலுள்ள விஷ்ணு ஆலயத்திலும், சேரன்மாதேவி ராமர் கோயிலிலும் இருந்ததற்குச் சான்றுகள் அக்கோயில்களில் கிடைக்கின்றன. இவை தவிர அடித்தளக் கருவறையில் கடவுள் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் இரண்டு கால்களையும் கீழே தொங்கப்போட்டுக்கொண்டிருக்கும் பாணி முதன்முறையாகத் தென்னிந்தியாவில் எல்லோராவிலுள்ள புத்தர் குகைக் கோயில் ஒன்றில் புத்தர்பிரான் வீற்றிருக்கும் பாணியில் காணப்படுகிறது. மேலைச்சாளுக்கியரின் இந்தக் கலைப்படைப்புகளைத் தவிர, இத்தகைய நிலையைத் தமிழ்நாட்டில் பரமேச்சுர விண்ணகரத்தில் மட்டும்தான் நாம் காணமுடிகிறது. ஏனைய கோயில்களில் இது 'அர்த்த பர்யங்காசன' முறையில் ஒரு காலை மடக்கி மற்றொரு காலைத் தணித்த பாணியில்தான் காணக்கிடைக்கின்றது.

காஞ்சியிலுள்ள விண்ணகரங்களின் எழிலையும் பலதரப்பட்ட சிற்ப, கட்டிட, கட்டுமானக் கலைகளின் அமைப்புகளையும் அவற்றின் சரித்திரப் பரிணாமங்களையும் விரிவாக ஆராய இச்சிறிய கட்டுரையின்மூலம் இயலாது. ஆயினும், சைவத்துக்கும் வைணவத்துக்கும் தன்னேரில்லாத கலைப்பாலமாகக் காஞ்சி மாநகரம் தொன்றுதொட்டு, விளங்கி வந்திருப்பதும், இங்குள்ள திருக்கோயில்கள் எண்ணில்டங்காதவை என்பதும், இவற்றில் சில உலகப்புகழ் பெற்றவை என்பதும் வெள்ளிடைமலை.

ஸ்ரீ காஞ்சி க்ஷேத்ரமும் திருக்கச்சி ஏகம்பரும்.

இ. க. ஏகாம்பரக் குருக்கள்

தலத்தின் பெயர்	:	காஞ்சிபுரம்
ஸ்வாமி பெயர்	:	ஸ்ரீ ஏகாம்பரநாதர்
அம்பிகையின் பெயர்	:	ஸ்ரீ காமாக்ஷி
தீர்த்தங்கள்.	:	1. சிவகங்கை
		2. கம்பாநதி
		3. சர்வ தீர்த்தம்
ஸ்தலவ்ருக்ஷம்	:	மாமரம்.

காஞ்சி க்ஷேத்ரமானது தொண்டைநாட்டு க்ஷேத்ரங்களில் தலைசிறந்ததும், சமயாசார்யாள் நால்வர்களாலும், இன்னும் பல அடியார்களாலும் பாடப்பெற்றதும், அறுபத்துமூன்று நாயன்மார்களில் திருக்குறிப்புத் தொண்ட நாயனுர், சாக்கியநாயனுர், ஐயடிகள் காடவர்கோன் நாயனுர், ஆக இவர்கள் முக்தியடைந்ததும் ஆகும். மேலும் இந்நகரம் பிரஸித்திபெற்ற பல்லவர்களுடைய அரசாட்சிக்காலத்தில் ஒப்பற்ற தலைநகரமாக விளங்கியதாயும், திருநாவுக்கரசு ஸ்வாமிகளால் ''கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர்'' என்று வியந்தோதப்பெற்றதும், காளிதாஸரால் ''நகரேஷு காஞ்சி'' என்று புகழப் பெற்றதும் ஏழு முக்தி க்ஷேத்ரங்களில் ஒன்றுகவும் இருந்து வருகிற க்ஷேத்ரமாகும்.

முன்னர் தற்புருஷகற்பம் முடிந்து அகோர கற்பத்துப் பிரமன் ஒருவன் உலகை ஸ்ருஷ்டி செய்து வருங்காலத்தில் பண்டாசுரன் என்னும் ஒரு அசுரன் பிரமனிடம் பெற்ற வரத்தின் மகிமையால் சுராசுரர் முதலாக அண்டசராசரங்களில் உள்ள யாவற்று ஜீவராசிகளின் உடம்புள் கலந்து அவர்களுடைய வீர்யமெல்லாம் உணவாக உண்டு வாழ்ந்திருந்ததனுல் உயிர்களெல்லாம் பொலிவிழந்து மேல் விளைவின்றிக் குறைந்தன.

பிறகு பிரமன் முதல் ஸமஸ்த தேவர்களும் ஸர்வேஸ்வரனிடம் சென்று இத்துன்பத்தைப் போக்கியருளும்படி பிரார்த்திக்கும்போது தேவர்களை நோக்கி, ''உயிரிற் கலந்திருக்கின்ற அக்கள்வனை ஸம்ஹரிக்க வேண்டுமாயின் நீங்களனைவர்களும் காஞ்சியில் செந்தழல் வடிவாயிருக்கும் சிவலிங்கத்தினிடத்திற் சென்று யாக உணவாயிருங்கள்'' என்று ஆக்ஞாபித்து உமாதேவியாருடன் காஞ்சியில் ஜ்யோதிர்லிங்கமாக எழுந்தருளி, எவ்விடத்தும் அழல்வீச நின்று தனது வலப்பக்கத்தில் தனது விரல் நகத்தால் குண்டமொன்றுண்டாக்கி அக்குண்டத்தில் வாமதேவமூர்த்தியை நெய் வடிவாக நிறைந்திருக்கச் செய்து தத்வங்களைத் தர்ப்பையாகவும், முக்குணங்களை ஸமித்தாகவும், யாகமும் யாகப் பொருள்களும், யாகம் செய்பவனும் யாகத்தை ஏற்பவனும், யாகத்தின் பயனும் தானே என்று கூறும் வாக்யத்தை விளக்கி உலகமுய்ய உமாதேவியாருடன் யாகத்துக்குரிய தீக்ஷையையுடையவராய் வீற்றிருந்து பிரமன் முதல் தருக்கள் ஈருக அண்டங்களிலுள்ள எல்லா உயிர்களையும் ஸம்ஸ்காரம் செய்து யாகத்திலிட்டு காலாக்னிருத்ரர் முதலிய ருத்ரகணங்களைத் தன்னுள்ளொடுக்கிப் பின் பண்டாஸுரனையும் யாகத்திலிட்டனர்.

யாகாக்னியில் ஒடுங்கிய எண்ணிறந்த உயிர்களெல்லாம் ஸுஷுப்தி அவஸ்தையில் இன்புற்றிருக்கும் தன்மை போல் இன்புற்றிருந்தன. அந்த யாகாக்னி இலிங்காகாரமாய் ''ஸ்மசானேஸ்வரர்'' (திருக்கச்சிமயானம்) எனப் பெயர் பெற்று விளங்கிற்று.

இறைவன் மேற்கூறிய யாகத்தை முடித்த பின் யாகத்திற்கமைத்திருந்த நெய்க்குண்டத்தை ''சிவகங்கை'' என்னும் பெயரால் விளங்கச் செய்து அத்தீர்த்தத்தில் அவபிருதஸ்நாநம் செய்தனர்.

பின்பு பண்டாஸுரன் நீங்கலாக ஏனைய அண்ட சராசரங்கள் அனைத்தையும் மீளவும் ஸ்ருஷ்டி செய்யக் கருதி அனுதியாகிய வேதங்களைப் பார்த்து திருக்கச்சி மயானத்தின் மேற்

றிசையில் ஒப்பற்ற மாமரமாக விளங்கும்படி ஆக்ஞாபிக்க, அங்ஙனமே அநாதித்யமாகிய வேதங்களானதுகள் மாமரமாக ஓங்கி நின்றன. இறைவன் ஜ்யோதிர்லிங்க வடிவாய்த் தோன்றி தனது இடப்பாகத்தில் இலளிதா தேவியைத் தோன்றச்செய்து, தேவியை நோக்கி, ''பண்டாஸுரனை ஸம்ஹரிக்கும் நிமித்தம் யாம் செய்த யாகத்தில் மறைந்திருக்கின்ற சராசரங்களை யெல்லாம் முன்போல் ஸ்ருஷ்டிக்கக் கடவாய்'' என்ற மாத்திரத்தில் உயிர்களனைத்தையும் முறையாய் ஸ்ருஷ்டிக்கத் தொடங்கிப் படைப்பு முதலிய முத்தொழிலும் விளங்க வலம், இடம், நடு என்னும் தன்னுடைய முக்கண்களில் நின்றும் பிரமன், விஷ்ணு, ருத்ரர்களையும், தனது முகமண்டலம் முதல் பாத கமலங்கள் ஈறாக உள்ள தன்னுடைய அவயவங்கள் நின்று சராசரங்களின் உயிர்களனைத்தையும் முறைப் படி ஸ்ருஷ்டித்து, மாந்தரு நிழலிற்கீழ் வஸிக்கின்ற இறைவனை வணங்கி நின்ற தேவியை எடுத்து, இறைவன் தனது மடித்தலத்தின் மேல் அமர்த்தி மாமரத்தின்கீழ் இரத்தின ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருந்தார். எல்லா உயிர்களும் துன்பம் நீங்கி வளர்ந்தோங்கின.

பிரமன் முதலிய மூவரும் இலளிதா தேவி யிடத்து வந்த அளவிலே உறங்கி விழித்தவர்கள் போல முன்னறிவு தோன்றப் பெற்று உமா மஹேஸ்வரரை நமஸ்கரித்து ஸ்தோத்தரித்த னர். அப்படி ஸ்தோத்தரிக்கின்ற திரிமூர்த்தி களைப் பார்த்து, ''நீங்கள் விரும்பியதென்ன'' எனக்கேட்டருள இறைவனைநோக்கி, மும்மூர்த்தி களும், ''ககார, அகார, மகார வாச்யர்களாகிய நாங்கள் கச்சிமயானத்திலிறக்க எங்களைக் கண் களில் ஈன்ற இவ்வன்னைக்கு ''காமாக்ஷி'' எனப் பெயர் வழங்க வேண்டும் என்றும், எங்களை ஸ்ருஷ்டித்த ஸ்ரீகாமாக்ஷியும் ஸ்ருஷ்டிக்கச் செய்த தாங்களும் இந்த சூத வ்ருக்ஷத்தடியில் எந்நாளும் யாவருங்காண இலளிதையுடன் வீற்றிருக்கும் இத்திருக்கோலத்தோடு என்றும் மாறாதிருக்க வேண்டும் என்றும், மாவடியில் தாங்கள் ஜ்யோதிர் லிங்க வடிவாயிருப்பது ஞானிகளே அறிவார். ஏனையோர் அறியார். ஆதலால், மாவின் மூலத்தில் ஒளிமயமாய்த் தோன்றும் இந்த ஜ்யோதிர் லிங்கத்தின் பெருமையையும் அனுக்ரஹஞ் செய்ய வேண்டும்'' என்றும் ப்ரார்த்தித்தனர்.

மும்மூர்த்திகள் வேண்டிய அப்படியேஆகுக எனத் திருவாய் மலர்ந்தருளி ஜ்யோதிர்லிங்கத்தின் பெருமையைக் கூறலானார், ருத்ரன் ஒருவனே பிரமம். வேறொன்றைப் பிரமம் என்ப தில்லை என்று கூறியதை விளக்கவே வேதம் ஒரு மாவிருக்ஷமாகவும் வேதத்திற் கூறும் பிரமம் ஒரு இலிங்க வடிவாகவும் விளங்குவது. சொல் வடிவாகவும், வ்ருக்ஷ வடிவாகவும் இருக்கின்ற வேதத்திற்கு யாமே நாதன் என்றறியுங்கள். எனவே, எமது நாமத்தை ''ஏகாம்பரநாதன்'' என்று கூறுவர். இந்நாமமே பஞ்சாக்ஷரமாகும். இதுவே பஞ்ச ப்ரம்ஹ மந்த்ரத்தினும் பஞ்சாக்ஷரத்தினும் மேலான மந்த்ரமாகும். வேத வாக்யங்களில் சிறந்தது காயத்ரி மந்த்ரம்; அதனினும் சிறந்தது ஹம்ஸ மந்த்ரம்; அதனினும் சிறந்தது துவாதசாக்ஷரமாகிய வாசுதேவ மந்த்ரம்; அதனினும் சிறந்தது அஷ்டாக்ஷர மந்த்ரம். அதனினும் சிறந்தது ஸ்ரீபஞ்சாக்ஷர மந்த்ரம்; அதனினும் சிறந்தது ஏகாம்பரநாதன் என்கிற நாமமாகும். ஏகாம்பரநாதன் என்று ஒருரு உச்சரிப்பராயின் பாதகங்களெல்லாம் தொலையும்; புருஷார்த்தங்களையும் கொடுக்கும். இதனை மறந்தேனுங் கூறுவராயின் எமக்கு மிகவும் இனியவராவர். இம்மரத்தின் பெருமையை யறிந்து உச்சரிப்போர்க்குப் பேரின்ப வீட்டைக் கொடுப்போம். இந்த மாவிருக்ஷத்தை மேலே மூலமும் கீழ்நோக்கிய சாகைகளுமாக உணர்ந்தவன் முக்தியடைவன். இந்த மாமரத்தின் மேல் பதினான்கு கலைகளும் மல்லிகைக் கொடி யாகப் படர்ந்திருக்கும். அக்கலைகட்கிறைவி யாகிய ஸ்ரீகாமாக்ஷி அம் மல்லிகைக் கொடியை விரும்பி யிருப்பாள். ஊழிக்காலத்தும் அழி யாத இந்த மாவிருக்ஷத்தை யாம் விரும்பி யிருப்போம் என்று இறைவன் கூற, மும்மூர்த்தி களும் நமஸ்கரித்து கம்பாநதி ஒன்று இவ்விடத் தில் உள்ளதின் காரணத்தைக் கூறவேண்டினர். வேதம் நமக்கு அஷ்டமூர்த்திகளாக அமைந் திருப்பனவென்றும், அவற்றில் ஒன்று ஜலம். அந்த ஜலம் உலகத்தைச் சுத்தமாக்கும் வடிவத் தோடு கூடியது. இந்த ஜலம் உயிர்களெல்லாம் பிழைக்க ஒரு நதிவடிவாக இங்குச் செல்கின்றது. இது யாவர் கண்ணுக்கும் தோன்றாது. சிவ யோகியருள்ளத்து மறைந்து வஸிக்கும் எம்மைப் போல, இந்நதியும் பூமியில் கரந்து செல்கின் றது. ''கம்பா'' என்னும் பதத்தில் ''பா'' என்னும் சொல்லுக்குப் பொருள் பரிசுத்தம், உண்ணுதல், காத்தல் என்பன. ''கம்'' என்னும் சொல்லுக்கு ஜலம் எனப் பொருள். ஆகவே நீர்மயமாகிய கங்கை முதலிய தீர்த்தங்

களெல்லாம் தம்மிடத்தில் மூழ்குவோர்க்குப் பாவத்தைப்போக்கித் தூய்மை செய்தல்போல, அத்தீர்த்தங்கள் தம்மைப் புனிதமாக்கிக்கொள்வதற்கு இந்நதியில் மூழ்குகின்றன.

''கம்'' என்பது தலைக்கு ஒரு பெயராகையால் தலையில் ப்ரோக்ஷித்துக் கொண்டால். பரிசுத்தம் செய்யும் எனவும், ''கம்'' என்பது உயிர்க்கு ஒரு பெயராகையால் உண்டவர்களுடைய உயிரைக் காக்கும் எனவும், ''கம்'' என்பது முக்திக்கு ஒரு பெயராகையால் ஸ்நாநம் செய்தவர்க்கு மோக்ஷ சுகத்தை யனுபவிக்கச் செய்யும் எனவும், இக்காரணங்களால் இந் நதி ''கம்பா நதி'' எனப் பெயர் பெற்றது. இக்கம்பையில் படிந்துவரும் காற்றானது தவழுமிடத்தில் புல், மரங்கள் போன்றவைகளும் பேரின்ப முக்தியடையும் என்றருளியதைக் கேட்டானந்தித்த மும்மூர்த்திகளும் இறைவனைப் பணிந்து, இனி யாங்கள் செய்ய வேண்டியதை ஆக்ஞாபிக்குமாறு வேண்ட நீங்கள் மூவரும் நம்பால் பொருந்திய பக்தியால் விதிப்படி அர்ச்சித்து அப்புண்யத்தால் மூன்றுலகங்களையும் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் (படைத்தல், காத்தல், அழித்தல்) செய்யும் தொழிலைச் செய்யுங்கள் என்றும், உமாதேவியைப் பார்த்து ''இப்போது நீயடைந்த பேரன்பினுல் எம்மை எந்நாளும் பூஜித்து வருவாயாக'' என்றும் கூறினர். அப்பரமேட்டியின் சொல்லை இலளிதாதேவியும், மும்மூர்த்திகளும் அன்புடன் கேட்டு ஆனந்தக் கடலில் மூழ்கி உமாகாந்தனைப் பூஜிக்கத்தொடங்கி, ஸ்ரீகாமாக்ஷிதேவி மாமூலத்தில் தோன்றும் ஜ்யோதிர் லிங்கத்தையும் ஜ்யோதிர்லிங்கத்திற்குச் சமீபமாகத் தென்பால் பிரமாவும், வடபால் விஷ்ணுவும், முன்னல் ருத்ரனும் சிவலிங்கங்களை ஸ்தாபித்துப் பூஜை செய்தனர்.

தேவியானவள் ஸ்தோத்திரஞ் செய்து, ''இறைவனே! தாங்கள் எந்நாளும் இந்த மாவினடியில் எழுந்தருளியிருப்பவராயினும் யோகிகளுக்கன்றி ஏனையோர்களுக்குத் தோன்றுகிறதில்லை. ஆகையால் இனி இவ்விடத்தில் யாவருக்கும் காட்சி தந்தருளவேண்டும்'' என்று ப்ரார்த்தித்தனள். இறைவன் இறைவியை நோக்கி, ''நம்மிருவருக்கும் ஸ்வரூபம் ஆகாசம். அவ்வாகாசம் பூதாகாசமன்று; ஞானகாசமாகும். அந்த ஞானகாசவடிவம் நீ. அந்த வடிவத்தையுடையவன் நான். நம்மிருவருக்கும் வடிவாயிருக்கின்ற இந்தப் பிலாகாசத்தில் ஜ்யோதிர் லிங்கத்தில் உன்னேடு மிக்க அன்பினுல் வஸிப்போம். உன்னேடு நாம் பிலத்தினிடத்தும் இலிங்கத்தினிடத்தும் வஸித்திருந்தும் ஒருவருங் கண்டதில்லை. எம்மை யாவருக்கும் காட்சி வழங்குவாயென்று நீ வேண்டியபடியினுல் நம்மை தர்சித்து மேன்மையடைய யாவரும் போற்றக் கடவர். நம்மை யிங்குக் காண்பதுபோல், உன்னையும் இப்பிலத்தில் யாவரும் காணக்கடவர்'' என்றருளினர்.

பின்னர் ஓர் கற்பத்தில் ஸ்ரீசுப்ரமண்யரால் தாருகன் முதலான அஸுரர்களை ஸம்ஹரித்த பின் இறைவனும் உமாதேவியும் மந்தர பர்வதத்தில் அமைந்துள்ள அந்தப்புரத்தில் புஷ்பமஞ்சத்தின்மேல் வீற்றிருந்து உலகெலாம் உய்யும்வண்ணம் இன்புற்று எழுந்தருளியிருக்கும் ஸமயம் பிராட்டியார் தன்னுள்ளத்திலெழுந்த அன்பின் மிகுதியால் இறைவனுடைய திருக்கண்களைப் பின்புறமாகச் சென்று தன் திருக்கரத்தினுல் மூடினமாத்திரத்தில் தேவர்கள் முதல் யாவரும் தத்தம் இடங்களில் ஒன்றுந் தோன்றாது வருந்தி இருள்வசப்பட்டு, 'அந்தோ' என்று பெருங்குரலிட, அவ்வொலியைக் கேட்ட உமாதேவியார் திருக்கரத்தை எடுக்க இறைவன் தனது கண்களைத் திறந்தருளினர். இறைவனின் திருக்கண்கள் மூடித் திறந்தது சிறுபொழுதாயினும் உலகங்களுக்கு எண்ணிறந்த காலமாய் ஸ்ருஷ்டியாதி தொழில்களனைத்தும் தடைப்பட்டு விட்டன. இறைவன் தேவியைப் பார்த்து, 'எமது கண்களை மூடியமையால் அண்ட சராசரங்களெல்லாம் தத்தம் தொழில்கள் நடைபெருமல் பாபம் வளர்ந்தது. அந்தப் பாபம் உன்பாலது. அதற்கு நீயே பரிகாரம் தேட வேண்டும். ஆகையால் பிராயச் சித்தம் செய்வதற்கு மூன்று லோகங்களிலும் கர்மபூமியாகிய பூலோகத்தில், கிழ்த்திசைக் கடலுக்கும் மேற்றிசைக் கடலுக்கும் சேதுவுக்கும், ஹிமாசலத்திற்கும் இடையேயுள்ளது பரத கண்டமாம். அதில் நமக்கினிய தளிகள் பல கோடி உள்ளன. அதிற்சிறந்தன 1008 ஆகும். அதிலும் சிறந்தது 108 ஆகும். அதிலும் சிறந்தது 68 ஆகும். அதிலும் காசி, காஞ்சி இவைகளிரண்டும் சிறந்தது. அதிலும் நமக்கினிமையாய் இருப்பது காஞ்சியாகும். அங்குச் சென்று உன்னையடைந்த பாபத்திற்கு ப்ராயச்சித்தமாகவும், உலகுய்யுமாறும் பூஜித்துவரக் கடவாய்'' என்றருள, உமாதேவியானவர் மாவடியின் கண்

வீற்றிருக்கும் எம்பெருமானை அர்ச்சிக்கும் விருப்பத்தோடு, எம்பெருமானே, ''நான் உம்மைப் பிரியும் துன்பம் நீங்குமாறு காஞ்சியில் விரைவில் காட்சி தந்தருளவேண்டும்'' என்று ப்ரார்த்தித்தவாறு வெளிவந்து இறைவனருளாணையால் சிவகணங்கள் கொண்டு வந்த ஜ்யோதிர்மயமாய் விளங்கும் விமானத்தின் மேல் தனது பாங்கியரோடு ஏறி இலக்ஷ்மி, சரஸ்வதி, இந்திராணி சப்தமாதர்கள் முதலானவர்களுடன் ஆகாசமார்க்கமாக வரும்போது, பூவுலகிற் க்ஷேத்ரங்களைக் காணுந்தோறும் விமானத்தினின்று இறங்கி ஆங்காங்கு சிவலிங்கமூர்த்தியைப் பூஜித்து வந்துகொண்டிருக்கும்போது, பதரிகாச்ரமத்தில் இறைவனுலருளப்பட்ட யோக தண்டம், அக்ஷமாலை, தீபம், குடம், விசிறி, சாமரம், வித்யாபீடம், புஸ்தகம், புலித்தோல், வறுத்த பயறு, கங்கா நதியின் மணல், கங்கா தீர்த்தம், குடை ஆகப் பதின்மூன்று வஸ்துக்களையும் பெற்றுக்கொண்டு, காசி க்ஷேத்ரத்தை வந்தடைந்து அங்குப் பூஜித்து சிலகாலம் தங்கி அங்குள்ள துவாதசவருஷ க்ஷாமத்தை நிவர்த்தி செய்து புறப்பட்டுக் ககனமார்க்கமாக சூர்யன் துலாராசியையும், சந்திரன் பூர்வ பங்குனி நக்ஷத்ரத்தையும் (பூர நக்ஷத்ரம்) அடைந்திருக்க அஷ்டமியுடன் கூடிய மங்களகரமான ஸோம வாரத்தில் தொண்டை நாட்டிலுள்ள ஸ்ரீகாஞ்சிபுரத்தை வந்தடைந்து அங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ ஏகாம்பரநாதரைப் பூஜிக்க கங்கணமும், கடகமும் அணிந்து பிலாகாசத்தை அடைந்து அதனருகிலுள்ள உலகாணித் தீர்த்தக் கரையின்கண் தங்கி தவஞ் செய்யக் கருதி உலகுய்யுமாறு அங்கு அறச்சாலையையமைத்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தனள். அது ஸமயம் இறைவனுல் பதரிகாச்சிரமத்தில் அளிக்கப்பட்டவைகளான பதின்மூன்று வஸ்துக்கள் யாவும் முறையே, திரிசூலம், வில்வமாலை, அக்னிரூபம், ஸோமசூத்ரம் கிளி, இரண்டு யுவதிப் பெண்கள், ஊசி, பசு, ஸோமவிருத்தம், முளைத்த பயறு, இலிங்கம், பால், நாகாபரணம் இவைகளாக மாறி அம்பிகையின் பூஜைக்கும் தபஸ்ஸுக்கும் உபயோகப்படும் வகையில் ஸித்தமாயின.

பிறகு கம்பா நதிக்கரையின்கண் செழுமையோடு படர்ந்திருக்கும் சூத விருக்ஷ நிழலில் விளங்கும் ஸ்ரீ ஏகாம்பரநாதரைப் பூஜிக்கக் கருதி காஞ்சிமாநகரை ப்ரதக்ஷிணமாக வரும்போது தன்னுடன் இருக்கும் இலக்ஷ்மி, சரஸ்வதி, இமையவர் மகளிர்கள், காளிகள், சாஸ்தாக்ஷ யோகினிகள், ஸப்தமாதர்கள் ஆகிய இவர்களை அவரவர்களுக்குரிய இடங்கள்தோறும் காவலாக நிறுத்திப் பின்னர் மாநிழலின்கண் எழுந்தருளியிருக்கின்ற திருவேகம்பத்தை வந்தடைந்தனள்.

விளையாட்டாற் கண்ணை மூடினதாலுண்டான வினையொழிய ஆகம விதிப்படி பூஜிக்க வேண்டி தேவையான உபகரணங்களைப் பாங்கிமார்கள் மூலம் சேகரித்து விதிமுறையுடன் நீராடி இரண்டாடையுடுத்து விபூதி, ருத்ராக்ஷம் தரித்து, அனுஷ்டானம் முடித்து பிராகாரத்தினுட் சென்று விநாயகர், சுப்ரமண்யர் இவர்களைப் பூஜித்து நந்தி தேவரையும் துவார பூஜையையும் முடித்து உட்சென்று, இறைவன் முன் ஸ்ருஷ்டியாதி தொழில் வழுக்கும் வண்ணம் செய்த பாபத்தால் விளைந்த பாபத் தீமைகள் அகல, இந்நாள் உம் பூசனையைக் கைக்கொண்டேன் என்று சங்கற்பித்துக்கொண்டு, பூதசுத்தி அந்தர்யாகம், ஸ்தான சுத்தி, திரவ்ய சுத்தி, மந்த்ர சுத்தி முதலியன செய்து, இலிங்கத்தின் சிரஸ்ஸில் முன்னுள்ள மலரை மாற்றி இலிங்க சுத்தி செய்து சக்தியாதி சக்தி பர்யந்தம் அர்ச்சித்து சிவாஸநம் கற்பித்து மூர்த்தியை தியானித்து ஆவாஹனம் முதலானவைகளைச் செய்து பாதம், முகம், சிரஸ் இவைகளில் பாத்யாசமநார்க்யங்களைக் கொடுத்து மது பர்க்கம் ஊட்டி அபிஷேகத்திற்கு உகந்த திரவியங்களை ஸ்ரீருத்ரம், சமகம், முதலானவைகளையும், ஸம்ஹிதா மந்த்ரம் - வ்யோம வ்யாபிமந்த்ரம் இவைகளையும் ஓதி - ஸஹஸ்ரதாரை கோச்ருங்கம், ஸ்நபனம் என்பவைகளாலும் அபிஷேகம் முடித்து, திருமேனி ஒற்றி, பட்டாடை, முப்புரி நூல், சந்தனம், ஆபரணங்கள், புஷ்ப மாலைகள், ஆகியவைகளால் அலங்கரித்து, பூஜித்து, தூபதீபங் கொடுத்து நிவேதனஞ்செய்து ஆசமனர்க்யங்கள் கொடுத்து தாம்பூலமளித்து ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து பஞ்சாக்ஷர ஜபம் ஸமர்ப்பித்து சிவ அர்ச்சனையை முடித்துப் பிலத்தருகடைந்து முப்பத்திரண்டு தர்மங்களையும் வளர்த்து, இப்பிரகாரம் பூஜித்து வரும் நாளில் ஒரு தினம் வழக்கப்படி கம்பா நதியில் ஸ்நானம் செய்து நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்து பூஜை செய்யும்போது இறைவன் தேவிக்கு அவரது பக்தி நோக்கித் திருவருள் புரியத் திருவுளங்கொண்டு, அண்டங்களின் உள்ளும் புறமும்

உள்ள தீர்த்தங்கள் எல்லாம் இக்காஞ்சியில் வரும்படி நினைக்கவும், அத்தீர்த்தங்கள் எல்லாம் கம்பாநதியில் கலந்து யாவரும் கண்டஞ்சக் கம்பாநதி பெருக்கெடுத்து, மலைபடு பொருளெல்லாம் வாரிக்கொண்டுஆகாச முகட்டையளாவிப் பொங்கி வருகின்ற வெள்ளத்தைப் பார்வதியார் கண்டு அச்சமுற்றுத் துன்பமடைந்து நோக்கி மனங்கலங்கி, ''அந்தோ! இந்த வெள்ளம் இனி நாயகர் மேல் வரும். நாம் செய்யத்தக்கது யாதோ அறிகிலேன்'' என்றன்பாலெழுந்த உள்ளத்துடன் திருமேனியதிரவும் நெற்றியில் வியர்வை யரும்பவும், மார்பினில், முத்துவடமசையவும், மேகலாபரணம் இடையில் ஒலிக்க, கிங்கிணி, நூபுரங்கள் அடிகளில் ஒலிக்க கடகங்களும், வளையல்களும் கைகளில் ஒலிக்க, பொன் மலைச் சிகரத்தை ஒரு பூங்கொடியெழுந்திரண்டு கொழுந்துகளை இருபக்கத்தினும் போக்கித் தழுவிக்கொண்டாற்போல ஜ்யோதிஸ்வரூபராகிய திருவேகம்பப் பெருமானைக் கருமணி போன்ற பார்வதியானவள் பிண்டிகையின் மேல் தனது வலது முழந்தாளையூன்றிக்கொண்டு தனது திருக்கரங்களால் தழுவிக்கொண்டனள். தேவியார் முலைக் குவட்டாலும், வளைக்கையாலும் நாயகரை இறுகக்கட்டி ஆசைமீதுறத் தழுவ இறைவர் தமதுருவில் அத்தழும்புகளைக் கொண்டனர். ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவியாரது சுவடழுந்தப்பெற்று களி சிறந்திருக்க உயிர்களெல்லாம் சுகமடைந்தின்புற்றிருந்தன. வேதங்கள் கோஷித்தன. பூமழை பொழிந்தது. உலகெலாம் மங்கலம் பெற்றோங்கின.

இவ்வாறு மங்கலம் நிகழ்கின்ற காலத்தில் சுராசுரர்கள், ரிஷிகள், முனிவர்கள், பூதர், உருத்திரர், கணநாதியர், நந்திதேவர் யாவரும் தத்தம் பரிவாரங்களுடன் வந்துகூடி தழுவக் குழைந்த திருக்கோலத்தை யாவருங் கண்டுய்ந்தனர்.

ஜ்யோதிர்லிங்கத்தினின்றும் தேவியினுடைய முலைத்தழும்பும், வளைத்தழும்பும் பெற்ற திருவுருவுடன் வெளிப்பட்டு கம்பையின் பெருக்கையடக்கி அதனைச் ''சர்வதீர்த்தம்'' என உலகில் வழங்கச்செய்து, தேவியைநோக்கி, ''நாயகியே, நீ மனங்கலங்கற்க. நமது மணவாளக் கோலத்தையுனக்குக் காட்டுகின்றோம். நீ காண்பாய்''எனக் கூறத், தேவியும் இறைவனைத் தழுவிய கரத்தை நீக்கி நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்தனள்.

இறைவன் தேவியை நோக்கி, 'காளியே! நீ உலகம் உய்யும் வகையாக யாமருளிய ப்ராயச்சித்தத்தை மறவாமற் செய்தனையாதலின் நீ வேண்டியவற்றைக் கேட்பாய்' என்றருள, தேவியானவள், 'இக்காஞ்சியில் வாழ்கின்ற யாவருக்கும் பேரின்பமுண்டாகச் செய்ய வேண்டும் என்றும், காளீ என்றழைத்தமையால் காளி நிறத்தை நீக்கி, கௌரநிறம் பெறவருள் செய்ய வேண்டும். இமயமலையில் உண்டான கல்யாணம் போல் இக்காஞ்சி நகரத்திலும் நடக்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன்' என்றனள். 'நீ கேட்டவைகளில் சிவத்துரோகம் நீங்க ஏனையவெல்லாம் நீ கேட்டவண்ணமே திருவுள்ளம் செய்தோம்' என்றருளி, தேவியின் கருப்பு நிறத்தை மாற்றிப் பொன் நிறத்தைக் கொடுத்தும், 'தேவியே! நாமும் முன்னம் அகஸ்திய முனிவர்க்கு காஞ்சியில் வருஷந்தோறும் பங்குனி உத்திரத்தில் நமக்குக் கல்யாணம் நடக்கும். அதனை நீ மனமகிழ்ந்து காண்பாயென அருளிச் செய்திருக்கின்றோம். ஆதலால் நீ வாழ்கின்ற பிலத்தயலில் நீ விரும்பியவாறே நடக்கும்' என்றருளினர். அன்றியும், 'நீ செய்யும் தர்மத்தை வளர்க்க இரு நாழி நெல் தருகின்றோம். அதனால் உயிராகிய பயிர்கள் தழைத்தோங்குக' என்றும் அனுக்ரஹஞ் செய்தருளினர்.

பின்னர், தேவியின் கருத்து முற்றுப்பெறவும் அகஸ்திய முனிவரின் தவப்பேறு நிறையவும் உலகம் வாழவும் திருமணக்கோலம் கொள்வதற்குரிய தொழிலில் திருவுளம் வைத்துத் திருவேகம்பப்பெருமான், விஷ்ணுவை நோக்கிக் காமாக்ஷிக்கும் நமக்கும் விவாஹ மஹோத்ஸவத்தை நடத்தக் கடவாய் என்றருளிய மாத்திரத்தில் மஹாவிஷ்ணுவானவர் பெருமானுக்கும் பெருமாட்டிக்கும் கல்யாண மஹோத்ஸவம் என்று நகரிலுள்ள யாவருமறிய பேரிகை முழக்குவித்து தேவ கம்மியரால் கல்யாண மண்டபங்கள் முதலானவற்றை நிர்மாணித்துப் பிரமன் முதலானவர்களுடன் நல்ல வேளையில் அங்குரார்ப்பணஞ் செய்து வ்ருஷபக் கொடியேற்றி மஹோத்ஸவத்தைத் தொடங்கினர்.

த்வஜாரோஹணம் முதல் ஒன்பது நாள் உத்ஸவம் முடிந்தபின் பத்தாம் நாள் யாவர்க்கும் பேரின்பமுண்டாகத் திருமணக்கோலம் கொள்ள இறைவனார் மஞ்சனசாலைக்கு எழுந்தருளியதும், திருமாலானவர் எம்பெருமானைத்

திருமஞ்சனமாட்டி அலங்கரித்தும், தன் நாயகியாகிய இலக்ஷ்மியால் காமாக்ஷியை அலங்கரித்து அழைத்துவரச் செய்தும் விஷ்ணுவானவர்தேவியுடன் இறைவனுக்கு மதுபர்க்கம் கொடுத்து ஸ்ரீ ஏகாம்பரநாதரின் கரத்தில் ஸ்ரீ காமாக்ஷியின் கரத்தை வைத்து நீர்வார்த்துத் தத்தஞ் செய்தனர். இறைவனுர் பிரமனே நோக்கி விதிப்படி ஹோமஞ் செய்யக் கட்டளையிட்டு இறைவியின் கண்டத்தில் திருமங்கலநாண் அணிவித்து விதிப்படி விவாஹ மஹோத்ஸவத்தைப் பூர்த்தி செய்தனர்.

இதனுல் அகஸ்தியரும், பார்வதியும், எண்ணியவை முற்றுப்பெற்றன. திருமணத்தைக் கண்டவர்கள் எல்லாம் ஆனந்தக்கண்ணீர் சொரிந்து இன்புற்றிருந்தனர். பிறகு, வ்ருஷபத்தின் மேல் தேவியுடன் எழுந்தருளி வீதியுலாப் போந்து மீண்டும் ஆலயத்துட்சென்று காமாக்ஷி ஸமேதராய் இரத்ன ஸிம்ஹாஸநத்தின்மேல் எழுந்தருளியிருந்து பிரம விஷ்ணுக்கள் முதலாக யாவர்களுக்கும் வேண்டிய வரங்களை யீந்து அனுக்ரஹஞ் செய்தருளினுர்.

ஏனைய விடங்களில் எல்லாம் திருமணம் முடிந்தவுடன் கயிலைக்கு எழுந்தருளி விடுவது போல் அல்லாமல், மீண்டும் ஆலயத்திற்கேவந்து தங்கி இன்றைக்கும் அனுக்ரஹித்துவரும் எம் பெருமாணுகிய ஸ்ரீகாமாக்ஷீ ஸமேத ஸ்ரீஏகாம்பரநாதப் பெருமானின் கிருபாகடாக்ஷத்திற்கு நாம் அனைவர்களும் பாத்திரர்களாவோமாக.

திருக்கச்சி ஏகம்பத் திருப்பதிகப் பாடல்கள்

(மூலமும் பொழிப்புரையும்)
"ஞானத்தமிழாகரர்—புலவர் ஏறு"
ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

சம்பந்தர்

பண் - மேகராகக் குறிஞ்சி

வெந்தவெண் பொடிப்பூசும் மார்பின்
விரிநூ லொருபால் பொருந்தக்
கந்தம்மல்கு குழலியோடுங்
கடி பொழிற்கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தாரவர் போற்ற
அணங்கினொடு ஆடல்புரி
எந்தை மேவிய ஏகம்பம் தொழுதேத்த
இடர் கெடுமே.

வெந்த வெண்பொடியாகிய திருநீற்றைப் பூசிய மார்பில், ஒரு பக்கத்தில் பூணூல் பொருந்தியிருக்க, மணம் பொருந்திய கூந்தலை யுடைய காமாட்சியம்மையுடன், சிறந்த சோலைகள் சூழ்ந்த கச்சி என்னும் காஞ்சி புரத்தில், அளவில்லாத பெருமையினையும் நற்பண்புகளையும் உடைய அடியார்கள் போற்றும்படி, காளிதேவியுடன் நடனம் புரிந்த எந்தையாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவேகம்பம் என்னும் கோயிலைத் தொழுது வணங்கினால், நம்முடைய துன்பங்கள் அனைத்தும் நீங்கும்.

[கந்தம் - வாசனை, குழலி - கூந்தலையுடையவள், கடிபொழில் - சிறந்த சோலை, அணங்கு - பெண் தெய்வம், காளிதேவி; இடர்-துன்பம்]

சாகம்பொன் வரையாகத் தானவர்
மும்மதில் சாயவென்று
ஆகம்பெண் ஒருபாகம் ஆக
அரவொடு நூல் அணிந்து
மாகம்தோய் மணிமாட மாமதிற்
கச்சிமா நகருள்
ஏகம்பத்து உறைஈசன் சேவடி
ஏத்த இடர் கெடுமே.

பொன்மலையாகிய மேருமலையை வில்லாகக் கொண்டு, அசுரர்களின் மூன்று மதில்களும் அழியும்படி, தன் புன்முறுவலாகிய அம்பை எய்து, தன் திருமேனியின் ஒரு பாகத்தில் உமையம்மை இடங்கொள்ள, பாம்புகளையும் பூணூலையும் அணிந்து கொண்டு, வானளாவி ஓங்கி உயர்ந்த மாட மாளிகைகளையும், பெரிய மதில்களையும் உடைய காஞ்சிபுரம் என்னும் பெரிய நகரத்தில் உள்ள, திருவேகம்பம் என்னும் திருக்கோயிலில் உறைகின்ற ஈசனாகிய சிவபெருமானின், சிவந்த தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கினால், நம்முடைய துன்பங்கள் அனைத்தும் நீங்கும்.

[சாகம் - வில், பொன்வரை - மேருமலை, தானவர் - அசுரர், ஆகம் - திருமேனி, அரவு - பாம்பு, நூல் - பூணூல், மாகம் - ஆகாயம்.]

ஏரினார் பொழில் சூழ்ந்த கச்சி
ஏகம்பம் மேயவனைக்
காரினார் மணிமாடம் ஓங்கி கழுமல
நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன்
பரவிய பத்தும் வல்லார்
சீரினார் புகழ் ஓங்கி விண்ணவரோடும்
சேர்பவரே.

அழகு மிகுந்த சோலைகள் சூழ்ந்த திருக்கச்சியேகம்பம் என்னும் கோயிலில் எழுந்தருளி விளங்கும் சிவபெருமானை, மேகங்கள் வந்து தங்குகின்ற அழகிய மாட மாளிகைகள் நிறைந்து ஓங்கியுள்ள, கழுமலம் என்னும் சீர்காழி நகரத்தின்கண் தோன்றிய, தமிழ்ஞான சம்பந்தன் ஆகிய யான் துதித்துப் பாடிய, உலகத்தார் புகழ்கின்ற பாடல்கள் பத்தையும் கற்று ஓத வல்லவர்கள், இம்மையில் இவ்வுலகில் சிறப்பு மிகுந்த புகழ் ஓங்கி, மறுமையில் விண்

ணுலகத்திலுள்ள தேவர்களுடன் சென்று சேர்ந்து, இன்புற்று வாழ்வார்கள்.

[ஏர் - அழகு, பொழில் - சோலை, கார்-மேகங்கள், கழுமலம் - சீர்காழி, பாரினர்-உலகத்தவர்கள், பரவிய - துதித்த, சீர்-சிறப்பு, விண்ணவர் - தேவர்கள்.]

(பண்-இந்தளம்)

மறையானை மாசிலாப் புன்சடை
மல்கு வெண்
பிறையானைப் பெண்ணொடு ஆணாகிய
பெம்மானை
இறையானை ஏர்கொள் கச்சித்
திருவேகம்பத்து
உறைவானை அல்லது உள்காது
என் துள்ளமே.

வேதங்களை அருளிச் செய்தவனே! குற்ற மற்ற புற்கென்ற, சடையின்கண் பொருந்திய வெண்பிறையை உடையவனே! பெண்ணுருவும் ஆணுருவும் ஒருங்கேயுள்ள பெருமானே! எங்கும் பரவி எல்லாவற்றிலும் நிறைந்துள்ள இறையாக இருப்பவனே! கச்சித் திருவேகம்பம் என்னும் திருக்கோயிலில் வாழ்கின்ற சிவ பெருமானே! உன்னை யல்லாமல், எனது உள்ளம் வேறு எதனையும் நினையாது.

[மறை - வேதம், மாசு - குற்றம், பிறை - சந்திரன், பெம்மான் - பெருமான், இறை - கடவுள், உறைவான் - வாழ்பவன், உள்காது - நினைக்காது.]

விண்ணுளார் மறைகள் வேதம்
விரித்தோதுவார்
கண்ணுளார் கழலின் வெல்வார்
கரிகாலனை
நண்ணுவார் எழில்கொள் கச்சி
நகர் ஏகம்பத்து
அண்ணலார் ஆடுகின்ற
அலங்காரம்மே.

ஞான ஆகாசம் என்னும் பரவெளியாகிய விண்ணுலகத்தில் இருப்பவரும், நுண்பொருள்கள் பலவற்றையுடைய வேதங்களை விரித்து ஓதியவரும், அடியார்களைக் காத்தருளும் கண்ணுடைவரும், கூற்றுவனைத் தம் குரை கழலால் உதைத்து வென்றவரும், கரிகால் சோழனுக்கு அருள் செய்தற்கு எழுந்தருளியு வரும், அழகுமிகுந்த காஞ்சி மாநகரத்தில் உள்ள திருவேகம்பம் என்னும் கோயிலில் எழுந்தருளி விளங்கும் அண்ணலாருமாகிய சிவ பெருமான், நடனம் ஆடுகின்ற காட்சி மிக அழகு வாய்ந்ததாகும்.

[விண் - ஆகாசம், அஃது இங்கு ஞான ஆகாசம் என்னும் பரவெளியைக் குறித்தது. மறைகள் - நுண்பொருள்கள், அண்ணலார் - சிவபெருமான், அலங்காரம் - அழகு.]

அந்தண் பூங்கச்சி ஏகம்பனை
அம்மானைக்
கந்தண் பூங்காழி யூரன்
கலிக்கோவையால்
சந்தமே பாட வல்ல தமிழ்ஞான சம்
பந்தன் சொற்பாடி ஆடக் கெடும்
பாவமே.

அழகிய குளிர்ந்த பூஞ்சோலைகளையுடைய திருக்கச்சியிலுள்ள ஏகாம்பரநாதனை, உலகம் அறிந்த பெருமை உடையவனை, மணம்நிறைந்த பூஞ்சோலைகள் நிறைந்த சீர்காழியில் தோன்றியவனும், கலிக்கோவை என்னும் செய்யுள் யாப்பினால் சந்தம்நிறைந்த செந்தமிழ்ப்பாடல்களைப் பாடவல்ல தமிழ்ஞான சம்பந்தனும் ஆகிய என்னுடைய பாடல்களைப் பாடியும் ஆடியும் துதித்து வணங்கினால், எல்லாப் பாவங்களும் நீங்கும்.

பாயும்மால் விடைமே லொரு பாகனே
பாவை தன்னுரு மேலொரு பாகனே
தூய வானவர் வேதத்துவனியே
சோதிமால் எரிவேதத் துவனியே
ஆயும்நன் பொருள்நுண் பொருளாதியே
ஆல நீழ லரும்பொருளாதியே
காயவில் மதன் பட்டது கம்பமே
கண்ணுதற் பரமற் கிடங் கம்பமே.

பாய்ந்து செல்லுகின்ற பெரிய எருதின் மீது ஒரு பாகனைப்போல ஊர்ந்து செல்பவனே! தன் திருமேனியில் பாவையாகிய உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டவனே! தூய தேவர்கள் போற்றுகின்ற வேதத்தின் ஒலியாக விளங்குபவனே! சோதியாகிய பெரிய நெருப்பு வடிவமாக விளங்குபவன் நீயே! ஆராய்கின்ற நல்ல

பொருள்களில் நுண்பொருளாக நீ விளங்குகின்றாய். ஆலமர நிழலின்கண் எழுந்தருள்கின்ற, ஆதி அரும் பொருள் ஆகிய தட்சிணா மூர்த்தியாக நீ திகழ்கின்றாய். கரும்பை வில்லாகக் கொண்ட மன்மதன் நெற்றிக் கண் பார்வையால் பட்டது நடுக்கமாகும். இத்தகைய கண்ணுதலாகிய சிவபெருமானுக்கு இடம் திருவேகம்பம் என்னும் திருக்கோயிலாகும்.

[பாகன் - செலுத்துபவன், பாகத்திற் கொண்டவன். பாவை - உமா தேவியார். வேதத் துவனி - வேதத்தின் ஒலி, வேதத்து வ(ன்)னி - வேதத்தாற் போற்றப்படும்நெருப்பு. வன்னி - நெருப்பு, துவனி, தொனி - ஒலி. ஆதி - முதல்வன், ஆகின்றாய். கம்பம் - நடுக்கம், அழிவு, (ஏ)கம்பம் - திருவேகம்பம் என்னும் கோயில்.]

திருநாவுக்கரசர்

கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனல் ஏந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

வஞ்சகம் பொருந்திய கொடிய நெஞ்சம் உடையவர்களுக்கு எட்டாதவனே! வஞ்சகம் இல்லாத உண்மை அன்புடைய அடியவர்கள் பால், அருளுடன் கலந்து விளையாடுகின்ற பெருமானே! வெள்விடை ஏறுகின்ற ஞான சொரூபனாகிய வித்தகனே! அரவங்கள் ஆடவும், சடைகள் தாழவும், உள்ளங் கையில் நெருப்பை ஏந்திக்கொண்டு, நள்ளிரவில் திரு நடனம் செய்கின்றவனாகிய கச்சித் திருவேகம்பப் பெருமானே! யான் உன்னை என் மனத்தில் இடையறாது வைத்துத் தொழுது வணங்குகின்றேன்.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை,
அப்போடு மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி,
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

கையாகிய மலர்களால் பல்வேறு நறு மலர்களைத் தூவி, மிகவும் விருப்பங் கொண்டு, தேவர்கள் காலை நண்பகல் மாலை என்னும் மூன்று பொழுதுகளிலும், தங்கள் தலைவணங்கித் தொழுது பணியும்படி விளங்குகின்ற முதல்வனும், அன்புடையவர்களுக்கு எல்லாக் காலங்களிலும் இனிமையாக விளங்குபவனும், ஆகிய கச்சித் திருவேகம்பப் பெருமானே! நீருடன் மலர்களைத் தூவியும், ஐம்புலன்களையும் உள்ளே அடக்கி வைத்தும், யான் உன்னை என்னுடைய மனத்திலே இடையறாது வைத்துத் தொழுது வணங்குகின்றேன்.

அடுத்து ஆனை உரித்தானை, அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூர்அம்பு
தொடுத்தானைப், புரம்எரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை, என் மனத்தே வைத்தேனே.

யானை வடிவாகிய கஜமுகாசுரன் என்பவனை அடுத்துச் சென்று, அவனது தோலை உரித்து அழித்தவனும், பாண்டவர்களில் ஒருவனாகிய அருச்சுனனுக்குப் பாசுபதம் என்னும் படையைக் கொடுத்தருளியவனும், பெரிய மேரு மலையை வில்லாகக் கொண்டு, கூர்மையான அம்பு தொடுத்து முப்புரங்களை எரியச் செய்தவனும், சுனைகள் நிறைந்த கயிலாய மலையை எடுக்க முயன்ற இராவணனைத் தடுத்து, அவனைத் தன் கால் விரலால் நசுக்கிச் செருக்கை அழித்தவனும் ஆகிய, கச்சித் திருவேகம்பப்பெருமானை, யான் என் உள்ளத்தில் இடையறாது வைத்துத் தொழுது வணங்குகின்றேன்.

ஒருமுழம் உள்ள குட்டம், ஒன்பது துறை உடைத்தாய்,
அரைமுழம் அதன் அகலம் ; அதனில்வாழ் முதலை ஐந்து ;
பெருமுழை வாய்தல் பற்றிக் கிடந்து நான் பிதற்றுகின்றேன் ;
கருமுகில் தவழும் மாடக் கச்சிஏகம்பனீரே,

மனித உடம்பானது ஒருமுழம் அளவுள்ள ஒரு சிறு குட்டையாகும். இதன்கண் ஒன்பது துளைகளாகிய ஒன்பது துறைகள் இருக்கின்றன. இக்குட்டையின் அகலம் அரைமுழம் ஆகும். அக்குட்டையில் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து முதலைகள் வாழுகின்றன. அம் முதலைகளின் பெரிய குகைபோன்ற வாயினுல் பற்றப்பட்டு வருந்திக் கிடந்து, நான் ஏதேதோ பிதற்றுகின்றேன். கருமையான மேகங்கள் தவழ்கின்ற மாட மாளிகைகளை உடைய, கச்சி என்னும் காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதராகிய பெருமானே! நீர்தாம் என்னைக் காத்தருளுதல் வேண்டும்.

துருத்தியார் ; பழனத் துள்ளார் ;
தொண்டர்கள் பலரும் ஏத்த
அருத்தியால் அன்பு செய்வார்,
அவரவர்க்கு அருள்கள் செய்தே ;
எருத்தினை இசைய ஏறி, ஏகம்பம்
மேவி னுர்க்கு
வருத்திநின்று அடிமை செய்வார்,
வல்வினை மாயும் அன்றே.

திருத்துருத்தி என்னும் தலத்தில் உள்ளவரும், திருப்பழனம் என்னும் தலத்தில் விளங்குகின்றவரும், அடியார்கள் பலரும் வணங்க, விருப்பத்தோடு அன்பு செய்பவர்களுக்கெல்லாம் அவரவர்களுக்கு ஏற்றபடி அருள்களைப் புரிந்து, திருநந்திதேவராகிய எருதின் மீது பொருந்தும்படி ஏறி அமர்ந்து, காஞ்சியிலுள்ள திருவேகம்பம் என்னும் கோயிலில் எழுந்தருளி இருப்பவரும், ஆகிய திருவேகம்பநாதர்க்கு, தம் உடலை வருத்தி உறுதியான அன்புடன் நிலைத்துத் திருத்தொண்டு செய்பவர்களின் கொடிய பாவங்கள் அனைத்தும், அப்பொழுதே மாய்ந்தொழியும்.

ஓதுவித்தாய் முன் அறவுரை காட்டி ;
அமணரொடே
காதுவித்தாய் ; கட்டநோய்
பிணிதீர்த்தாய் ; கலந்தருளிப்
போதுவித்தாய் ; நின்பணி பிழைக்கிற்
புளியம்வளாரால்
மோதுவிப்பாய் ; உகப்பாய் ; முனிவாய்;
கச்சி ஏகம்பனே !

திருக்கச்சியிலுள்ள திருவேகம்பப் பெருமானே ! நீ முன்பு என்னை அறவுரைகள் காட்டி, பல கலைநூல்களையும் ஓதியுணரும்படி செய்வித்தாய் ; சமணர்களுடன் சேர்ந்திருந்த யான், பின்னர் அவர்களிடமிருந்து பிரியும்படி செய்தருளினுய் ; எனக்கு ஏற்பட்ட கொடிய துன்பம் மிக்க சூலை நோயைத் தீர்த்துக் காப்பாற்றினுய்; என்னேடு உடன் கலந்தருளி, என்னை உன்னுடைய அருள்நெறியில் செல்லும்படி செய்வித்தாய் ; நின்னுடைய திருத்தொண்டில் யான் யாதேனும் பிழை செய்ய நேர்ந்தால், புளியம் வளாரால் தாக்கி மோதுவித்து என்னைத் தண்டிப்பாய் ! என்னிடத்தில்உகப்புச் செய்வாய் ; சீற்றத்தையும் காட்டுவாய் ! உன்னுடைய அறக் கருணையையும், மறக் கருணையையும் யான் என்னென்பேன் !

கருவுற்ற நாள்முதலாக, உன்பாதமே
காண்பதற்கு
உருகிற்று என்உள்ளமும் ; நானும்கிடந்து
அலந்து எய்த்தொழிந்தேன் ;
திருவொற்றி யூரா, திருவாலவாயா,
திருவாரூரா,
ஒருபற்று இலாமையும் கண்டுஇரங்காய்,
கச்சி ஏகம்பனே !

கச்சி ஏகம்பனே ! யான் என்று இவ்வுலகில் பிறப்பதற்கு, ஒரு தாயின் கருவில் உற்றேனே, அந்தக் காலம் முதலாக, உன்னுடைய திருவடிகளையே கண்டு தொழுவதற்கு, என் உள்ளமும் பெரிதும் உருக்கம் கொண்டது ; நானும் கிடந்து வருந்தி, நின்னைத் தரிசிப்பதற்காகப் பலவகைகளில் முயன்று, இளைப்புற்றுக் களைத்தேன் ; திருவொற்றியூரிலுள்ள படம்பக்க நாதனே ! திருவாலவாய் என்னும் மதுரைக் கோயிலில் உள்ள சொக்கநாதப் பெருமானே ! திருவாரூரிலுள்ள தியாகேசப் பெருமானே ! எனக்கு உன்னைத் தவிர ஒரு பற்றும் துணையும் இல்லை. என்னுடைய துணையில்லாத நிலையைக் கண்டு, இரக்கம் கொண்டு, நீ என்னைக் காப்பாற்றி யருள்க.

குறுந்தொகை

பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டும் கண்டும், களித்திகாண்
நெஞ்சமே!
வண்டு உலாம் மலர்ச் செஞ்சடை
ஏகம்பன்
தொண்ட னுய்த்திரி யாய்துயர் தீரவே

நெஞ்சமே ! முற்பிறவிகளில் செய்த நம்முடைய பழைய தீவினைகளின் பயன்களாகிய துக்கங்களை, நாம் மகுதியாக அனுபவித்தலை, நீ பலகாலும் கண்டு உணர்ந்திருக்கின்றாய். அங்ஙனம் உணர்ந்திருக்கவும் இவ்வுலகியல் நுகர்ச்சிகளிலேயே மீண்டும் மீண்டும் சென்று மயங்கிக் கெட்டொழிகின்றாய். இனியேனும் வண்டுகள் மொய்த்து உலாவுகின்ற மலர்களை அணிந்த சிவந்த சடையினை உடைய திருவேகம்பப் பெருமானின் அன்புமிக்க தொண்டனாக நீ மாறுவாயாக. அதுதான் உன் துயரங்கள் தீருவதற்குரிய சிறந்த வழியாகும். [பண்டு-முற்காலத்தில், களித்தி - மயங்குகின்றாய், உலாம் - உலாவுகின்ற, திரிதல் - மாறுதல், எங்கும் உலாவுதல்.]

நச்சி நாளும் நயந்து அடியார்தொழ
இச்சை யால்உமை நங்கை வழிபடக்
கொச்சை யார்குறு கார் செறி
தீம்பொழிற்
கச்சி ஏகம்பமே கை தொழுமினே.

நாள்தோறும் விரும்பி, ஆர்வங்கொண்டு அன்புடன் வந்து அடியார்கள் தொழவும், மிகுந்த விருப்பத்தினால் உமாதேவியார் பணிந்து வழிபடவும், இழிந்த குணங்களை உடைய தீயவர்கள் வந்து அணுகாத சிறப்பை உடைய, அடர்ந்த இனிய சோலைகளை உடைய கச்சி ஏகம்பத்திலுள்ள பெருமானை, நீங்கள் கைகூப்பித் தொழுது வணங்குவீர்களாக.

மூக்கு வாய் செவி கண் உடல் ஆகிவந்து,
ஆக்கும் ஐவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்
நோக்குவான் ; நமை நோய்வினை
வாராமே
காக்கும் நாயகன் கச்சி ஏகம்பனே !

மூக்கு வாய் செவி கண் உடல் என்னும் ஐம்பொறிகளாகிய, கொடியவர்கள் ஐவர், நமக்குப் பலவகையான தீங்குகளைச் செய்து வருகின்றார்கள். அத்தகைய கொடியவர்களின் கட்டில் இருந்து, நம்மை அவிழ்த்து விடுவித்து அருள் செய்து, நம்மைக் கடைக்கணித்தருள் பவனும், நமக்குத் தீவினைகளால் ஏற்படுகின்ற கொடிய நோய்கள் வராமல், காத்து அருள் புரியும் தலைவனும், ஏகம்பன் என்னும் காஞ்சிபுரத்திலுள்ள திருவேகம்பநாதப் பெருமானே யாவான். [ஆக்கும் - துன்பங்களை உண்டாக்கும், ஐவர் - ஐம்பொறிகளின், ஆப்பு, யாப்பு கட்டு.]

பண்ணில் ஓசை, பழத்தினில் இன்சுவை
பெண்ணொடு ஆணென்று பேசற்கு
அரியவன்,
வண்ணம் இல்லி, வடிவு வேறாயவன்
கண்ணின் உள்மணி கச்சி ஏகம்பனே !

காஞ்சிபுரத்திலுள்ள திருவேகம்பநாதப் பெருமான், பண்ணில் ஓசையாகவும், பழத்தில் இனிய சுவையாகவும் விளங்குகின்றான். பெண்ணுருவம் உடையவனா அல்லது ஆண் உருவம் உடையவனா என்று ஆராய்ந்து கூறி நம்மால் விளக்க இயலாதவன், அவன் ! அவன் தனக்கென்று ஒரு நிறமும், குணமும் இல்லாதவன். அன்பர்களின் பொருட்டு, அவர்கள் விரும்பி நினைக்கும் வெவ்வேறான வடிவங்களைக் கொள்பவன். நமக்கெல்லாம் கண்ணின் உள்ளேயுள்ள பாவையாகிய கண்மணியைப் போல விளங்கி, நமக்கு எல்லாவற்றையும் கண்டும் காட்டியும் உதவி புரிந்து வருபவன், அந்தத் திருவேகம்பநாதப் பெருமானே யாவன். [வண்ணம் - நிறம், இல்லி - இல்லாதவன்.]

இலங்கை வேந்தன் இராவணன் சென்று
தன்
விலங்கலை எடுக்க, விரல் ஊன்றலும்
கலங்கிக் கச்சி ஏகம்பவோ என்றலும்
நலங்கொள் செலவுஅளித் தான், எங்கள்
நாதனே !

இலங்கை வேந்தனாகிய இராவணன், மிகுந்த செருக்குடன் சென்று, இறைவனுடைய கயிலாய மலையைப் பெயர்த்து எடுக்க முயற்சி செய்ய, அவ்வளவில் அவன்மீது தம்முடைய மெல்லிய திருவடியின் விரல் ஒன்றினால் ஒரு சிறிது ஊன்றிய உடனே, அவன் மிகவும் மனம் நடுங்கி, கச்சி ஏகம்பனே என்று அபயக் குரல் இட்டுக் கூவிக் கதறினான். அங்ஙனம் அவ்விராவணன் கதறிய அளவில், நீ நலமாகச் செல்க என்று, அவனுக்கு இரக்கங்காட்டி விடை கொடுத்து அனுப்பியருளினான், எங்கள் தலைவன் ஆகிய திருவேகம்பப் பெருமான். [வேந்தன் - அரசன், விலங்கல் - மலை, கயிலாயம், செலவு - போய் வருக என்னும் விடை. நாதன் - தலைவன்.]

பூமே லானும், பூமகள் கேள்வனும்
நாமே தேவர் எனுமை நடுக்குறத்
தீமே வும்உரு வா, திரு ஏகம்பா,
ஆமோ ? அல்லற் படஅடி யோங்களே !

தாமரை மலரிலுள்ள பிரமதேவனும், தாமரை மலரிலுள்ள திருமகளின் கணவராகிய திருமாலும், நாமே தேவர் என்று சொல்லிச் செருக்குக் கொண்டு தமக்குள் போரிடாமல், அவர்கள் நடுக்கம் எய்தும்படி, மிக்பெரிய நெருப்பு மலையின் வடிவங்கொண்டு தோன்றிய திருவுருவம் உடையவனே ! திருவேகம்பநாதப் பெருமானே ! நின் அடியவர்களாகிய நாங்கள், அல்லல்படுதல் தகுமோ ? எங்கள் துயரங்களை நீக்கிக் காத்தருளுதல் நின் கடமையே யாகும். [எனுமை - என்று சொல்லாமல். தீ - நெருப்பு. ஆமோ - தகுமோ ? அல்லல் - துன்பம். அடி யோங்கள் - அடியவர்களாகிய நாங்கள்.]

பொறிப் புலன்களைப் போக்கறுத்து,
உள்ளத்தை
நெறிப் படுத்து, நினைந்தவர் சிந்தையுள்,
அறிப்பு றும்அமு தாயவன் ஏகம்பம்
குறிப்பி னுற்சென்று கூடித் தொழுதுமே·

பொறி புலன்களின் தீய செயல்களாகிய குற்றங்களை நீக்கி, மனத்தை நல்வழியிற் செலுத்தி, அன்புடன் தன்னை நினைத்துத் தியானிப்பவர்களின் மனத்தினுள்ளே, ஊற்றெடுத்துப் பெருகுகின்ற அமுதமாக விளங்குபவனாகிய சிவபெருமானின், திருவேகம்பம் என்னும் திருக்கோயிலை நாம் ஈடேறி உய்தல் வேண்டும் என்ற கருத்தோடு சென்று கூட்டமாகக் கூடி வணங்கிப் பணிந்து உய்வோமாக. [போக்கு - குற்றம். அறிப்புறும் - ஊறுகின்ற.]

ஆலும் மாமயிற் சாயல்நல் லாரொடும்
சால நீஉறும் மால்தவிர், நெஞ்சமே !
நீல மாமிடற்று அண்ணல் ஏகம்பனார்
கோல மாமலர்ப் பாதமே, கும்பிடே.

மனமே ! அழகிய நடனம் புரிகின்ற,சிறந்த மயில் போலும் சாயலை உடைய பெண்களிடம், நீ கொள்ளுகின்ற மிகப்பெரிய மயக்கத்தை நெஞ்சமே நீ விட்டு விடுவாயாக ; நீலநிறம் பொருந்திய கண்டத்தை உடைய பெருமானாகிய, திருவேகம்ப நாதனின் அழகிய சிறந்த மலர் போன்ற பாதங்களையே கும்பிட்டு, நீ உய்தி பெறுவாயாக ! [ஆலும் - நடனம் ஆடுகின்ற. சாயல் - அழகு. மால் - மயக்கம், ஆசை தவிர் - விட்டுவிடு. மிடறு - கழுத்து, கோலம் - அழகு.]

பொய் அனைத்தையும் விட்டவர்
புந்தியுள்
மெய்யனைச், சுடர் வெண்மழு ஏந்திய
கையனைக், கச்சி ஏகம்பம் மேவிய
ஐயனை, தொழுவார்க்கு இல்லை
அல்லலே :

பொய்கள் எல்லாவற்றையும் விட்ட, பெரியவர்களின் மனத்தினுள்ளே விளங்குகின்ற, மெய்ப்பொருளாக உள்ளவனும், ஒளி வீசுகின்ற வெண்மையான மழுவாயுதத்தினை ஏந்திய கையை உடையவனும், கச்சி ஏகம்பம் மேவிய ஐயனும் ஆகிய, திருவேகம்பநாதப் பெருமானைத் தொழுது வணங்கும் அடியவர்களுக்கு, எப்போதும் எவ்விடத்தும் ஒரு சிறிதும் துன்பம் இல்லையாகும்.

[அனைத்தையும் - எல்லாவற்றையும், புந்தி - மனம், சுடர்-ஒளி, ஐயன் - தலைவன், கடவுள்.]

திருத்தாண்டகம்

கூற்றுவன்காண், கூற்றுவனைக் குமைத்த
கோன்காண்,
குவலயங்காண், குவலயத்தின் நீர்
ஆனான் காண்,
காற்றவன்காண், கனல் அவன் காண்,
கலிக்கும் மின்காண்,
கனபவளச் செம்மேனி கலந்த வெள்ளை
நீற்றவன் காண், நிலாவூரும் சென்னி
யான் காண்,
நிறையார்ந்த புனற்கங்கை நிமிர்
சடை மேல்
ஏற்றவன் காண், எழிலாரும் பொழிலார்
கச்சி
ஏகம்பன்காண், அவன்என் எண்ணத்
தானே.

எழில் மிகுந்த பொழில்கள் நிறைந்த காஞ்சிபுரத்திலுள்ள திருவேகம்பநாதப்பெருமான், கூற்றுவனாகவும், கூற்றுவனைக் குமைத்த கோனாகவும், உலகமாகவும், உலகத்திற்கு இன்றியமையாத நீராகவும், காற்றாகவும்,

நெருப்பாகவும்; இடித்து ஆரவாரம் செய்கின்ற மின்னலாகவும், பவளம் போன்று சிவந்த தன் திருமேனியில் வெள்ளைத் திருநீற்றை அணிந்தவனாகவும், நிலா ஊர்கின்ற சடைமுடியை உடையவனாகவும், நிறைந்து பெருகி வருகின்ற கங்கை வெள்ளத்தை நிமிர்ந்து ஓங்கிய தனது சடையில் ஏற்றருளியவனும் ஆக விளங்குகின்றான். அத்தகைய பெருமான், என் உள்ளத்தில் இடையறாது எப்பொழுதும் எழுந்தருளி நிலைபெற்று வருகின்றான். [எழில் - அழகு, பொழில் - சோலை. ஆரும் - நிறைந்த. கூற்றுவன் - எமன். குமைத்த - கொன்ற, கோன் - தலைவன், கனல்-நெருப்பு, கலிக்கும் - ஒலிக்கின்ற.]

முந்தைகாண், மூவரினும் முதல்
ஆனான்காண்,
மூவிலைவேல் மூர்த்திகாண், முருக
வேட்குத்
தந்தைகாண், தண்கடமா முகத்தி
னாற்குத்
தாதைகாண், தாழ்ந்து அடியே வணங்கு
வார்க்குச்
சிந்தைகாண், சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண், செங்கண்மால்
விடை ஒன்று ஏறும்
எந்தைகாண், எழில்ஆரும் பொழில்ஆர்
கச்சி
ஏகம்பன் காண், அவன்என் எண்ணத்
தானே.

எழில் மிகுந்த பொழில்கள் நிறைந்த காஞ்சிபுரத்தில் உள்ள, திருவேகம்பநாதப் பெருமான், எல்லோருக்கும் மிக மிக முற்பட்டவன். பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மூவருக்கும் மேலான முதல்வனாக விளங்குபவன். மூவிலை வேலாகிய திரிசூலத்தை ஏந்தியுள்ள மூர்த்தியாகத் திகழ்பவன். முருகப்பெருமானுக்கும், யானைமுகத்தையுடைய விநாயகருக்கும், தந்தையாக விளங்குபவன். தன் திருவடிகளில் தாழ்ந்து பணிந்து வணங்குபவர்களுக்கு, அவர்கள் மனத்தில் நினைத்தவற்றையெல்லாம் விரைந்து அளித்து அருள் புரிபவன். நிலைதிரியாத உறுதியான உள்ளம் உடையவர்களுக்கு எல்லா நலங்களையும், இன்பங்களையும் கொடுப்பவன். சிவந்த கண்களை உடைய திருமாலாகிய ஒப்பற்ற எருதின்மீது ஏறித் திருவுலா வரும் எம் தந்தையாக விளங்குபவன். அத்தகைய திருவேகம்பப் பெருமான் இடையறாது எப்பொழுதும் என் நெஞ்சத்தில் எழுந்தருளி நிலைபெற்று இருக்கின்றான். [முந்தை - முந்தியவன். மூவிலைவேல் - திரிசூலம். கடமா-யானை. தாதை - தந்தை.]

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை,
ஆதியை, அமரர் தொழுது ஏத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்,
சிந்திப்பார் அவர்சிந்தை உளானை,
ஏலவார் குழலாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக், கம்பன் எம்மானைக்,
காணக்கண் அடியேன் பெற்ற வாறே.

ஆலாலம் என்னும் கொடிய நஞ்சினை விரும்பி அமுதுபோல உண்டவனும், எல்லாவற்றிற்கும் மூல முதலாகத் திகழ்பவனும், தேவர்கள் தொழுது வணங்குகின்ற சீலமும் கோலமும் உடையவனாய்ச் சிறந்து விளங்குபவனும், தன்னைத் தியானிப்பவர்களின் சிந்தையில் எப்பொழுதும் நீங்காது எழுந்தருளியிருப்பவனும், ஏலவார் குழலாள் என்னும் திருப்பெயர் கொண்ட உமாதேவியாராகிய காமாட்சியம்மையால் எக்காலத்தும் துதித்து வழிபாடு செய்யப்பெற்றவனும், காலனை உதைத்த காலை உடையவனும், திருவேகம்பத்திலுள்ள எங்கள் பெருமானும் ஆகிய இறைவனை, நன்றாகக் காண்பதற்காக, அடியவனாகிய யான், எனது கண்பார்வையைத் திரும்பப் பெற்றேன். இஃது எத்தகைய வியப்பு! திருவேகம்பனின் திருவருள் இருந்தவாறு என்னே ?

சுந்தரமூர்த்தி சுவாமிகள், தாம் திருவொற்றியூரை விட்டு நீங்காமல் இருப்பதாகச் சங்கிலி நாச்சியாருக்குச் செய்து கொடுத்த சபதம் தவறி, திருவாரூர்ப்பங்குனி உத்திரத் திருவிழாக் காணும் விருப்பத்தால் மேற்கொண்ட தல யாத்திரையில், திருவொற்றியூர் எல்லையைக் கடந்தபொழுது, தம் இரண்டு கண்களின் பார்வையையும் இழந்தார். அந்நிலையில் அவர் திருவெண்பாக்கம் சென்றபொழுது, அங்குள்ள இறைவன், கண் தெரியாத அவருக்கு ஊன்று கோல் ஒன்று வழங்கியருளினான். பின்னர் அவர் திருக்கச்சூர் வழியாகக் காஞ்சிபுரம்

சென்று, திருவேகம்ப நாதனை வணங்கினார். கண்பார்வை இழந்து சுந்தரர் வருந்தும் வருத்தத்தினைக் காணப் பொறுக்காத காமாட்சியம்மை, தனக்குரிய இடப்பாகத்துக் கண்ணின் பார்வை சுந்தரருக்குக் கிடைக்குமாறு, கருணை புரிந்தருளினார். அந்நிலையில் இடக்கண் பார்வை பெற்ற சுந்தரர் திருவேகம்ப நாதரைப் பணிந்து வணங்கிப் பாடிய திருப்பதிகத்தின் முதற் பாடல் இது. கண் பார்வை பெற்ற பிறகு பாடிய பாடல் இது என்பது ''ஏலவார் குழலாள் உமைநங்கை என்றும்ஏத்தி வழிபடப்பெற்ற காலகாலனைக் கம்பன் எம்மானைக் காணக் கண் அடியேன் பெற்ற வாறே'' என்று, சுந்தரர் பாடியிருப்பதனால், தெளிவுறப் புலனாகின்றது.

எள்கல் இன்றி, இமையவர் கோனை
    ஈசனை வழிபாடு செய்வாள் போல்,
உள்ளத்து உள்கி உகந்து, உமைநங்கை
    வழிபடச் சென்று நின்றவா கண்டு,
வெள்ளம் காட்டி வெருட்டிட, வஞ்சி
    வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை, எங்கள் பிரானைக்,
    காணக் கண் அடியேன் பெற்ற வாறே.

தேவர்களின் தலைவனும், ஈசனுமாகிய திருவேகம்பப் பெருமானை, மனம் சிறிதும் திரிதலின்றி நிலைபெற்ற தியானத்தினால் வழிபாடு செய்பவளாய், உள்ளத்தில் ஊன்றி நினைத்து மிகவும் விரும்பி, உமைநங்கையாகிய காமாட்சியம்மை, தன்னை வழிபடுவதற்காகத் திருக்கயிலாயத்தினின்றும் புறப்பட்டு, காஞ்சிபுரம் சென்றடைந்து, வழிபாட்டில் ஊன்றி நின்ற திறத்தினை நோக்கி, கம்பை நதியை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடிவரச் செய்து அச்சுறுத்த, அக்காமாட்சியம்மை தான் மணலால் அமைத்து வழிபடும் சிவலிங்கத் திருமேனிக்கு ஏதேனும் சிதைவு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி ஓடிச்சென்று கைகளால் தழுவி அச்சிவலிங்கத்தினைத் தழுவிக்கொள்ள, அதனின்றும் வெளிப்பட்டருளிய கள்வனும், எங்கள் பெருமானுமாகிய திருவேகம்பநாதனைக் காண்பதற்கு, அடியவனாகிய நான் கண் பெற்ற தன்மை மிகவும் வியப்பை விளைவிக்க வல்லதாகும். திருவேகம்பநாதனின் திருவருள் இருந்தவாறு தான் என்னே ! [எள்கல் - இகழ்தல், மனம் திரிதல்; வெருட்டுதல் - பயப்படுத்துதல், வஞ்சி - வஞ்சிக்கொடி போன்ற பெண், அம்பிகை, அஞ்சி - பயப்பட்டு, வெருவி-பயந்து.]

பெற்றம் ஏறு உகந்து ஏற வல்லானைப்
    பெரிய எம்பெருமான் என்று
                                        எப்போதும்
கற்றவர் பரவப் படுவானைக்
    காணக் கண் அடியேன் பெற்றது என்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானை
    குளிர்பொழில் திருநாவல் ஆரூரன்
நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லார்
    நன்னெறி உலகு எய்துவர் தாமே.

பெற்றம் என்னும் நல்ல காளைமாட்டின் மீது ஏறித் திருவுலாச் செல்வதற்குரிய வல்லமையுடையவனும் ; பெருமை வாய்ந்த எங்கள் இறைவன் என்று புகழ்ந்து எப்போதும் கற்றவர்களால் துதிக்கப்படுபவனும் ; கொற்றவனும் ; ஐந்தொழில் திருக்கூத்து ஆடவல்லவனும் ; எங்கள் தலைவனும் ஆகிய திருவேகம்பனைக் காண்பதற்கு, அடியேன் கண்பெற்றது மிகவும் வியக்கத்தக்கதென்று, குளிர்ந்த சோலைகளை உடைய திருநாவலூர் என்னும் தலத்தில் தோன்றிய நம்பியாரூரன் ஆகிய நான், பாடிய நல்லதமிழில் அமைந்த இப்பத்துப் பாடல்களையும், கற்றுணர்ந்து ஓதவல்லவர்கள், நன்னெறியுடன் ஞாலத்தினையும், அதனால் பெறுவதற்குரிய வீடுபேற்றையும் எய்தி, எல்லையில்லா இன்பம் நுகர்வார்கள். [பெற்றம், ஏறு-காளைமாடு, கொற்றவன் - அரசன், வெற்றியையுடையவன்.]

காஞ்சி கயிலாயநாதர் கோயில்

டாக்டர் இரா. நாகசாமி

கயிலையையும் விஞ்சும்

இராஜசிம்மேஸ்வரம் என்னும் கயிலாய நாதர் ஆலயத்தைத் தோற்றுவித்தவர் இராஜ சிம்மன் என்னும் பல்லவச் செம்மல். கயிலையங் கிரியிலே சிவபெருமான் புரிகின்ற விளையாடல் எல்லாம் பேரழகு ஆடல் எனில், அதையும் விஞ்சும்வண்ணம் விண்ணோர் இமையாது காணும் படைப்பென, காஞ்சிச் சிற்பங்களைப் படைத்து மகிழ்ந்தான் 'கலாசமுத்திரன்' என்னும் அப்பெருமன்னன். கதைகளிலே, புராணங்களிலே, திருப்பதிகங்களிலே இருக் கின்ற கருத்துக்களை எல்லாம், அவற்றிற்கெல் லாம் கவின்உரு கொடுத்தால் எப்படி விளங் குமோ என்று எண்ணவேவேண்டாம்; இங்குச் சென்று பாருங்கள். பின்னர் வந்த சிற்ப நூல் களில் குறித்துள்ள இலக்கணங்கள் வரையறுத்த வகைகள் இங்கு இல்லை. ஆனால் அன்றையக் கதைகள் உண்டு. அக்கதைகளிலே எழும் உணர்ச்சிகள் உண்டு. இவ்வுணர்ச்சிகளின் அடிப்படையாய்த் திகழ்ந்த இசையும் கூத்தும் பெரும் தத்துவங்களும் சொல்லாது சொல்லும் காப்பியமாக இவை திகழ்கின்றன. எத்தனை வகை உருவங்கள். கொற்றவை எனில் அவ ளுக்கு எத்தனை உருவங்கள் உண்டோ அத்தனை உருவங்களும் இங்கு உண்டு. அவை அனைத் திலும் அழகு உண்டு. ஊழிக்காலத்தின் இறுதி யிலே சங்காரத்தாண்டவம் ஆடுகின்ற சிவன், ''சமஸ்த சம்ஹார தாண்டவராய''என்று, ஆன் றோர் போற்றுகின்ற அற்புதத் தாண்டவம். காலை மடித்து, கரங்களை மட்டித்து அனைத் துலகும் ஈன்ற அன்னை காண ஆடுகின்ற பெருமான், அந்தக் காட்சியிலே வேகம்; எழுச்சி; இன்பம்; தெய்வீகத் தோற்றம். நாட்டியத்தின் தலைவன் இவனே! ஆடல் வல்ல பரமனும் இவனே!'' என்று கண்டு அதிசயிக்கும் வண்ணம் அமைந்துள்ள அழகிய கோலங்கள். கோயிலின் ஒருபுறத்தே அருள் பாலிக்கும் கோலங்கள்; காமனுக்கு, கண்டிக்கு, சக்கரத்தானுக்கு, நான்முகத்தானுக்கு என்று அனைவருக்கும் அருள்பாலித்த அண்ணலின் தோற்றங்கள். மற்றொரு புறத்திலே சீறி அழிக் கின்ற கடவுளாக, சம்ஹாரமூர்த்தியாகத் திகழும் சிவன். அவனின் பல உருவங்கள் கோயிலின் மூலச்சுவரில் ஆலின்கீழ் அமர்ந்து, அறம் உரைத்த பட்டன், ஊடல்கொண்டு நிற்கும் தேவியை ஊடல் தவிர்த்த பிரான், பிச்சை புகும் வித்தகன், ஆயிரம் முகத்ததாகப் பாயும் ஆற்றைக் கற்றைச் சடையில் தாங்கிய கண்ணோன், முப்புரம் எரித்த முதல்வன் என பல்பெரும் தோற்றங்களோடு திரிபுர சுந்தரி, திரிபுர பைரவி, தேவிமாரோடு திகழும்வடிவில் திரிபுர விஜயன். உலகைப் பாலிக்க நாய் வடிவில் பல் உருவில் பைரவியாக, காத்யாயினி தேவி யாக, கொற்றவையாக, உமையன்னையாக, சிவகாமியாகத்தோன்றுகின்ற தேவியின் உருவங் கள். நாமகள், மலர்மகள், அவள் உடன்பிறந்த மூத்த மகள் எனப் பிற பெண் தெய்வங்கள் உள்ளே உறைகின்ற இராஜசிம்மேஸ்வர முடைய பெருமானைத் தாங்குகின்ற தவம் நமக் கன்றோ கிட்டியது என உவகைப் பெருக்கால் துள்ளிக்குதித்து ஆடுகின்ற கருங்கல். இத்தனைச் சிற்பங்களோடு எண் திசைக் காவலர், ஆதித்தர் பன்னிருவர், ஆதிரை பிறந்த பதினொருவர், சித்தர், சாரணர் எனும் கணத்தார், கோயிலின் பல்வேறு இடங்களைக் காக்கும் பல தெய்வங் கள் என எண்ணிலாதன இங்குள்ள சிலைகள்; சிற்பங்கள்; அதன் தத்துவங்கள். பரிவாரத் தெய்வங்களாகிய முருகன், ஐங்கரன், துர்க்கை, திருமால், அம்பிகை, ஜேஷ்டை, பைரவி, விஷ்ணு, பிரமன் ஆகிய அனைத்துத் தெய்வங் களுடைய சிற்பங்களும் இங்கு உள்ளன. அவை யவை இருக்க வேண்டிய உரிய இடங்களில் உள்ளன. திருமாலின் பல உருவங்களிலே இங்கு இடம்பெற்றுள்ளவை, உலகளந்த உத் தமன், இரணியனோடு போர்புரிந்த எம்மான், கடலமுதம் கடைந்தபோது நின்ற பெருமான் போன்ற உருவங்களாகும். இக்கோயிலில் மற்று மொரு அற்புதமும் உண்டு. சக்தி தத்துவத்தில் தேவியை முழுமுதல் கடவுளாகப் போற்றிப் பரவும் மரபு உண்டு.

தேவி நீ ஓங்காரக் கூட்டில் உலவும் பசும் கிளி. உபநிடதம் என்னும் உத்யானத்தில் கூவும் குயில். ஆகமம் என்னும் அடவியில் ஆடுகின்ற மயில். உன் கரத்திலே பசும் கிளியை ஏந்தி அதன் அழகிய சிறு மூக்கைத் தடவி விளையாடுகின்ற பாவை. வீணை நாதத்திலே லயித்து நிற்பவள். 'ஸரிகமபதநி' என்னும் ஓசையில் உயிர்த்துடிப்பாய் நிற்பவள். வீணையைத் தரித்திருப்பதால் வீணைக்கு அழகு சேர்ப்பவள். மாதங்கிதனயை. இயக்கர், கந்தர்வர், சித்தர், மகளிரால் துதிக்கப்படுபவள். வாமை முதலிய பெண்களால் போற்றப்படுபவள். அண்டமெல்லாம் பூத்தாள் என்றெல்லாம் கூறுகின்ற பாக்கள்.

''ஓங்கார பஞ்சர சுகி உபநிஷத் உத்யான
கேணி கலகண்டி ஆகம விபின மயூரி''

ஸரிகமபதநிஸ தாம் தாம் வீணா
காந்த ஹஸ்தாம்'' சங்க்ராந்த

யக்ஷ கந்தர்வ சித்த அங்கனா மண்டலீகி
அர்ச்சிதே தேவி வாமரதிபிகி பூஜிதே''

''மத்த மாதங்க கன்னே''

''தம் சுகம் சிம் சுகம் வாலயந்தி
பரிரீக்ட ஸே''

என்றெல்லாம் பரவுகின்ற அன்னையின் தோற்றம் அனைத்தையும் இங்குக் காணலாம். ஓரிடத்தில் வனத்தின்கீழ் அன்னை அமர்ந்திருக்கிறாள். அவள் அருகில் மயில் உள்ளது. தவமுனிவர்களெல்லாம் வணங்குகிறார்கள். மற்றுமொரு சிற்பத்தில் வீணை தரித்து, வீணை நாதத்திலே லயித்து நிற்கிறாள்; பைங்கிளியைக் கையில் ஏந்தி அதோடு விளையாடுகின்ற பாவையாகவும் காண்கிறாள். கூவுகின்ற குயிலின் அருகில் அமர்ந்த தேவியாகவும், யாழ் இசைப்பவளாகவும், சாமரை வீசும் பெண்கள், அருகில் இருக்க ஆனந்த மோன நிலையில் இருக்கும் அன்னையாகவும் காட்சி தருகிறாள். இந்தச் சிற்பங்களெல்லாம் இங்கு இருப்பது கி.பி. 700-லேயே சக்தி தத்துவம் எந்த உயர்நிலையில் திகழ்ந்தது என நமக்கு உரைக்கும். இவ்வளவு சிற்பங்களையும் படைத்ததால்தான் ராஜசிம்மன் கூறினான்.

''சைலே கைலாச லீலாம்
அபஹரதி க்ருஹே ராஜசிம்மேஸ்வராகே
விப்ரத் அப்ரம் விகாக்ரே
விரசயது ஸதா ஸன்னிதானம்
விருஷாங்க :

கயிலையங்கிரியின் லீலையைத் தோற்கடிக்கும் வண்ணம் எடுக்கப்பட்ட சைலே க்ருஹ - கல் கோயிலில் இராஜசிம்மேஸ்வரம் என்று பெயர் பெற்றதில் விண்ணெழில் விமானத்தில், வெள்ளேற்றான் என்றும் அருள்பாலிக்கட்டும் என்பது பொருள். இந்தக் கருத்தோடு அக்கோயிலின் உள்ளிருக்கின்ற பரமனைப் பார்த்தால் எவ்வளவு உயர்ந்த கோயில் இது என்று தோன்றும். அன்று தமிழகத்தில் தோன்றிய பெரும் கோயில் அனைத்திலும் உயர்ந்தது இதுவே. அதனால் தான் அவனுக்குப் பின்னர் வந்த மாமன்னன் தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டுவித்த பெருந்தகை இராஜராஜன்கூட அக்கோயிலைப் 'பெரிய கற்றளி' என்று அழைத்தான்.

அவள் எடுத்த கோயில்

இந்தக் கோயிலில் வேறு ஒரு சிறப்பும் உண்டு. இவ்வளவு எழிலார்ந்த கோயிலைத் தோற்றுவித்த இராஜசிம்மனின் தேவி 'ரங்க பதாகை' என்பவள் பெண்களுக்கெல்லாம் கொடிபோன்றவள். இந்த உலகம் முழுவதையும் ஆள்கின்ற தீக்ஷை மேற்கொண்டுள்ள தன் தலைவனும், சத்ருக்களின் மார்பைப் பிளந்த நரசிம்ம விஷ்ணுவும், அவனைத் தன் ஆற்றலால், அழகால் பெண்மையின் மென்மையால் ஆட்கொண்ட அவள் தனித் தலைவன்போல் தானும் ஒரு கோயில் எடுக்க விழைந்தாள். அவன் புகழ் நிலைத்து நிற்பதுபோல அவளது புகழும் நிலைத்து நிற்கவேண்டும் என்பதுபோல, அவள் எடுத்த கோயில் அவனது கோயிலின் அருகிலேயே ஒரு சிறிய அழகான மலர்போல இருக்கிறது. அதிலும் சிற்பங்கள் இருக்கின்றன. அதுபோல, பிற தேவியர் எடுத்த கோயில்களும் சிற்பம் நிறைந்து காணப்படுகின்றன. இங்கு மற்றொரு சிறப்பும் உண்டு. தன் அப்பனுக்கும் அம்மைக்கும் நிலைத்த புகழ் தந்த கோயில்களின் இடையில் தானும் ஒருகோயிலைத் தோற்றுவித்தான் அவர்களது அருமை மைந்தன் மகேந்திரன். அதிலே உமையன்னையின் மடியிலே தவழ்கின்ற கந்தனையும், அன்னையை

அும், சோமாஸ்கந்த உருவில் படைத்து வணங்கினுன். அந்தச் சிற்பமும் இன்றும் இருக்கிறது. இதுவரையில் பல்லவர் கலை சிற்பக்கலையாகவே தோற்றமளிக்கிறது. பல்லவர்கள் தோற்றுவித்த கட்டிடங்கள்கூட அழகிய சிற்பங்கள் போலக் காட்சியளிக்கின்றன. அவர்கள் வல்லமை படைத்த சிற்பிகள்.

மகேந்திரன்

தமிழ்நாட்டில் இப்பொழுது எஞ்சியுள்ள ஓவியங்களில் மிகவும் தொன்மையானது பல்லவப் பெருமன்னர் காலத்தவையே ஆகும். அதாவது ஏறக்குறைய கி.பி. 7-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்துதான் ஓவியங்கள் காணப்படுகின்றன. இதற்கு முற்பட்டவை காலப் போக்கில் அழிந்து மறைந்துபோயின. பல்லவ மன்னர்களில் பெரும்பணி புரிந்தவர்கள் இருவர். கலை, இலக்கியம், இசை ஆகிய அனைத்திலும் ஒப்பரும் சுடராகத் திகழ்ந்த முதலாம் மகேந்திரவர்மனும், மாமல்லையிலும் காஞ்சியிலும் கண்டோர் வியக்கும் கலைச் செல்வங்களைப் படைத்த இராஜசிம்ம பல்லவனும் ஆவர். மகேந்திரன், தானே ஒரு சிறந்த ஓவியனுகத் திகழ்ந்திருக்கின்ருன். அவனுல் தீட்டப் பட்ட ஓவியங்கள் நமக்குக் கிடைக்காதபோதிலும், அவனுக்கு ஓவியத்திலிருந்த திறமையும், ஆர்வமும் 'சித்ரகாரப்புலி' என்று அவன் பட்டம்கொண்டதிலிருந்து அறியலாம். மாமண்டூர் என்ற இடத்திலே அவன் எடுத்த குடவரைக் கோயிலில், ஆங்காங்கு வண்ணங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலை மகேந்திரன் தோற்றுவித்தான் என்பதை அங்குள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன. எனவே இங்கு காணப்படும் வண்ணங்கள் மகேந்திரன் காலத்தவையாக இருக்கலாம். இவற்றில் மனித உருவங்களோ அல்லது கொடி மலர்களோ இல்லை. வெறும் வண்ணங்கள் மட்டுமே காணப் படுகின்றன. ஆதலின் மகேந்திரன் கால ஓவியத்தைப்பற்றிப் பெரிதும்கூற இயலவில்லை.

இராஜசிம்மன் காலத்து ஓவியங்கள்

அடுத்து, பல்லவர்கால ஓவியங்களில் மிகச் சிறந்ததாகக் காணப்படுவன இராஜசிம்மன் காலத்து ஓவியங்கள் ஆகும். 'கலைக்கடல்' என்று தன்னை அழைத்துக்கொண்ட இம் மன்னன் எடுத்த காஞ்சி கயிலாயநாதர் ஆலயத்தில் அண்மையில் இந்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பண்டைய ஓவியங்களை வெளிக்கொணர்ந்துள்ளது. இன்னும் பல பகுதிகளில் இத்தகு ஓவியங்கள் படிப்படியாக வெளிப்படுகின்றன. இவற்றின்மீது பிற்காலத்தார் பூசிய சுதை, இவற்றை மறைத்திருக்கிறது. இச் சுதையை இரசாயன முறையில் இப்போது நீக்குகிருர்கள். இதன் அடியிலே ஒன்றின்மேல் ஒன்ருகப் பூசப்பட்ட மூன்று வெவ்வேறு காலத்தைச் சார்ந்த ஓவியங்கள் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. இவற்றில் மிகவும் தொன்மையானவை கோயில் கட்டப்பட்ட காலத்திலேயே தீட்டப்பட்ட ஓவியங்களாகும். இந்த ஓவியங்களே இராஜசிம்மன் காலத்தில்தீட்டப் பட்டவை என்பதில் ஐயமில்லை. இதற்குப் பிறகு சற்றேறக்குறைய 400 ஆண்டுகளுக்குப் பிறகு முதற்குலோத்துங்க சோழன் காலத்திற்குப் பின்னர், இக்கோயிலில் மீண்டும் ஓவியம் தீட்டப்பட்டது.

அஜந்தாவும் காஞ்சியும்

அஜந்தா குகை ஓவியங்களைப்பற்றி உலகம் அறியும். அங்குள்ள ஓவிய உருவங்களில் காணப் படும் பாவத்திற்கோ, வண்ணங்களின் மென்மைக்கோ கோடுகளின் எளிமைக்கோ எந்தவிதத்திலும் குறைந்தவையல்ல இங்குள்ள ஓவியங்கள். இன்னும் கூறப்போனுல், ஒருசில இடங்களில் அஜந்தா ஓவியங்களை விஞ்சும் வண்ணம் இருக்கிருேம் என்று கூறுவது போல, இவை காட்சியளிக்கின்றன. இங்குக் காணப் படும் ஓவியங்கள் மிக அதிகமாக உள்ளன என்று நினைத்துவிடக்கூடாது. இருப்பவை என்னவோ நாலைந்து ஓவியங்களின் பகுதிகள்தாம். இருப் பினும் இவற்றின் அழகை, முகப்பொலிவை, இனியவண்ணங்களின்தன்மையைச் சொல்லால் விரித்துரைக்க இயலாது. சென்று பாருங்கள். இவற்றைப் பார்க்கும்போது அண்மைக்காலத்தில் தீட்டப்படும் ஓவியங்களையும் மனத்தில் கொண்டு பாருங்கள். சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வெழில் ஓவியங்களைத் தீட்டிய அக்கலைஞனின் திறனை அப்பொழுது தான் நன்கு புரிந்துகொள்ளலாம். ஒருசில பகுதிகளே எஞ்சியுள்ளன என்று கூறினேன். ஆனுல் உங்களது அகக்கண்ணுல், இக்கோயிலின் அடி முதல் முடிவரையில் சுவர்களில், சிற்பங்களில், இடைவெளிகளில் அனைத்து இடங்களிலும் அழகிய வண்ணம் தீட்டப்பட்ட அன்றலர்ந்த மலர்போல் திகழ்வதாக எண்ணிப்

பாருங்கள். அந்த நிலையிலே நாம் கண்டிருந்தால் நம் மனம் எவ்வளவு குதூகலித்திருக்கும்; மெய்மறந்து நம்மைக் கூத்தாடச் செய்திருக்கும். நமக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று நாம் அப்போது ஏங்குவோம். ஆனால், அவ்வாய்ப்புக்கிட்டிய ஒரு மன்னவனும் உண்டு. உண்மையிலேயே இக்கோயில் முழுமையும் சிறந்த ஓவியமும், வண்ணமும் தீட்டப்பட்டு விளங்கியது. விளங்கியது மட்டுமன்று. "காஞ்சியில் உள்ள ஒவ்வொரு சிறு பகுதியாயினும் பெரும் பகுதியாயினும் தூள்தூளாக்காமல் விடேன்" என்று வீரசபதம் புரிந்து, வெற்றிவாகை புனைந்து காஞ்சியின் உள்ளே நுழைந்த மாற்றரசன் சாளுக்கியப் பெருமன்னன் விக்கிரமாதித்தனின் கண்ணிலே வண்ண ஓவியமாகத் திகழ்ந்த இக்கோயில் பட்டது. கண்ணிமைக்காது வியந்ததோடன்றி அழிக்க வேண்டும் என்று வந்த அவ்வெற்றி வீரனை இது வெற்றி கொண்டதும், காஞ்சிப் பகுதியில் எந்தப் பகுதியையும் 'அழித்து விடாதீர், அழித்துவிடாதீர்' என்று அலறினானும் அப்பெருமன்னன். அப்பெருமைமிகு ஓவியங்களில் ஒன்று சிவபெருமான் உமையன்னையோடு வீற்றிருக்க இடையிலே ஸ்கந்தனுடன் அழகிய சோமாஸ்கந்தமூர்த்தியாகக் காணப்படுவது. சிவபெருமானுடைய உருவத்தில் பெரும்பகுதி அழிந்துவிட்டது. மழுவேந்திய இடக்கரமும், வாகுவலயம் பூண்ட மற்றொரு கரத்தின் பகுதியுமே இப்போது எஞ்சியுள்ளது. ஆனால் உமையின் உருவம் இப்போது எஞ்சியுள்ளது. அந்த முகத்தில்தான் எத்தனை உணர்வு! அகில உலகத்தையும் ஈன்ற அன்னை அவள். கருணையே உருவான முகம். பொங்கித் ததும்ப எடுத்துரைக்கும் எழிற்கோடுகள். கோடுகளின் இடையே மென்மையான வண்ணங்கள், இவையனைத்தும் ஒருங்கே இணைந்து திகழ்வதால் அஜந்தா ஓவியங்களினும் சிறந்ததாகக் கூறினால் அது தவறன்று. அவ்வன்னையின் மடியில் அமர்ந்திருக்கின்ற முருகன் சிறு குழந்தை. மார்பகத்தில் வீரசங்கிலிபோல் மாலையணிந்து எடுப்பாகத் துடிப்பாக அமர்ந்து, நம் மனத்தைக் கவராதிருக்காது.

இதேபோலக் கோயிலின் பின்புறத்தில் ஒரு சிற்றாலயத்தில் நான்முகனின் உருவம் காணப்படுகிறது. கம்பீரமான முகங்கள்; வித்தையின் இருப்பிடம் போலத் திகழும் முகப் பொலிவு. அதற்கு எதிர்ச் சுவரில் யோகாசனத்திலமர்ந்து யோக பட்டம் தரித்து, ஆகமங்களை உரைக்கின்ற ஆன்றோனாக சிவபிரானின் உருவம். இதில் ஒரு பகுதியே எஞ்சியுள்ளது. கோயிலில் வடபாலிலுள்ள சிற்றாலயங்கள் சிலவற்றிலும் ஓவியங்கள் உள்ளன. அவற்றில் கின்னரப் பறவைகளின் உருவங்கள் காணப்படுகின்றன. அவைகள் முழுமையாக இருப்பதால் பல்லவ ஓவியனின் கைவண்ணத்தைக் காணமுடிகிறது. இது தவிரப் பல இடங்களில் சிற்பங்களின் மேலேயே பூசப்பட்ட ஓவியப்பகுதிகளும் வெளிப்பட்டுள்ளன. சில சிற்பங்களில், கண்களில் பூசப்பட்ட ஓவியங்கள் எஞ்சியுள்ளன. அந்தந்த சிற்பங்களுக்கு ஏற்ப உணர்ச்சி ததும்பும் கண்களாக அவை திகழ்ந்தன என்பதை எஞ்சியுள்ள இந்தப் பகுதிகள் காட்டுகின்றன. ஆடை அணிகலன்கள், முடி முதலியவற்றின் அமைப்புக்களையும் இவற்றால் நாம் அறிய முடிகிறது.

காஞ்சி கயிலாயநாதர் கோயிலைப்போலவே மாமல்லபுரத்திலும் குகைக் கோயில்களும், ஒற்றைக் கற்கோயில்களும், கடற்கரையில் அமைந்துள்ள எழிலான கோயிலும் வண்ணம் பூசப்பட்டுத் திகழ்ந்திருக்கவேண்டும் என நாம் ஊகிக்கலாம். சில கலைச்செல்வங்களின் வண்ணத்தின் தடயங்கள் காணப்படுவதே அதற்குச் சான்றாகும். மாமல்லபுரத்தில் பெரும்பாலான குடைவரைக் கோயில்களும், ஒற்றைக் கற்கோயில்களும் முற்றுப் பெறவில்லை என்பது நாம் அறிந்தது. முற்றுப்பெறாத சிற்பங்களில் கூட ஓவியத்தடயங்கள் காணப்படுவதிலிருந்து பகுதிகள் முடிவடைய அடைய வண்ணங்களைத் தீட்டினார்களா அல்லது இப்போது காணப்படும் ஓவியங்கள் பிற்காலத்தனவையா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

பனமலைக் கோயிலில் ஒரு சிற்றாலயத்தில் பின்புறச் சுவரிலும் பக்கச் சுவரிலும் இவ்வோவியங்கள் உள்ளன. இக்கோயிலை இராஜசிம்மன் தோற்றுவித்தான் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இராஜசிம்மன் ஒரு சிறந்த கலைஞன். பல்வேறு விதமான கட்டிடங்களை எழுப்புவதிலும் சிற்பங்கள் பலநிலைகளில் படைப்பதிலும் இன்பம் கண்டவன் என்று கண்டோம். காஞ்சி கயிலாயநாதர் ஆலயத்தை முழுவதும் சிற்பங்களால் அலங்கரித்தான். பனமலையில் சிற்பங்கள் அதிகம் இன்றி சுவர்கள் எளிமையாகத் தோற்றுவித்து அதில் எழிலார்ந்த ஓவியங்களைத் தீட்டியுள்ளான்.

தொண்டை நாட்டில் சமணம்

வெ. இராதாகிருஷ்ணன், பதிவு அலுவலர்,
தொல்பொருள் துறை, சிதம்பரம்.

தொண்டைநாட்டின் இருதயமாக விளங்கியது காஞ்சி மாநகர். பண்டைக்கால இந்தியாவில் மூன்று பெரும் பல்கலைக்கழகங்கள் விளங்கின. அவற்றுள் ஒன்று காஞ்சியில் இருந்தது. மற்றவை தட்சசிலத்திலும் நாலந்தாவிலும் இருந்தன. காஞ்சி மாநகர் தெற்கும் வடக்கும் சங்கமமாகும் நகரமாக விளங்கியது. வைதீகக் கோட்பாடுகளும் அவைதீகக் கோட்பாடுகளும் போட்டியிட்டுக் கொண்டன. இந்நகர் பல்வேறு சமயசித்தாந்தங்கள் செழிப்பதற்கு நிலைக்களமாயிற்று. இருபதுக்கும் மேற்பட்ட கடிகைகள் (கல்லூரிகள்) இங்கு இருந்தன. சமஸ்கிருதம் நன்கு போதிக்கப்பட்டது. கி.பி. ஐந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த மயூரசன்மன்என்ற கதம்ப மன்னன் இங்கிருந்த கடிகையில் சமஸ்கிருதம் பயில வந்ததிலிருந்து காஞ்சியில் நிலவிய கல்வியின் தரத்தை நன்குணரலாம். கல்வியிலும் கலையிலும் ஆர்வங்கொண்ட சான்றோர்கள் உறையும் இடமாகக் காஞ்சி சிறப்புற்றது.

கிறிஸ்து சகாப்தம் தொடங்கிய காலம் முதலே தொண்டை நாட்டில் சமணம் பரவத் தொடங்கியது. சமண சமயம் ஆந்திர நாட்டின் வழியாகவோ அல்லது கர்நாடகத்தின் வழியாகவோ தான் தொண்டை நாட்டிற்குள் பரவியிருக்க வேண்டும் என்று கொள்ளலாம். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தொண்டை நாட்டில் சமணமுனிவர்கள் வாழ்ந்தனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

காஞ்சியின் ஒரு பகுதியாக விளங்கிய திருப்பருத்திக்குன்றம் 'ஜினகாஞ்சி' எனப் பெயர் பெற்றது. பல்லவர் ஆட்சியின் தொடக்கத்திலிருந்து இவ்வூர் சமணத்தின் இருப்பிடமாகத் திகழ்கின்றது. சமண மரபில் கூறப்பெறும் நான்கு வித்தியா ஸ்தானங்களில் ஜினகாஞ்சியும் ஒன்று. இங்கு சந்திரகீர்த்தி, மல்லிசேனர், புஷ்பசேனர், அனந்த வீரவாமனர் போன்ற சமணப் பெரியார்கள் வாழ்ந்துள்ளனர். மல்லிசேனர் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பலநூல்களை யாத்துள்ளார். மேருமந்தர புராணம், சமயதிவாகரம் (நீலகேசித் திரட்டு உரை) போன்ற தமிழ் நூல்களை யாத்துள்ளார். பாஞ்சாஸ்திகாயம், பரவசன சாரம், சமய சாரம், சியாத்வாத மஞ்சரி ஆகியவை சமஸ்கிருதத்தில் யாக்கப்பெற்றவை. கி.பி. ஆறும் நூற்றுண்டில் இங்கு வாழ்ந்த வஜ்ரநந்தி என்ற சமணப் பெரியார்க்குப் பல்லவ மன்னன் சிம்மவர்மன் பள்ளிச் சந்தமாக 'பதினுறரைப் பட்டி' நிலம் அளித்த செய்தி பள்ளன் கோயில் செப்பேடுகளால் அறியப்படுகிறது. தமிழக வரலாற்றில் பள்ளிச்சந்தம் அளிக்கப்படுவது இதுவே முதன் முறையாகும். இங்கிருந்த சமணப் பள்ளிகள் பொதுவாகப் பல்லவ மன்னர்களால் ஆதரிக்கப் பெற்றன.

பண்டைக் காலத்துச் சமண முனிவர்கள் தங்குமிடமான பாழிகள் தொண்டை மண்டலத்தில் பல உள்ளன. தென்னுர்க்காடு மாவட்டம் மேலைச்சேரி, காவக்காடு, தொண்டூர், திறக்கோ, திருநாதர்குன்று ஆகிய ஊர்களிலும் சித்தூர் மாவட்டத்தில் கன்னிகாபுரம், நகரி ஆகிய ஊர்களிலும், வடார்க்காடு மாவட்டம் புங்கானூர், சேதரப்பட்டு, மாமண்டூர் ஆகிய ஊர்களிலும் சமணப் படுக்கைகள் உள்ளன. மாமண்டூருக்கருகிலுள்ள மலையில் சமணப் படுக்கைகளுடன் தமிழில் கல்வெட்டும்உள்ளது (இவ்வூர் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் நெடுஞ்சாலையில் உள்ளது).

''கணிமான், தேனூர் தந்தகோன்குன்று செயிதான் தசன் சிறுவ்வன்'' கி.பி. முதல் நூற்றுண்டைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டு சமணமுனிவர்க்குப் படுக்கை அமைத்துக் கொடுத்ததைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. தொண்டைநாட்டில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு சமணம் வேரூன்றத் தொடங்கியது என்பதை இந்தக் கல்வெட்டு மூலம் உணரலாம்.

தொண்டைநாட்டில் சமணத்தின் செல்வாக்கு வளர்ச்சியடையவே சமணப்பள்ளிகளும்

மடங்களும் பல்கிப் பெருகின. ஆர்க்காட்டுக் கருகில் உள்ள திருப்பான்மலை பல்லவர் காலத்தில் சமணத் திருப்பதியாக விளங்கியது. இங்கு முதலாம் மகேந்திரவர்மன் காலத்தைச்சேர்ந்த முற்றுப்பெறாத குடைவரைக் கோயில் ஒன்றுள்ளது. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் செதுக்கப்பெற்ற பொன்யக்ஷியின் உருவம் உள்ளது. தமிழகத்தில் உள்ள யக்ஷி திருமேனிகளில் இதுவே காலத்தால் முந்தியது.

சில சமணப் பள்ளிகளுக்கு மன்னர்களுடைய பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன என அறிகிறோம். கண்டராதித்த பெரும்பள்ளி, வீரராசேந்திரப் பெரும்பள்ளி, கங்கசூரப்பெரும்பள்ளி, வீரகேரளப் பெரும்பள்ளி ஆகியவற்றை இதற்குச் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

தமிழகத்தின் மற்றப் பகுதிகளில் சமணம் அழிக்கப்பெற்ற பின்னும் தொண்டை நாட்டில் அதன் செல்வாக்கு ஓரளவேனும் இருந்தது எனலாம். மயிலாப்பூரில் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டுவரை சமணம் பெரும்புகழ் பெற்றிருந்தது. திருப்பருத்திக்குன்றம் இன்றுவரை சமணத்தின் புகழ் பரப்பிக் கொண்டுள்ளது. பண்டைக் காலத்துச் சிறப்புப் பெற்ற பல சமணப்பதிகள் இன்றும் சமணர் செல்வாக்கிற்குட்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதற்குக் காரணம், சோழப் பேரரசை அடுத்து ஆட்சி புரிந்த விஜய நகர மன்னர்கள் சமணத்தின் புரவலர்களாக விளங்கியதேயாம். தொண்டை நாட்டில் ஆட்சி நடத்திய சில முஸ்லிம் மன்னர்கள் சமணர்களுக்கு ஆதரவளித்தனர் என அறிகிறோம். கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திரு. மெக்கன்ஸி அவர்கள் விட்டுச் சென்ற குறிப்புக்களிலிருந்து தொண்டை நாட்டில் சமண சமய நிலையை அறிந்துகொள்ள முடிகிறது. அவர் காலத்தில் தமிழ் நாட்டிலேயே தொண்டை மண்டலத்தில் சமணர்கள் மிகுதியும் வாழ்ந்தனர் என்றும், தொண்டை நாட்டில் இருந்த சமணப்பதிகள் சுமார் நூற்றைம்பது இருக்கலாம் என்றும் அறிகிறோம்.

வரலாறும் காஞ்சியும்

டாக்டர் இரா. நாகசாமி

மகாபத்ம நாகம் என்னும் நாகராஜன் காஞ்சியில் ஒரு காலத்தில் வசித்ததாகவும், அம்பிகை தவம் செய்ய வந்தபோது அவன் தேவியைத் தனது இருப்பிடத்தில் வந்து தவம் புரிய வேண்டிக்கொள்ள அன்னை அதற்கிசைந்த தாகவும் சேக்கிழார் குறிப்பார். 'மகாபத்ம நாகன்' கி.மு. மூன்றும் நூற்றாண்டுக்கும் முன்பிருந்தே இந்தியாவில் பல பகுதிகளிலும் சிறப்பாக வணங்கப்பட்ட தெய்வம். மதுராவில் அண்மையில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் இவனது கோயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'மகாபத்ம நாகன்' காஞ்சியில் இருந்ததாகக் கூறும் மரபு, அவனது வழிபாடு காஞ்சியிலும் தொன்றுதொட்டே சிறந்திருக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

இங்குத் தேவி அரனைப் பணிந்து எல்லா உயிர்களையும் புரக்கவும் உலகினில் மனையறம் சிறக்கவும், வேண்டுவோர் காமங்களை அவரவர்க்கு அருளவும், காம கோட்டத்தில் அமர்ந்திருக்கிறாள். அவளது காம கோட்டத்தை மூவுலகினரும் போற்றுகின்றனர்.

காஞ்சியில் யோக முனிவர்களும் யோகினிகளும் போற்றும் யோகபீடம் ஒன்று இருந்தது என்பர் சேக்கிழார். அங்கு உருத்திரசோலை என்று ஒரு சோலை உண்டு. தவம் செய்வோர் விரும்பித் தொட்டால் யாவற்றையும் பொன்னாக மாற்றும் சிலை. "மெய்ந்நெறி நின்றார்கள் தாம் விரும்பித் தீண்டில்யாவையும் செம்பொன்னாக்குவதோர் சிலை" ஒன்றுஇருந்தது. கரிகாலன் இமயமலையில் புலிச்சின்னத்தைப் பொறிக்க வடதிசை சென்றான். அப்போது வேடன் ஒருவன் இந்நகரின் வளமையைக் காட்ட, கரிகாலன் இவ்விடத்தில் நான்கு காதங்கள் சதுரத்திற்குக் காஞ்சி மாநகரை அமைத்து, குன்றுபோல் மதில் அமைத்து, அங்குக் குடி அமர்த்தினான் என்று சேக்கிழார் கூறுகிறார். காஞ்சிபுரத்தைப் புதுப்பித்து மதில் அமைத்து கரிகாலன் சிறப்பித்தான் என்ற இந்த வரலாற்றுச் செய்தியைச் சோழர் செப்பேடுகளும் கூறுகின்றன. அண்மையில் திருத்தணியில் கிடைத்த பராந்தகன் செப்பேட்டிலும் இச்செய்தி குறிக்கப்படுகிறது. சேக்கிழார் சோழர் வழிவழி வந்த வரலாற்றுச் செய்தியைக் குறித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் அந்தணர் இருக்கை இருந்தது. அரசர்குலப் பெருந்தெருக்கள் இருந்தன. அவற்றின் தெற்றிமுற்றங்களில் ஆயுதங்கள் பயிலும் இடங்கள் இருந்தன. அரசகுமாரர்கள் யானை, குதிரைஏற்றம் பயில இடங்கள் இருந்தன. வணிகர் வாழ் மாநகர்கள் இருந்தன. வேளாண்குடிப் பெருஞ்செல்வர்வாழ் இடங்கள் இருந்தன. இந்நாற்குலத்தோர் இன்றி கலப்பு மணத்தால் பிறந்த அனுலோமர், பிரதிலோமர் ஆகிய குடிமக்கள் தங்கள் தங்கள் சாதிக்கேற்ற தொழில் புரிந்து வாழும் பகுதிகள் இருந்தன.

காஞ்சியில் உள்ள பல கோயில்களில் ஆனைமுகத்தோன் ஆன கணபதி கோயில் ஒன்றும், குன்றம் எறிந்த வேலவன் கோயில் ஒன்றும், மூவிலை வேலைக் கையில் ஏந்திய பிள்ளை என்று அழைக்கும் பாலப்பிள்ளையார் கோயில் ஒன்றும் இருந்தன. இங்கு ஒரு புகழ்வாய்ந்த ஐயனார் கோயில் ஒன்று இருந்தது. அவர் முற்றவெளி ஐயன். கையில் செண்டேந்தி அமர்ந்திருந்தார். அவர்முன் யானை வாகனம் இருந்தது.

காஞ்சியில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக்கும் முன்னரே 'புண்ணிய தீர்த்தம்' 'இட்டசித்தி தீர்த்தம்', 'மங்கல தீர்த்தம்', 'நீண்ட காப்புடை தீர்த்தம்', 'சர்வ தீர்த்தம்' முதலிய பல புண்ணிய தீர்த்தங்கள் இருந்தன.

இங்குப் பல அதிசயங்கள் இருந்தன. நிழலை முன்னே பிணிக்கும் கிணறு ஒன்று இருந்தது. நஞ்சான தடம் ஒன்று இருந்தது. அங்கு ஒரு பிலம் இருந்தது. அங்கு உள்ளே வந்தவர்கள் குரங்கு உருவாக மாறிவிடுவார்கள். அங்கு ஒரு பொய்கை இருந்தது. அதில் குளித்தால், அக்குரங்கு உருப் பெற்றவர்கள் குரங்கு உரு நீங்கப் பெறுவார்கள். மற்றொரு பிலம் உண்டு. அதில் வானவர் அடையும் இன்பம் பெறலாம். சேக்கிழாரால் இவ்வாறு புகழப்பெற்ற காஞ்சி மாநகர், தமிழ்நாட்டின் வரலாற்றை என்று அறிய முடிகிறதோ அன்றிலிருந்தே புகழ்பெற்றது. பண்டைய இந்தியாவில், நகரங்களிலேயே எழில்வாய்ந்தது காஞ்சிமாநகரமே என நகரேஷு காஞ்சி என்று குறிக்கப்படுகிறது.

இங்கு அனைத்துச் சமயங்களும் செழித்து வளர்ந்தன. பௌத்தம், சமணம், சைவம், வைணவம், கௌமாரம், சாக்தம் முதலிய அனைத்துச் சமயங்களுக்கும் இருப்பிடமாகத் திகழ்ந்தது. இங்கு வாழ்ந்த பல பெரியோர்கள் சமய நூல்களை இயற்றி, நன்னெறி வளர்த்த னர்.

பல்லவர் ஆட்சிக்கு வருவதற்குமுன் திரையாளர்களின் தலைநகராய்த் திகழ்ந்த இந்த மாநகரைப்பற்றிச் சங்க இலக்கியங்கள் புகழ் கின்றன. பல்லவர்களது சிறந்த தலைநகராய்த் திகழ்ந்த இந்நகர் பலமுறை சாளுக்கியரோடு நிகழ்ந்த போர்களில் அழிவுற்று மீண்டும் மீண்டும் புதிதாக எழுப்பப்பெற்றது. இரண்டாம் நரசிம்மவர்மன் ஆன இராஜசிம்மன் காலத்தில் காஞ்சி புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. அவனது பட்டப்பெயர்களான அதிமானன், ஏகவீரன், ரணஜயன், வாடனன்ஆகிய பெயர்களால் பல பகுதிகள் அமைக்கப்பட்டன. கி.பி. 725-ல் அமைந்த இவை, சுமார் 250 ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி. 975-லும் சிறப்பாகத் திகழ்ந்தன என உத்தமசோழனின் செப்பேடு ஒன்றிலிருந்து அறிகிறோம். அதற்கு மற்றொரு காரணம் இராஜசிம்மன் நிர்மாணித்த காஞ்சியை இரண்டாம் விக்ரமாதித்தன் என்னும் சாளுக்கிய மன்னன் கைப்பற்றிய போதும் அந்நகரை அழிக்காமல் உள்ளே நுழைந்தான் என அவனது செப்பேடு கூறுகிறது. ஆதலின் இராஜசிம்மன் காலத்திலிருந்த காஞ்சி பல நூற்றாண்டுகள் சிறப்பாகத் திகழ்ந்தது என அறிகிறோம்.

சோழர்கள் காஞ்சியைத் தமது வடபுலத் தலைநகராக் கொண்டிருந்தனர். சுந்தரசோழன் காலத்தில் காஞ்சியில் ஒரு அரசமாளிகை இருந்தது. அதைப் பொன்மாளிகை என்று அழைத்தனர். சுந்தரசோழன் அதில் இறந்ததால்பொன் மாளிகைத் துஞ்சிய தேவர் என்று அழைக்கப்பட்டான். அவனுக்குப் பின் அரியணை ஏறிய உத்தம சோழன் காலத்தில் கச்சிப்பேட்டில் மாளிகை இருந்தது என்றும், அதில் தெற்கில் சித்ரமண்டலம் ஒன்று இருந்தது என்றும் அறிகிறோம்.

''காஞ்சிபுரத்தில் அசோகன் எடுத்த பௌத்த ஸ்தூபம் ஒன்று இருந்தது. அது சுமார் 100 அடி உயரத்திற்குமேல் இருந்தது. அங்குப் புத்தர், தீர்த்தங்கரர்களை வாதத்தில் வென்று பல நூற்றுக்கணக்கானவர்களை பௌத்தசமயத்துக்கு மாற்றினர். கௌதமர்க்கு முன் தோன்றிய நான்கு புத்தர்கள் நடந்த இடங்களும் அவர்கள் அமர்ந்த வனங்களும் இருந்தன. அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட பௌத்தப் பள்ளிகள் இருந்தன. இவற்றில் பௌத்த சமயத்தில் ஸ்தவிரப்பிரிவைச் சார்ந்த ஆயிரக்கணக்கான பிக்குகள் வசித்தார்கள்'' என்று 'ஹுவான் சுவாங்' குறிப்பிடுகிறார். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அந்த அளவுக்குப் பௌத்தம் சிறந்திருந்தது. இங்கு வசுந்தரா என்னும் பெயர் பெற்ற தாராதேவிக்கு ஒரு கோயில் இருந்தது.

இங்குச் சமணம் சிறந்திருந்தது என்பதற்குச் சான்றாக அருகில் திருப்பருத்திக்குன்றம் உள்ளது. இதை ஜினகாஞ்சி என்றே அழைக்கும் மரபு உண்டு. இராஜசிம்மன் காலத்து எடுக்கப்பட்ட ஒரு சமணக்கோயில் உண்டு. சோழர் காலத்தில் சிறப்புப்பெற்ற கோப்பெருஞ்சிங்கன் ஆட்சியில் 13-ஆம் நூற்றாண்டில் விரிவாக்கப்பட்ட மற்றொரு சமணக் கோயில் இங்கு இருக்கிறது. இதில் விஜயநகர அரசன் புக்கராயன் (1) காலத்தில் அவனது அமைச்சன் இருகப்பன் என்பவன் எடுத்த சங்கீத மண்டபம் ஒன்று உள்ளது. அதில் பண்டைய ஓவியங்கள் உள்ளன. இங்குப் பல சமணத் துறவிகள் வாழ்ந்து இலக்கியத் தொண்டும் சமயத்தொண்டும் புரிந்துள்ளனர்.

காஞ்சி வைணவ சமயத்தின் இருக்கையாக இருந்தது. கச்சி அட்டபுயகரம் புகழ்மிக்கது. உலகளந்த பெருமாள் கோயில், பரமேச்சுர விண்ணகரம் என்னும் வைகுந்த பெருமாள் கோயில், பச்சைவண்ணன் கோயில் முதலிய கோயில்கள் புகழ் மிக்கவை. அருளாளப் பெருமாள் கோயில் என்னும் வரதராசர் கோயில் வைணவப் பெரியார் இராமானுஜரின் வாழ்க்கையில் முக்கிய இடம்பெற்றது.

தொண்டை மண்டலத்துக்கே சிறந்த தலைநகராகக் காஞ்சிமாநகர், 18-ம் நூற்றாண்டுவரை சீரும் சிறப்புமாகத் திகழ்ந்தது. ஆங்கிலேயரின் வருகையால் சென்னை, படிப்படியாகச் சிறப்புப் பெறவேதான் காஞ்சி புகழ் மங்கத் தொடங்கியது. இன்றும் நாட்டுக்கு ஒளியாய், தவம் புரியும் யோகியாய்த் திகழும் காஞ்சிப் பெரியவர்கள் வசிக்கும் புண்ணியத் தலம் காஞ்சி. அப்பெரும் பேறு பெற்றது தொண்டை நன்னாடு. அந்நாட்டில் உள்ள வரலாற்றுத் தலங்கள் எண்ணில. அவற்றின் வரலாற்றை முழுமையாக அறிவது தமிழகத்தின் வரலாற்றையே நன்கு அறிந்ததாகும்.

காஞ்சிபுரம்

'சோமலெ'

கி.மு. 500-க்கு முன்னரே தோன்றி, வரலாறு புகழும் பெருநகரம் காஞ்சிபுரம். ஆளும் மரபினர் பலமுறை மாறியபோதிலும், தலைமுறை தலைமுறையாக இது தலைநகராக இருந்து வந்தது. இதனால் கல்விக்கும் கலைக்கும் இன்றளவும் இந்நகரம் நிலைக்களனாக இருக்கிறது. விண் மறைக்கும் கோபுரங்களும், விண்ணை மறைக்கும் கோயில்களும் காணுமிடமெங்கும் எழில் மிகு காட்சி நல்குகின்றன. இந்நகரின் மக்கள் தொகை ஒன்றேகால் லட்சம்.

காஞ்சிபுரம், காஞ்சீ, காஞ்சி, கச்சி, கச்சிப்பேடு, கச்சியம்பதி, காஞ்சீபுரம், காஞ்சனபுரம், காஞ்சீபுரி, கம்பாபுரி, பல்லவேந்திரபுரி என்ற பல பெயர்கள் இவ்வூருக்கு வழங்கி வந்திருக்கின்றன. இந்நாளில் காஞ்சிபுரம் என்ற பெயரே அரசாங்க வழக்கில் உள்ளது. இவ்வூரைச் சுருக்கமாகக் காஞ்சி என்று குறிப்பிடுகின்றனர். காஞ்சி என்னும் சொல் எண் கோவையுள்ள மகளிர் இடையணி என்ற பொருளையும், எதிர்த்துப் பொருதல் என்ற பொருளையும் உடையது.

தில்லைச் செடிகள் மிக்கிருந்த இடம் தில்லை என்று பெயர்பெற்றதுபோல, காரைச் செடிகள் மிக்கிருந்த இடம் காரைக்குடி ஆனதுபோல, காஞ்சி மரங்கள் மிக்கிருந்த இடமாதலால் இவ்வூர் காஞ்சிபுரம் எனப் பெயர்பெற்றது.

இந்நகரம் சிவகாஞ்சி, விஷ்ணு காஞ்சி, ஜின காஞ்சி, பௌத்த காஞ்சி என்று நான்கு பிரிவுகளாக இருந்தது. சிவகாஞ்சி என்பது இன்றைய பெரிய காஞ்சிபுரம் ஆகும் ; விஷ்ணு காஞ்சி இந்நாளில் சின்ன காஞ்சிபுரம் எனப்படுகிறது. இவை இரண்டும் காஞ்சிபுரம் நகராண்மைக் கழக எல்லைக்குட்பட்டவை. இநத எல்லைக்கு வெளியே உள்ள திருப்பருத்திக் குன்றம் என்ற சிற்றூரே சமணம் வளர்த்த ஜின காஞ்சியாகும். இன்றைய காமாட்சியம்மன் கோயிலைச் சுற்றிய பகுதியே பௌத்த காஞ்சியாக இருந்தது.

பெரிய காஞ்சிபுரம் சென்னையிலிருந்து பெங்களூர் சாலைவழி 48 மைல் (77 கி.மீ.) தொலைவு. உத்தரமேரூரிலிருந்து 28 கி.மீ. வந்தவாசியிலிருந்து 42 கி.மீ. அறக்கோணத்திலிருந்து 28 கி.மீ. திருத்தணிகையிலிருந்து 42 கி.மீ. செங்கற்பட்டிலிருந்து 25 கி.மீ.

தொண்டைநாட்டின் சிறந்த தலைநகராகத் தோன்றி, முற்காலச் சோழ அரசப் பிரதிநிதிகளின் இருப்பிடமாக இலங்கி, ஐந்து நூற்றுண்டுகளுக்குமேல் பல்லவர்களின் தலைநகராகப் பாரெல்லாம் புகழ்பெற்று, பின்னர் பிற்காலச் சோழப் பேரரசின் வடபகுதித் தலைநகராகக் காஞ்சிபுரம் அமைந்தது. ரவிவர்ம குலசேகர பாண்டியன், காஞ்சிபுரத்தில் 1313-ல் முடிசூடிக்கொண்டு தென்னிந்தியாவின் பெரும்பகுதியை ஆட்சி செய்தான் ; பிற்காலத்தில் திருவிதாங்கூர்ச் சீமை என்று பெயர் பெற்ற வேணாட்டை ஆண்ட அரசர்களைப் பற்றிய செய்திகள் காஞ்சிபுரம் கல்வெட்டுக்களிலிருந்து தெளிவாகத் தெரிகின்றன. விஜய நகர அரசர் சிலரும் காஞ்சியிலேயே பட்டங் கட்டிக் கொண்டனர். கம்போடியா நாட்டில் உள்ள கமர் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் இந்திய நகரம் காஞ்சிபுரம் மட்டுமேயாகும்.

தென் இந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ள பலருடைய வாழ்க்கை காஞ்சிபுரத்தோடு ஒன்றியது. திப்புவும் ஹைதரும் இங்கே படுதோல்வியடைந்தனர். கிளைவ் இவ்வூரில் போரிட்டுப் புகழ்பெற்றார். சீரும் சிறப்பும் பெற்றிருந்த கருநாடக நவாப் சாதத் உல்லா கான் சமாதியடைந்தது இவ்வூரிலேயே. இவன் சமாதி, வைகுந்தப் பெருமாள் கோயிலை ஒட்டி அமைந்துள்ளது.

நகரமைப்பு : காஞ்சி கிழமேலில் 8 கி.மீ. தொலைவுக்கும், தென்வடலில் 2 கி.மீ. தொலைவுக்குமாகப் பரவிக் கிடக்கிறது. திம்மராஜப் பேட்டை, முத்தியாலுப்பேட்டை, ஒலிமுகம்மது பேட்டை, ஐயன்பேட்டை, நாயகன் பேட்டை முதலிய பல பேட்டைகள் சூழ்

அமைந்திருப்பது, நடுவே கோயில்களும் வீடுகளும் இருக்க, சுற்றிலும் தொழிற்சாலைகளும் வாணிக நிலையங்களும் அமைந்ததை நினைவூட்டுகிறது.

இந்நகரில் தண்ணீர் தேங்குவதில்லை. கிணறுகளில் ஊறும் நீர் தெளிவாக இருக்கிறது. காஞ்சிபுரத்தில் இன்றும் கிணறுகளுக்கு அடியில் மணற்பரப்பைக் காணலாம். தண்ணீரும் நன்னீராக இருக்கிறது.

தொண்டைமண்டலத்து 24 கோட்டங்களுள் ஒன்று எயிற்கோட்டம். அக்கோட்டத்தின் தலைநகராக விளங்கியது காஞ்சி. எயில் என்ற சொல்லுக்குக் கோட்டை என்று பொருள்.

காஞ்சியின் எயில் நெடுந்தொலைவிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தோகைமயிலைப் போல இருந்தது. நகரின் இருபுறமும் இருந்த ஏரிகள் மயிலின் இறகு போலவும், அடர்த்தியான காடு மயிலின் தோகையைப் போலவும், கோட்டை மதிற்சுவர் மயிலின் வயிறுபோலவும், சின்ன காஞ்சிபுரம் அதன் தலைபோலவும் தோற்றமளித்தன. இதனால் காஞ்சியைப் புலவர் 'தோகை மயில்' எனப் புனைந்துரைத்துள்ளனர்.

சில வீதிகளில் வீதி மட்டத்தைவிட வீடுகள் ஓர் ஆள் உயரத்துக்கு மேற்பட்ட தளத்தில் காணப்படுகின்றன. தேரோடும் தெருக்கள் சூழ்ந்திருக்க வேண்டும் என்னும் பண்டைக் கால நமரமைப்புத் திட்டப்படி பெரிய காஞ்சிபுரத்தில் நான்கு திருவீதிகளும் அமைக்கப்பட்டன. வீட்டுத் திண்ணையிலிருந்து இறைவன் திருவுலா வரும் தேரைப் பார்ப்பதற்கு இந்த அமைப்பு உதவுகிறது. எவ்வளவு மழை பெய்தாலும் இந்த நான்கு திருவீதிகளிலும் தண்ணீர் தேங்குவதில்லை.

தெருப் பெயர்கள் : காஞ்சிபுரத்தில் தெருப் பெயர்கள் அதன் பழமையை நினைவூட்டுகின்றன.

கோயிலின் பெயரால் ஏற்பட்ட தெருக்கள் பல இடங்களில் உள்ளன. சான்று : விளக்கொளிப் பெருமாள் கோயில் தெரு, பச்சை வண்ணப் பெருமாள் கோயில் தெரு, பாண்டவர் பெருமாள் கோயில் தெரு, உலகளந்தார் கோயில் தெரு. புத்தர் கோயில் தெரு, இப்போது காமாட்சி அம்மன் சந்நிதித் தெரு என்ற பெயரைப் பெற்றிருக்கிறது.

பெருமக்கள் பெயரால் சில தெருக்கள் அமைந்துள்ளன. புத்தர்சேரி இப்போது புத்தேரியாகிவிட்டது. திருக்கச்சிநம்பி பெயரால் ஒரு தெரு உண்டு. மணிமேகலை தொடர்புடைய இரண்டு தெருக்கள் உள்ளன. ஒன்று அமுதுபடி தெரு ; மற்றொன்று அறப்பெருஞ்செல்வித் தெரு.

மணிமேகலையின் ஞானகுருவாகிய அறவண அடிகள் பெயரால் அமைந்திருக்கக்கூடிய 'அறவணச் சேரி' இப்போது 'அறப்பணஞ்சேரி' ஆகிவிட்டது.

ஹைதர் அலி பட்டறை வைத்திருந்த பகுதி 'ஐதர் பட்டறைத் தெரு' என்ற பெயரில் இருந்துவருகிறது. விஜயநகர அரசர்களின் திவானாக இருந்த லிங்கப்பையர் பெயரை ஒரு தெரு நினைவுபடுத்துகிறது.

செங்கழுநீர்ப் பூக்கள் பூக்கும் இம்மாவட்டத்தில் செங்கழுநீர்ப்பட்டு என்ற ஊர் இருக்கிறது. காஞ்சிபுரத்தில் செங்கழுநீரோடைத் தெரு என்ற ஒரு தெரு இருக்கிறது. லிங்கப்பையர் வெட்டிய மஞ்சள் நீர்க்கால்வாய் என்ற பெயரில் ஒரு கால்வாய் உண்டு. இது தக்கவாறு பேணப்படவில்லை. அருளாளப் பெருமாள் (வரதராஜப் பெருமாள்) கோயில் கொண்டுள்ள சின்ன காஞ்சிபுரத்தில் அருளாளன் புத்தேரி இருக்கிறது. இது இப்போது அல்லாபுட்டை ஏரி என்று வழங்கிவருகிறது.

தலைநகராகப் பல்வேறு ஆட்சிகளில் காஞ்சிபுரம் இருந்ததால், யானை கட்டும் தெரு, பட்டாளத் தெரு, காவலர் தெரு முதலியன ஏற்பட்டுள்ளன. பல்வகைத் தொழிலாளர் வாழ்ந்த பகுதிகள் சாலியர் தெரு, நிமந்தக்காரர் (கொத்தனார்) தெரு முதலிய பெயர்களைப் பெற்றுள்ளன.

வரதராசப் பெருமாள் கோயிலில் மலையாள நாச்சியார் என்று ஓர் அம்மன் இருக்கிறது. மலையாள நாடு போலத் தோட்டங்கள் சூழ்ந்த வீடுகள் உள்ள ஒரு தெரு 'மலையாளத் தெரு' என்று பெயர்பெற்றிருக்கிறது.

வடமொழி: வடசொல்லுக்கும் தென் சொல்லுக்கும் வரம்பாய் விளங்கும் காஞ்சி என்ற கருத்துப்படக் காஞ்சிப் புராணத்தில் கூறப் பெற்றிருக்கிறது.

ஈராயிரம் ஆண்டுகளாக வடமொழிக்கல்வி இங்கு வளர்ந்து வந்திருக்கிறது. பல்லவர் காலத்தில் இந்தியப் புகழ்பெற்ற பெரிய வடமொழிக் கல்லூரி - காஞ்சி கடிகா - என்ற பெயரில் சிறந்திருந்தது என்று செப்புப் பட்டயங்களும் கல்வெட்டுக்களும் கூறுகின்றன. காமகோடிப் பீடம் காஞ்சியில் உள்ளது. அரசியல் அறிஞரான கௌடில்யரும், வைணவ தத்துவங்களுக்கு விளக்கந்தந்த இராமாநுசரும் கல்வி பயின்றது இங்கேயே. ஆனந்த தீர்த்தரின் துவைத மடமும், 15-ஆம் நூற்றாண்டில் குஜராத்திலிருந்து இங்கு வந்த வல்லபாச்சாரியார் வழியினர், பச்சையப்ப வள்ளல் ஆகியோர் நிறுவிய வடமொழிக் கல்வி நிலையங்களும் இன்றும் உள்ளன. வடமொழியில் பெரும் புலவரான வேதாந்த தேசிகர், அரசாணிபாலை வேங்கடாத்வரி, வக்கயேந்திர முத்துசாமி தீட்சிதர் ஆகியோரும் இங்கு வாழ்ந்திருக்கின்றனர்.

இவர்களுக்கெல்லாம் முன்னோடியாகக் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் பதஞ்சலி முனிவர் இயற்றிய நூலான பதஞ்சலி மாபாடியம் காஞ்சியில் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. மகேந்திரவர்ம பல்லவன் மத்தவிலாசப் பிரகசனம் என்ற நகைச்சுவை நாடகத்தைக் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆக்கினான். இந்நூல்கள் காஞ்சிபுரத்தைப் பற்றிய பல செய்திகளைத் தெரிவிக்கின்றன.

இந்நாளிலும் காஞ்சிபுரத்து அக்கிரகாரங்களில் வடமொழியில் தலைசிறந்த கல்வியாளர்கள் வாழ்கின்றனர். ஐந்நூற்றுக்கு மேற்பட்ட வடமொழி நூல்களை வெளியிட்டுள்ள பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் 1920 முதல் வடமொழிப் பாடசாலையையும், வடமொழியில் பல இதழ்களையும் நடத்தி வருகின்றார்.

தமிழ்: பெரும்பாணாற்றுப்படை, மணிமேகலை, திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி, கலிங்கத்துப்பரணி, சேக்கிழார் பெரியபுராணம், திருப்புகழ் ஆகிய நூல்கள் காஞ்சிபுரத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

மூவர் தேவாரங்களிலும் இத்தலத்துக்குப் பல பதிகங்கள் உள்ளன. பல நாயன்மார்களும் ஆழ்வார்களும் இங்கே பிறந்திருக்கின்றனர். கம்பனுடைய பெயர் இவ்வூரில் கோயில்கொண்டிருக்கும் ஏகம்பன் (ஏகாம்பரன்) என்பதன் சிதைவே என்று கூறுவர். கம்பன் இவ்வூரில் வாழ்ந்தபோது வழிபட்டதாகக் கருதப்படும் சரசுவதி திருவுருவம் ராஜ வீதியில் இருக்கிறது.

18-ஆம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவாசாரியார் இயற்றிய கந்தபுராணம் இவ்வூர்க் குமரகோட்டத்தில் அரங்கேற்றப்பெற்றது. தேவாரத்தை முதலில் அச்சிட்டவர் காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார் ஆவார். அவரிடம் கல்வி பயின்ற பலர் 19-ஆம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சிக்குத் தக்கவாறு உதவியுள்ளனர். திராவிட மாபாடியம் மாதவச் சிவஞான சுவாமிகள் காஞ்சியில் பல்லாண்டுகள் தங்கிக் காஞ்சிப் புராணம் பாடியுள்ளார்.

20-ஆம் நூற்றாண்டு இலக்கியத்திலும் காஞ்சி இடம்பெற்றிருக்கிறது. 'காசி நகர்ப் புலவர் பேசுமுரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' என்பது பாரதி பாடல். காசிப்புலவரின் பேச்சை மதிக்கவல்ல கலைத்திறம் காஞ்சிக்கே உண்டு என்று கவியரசர் பாரதியும் கருதினார் என்பது இதனால் விளங்குகிறது.

பல நூற்றாண்டுகளாக அரசியல் தலைநகராய் இருந்தமையால் காஞ்சியில் தொன்றுதொட்டுப் புலவர்களும் புரவலர்களும் அரசியல் தலைவர்களும் சமயச் சான்றோர்களும் வாழ்ந்துள்ளனர். கடந்த சில நூற்றாண்டுகளின் வரலாற்றை ஆராய்ந்தாலும் இந்தச் சிறப்புப் புலனாகும். கிழக்கிந்தியக் கம்பெனியில் ஆங்கிலேயரிடம் 'துபாஷாக' இருந்த பச்சையப்ப முதலியார் (1754-1794) பெருஞ்செல்வத்தைக் கல்விக்கும், கோயில் திருப்பணிகளுக்கும் செலவிட்டுக் கண்கண்ட வள்ளலாக இன்றும் மக்கள் உள்ளங்களிலே நின்று நிலவுகிறார். காஞ்சிபுரத்திலுள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் இவரது அறக்கட்டளை உண்டு.

அரசியல் துறையில் காஞ்சிபுரத்தின் சிறப்பைப்பற்றி ஒரு தனி நூலையே விரிவாக எழுதலாம். அறிஞர் அண்ணா இவ்வூரினர். இவர் முதலமைச்சராக இருந்தபோது 1968-இல்,

மாவட்டத்தலைநகரம் செங்கற்பட்டிலிருந்து காஞ்சிபுரத்துக்கு மாற்றப்பெற்றது.

பௌத்தம் : கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை பௌத்தமதத்துப் பேரறிஞர்களெல்லாம் ஒருங்கே காஞ்சியில் காணப்பட்டனர். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் காஞ்சிபுரம் மக்கள் கௌதம புத்தரால் இம்மதத்திற்கு மாற்றப் பட்டதாகக் கருதப்படுகிறது. கி.மு. 100-இல் தம்மபதா என்ற துறவியும், கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் அறவண அடிகளும் இங்கு வாழ்ந்தனர். ஹீனயான பௌத்த தத்துவ நூல்களை எழுதிச் சீனாவிலும் திபேத்திலும் ஜப்பானிலும் இன்றும் பாராட்டப்படும் தின்னாகர் கச்சியிலே கல்வி கற்றார்.

குப்தப் பேரரசர்களால் நிறுவப்பெற்ற நாலந்தா பல்கலைக்கழகத் தலைவராயும் பேராசிரியராகவும் இருந்த தர்மபாலர் காஞ்சிபுரத்தினர் என்று வரலாறு கூறுகிறது.

சீனாவில் இருந்த பௌத்த மடங்கள் அனைத்துக்கும் தலைவராக விளங்கிய போதிதர்மர் காஞ்சியின்இளவரசராகஇருந்து,கி.பி.520-இல் இங்கிருந்து சீனாவுக்குச் சென்றார். சீனாவிலும் ஜப்பானிலும் பரவியுள்ள தியான பௌத்தம் அல்லது ஜென் பௌத்தம் என்ற பௌத்த மதப் பிரிவைத் தோற்றுவித்தவரும் இவரே. கொரியாவில் பௌத்தம் பரவியதும் இவரால் தான் என்று தெரிகிறது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கு வந்த யுவான்சுவாங் என்ற சீன யாத்திரிகர் இக் காஞ்சிபுரத்தில் அப்போது 100 பௌத்த மடங்களும், பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பௌத்தத் துறவிகளும் இருந்ததாக எழுதியிருக்கிறார்.

சீனம் முதலிய நாடுகளில் பௌத்தத்தைப் பரப்பிய முதல் நால்வர் காஞ்சிபுரத்தாரே. இவருள் குறிப்பிடத்தக்கவர் நரசிங்கவர்ம பல்லவர் காலத்தவரான வச்ரபோதிஎன்பவர்ஆவர். மலேசியா வாழ் சீனர் இன்றும் காஞ்சிபுரம் என்று கேட்ட அளவில் மரியாதை செலுத்துகின்றனர். தம்மபதாவின் படம் மலேசியா நாட்டுச் சீனர் பலரது இல்லங்களை அணி செய்கிறது. பௌத்தப் பேரறிஞர்களின் அறிவுக் கூடமாக அமைந்ததால், காஞ்சி, உலகெங்கும் ஒலிக்கும் பெயராயிற்று.

'நகரேஷு காஞ்சி' : மகாகவி காளிதாஸன் இந்நகரின் சிறப்புக் கருதி நகரங்களில் சிறந்தது காஞ்சிதான் என்று பொருள்பட 'நகரேஷு காஞ்சி' என்று குறிப்பிட்டான்.

இந்துக்களுக்கு முக்தி தருவன ஏழு தலங்கள். அவையாவன : அயோத்யா, மத்ரா, ஹரித்வார், காசி, அவந்திகா, துவாரகை, காஞ்சிபுரம். அவற்றுள் மூன்று சிவ தலங்களாகவும், மூன்று வைணவ தலங்களாகவும், காஞ்சி ஒன்றுமட்டுமே சிவ-விஷ்ணு தலங்களைக் கொண்டிருப்பதும் கூர்ந்து நோக்கத்தக்கது.

ஐம்பூதத் தலங்களில் காஞ்சிபுரம் ஒன்று. ஏகம்பநாதர் கோயிலில் இருப்பது பிருதிவி லிங்கம் ஆகும்.

ஆதிசங்கராச்சாரியார் புகழ் பரப்பும் ஐந்து பீடங்களுள் ஒன்று காஞ்சியில் நிறுவப்பெற்றது. இது 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழ நாட்டுக்கு மாற்றப்பட்ட பின்னரும், இன்றளவும் காஞ்சி காமகோடி பீடாதிபதி என்றே அந்த ஆதீனத் தலைவர்கள் அழைக்கப்பட்டு வருவது, காஞ்சியின் சிறப்பை நன்கு புலப்படுத்துகிறது. சங்கர மடம், அகோபில மடம், வானமாமலை மடம், உத்தராதி மடம், உதாசி மடம், முதலிய ஆதீனங்களின் கிளைமடங்களும் ஞானப்பிரகாசர் மடத்தின் தலைமை நிலையமும் இந்நகரில் உள்ளன.

சமயத் துறையில் இவ்வளவு பெருமை பெற்றிருப்பதால் நாள்தோறும் ஏதாவது ஒருகோயிலில் திருவிழா நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது. இதனால் ''விழவறாத் திருக்காஞ்சி'' என்று ஒரு புலவர் பாடியுள்ளார்.

தென்கலை வடகலைச் சண்டைகளால் திருவிழாக்களை அமைதியாக நடத்துவது காஞ்சிபுரம் போலீசின் முக்கியமான கடமையாக இருந்து வருகிறது.

திருவிழாக்களைக் கண்டு களிக்கவும், எண்ணற்ற கோயில்களை வழிபடவும் நாள்தோறும் சில ஆயிரம் மக்கள் காஞ்சிக்கு வருகின்றனர். இவர்கள் தங்குவதற்காக முன்னோர்களால் கட்டப்பெற்ற சத்திரங்களில் சில இன்னும் இருக்கின்றன. அரசர்கள் கட்டிய சத்திரங்கள், ஆதீனங்கள் அமைத்த சத்திரங்கள், பலசமூகங்கள் தம் இனத்தவர்க்கே என்று ஏற்படுத்திய

சத்திரங்கள் - இப்படிப் பல சத்திரங்கள் உள்ளன. குஜராத்தி சத்திரம் போன்று பல சத்திரங்கள் வட இந்தியர்களால் கட்டப் பெற்றிருக்கின்றன. காஞ்சிபுரம் ஜவுளி வணிகர் பொது நிதியிலிருந்து ஜவுளிக்கடைச் சத்திரம் கட்டப்பெற்று நன்கு நடைபெற்று வருகிறது.

தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களும், மங்களா சாசனம் பெற்ற திவ்ய தேசங்களும் இந்நகரில் பல உள்ளன. இக்கோயில்களைப் பற்றி இனி, தனித்தனியே கூறுவோம்.

இன்று பல கோயில்களில் காணப்படும் திருவுருவங்களும் சந்நிதிகளும் தனித்தனிக் கோயில்களாக இருந்ததாகவும், அவற்றைச் சுற்றிப் பெரு மதில் எழுப்பப் பெற்றதாகவும், அவற்றையெல்லாம் தனித்தனியே எண்ணினால் 108 பெருமாள் கோயில்களும், 1008 சிவன் கோயில்களும் இருக்கும் என்றும் ஆராய்ச்சியாளர் சதாசிவ பண்டாரத்தார் ஒருமுறை என்னிடம் கூறினர். இப்போது உள்ள கோயில்களின் எண்ணிக்கை 124. பெரிய கோயில்கள் 40-க்கு மேல் இருக்கும். இவற்றுள் 20 கோயில்கள் பத்தாம் நூற்றுண்டுக்கும் முற்பட்டவை.

இத்தகைய பழமையான கோயில்களைப் பாதுகாக்கத் தொல்பொருள் ஆராய்ச்சித்துறை முனைந்துள்ளது. இவை மேலும் அழிவுறாமலும் நன்னிலையில் இருக்கவும் விழிப்புடன் கவனிக்க வேண்டுவது அரசாங்கத்தார் பெருங்கடமையாகும்.

உயர்ந்த கோபுரங்கள் பல இடங்களில் இருப்பதால் இவற்றின் தொகுப்பான தோற்றம் நெடுஞ்சாலையிலிருந்து பார்க்கும்போது எந்தத் திக்கிலும் காஞ்சிபுரத்துக்கு பத்து கி.மீ. முன்னரே நல்லதொரு காட்சியாக அமைந்து நல்லோர் உள்ளங்களிலே நிலைத்து விடுகிறது.

முஸ்லிம் ஆட்சி : முஸ்லிம்கள் செல்வாக்குப் பெற்றிருந்தபோது காஞ்சியில் 12 மசூதிகள் கட்டப்பெற்றன. இவற்றுள் பழமையானது ஏகாம்பரநாதர் கோயிலுக்கு எதிரில் இருப்பதாகும். இது மசூதியாக்கப் பட்ட கோயில். வைகுந்தப் பெருமாள் கோயிலுக்கு அருகேயும் இத்தகைய மசூதி ஒன்று இருக்கிறது. இவற்றில் பாரசீக மொழியில் காணப்படும் கல்வெட்டுக்கள் முஸ்லிம் ஆட்சியின் வரலாற்றை ஓரளவு கூறுகின்றன.

ஏகாம்பரநாதர் கோயில் : காஞ்சிபுரத்திலுள்ள இறைவர்களுள் முதன்மையானவர் கச்சியேகம்பரே. அவருடைய கோயில்தான் காஞ்சிபுரத்திலேயே மிகப் பெரிய கோயில். இது பெரிய காஞ்சிபுரத்தில் இருக்கிறது. பரப்பு 30 ஏக்கர். 7-ஆம் நூற்றுண்டுக்கு முற்பட்டது. கி.பி. 1509-இல் கிருஷ்ணதேவராயரால் 9 நிலைகளுடைய தென் கோபுரம் கட்டப்பெற்றது. இதன் உயரம் 192 அடி. (திருச்சி மலைக் கோட்டை 271 அடி). இக்கோபுரத்தின் மீதிருந்து, காஞ்சி நகரைக் காண்பது கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமையும். இந்த வாயிலில் பொருத்தப்பட்டிருக்கிற கதவு 7 ஆள் உயரம் இருக்கும். இவ்வளவு பெரிய கதவை எப்படித்தான் நிலைநிறுத்தினரோ !

7-ஆம் நூற்றுண்டுக்கும் 16-ஆம் நூற்றுண்டுக்கும் இடையே இக்கோயில் விரிவாக்கப் பெற்றிருக்கிறது. வாயில்கள் நேருக்குநேராக இல்லை. கோபுரங்களும் ஒன்றுக்கொன்று நேர் எதிரில் அமையக் காணேம். கருவறை மட்டும் பழமையானது என்றும், பிற பகுதிகள் பல அரசர்களால் வெவ்வேறு காலங்களில் கட்டப் பெற்றன என்றும் தெரிகிறது. புத்தர் கோயில் ஒன்றை இடித்து அதன் சுவர் இக்கோயிலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் கருதப்படுகிறது. இரண்டாவது மைசூர்ப் போர் நடைபெற்றபோது ஆங்கிலேயர் இக்கோயிலைக் கோட்டையாகப் பயன்படுத்தினர்.

இறைவன் பெயர் ஏகாம்பரநாதர். இறைவி பெயர் ஏலவார்குழலி. அம்மை, மணலை லிங்க வடிவில் அமைத்து வழிபட்டபோது கம்பையாறு பெருக்கெடுத்து வந்தது. அப்போது மணல் லிங்கத்தின் உருவம் அழியாதிருக்க உமை அதைத் தழுவிக்கொண்டாள். அதனால் இறைவன் திருமேனியில் அம்மையின் மார்புத் தழும்பும் வளைத்தழும்பும் படிந்ததாகக் காஞ்சிப் புராணம் கூறுகிறது. இதுபற்றிய விவரங்களைக் காஞ்சிப்புராணம் தழுவக் குழைந்த படலத்தில் காண்க. திருமங்கையாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப் பெற்ற நிலாத் திங்கள் துண்டத்தான் என்ற பெருமாள் சந்நிதியும் இப்பெரிய சிவன் கோயிலில் இருக்கிறது. விஜய நகர அரசர்கள் கட்டிய ஆயிரக்கால் மண்டபத்

தில் பல தூண்கள் அழிந்து இப்பொழுது 616 கால்கள் மட்டுமே உள்ளன. வெள்ளி, தங்க முலாம் பூசப்பட்ட வாகனங்களும், பச்சையப்ப முதலியார் கட்டிய கலியாண மண்டபமும் அதில் அமைக்கப்பட்ட அவரது திருவுருவமும், மாவடி பிராகாரத்திலுள்ள திருமுறைக் கோயிலும், கரிகால் சோழனின் திருவுருவமும் இங்குக் காணத்தக்கன. மோஹஞ்ச தாரோவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது போன்ற ஆவுடையாரில்லா லிங்கம் இக்கோயிலில் உள்ளது.

இக்கோயிலில் நடைபெறும் பெரிய திருவிழா பங்குனி உத்திர நாளில் நடைபெறும் திருக் கல்யாணம் ஆகும். அன்று இறைவர்க்கும் இறைவிக்கும் திருமணம் நிகழும் இடத்திலேயே ஏழை மக்களும், பிறர்க்குத் தெரியாதவாறு திடீரென்று திருமணம் முடிக்க விரும்பும் கருத் தொருமித்த காதலர்களும் தாலிகட்டிக் கொள் வர். இத்திருமணங்கள் சட்டப்படி செல்லுபடி யாகின்றன.

ஏகம்பம் என்பதே ஏகாம்பரம் ஆக்கப் பட்டது. இச்சொல் இக்கோயிலிலுள்ள மாமரத் தைக் குறிக்கும். நால்வகைச் சுவையுள்ள மாம் பழங்கள் ஒரேமரத்தில் கிடைக்கின்றன. சுந் தரர் இழந்த கண்ணைப் பெற்றுத் தேவாரம் பாடிய தலம் இதுவே. சம்பந்தர் திருநாவுக் கரசர் பதிகங்களிலும், மாணிக்கவாசகர் திருவாசகத்திலும் இத்தலம் போற்றப்படு கிறது. கச்சிமயானம் என்னும் தலம் இக் கோயிலுள் இருக்கிறது.

வரதராசப் பெருமாள் கோயில் : காஞ்சியி லுள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் செல்வச் செழிப்பு மிக்கது இக்கோயிலே. (இவ்வாறு நாம் சொல்லுவதால், ஏனைய கோயில்களின் நிலை இதனினும் மோசமானது என்பதை அன்பர்கள் உணரவேண்டும்.) இந்நகரிலுள்ள வைணவர் கோயில்களுள் இதுவே பெரியது. கல்வெட்டுக்கள் இக்கோயிலை அருளாளப் பெரு மாள் கோயில் என்று வழங்குகின்றன. இவ் வொரு கோயிலில் மட்டும் 357 கல்வெட்டுக்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோயில் சின்ன காஞ்சிபுரத்தில் இருக் கிறது. எடுப்பான தோற்றமுடையது. ஆழ் வார்களாலும் வேதாந்த தேசிகராலும் மங் களா சாசனம் செய்யப்பெற்றது. வைகாசிப் பௌர்ணமியில் நடைபெறும் கருடசேவைக்குப் பல்லாயிர மக்கள் வெளியூர்களிலிருந்து வருவர்.

விசயநகர அரசர்கள் காலத்துக் கட்டப் பெற்ற கல்யாண மண்டபம் இக்கோயிலில் முதல் பிராகாரத்தில் அமைந்திருக்கிறது. இதன் நூறு தூண்களும் நுட்பமான வேலைப்பாடுடை யவை. மன்மதன் ரதி காம லீலைகள் செதுக்கப் பட்டிருக்கின்றன. இம்மண்டபத்தினுள் விஜய நகர அரசர்களுக்குச் சிறப்பானதான ஆமை யின் உருவம் பதித்த மண்டபம் இருக்கிறது. ஆங்காங்கே விசயநகர அரசர்களின் இலச்சினை யான பன்றி உருவம் காணப்படுகிறது.

இக்கோயிலில் ஆழ்வார் பலருக்குச் சந்நிதி களும் நந்தவனங்களும் உள்ளன. வளத்தில் தன்னிகரற்று விளங்கும் இத்தோப்பு, கண்ட வரை மயக்கும் தன்மையது. தங்கப்பல்லி, பல மொழிகளில் கல்வெட்டுக்கள் ஆகியவை யும் ஒவ்வொருவரும் பார்க்கவேண்டியவை யாகும். இக்கோயிலைக் கோட்டையாகப் பயன் படுத்திய இராபர்ட்டுக் கிளைவ் காணிக்கை கொடுத்த ஒரு கிரீடமும், பிளேஸ் என்ற ஆங்கி லேயக் கலெக்டர் அன்பாக அளித்த அணிகலன் களும் குறிப்பிடத்தக்கன. ஒவ்வொரு திருவிழா-வுக்கும் பெருமாளுக்கு இவற்றை அணிவிக் கிறார்கள்.

இக்கோயிலில் சந்நிதிகள் நேருக்கு நேராக இல்லை. வரதராசப் பெருமாள், திருக்கச்சி நம்பிக்குக் காட்சி கொடுத்ததாகக் கூறுவர்.

வரதராசப் பெருமாள் திருவுலா வரும் போது அப்பெருமானுக்கு முன்பு தென்கலை வைணவர் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை ஓதிக்கொண்டு செல்ல, இறைவனுக்குப் பின்னே வடமொழி வேதம் ஓதுவோர் செல்வது வழக் கம். ''பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலே'' என்பது ஆன்றோர் வாக்கு.

1890-க்கு முன் இக்கோயில் தென்கலைக் கோயிலாக இருந்து, பிறகு வடகலைக் கோயி லாயிற்று. இடித்தது போக தென்கலை நாமம் 65 இடங்களில் கருங்கல்லில் காணப்படுகிறது. இக்கோயிலைப்பற்றி, சென்னை உயர்நீதி மன்றத் தில் வழக்கு நடைபெற்றது. தீர்ப்புப்படி, 'ஸ்ரீ சயிலேச' என்ற தனியன் (சிறப்புப்பாயிரம்)

சொல்லிப் பிறகு திருவாய்மொழி ஓதப்படு கிறது.

காஞ்சிபுரம் இட்டளி:

இக்கோயில் மடப்பள்ளியில் காஞ்சிபுரம் இட்டளி தயாரிக்கப்படுகிறது. பச்சையரிசி, உளுத்தம் பருப்பு, சீரகம், உப்பு, மிளகு, பெருங்காயம், நெய், தயிர் ஆகியவற்றை நல் வெண்ணெய்யுடன் மாவிலேயே கலந்து செய் கின்றனர். இந்த இட்டளியை ஒரு வாரம் கழித்துக்கூட உண்ணலாம்.

கயிலாயநாதர் கோயில் : பல்லவர்களு டைய சிறந்த சிற்பவேலைக்குச் சான்றாக உள்ள கோயில்களுள் இது முதலிடம் பெறுகிறது.

இக்கோயில் பெரிய காஞ்சிபுரத்தின் மேற்கு எல்லையில் இருக்கிறது. இது கி.பி. 700 முதல் 720 வரை பல்லவ மன்னனாக இருந்த இராஜ சிம்மனால் கட்டப்பெற்றது. இவன் காலத்தில் சிற்பக்கலை சிறந்து விளங்கியதால் இக்கோயி லும் கலைப் பொலிவுடன் திகழ்கிறது. தொலை விலிருந்து பார்த்தாலே கயிலாய மலை போன்ற தோற்றம் தெரிகிறது என்று கயிலாயத்தைக் கண்டவரும், இமயமலையின் அடிவாரத்தில் சில ஆண்டுகள் வாழ்ந்தவருமாகிய விபுலானந்த அடிகள் கூறியுள்ளார்.

இக்கோயிலை ஆர்வமுடன் கட்டிய பல்லவ மன்னன் கனவில் சிவபெருமான் தோன்றி, 'நீ கட்டிய கோயிலுக்குத் திருமுழுக்குச் செய்யும் நாளில் யான் வர இயலாது ; அன்று வேறொரு பெரியார் கட்டியுள்ள பெரும் கோயிலில் எழுந் தருள வேண்டும்' என்று சொல்லி, பூசலார் நாயனார் மனக்கோயிலின் மாட்சியை வையக மறியச் செய்த வரலாறு, சேக்கிழார் வாக்கால் விளங்குகிறது.

இங்கு 16 பட்டையுள்ள சிவலிங்கம் இருக் கிறது. இந்த லிங்கத்தைச் சுற்றி உள்ள அகச் சுற்று (அந்தராளம்) மிகவும் குறுகலானது. சுற்றின் நுழைவாயிலுக்குள் படுத்துத்தான் உள்ளே செல்லவேண்டும். வெளிமதிலை வலம் வந்து யாளித் தூண்களையும் வீரர் வடிவங்களை யும் காணலாம். வாயிலில் $4\frac{1}{2} \times 4\frac{1}{2}$ அடி அளவில் அமைந்த பத்துக் கற்கோயில்கள் தனித் தனியே இருக்கின்றன. இவ்வாறு பல கோயில் கள் உள்ளேயும் இருந்தன. ஆனால், இவை தொகுப்பாய் இருப்பதால் இவற்றைக் காண் பார் ஈடுபட்டுச் சிந்தனை செய்வதில்லை. இவை யாவும் தனித்தனிக் கோயில்களாக இருந்தன. இவற்றில் பழமையானது அகத்தியர் கோயில். இக்கோயிலே தமிழ்நாட்டில் அகத்தியருக்கு எடுக்கப்பெற்ற முதற்கோயில் என்பது கல்வெட் டறிஞர் சதாசிவ பண்டாரத்தார் முடிபா கும். இச்சிறு கோயில்களின் சிற்பச் சிறப்பும், பொலிவுள்ள உருவங்களின் அழகும் உட்கோயி லில் செதுக்கப்பட்டுள்ள யாழ் வாசிக்கும் சிற்பங் களும், சாளுக்கியக் கல்வெட்டும் ஒவ்வொரு வரும் காணவேண்டியவை. சிவனுடைய சோமாஸ்கந்த வடிவம் சிதைந்தநிலையில் இருப் பினும் அஜந்தாவின் சிற்பச் சிறப்பை நினை வூட்டுகிறது.

இக்கோயிலில் வேலை செய்த சிற்பிகளைச் சிறையிட்டுச் சாளுக்கிய அரசன் தன் நாட்டில் இவ்வாறே கோயில் அமைத்ததாக வரலாறு உண்டு.

அனேகதங்காவதம் :

கயிலாயநாதர் கோயிலுக்கு அருகே அனேகதங்காவதம் என்ற கோயில் இருக்கிறது. இங்கு வழிபடுபவர்கள் கல்விச் செல்வத்தை மிகுதியாகப் பெறுவர் என்பது நம்பிக்கை. இச் சிவன் கோயில் 11-ஆம் நூற்றாண்டின் இறுதி யில் முதல் குலோத்துங்க சோழனால் கட்டப் பெற்றது. இக்கோயிலில் வழிபட்டு இசையாற் றல் பெற்றவரே காஞ்சிபுரம் நயினாப்பிள்ளை என்பர். இக்கோயில், வட இந்தியாவிலுள்ள அனேகதங்காவதம் என்ற சிவன்கோயில் நினை வாகக் கட்டப்பெற்றது. இவ்வடநாட்டுக் கோயில், சம்பந்தர் தேவாரம் பெற்றது.

சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில் : காஞ்சிபுரத்தில் மிகப் பழமையான கோயில் இதுவே. யதோக்தகாரிப் பெருமாள் கோயில் என்றும் இதற்குப் பெயர் உண்டு. பெரும்பாணாற்றுப்படையிலும் பதஞ்சலி மாபாடியத்திலும் இது குறிப்பிடப்பட்டிருக் கிறது.

இக்கோயில் திருக்கச்சிநம்பி தெருவிற்கு அருகில் அமைந்திருக்கிறது.

திருமழிசை ஆழ்வார், அவருடைய சீட ராகிய கணிகண்ணர் ஆகியோர் வரலாறு

க்களோடு இந்தக் கோயில் இணைந்தது. அடியார் சொன்னவண்ணம் ஓரிரவிருக்கை என்ற இடத்திற்கு இறைவன் சென்று, பின்னர் ஆழ்வாரின் வேண்டுகோளுக்கிணங்கக் காஞ்சிக்குத் திரும்பியதாக வரலாறு. இவ்விழா தை மக நட்சத்திரத்தில் நடைபெறுகிறது.

இக்கோயிலுக்குத் திருவெஃகா என்ற பெயரும் உண்டு.

காமாட்சியம்மன் கோயில் : காஞ்சிபுரத்தில் பல சிவன் கோயில்கள் இருப்பினும் அவற்றில் அம்மனுக்குத் தனிச் சந்நிதி கிடையாது. தனிக் கோயில் அமைந்த காமாட்சியம்மன் மாட்சி, மிகப் பெரிது. 'காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி' என்ற சொற்றொடர் இந்த அம்மன்பால் மக்களுக்குள்ள ஈடுபாட்டைத் தெரிவிக்கிறது.

இக்கோயில் பெரிய காஞ்சிபுரத்தில் இரயில் நிலையத்திலிருந்து சிறு தொலைவில் மேற்குத் திக்கில் இருக்கிறது.

இக்கோயிலில் பங்காரு காமாட்சி அல்லது சொர்ண காமாட்சி என்ற தங்கத்தால் ஆன உற்சவத் திருவுருவம் இருந்தது. ஹைதர்அலி அந்தத் திருவுருவத்தைக் கைப்பற்ற 1767-இல் முயன்றான். அதை அறிந்த நாயக்க அரசர்கள் தங்கத் திருவுருவத்தைத் தங்கள் தஞ்சைக்குத் தந்திரமாகக் கொண்டுபோயினர். அத்திருவுருவம் தஞ்சை நகரில் மேலவீதியில் அதற்கெனக் கட்டப்பெற்ற காமாட்சியம்மன் கோயிலில் இருக்கிறது. 1941-ஆம் ஆண்டில் சங்கராச்சாரிய சுவாமிகள் இந்தத் திருவுருவத்தின் சாயலாகப் பாதங்களைமட்டும் செய்து காஞ்சியில் வைத்திருக்கிறார்கள். இந்தப் பாதங்களைப் பார்க்கும்போது, ''பாதங்கள் இவையென்னில் படிவங்கள் எப்படியோ?'' என்ற இலக்கிய அடிகள் நினைவுக்கு வருகின்றன.

ஆதிசங்கரர் தம் ஆதீனத்தை 8-ஆம் நூற்றாண்டில் இக்கோயிலிலேயே நிறுவினர். சங்கரர் திருவுருவம் இங்கு உண்டு. முழுநிலா நாளில் சங்கரர், வீதிஉலா வரும் விழா நடைபெறுகிறது. சங்கராச்சாரியார் மடம் 1686 வரை இவ்வூரிலேயே இருந்தது.

இக்கோயிலின் துவாரசக்தியின் திருவுருவத்தைத் தட்டினால் இசையொலி கேட்கிறது.

கோயில் ஓம் என்ற அமைப்பில் கட்டப்பட்டிருக்கிறது. வெள்ளிக்கிழமைகளில் எள் விழ இடம் இராது. பௌத்த சமய அடையாளங்கள் இக்கோயிலில் காணப்படுவதும், மணிமேகலை வரலாற்றுக்கும் இக்கோயிலுக்கும் தொடர்பு உண்டு என்ற செவிவழிச் செய்தி நிலவுவதும், கோயிலின் அருகே பௌத்தத் திருவுருவங்கள் இருப்பதும், இக்கோயில் 16-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது என்று ஆராய்ச்சியாளர் கூறுவதும் சிந்தனைக்குரியன.

அருகேயுள்ள கௌசிகேசுவரர் கோயிலில் உள்ள லிங்கத்தைக் காசியில் போல எல்லோரும் தொட்டு வழிபடுகின்றனர்.

காமாட்சியம்மன் கோயிலைச் சுற்றியே நான்கு இராஜ வீதிகளும் அமைந்திருப்பதால் திருவுலாப் புறப்படும் சைவ வைணவ இறையுருவங்கள் அனைத்தும் காமாட்சியம்மனைச் சுற்றியே வருகின்றன.

கருமாறிப் பாய்தல் என்ற திருவிழா இக்கோயிலில் ஒரு காலத்தில் நடைபெற்றது. கச்சியில் காண்பதற்கு அரிய காட்சியென்று இதைப் பற்றிச் சில நூல்களில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

உலகளந்த பெருமாள் கோயில் : திருவூரகம், திருநீரகம், திருக்காரகம், திருக்கார்வானம் முதலியவற்றோடு சேர்ந்து இக்கோயிலில் மங்களாசாசனம் பெற்ற ஐந்து தலங்கள் உள்ளன. எனவே, இது வைணவர்களுக்கு மிக முக்கியமான பதியாகும். வைகுந்த ஏகாதசி இக்கோயிலில் பெரிய திருவிழா.

திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் இக்கோயிலில் அர்ச்சகராக இருந்தார் என்று கூறுவர்.

கரிகால் சோழன் இக்கோயிலில் கட்டியதாகச் சொல்லப்படும் மண்டபம் அழிந்துவிட்டது.

குமர கோட்டம் : பெரிய காஞ்சிபுரத்தில் தேரோடும் தெருக்கள் நாற்புறமும் சூழ அமைந்த முருகன் கோயில் இது. கந்தபுராணம் அரங்கேற்றப்பெற்றது இங்கேயே ஆகும். அருணகிரிநாதர் திருப்புகழும் இத்தலத்துக்கு

உண்டு. கந்த ஷஷ்டி, வைகாசி விசாகத் திருவிழாக்கள் இங்கு நடைபெறுகின்றன. கந்த ஷஷ்டியின்போது கந்தபுராணச் சொற்பொழிவு திருப்பனந்தாள் அருணந்தித் தம்பிரான் ஆணைப்படி - ஆண்டுதோறும் நடைபெறுகிறது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் கார்த்திகை விசாகம் ஷஷ்டி நாள்களிலும் மக்கள் திரளாக வந்து இங்குள்ள முருகன், பழனியாண்டவர் திருவுருவங்களை வழிபட்டு வருகின்றனர்.

வைகுந்தப் பெருமாள் கோயில்: காஞ்சிபுரத்திலுள்ள வைணவக் கோயில்களில், இக்கோயில் 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்லவ மன்னனான இரண்டாம் நந்திவர்ம பல்லவனால் கட்டப்பெற்றது. இக்கோயில் பெரிய காஞ்சிபுரத்தின் கீழைக்கோடியில் அமைந்து பல்லவர் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

இக்கோயிலில் ஒன்றின்மேல் ஒன்றாக மூன்று விமானங்கள் உள்ளன. மேன்மாடியில் அரங்கநாதர் பள்ளிகொண்டிருக்கிறார். திருமங்கையாழ்வார் பதிகம் உண்டு. இக்கோயில் திருச்சுற்று உட்புறச் சுவரில் உள்ள பல்லவர் வரலாற்றைக் குறிக்கும் சிற்பங்கள் சிறந்த வேலைப்பாடுள்ளவை. இவ்வாறு அமைந்துள்ள காட்சியை வேறு எந்தக்கோயிலிலும் காண இயலாது.

இவற்றுக்குப் புராண ஐதீகங்கள் கூறப்பட்டு வந்தன. அக்கருத்துத் தவறு என்பதையும், சிற்பங்கள் பல்லவ அரசப் பரம்பரையைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் பல்லவ - சாளுக்கியப் போர்க் காட்சிகளையும் தெரிவிப்பன என்பதையும் பிரெஞ்சுக்காரரான பேராசிரியர் துப்ராய் 1930-ஆம் ஆண்டு அளவில் நிலைநாட்டினார். இப்போது நம் நாட்டவரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். சமணரைக் கழுவேற்றுவது போன்ற சிற்பத்தை இக் கோயிலில் காணலாம்.

கயிலாயநாதர் கோயிலும், வைகுந்தப் பெருமாள் கோயிலும் ஒன்றுக்கொன்று நேராக அமைக்கப்பட்டுள்ளன. சில நூற்றாண்டுகளுக்கு முன் இவற்றை இணைக்க நேரான ஒரு சாலை இருந்தது.

திருமேற்றளி: அப்பரும் சுந்தரரும் பாடியுள்ள இத் தேவாரத் தலம் பிள்ளையார் பாளையத்தில் இருக்கிறது. சம்பந்தர் பாடல்பெற்ற ஒரு சந்நிதியும் இக்கோயிலில் இருக்கிறது.

இறைவன் திருமேற்றளிநாதர்; இறைவி காமாட்சி அம்மை. தலப்பெயர் கச்சித் திருமேற்றளி.

சித்திர குப்தர் கோயில்: தமிழ்நாட்டில் சித்திர குப்தருக்கு ஏற்பட்ட கோயில் இது ஒன்றே.

இக்கோயில் பெரிய காஞ்சிபுரத்தில் நெல்லுக்காரத் தெரு இரட்டை மண்டபத்துக்குக் கிழக்கே இருக்கிறது. இக்கோயில் சைவர், வைணவர் ஆகிய இரு சமயத்தார்க்கும் பொதுவானது.

சித்திர குப்தர், கேது கிரகத்தின் தலையான இறைவன் ஆவார். நாம் ஒவ்வொருவரும் செய்யும் செயல்களைக் கணக்கெழுதுபவர் இவரே என்பது மக்கள் நம்பிக்கை. சித்திரா பௌர்ணமி விழா இக்கோயிலில் நடைபெறுகிறது.

விளக்கொளிப் பெருமாள் கோயில்: இக்கோயில் தூப்புல் என்ற இடத்தில் அமைந்தது. திருத்தண்கா என்ற பெயரும் இந்த இடத்திற்கு உண்டு.

இங்கே மூலவராகிய திருமால் திருமகள் மண்மகள் இருவரோடு கோயில் கொண்டிருக்கிறார். ஆண்டாளுக்கும் மரகதவல்லித் தாயாருக்கும் தனிச் சந்நிதிகள் உள்ளன.

வைணவ இலக்கியங்கள் பலவற்றைத் தமிழில் தந்துள்ள தூப்புல் வேதாந்த தேசிகர் (1268-1370) இத்தலத்தில் அவதரித்தவரே. அவருக்கு இங்கு ஒரு கோயில் உண்டு.

தூப்புல் என்பது வேள்வி செய்வதற்குத் தேவைப்படும் ஒருவகைப் புல். அப்புல்லின் பெயர், புல் நிறைந்த இடத்துக்குக் காலப் போக்கில் பெயராக அமைந்தது.

காசி விசுவநாதர் கோயில்: உதயசூரியனின் ஒளி இங்குள்ள இறைவன் மீது படுகிறது.

ஐராவதேசுவரர் கோயில்: இக்கோயில் கச்சபேசுவரர் கோயிலுக்கு அருகே உளது. காஞ்சி

யிலுள்ள மிகப்பழமையான கோயில்களுள் இது ஒன்று. இது இராஜசிம்ம பல்லவன் காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இங்கு 16 பட்டை லிங்கம் உளது.

கச்சபேசுவரர் கோயில் : குமரகோட்டத்திற்கு அருகில் அமைந்துள்ள இக்கோயில் செங்குந்தர்க்குச் சிறப்பாக உரியது. இது காசியப புத்தர் கோயிலாக இருந்தது என்பர். பௌத்த உருவம் பொறித்த கல் தூண்கள் காணப்படுகின்றன.

கண் நோய், தலைவலி ஆகியவற்றால் அல்லல் படுபவர்கள் இந்தக் கோயிலுக்கு நேர்ந்துகொள்வர். நான்குமுக லிங்கமும், அதன் பழைமையான அமைப்பும், மகாவிஷ்ணுவுக்கு உட்கோயிலும், தல விருட்சத்தின் சுற்றுச் சுவரில் மேற்குப் பக்கத்திலுள்ள பலகணியும் காணத்தக்கவை.

மதங்கேசுவரர் கோயில் : வைகுந்தப் பெருமாள் கோயிலுக்குத் தென் மேற்கே தென்னந் தோப்புகளுக்கிடையே இக்கோயில் இருக்கிறது. இது 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இராஜசிம்ம பல்லவனால் கட்டப்பெற்ற சிவன் கோயில். முத்தீசுவரர் கோயிலைப் பார்த்தால் இக் கோயிலைப் பார்க்கவேண்டியதில்லை. இரட்டைப் பிள்ளைகள்போல இவை கட்டடக்கலையில் ஒற்றுமையாக உள்ளன. இக்கோயிலில் பூசையொன்றும் நடைபெறுவதில்லை.

முத்தீசுவரர் கோயில் *: காஞ்சிபுரத்திலுள்ள அழகான திருவுருவமாகிய முத்தீசுவரர் இங்குக் கோயில் கொண்டிருக்கிறார். இக் கோயில் வைகுந்தப் பெருமாள் கோயிலருகே வடமேற்கில் இருக்கிறது.

இக்கோயில் கி.பி. 730 அளவில் நந்திவர்மனால் கட்டப்பெற்றது. தரைக்கு மேல் எட்டடி உயரத்தில் அமைந்த மேடைமீது கோயில் முழுவதும் கட்டப்பெற்றிருக்கிறது. கருவறை எட்டடி சதுரமாக இருக்கிறது. கருவறையின் சுற்றுச் சுவர்களின் வெளிப்புறத்தில் சிலசிற்பங்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

சொக்கீசர் கோயில் : 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாம் பராந்தகச்சோழனால் கட்டப்பெற்று முற்காலச் சோழர்களின் கட்டடக் கலையின் தனி இயல்புகளை இக்கோயில் காட்டுகிறது. இது காமாட்சியம்மன் கோயிலுக்கு அருகே உள்ளது.

தமிழ்நாட்டில் கொடும்பாளூரிலும் நார்த்தாமலையிலும் இலங்கையில் பொலன்னறுவையிலும் காணப்படும் சிவன் கோயில்கள் இதே காலத்தவையென்று அவற்றின் அழகான அமைப்பிலிருந்து தெரிகிறது.

கருவறையின் உயரம் 20 அடி. அது 14 அடி சதுரமாக அமைந்து தோற்றப் பொலிவோடு இருக்கிறது. இக்கோயில் முழுவதிலும் கூரையை நிறுத்துவதற்கு மட்டும் அல்லாமல், உத்திரங்களாகப் பயன்படவும் தூண்களே நிறுத்தப்பட்டிருக்கின்றன.

சோழ, பல்லவ, விஜயநகரக் கட்டடக் கலைகளின் தன்மைகளை ஆழ்ந்து ஆராய விரும்புவோருக்குக் காஞ்சி ஏற்ற இடம். இவற்றுள் சோழத் திருப்பணிகள் மிக அரிதாக உள்ளன. சொக்கீசர் கோயில் அக்காலத்துச் சிற்பிகள் கருங்கல்லில் கலைத்திறனைக் காட்டும் வன்மைபெற்றிருப்பதற்குச் சான்றாகக் கட்டப்பெற்றது.

---

* ஆதாரம் : டாக்டர் மினாட்சி எழுதி அவர் இறந்தபின், இந்திய அரசாங்கத்தாரால் அச்சிடப் பெற்ற, 'A Guide to the Architecture of Kanchi.'

காஞ்சிபுரம ஏகாம்பரேசுவரர் கோயில்

குட நீராட்டு விழா நிகழ்ச்சி

இக்கோயில் 1900-ஆம் ஆண்டில் நகரத்தார்களால் திருப்பணி செய்யப் பெற்றது. எனவே, இப்போது இந்தக் கோயில் குட நீராட்டு விழாவை நகரத்தார்களே நடத்திவைக்க முன்வர வேண்டுமென்று காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள் விரும்பி 1978-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கீழ்க்கண்ட 36 பேர்களுக்கும் மேற்படி மடத்தி லிருந்து கடிதங்கள் அனுப்பப் பெற்றன.

1. திரு. அ. ராம. அ. லெ. முத்துவீரப்ப செட்டியார்
6, ஆலம்பட்டார் வீதி
தேவகோட்டை

2. திரு. இ. கரு. ராம. சுவாமிநாதன் செட்டியார்
இரவிசேரி பாதைத் தெரு
தேவகோட்டை

3. திரு உ. மு. சுப. லெ. மெ. மெய்யப்ப செட்டியார்
கண்டதேவிச் சாலை
தேவகோட்டை

4. திரு. ராம. அரு. ராம. அரு. இராமநாதன் செட்டியார்
சத்திரத்தார் வீதி
தேவகோட்டை

5. திரு. மெ. லெ. மெ. நாச்சியப்ப செட்டியார்
திருப்பத்தூர்ச் சாலை
தேவகோட்டை

6. திரு. அழ. அரு. சொக்கையா செட்டியார்
ஜமீன்தார் இல்லம்
வட்டாணம் சாலை
தேவகோட்டை

7. திரு. உ. ராம மெ. சுப. சேவு. அ. அண்ணாமலைச் செட்டியார்
சத்திரத்தார் வீதி
தேவகோட்டை

8. திரு. ராம. மெ. லெ. நாராயணன் செட்டியார்
கருத்தாவூரணி வடக்கு
தேவகோட்டை

9. திரு. சித. பழனியப்ப செட்டியார்
வங்காளம் ராமன் செட்டியார் வீதி
தேவகோட்டை

10. திரு. உ. ராம. மெ. சு. மெ. சேவு. அ. அருணாசலம் செட்டியார்
கண்டதேவிச்சாலை
தேவகோட்டை

11. திரு. உ. ராம. மெ. சு. செ. சேவு. சேவுகன் செட்டியார்
சிவன் கோயில் வடக்கு
தேவகோட்டை

12. திரு. முத்து கரு. அரு. பழ. லெ. வெங்கடாசலம் செட்டியார்
தியாகிகள் சாலை
தேவகோட்டை

13 திரு. ப. வ. ராம. குழந்தையன் செட்டியார்
நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை
சென்னை-600034

14. திரு. அ. க. அ. சித். அழ. சிதம்பரம் செட்டியார்
ஹாடோஸ் சாலை
சென்னை-600 006

15. திரு. சா. நா. அ. சொ. அ. அண்ணாமலை செட்டியார்
மெ. மெ. வீதி
காரைக்குடி

16. திரு. மு. மெ. முத்துராமன் செட்டியார்
சு. ராம. வீதி
காரைக்குடி

17. திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார்
மகாலட்சுமி மில்ஸ்
பசுமலை
மதுரை-4

18. திரு. ராம. முத்துப்பழநியப்ப செட்டியார்
நூல் வியாபாரம்
நவபத்கான தெரு
மதுரை

19. திரு. மு. சிங்காரம் செட்டியார்
லெட்சுமி பேப்பர் ஸ்டோர்ஸ்
கீழ ஆவணி மூலவீதி
மதுரை

20. திரு. ஏ. மு. விசுவநாதன் செட்டியார்
புதுவயல்

21. திரு. லெ. சித. லெ. பழநியப்ப செட்டியார்
கண்டனூர்

22. திரு. வி. என். சிதம்பரம் செட்டியார்
கமலா தியேட்டர்
வடபழநி
சென்னை-600 026

23. ராஜா சர் முத்தையா செட்டியார்
செட்டிநாடு ஹவுஸ்
அடையாறு, சென்னை-600 020

24. திரு. ஏ. என். வெங்கடாசலம் செட்டியார்
கருத்தாவூரணி பிள்ளையார் சந்நிதி
தேவகோட்டை

25. திரு. மு. அ. பழநியப்ப செட்டியார்
பள்ளத்தூர்

26. திரு. சுப. அ. நடராசன் செட்டியார்
நகரத்தார் சங்கம்
வடக்குச் சித்திரை வீதி
மதுரை

27. திரு. பெரி. சின்னக்கருப்பன் செட்டியார்
கதிரகம்
குளிபிறை
புதுக்கோட்டை மாவட்டம்

28. திரு. மு. ப. மு. பழநியப்ப செட்டியார்
கொப்பனாபட்டி
புதுக்கோட்டை மாவட்டம்

29. திரு ஏ. ஆர். கிருஷ்ணன் செட்டியார்
பாகனேரி

30. திரு. ராம. முருகப்ப செட்டியார்
நடராசபுரம்

31. திரு. பெரியதம்பி முதலியார்
லெட்சுமி விலாஸ்
ஜவுளி வியாபாரம்
காந்தி சாலை
காஞ்சிபுரம்

32. திரு. யு. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
ஆணையாளர்
இந்துசமய அறநிலையத் துறை
சென்னை-600 034

33. திரு. நாராயணசாமி
உதவி ஆணையாளர்
இந்து சமய அறநிலையத் துறை
காஞ்சிபுரம்

34. துணை ஆணையாளர்
இந்து சமய அறநிலையத் துறை
சென்னை-600 034

35. திரு. மு. அழ. அழகப்ப செட்டியார்
221, அப்பர் பாலஸ் ஆர்ச்சர்டு
பெல்லாரி சாலை
பெங்களூர்-560 001

36. திரு. வி. வைத்திய சுப்பிரமணிய ஐயர்
நவசுஜா
ராஜா அண்ணாமலைபுரம்
சென்னை-600 028

மடத்திலிருந்து வந்த கடிதம் வருமாறு:

HIS HOLINESS
SRI KANCHI KAMAKOTI PEETADHIPATHI
JAGADGURU SRI SANKARACHARYA SWAMI MUTT
KANCHIPURAM

Camp : சிவகாஞ்சி **Date 23-8-1978**

இப்பவும் காஞ்சீபுரத்தில் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் திருப்பணி நடைபெற்று வருகிறது. 1979 பிப்ரவரி மாதம் 1 உ அதாவது தை மாதம் 19உ குருவாரம் வஸந்த பஞ்சமி புண்ய காலத்தில் கும்பாபிஷேகம் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. திருப்பணி கமிட்டிமூலம் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஒரு கமிட்டி அமைக்க

ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் கும்பாபிஷேகக் கமிட்டியில் தாங்களும் கலந்துகொள்ள வேண்டுமென்று ஸ்ரீ மஹா ஸன்னிதானம் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கும்பாபிஷேக கமிட்டியின் ஆலோசனைக் கூட்டம் வருகிற செப்டம்பர் மாதம் 2உ சனிக்கிழமை அமாவாசையன்று ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ மடத்தில் மாலை 3½ மணிக்கு ஆசாரிய ஸ்வாமிகள் முன்னிலையில் நடக்க இருக்கிறது. அதுசமயம் தாங்களும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் படியான ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் அபிப்ராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒ-ம்) டி. என். கிருஷ்ணமூர்த்தி
மானேஜர்

இதைத் தொடர்ந்து, ஒரு கூட்டம் 2-9-78-இல் காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள் மடத்தில் நடைபெற்றது. அதன் விவரம் பின்வரும் கடிதத்திலிருந்து தெரியவரும் :

உ
சிவமயம்

KOVILOOR
MADALAYAM

லெ. அழகுசுந்தரம் செட்டியார்

தொலைபேசி :
அலுவலகம் 30 377
வீடு 23 093
அலுவலகம் : பசுமலை, மதுரை 625004
வீடு : 5 வல்லபாய் ரோடு
மதுரை 625002.

காளயுக்தி ஆவணி மாதம் 17-ஆம் தேதி (2-9-78) ஜகத்குரு காஞ்சி ஸ்ரீ காமகோடி சங்கராச்சாரியார் சுவாமிகள் மடத்திலிருந்து அழகுசுந்தரம் எழுதிக்கொண்டது. இப்பவும்,

காஞ்சிபுரம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் சமேத ஏகாம்பரநாதர் கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நாளது வருஷம் தை மாதம் 19-ஆம் தேதி (1-2-1979) நடக்க இருக்கிறது. இது விஷயமாக காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் மடத்தில் 2-9-78-ஆம் தேதி ஸ்ரீ ஆச்சாரியார் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் முன்னிலையில் கீழ்க்கண்டவர்கள் கூடி ஆலோசிக்கப் பெற்றது.

1. ஸ்ரீ அ. ராம. அ. லெ. அ. முத்துவீரப்ப செட்டியார்
2. ஸ்ரீ சேவு. அ. அண்ணாமலை செட்டியார்
3. ஸ்ரீ மெ. மு. முத்துராமன் செட்டியார்
4. ஸ்ரீ லெ. அழகுசுந்தரம் செட்டியார்
5. ஸ்ரீ வ. நா. சிதம்பரம் செட்டியார்
6. ஸ்ரீ மெ. லெ. ராம. லெ. நாராயணன் செட்டியார்
7. ஸ்ரீ எம். எம். முத்தையா
8. ஸ்ரீ மு. அழ. அழகப்ப செட்டியார்

மகா கும்பாபிஷேகத்தை நகரத்தார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் உபயமாகச் செய்வதெனத் தீர்மானிக்கப் பெற்றது. இது விஷயமாக ஏற்பாடுகள் செய்வதற்கு நகரத்தார்களின் பொதுக்கூட்டம் நாளது வருஷம் ஆவணி மாதம் 30-ஆம் தேதி (15-9-78) மாலை 5 மணிக்குக் கோவிலூர் மடாலயத்தில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப் பெற்றது. அது போல் நாளது வருஷம் ஆவணி மாதம் 30-ஆம் தேதி (15-9-78) மாலை 5 மணிக்குக் கூட்டம் நடைபெறும். அதற்கு நகரத்தார் பெருமக்கள் அனைவரும் வரவேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

வேணும்
ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஏகாம்பரநாதர் துணை

இதற்குப் பிறகு, கோவிலூரில் 96 ஊர் நகரத்தார் கூட்டம் அறிவித்து, எல்லா ஊர் நகரத்தார்களுக்கும் அழைப்பு அனுப்பப் பெற்றது. மேற்படி கூட்டத்தின் விவரம் பின்வரும் அறிக்கையில் காண்க :

சிவமயம்

காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோவில்

கும்பாபிஷேக ஆலோசனைக் கூட்டம்

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம் சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் 15-9-78 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குக் கோவிலூர் மடாலயத்தில் நடந்தது. அவ்வமயம் மகாலெட்சுமி மில் அதிபர் திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையில் கீழ்க் கண்ட நகரத்தார் பெருமக்கள் கலந்து கொண்டார்கள்.

1.	திரு.	லெ. அழகுசுந்தரம் செட்டியார்	மதுரை
2.	,,	அ. மு. மு. அருணாசலம் செட்டியார்	சென்னை
3.	,,	மு. அழ. அழகப்ப செட்டியார்	பெங்களூர்
4.	,,	சா. நா. அ. சொ. அண்ணாமலை செட்டியார்	காரைக்குடி
5.	,,	சா. கணேசன்	,,
6.	,,	உ. ராம. மெ. சுப. சேவு. அண. அண்ணாமலை செட்டியார்	தேவகோட்டை
7.	,,	அழ. அரு. சொக்கையா செட்டியார்	,,
8.	,,	அ. ராம. அ. லெ. அ. மு. வீ. முத்துவீரப்ப செட்டியார்	,,
9.	,,	உ. ராம. மெ. சு. மெ. சேவு. அ. அருணாசலம் செட்டியார்	,,
10.	,,	மெ. லெ. மெ. நாச்சியப்பன்	,,
11.	,,	மெ. லெ. ராம. லெ. நாராயணன்	,,
12.	,,	வடு. சுப. அண. அ. முத்தையா	,,
13.	,,	அரு. கி. கிருஷ்ணன் செட்டியார்	பாகனேரி
14.	,,	இராம. முத்துப்பழனியப்ப செட்டியார்	,,
15.	,,	எல். சோமு	நற்சாந்துபட்டி
16.	,,	வ. நா. சிதம்பரம் செட்டியார்	இராங்கியம்
17.	,,	நா. அருணாசலன் செட்டியார்	கண்டவராயன்பட்டி
18.	,,	கும. சுப. சு. சுப்பிரமணியன் செட்டியார்	கீழச்சிவற்பட்டி
19.	,,	ப. ராம. பழனியப்ப செட்டியார்	சொக்கலிங்கம்புதூர்
20.	,,	சிவகுமாரன் பழ. ப. பழனியப்ப செட்டியார்	கோனாபட்டு
21.	,,	பெரி. சுப. மலையாண்டி செட்டியார்	அரிமளம்
22.	,,	செ. லெ. முத்துச்செல்லப்ப செட்டியார்	,,

கூட்டத்தில் முடிவு செய்யப்பெற்றவை

கும்பாபிஷேகத்தையும் நாளது வருடம் தை மாதம் பத்தொன்பதாம் நாள் (1-2-1979) வியாழக் கிழமையன்று நகரத்தார் பெருமக்கள் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்துவதென்றும், அதற்காகக் கீழ்கண்ட குழுக்களை அமைத்துச் செயல்படுத்தி வேலைகளைத் துவங்குவதென்றும் முடிவு செய்யப் பெற்றது.

(1) நிருவாகக் குழு

1.	திரு.	லெ. அழகுசுந்தரம் செட்டியார்	தலைவர்
2.	,,	அழ. சித. சிதம்பரம் செட்டியார்	துணைத்தலைவர்
3.	,,	உ. ராம. மெ. சுப. சேவு. அண. அண்ணாமலை செட்டியார்	செயலர்
4.	,,	சா. நா. அ. சொ. அண்ணாமலை செட்டியார்	பொருட்காப்பாளர்

(2) கும்பாபிஷேக மேற்பார்வைக் குழு

1. திரு. அ. ராம. அ. லெ. அ. மு. வீ. முத்துவீரப்ப செட்டியார்
2. ,, சா. நா. அ. சொ. அண்ணுமலை செட்டியார்
3. ,, சா. கணேசன்
4. ,, மெ. செ. ச. மு. மெ. முத்துராமன் செட்டியார்

(3) காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோவில் கும்பாபிஷேக மலர்க் குழு

1. திரு. அ. மு. மு. அருணுசலம் செட்டியார்
2. ,, சா. கணேசன்
3. ,, சோமலெ.

(4) காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோவில் நகரத்தார் கும்பாபிஷேகக் குழு

110 பேர் கொண்ட குழு அமைக்கப்பெற்றது.

மேற்கண்ட கும்பாபிஷேகக் குழுவில் இன்னும் தேவையானவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளுவதெனத் தீர்மானிக்கப் பெற்றது.

(5) 1-வது தீர்மானத்தில் கண்ட நிருவாகக் குழு உறுப்பினர்கள் திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார், திரு. அழ. சித. சிதம்பரம் செட்டியார், திரு. உ. ராம. மெ. சுப. சேவு. அண. அண்ணுமலை செட்டியார், திரு. சா. நா. அ. சொ. அண்ணுமலை செட்டியார் - 4 பேர்களும் பாங்க் ஆப் மதுரை லிட்., சென்னை (மயிலாப்பூர்), காரைக்குடி கிளைகளில் கணக்குத் திறந்து, கணக்கை மேற்படி நான்கு பேர்களில் யாரேனும் இருவர் Operate செய்துகொள்ளுவதென்று தீர்மானிக்கப் பெற்றது.

உ. ராம. மெ. சுப. சேவு. அண
அண்ணுமலை செட்டியார்,
செயலர்.

லெ. அழகுசுந்தரம் செட்டியார்,
தலைவர்.

இதன் பின்னர், நகரத்தார்கள் இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் திரு. யு. சுப்பிரமணியன், ஐ. ஏ. எஸ். அவர்களையும், துணை ஆணையாளர் திரு. அர்ஜுனன் அவர்களையும் சந்தித்தனர். அதன் பயனுகப் பின்வரும் ஆணை பிறப்பிக்கப் பெற்றது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

அனுப்புவோர்
திரு. யு. சுப்ரமணியன், ஐ. ஏ. எஸ்.
ஆணையாளர்
சென்னை-34

பெறுவோர்
திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார்
பசுமலை, மதுரை

மு. மு. 89094/78 நாள் 4-12-78

ஐயா,

பொருள் : அனுமதி—குடமுழுக்குவிழா —
அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயம் —
காஞ்சிபுரம் நகர்மற்றும் வட்டம் —
செங்கை மாவட்டம்.

பார்வை : (1) துணை ஆணையர் ந. க.
9612/78/நாள் 28-11-78

காஞ்சிபுரம் நகர், அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயக் குடமுழுக்குவிழாச் செலவு முழுவதையும் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் வகுப்பினர் தனிப்பட்டவர்களிடமிருந்து கிடைக்கும் நன்கொடை மூலமாகவும் வியாபாரிகளிடமிருந்து கிடைக்கும் விளம்பரத் தொகை மூலமாகவும் பெற்றுக் குடமுழுக்குவிழா நடத்த பிரிவு 23 படி அனுமதி வழங்கப்படுகிறது.

(ஒப்பம்) புலியூர் உடையான்
ஆணையாளருக்காக

வ 4/12

நகல்

(2) துணை ஆணையாளர், சென்னை-34

(3) உதவி ,, , காஞ்சிபுரம்

(4) செயல் அலுவலர், அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயம், காஞ்சிபுரம் நகர் மற்றும் வட்டம், செங்கை மாவட்டம்

5/6 உபரிகள்.

திருப்பணி வேலையாக, இன்றியமையாத பழுதுகள் பார்க்கப்பட்டன. இப்பொறுப்பை திரு. பெரியதம்பி முதலியார் அவர்களைத் தலைவராகக்கொண்ட குழு ஏற்றுக்கொண்டது.

அரசாங்க மானியம் ரூ. 30,000-மும் காஞ்சி சங்கராச்சாரியார் சுவாமிகள் மடத்திலிருந்து ரூ. 13,000-மும் உண்டியல் வருமானத்திலிருந்து ரூ. 17,000-மும், பணத்தைப் பாங்கில் போட்டு இருந்ததில் கிடைத்த வட்டி ரூ. 3,000-மும், திருப்பணிக் குழு வசூலிலிருந்து கிடைத்ததுமாக எல்லாம் சேர்த்து ரூ. 1,50,000 அளவில் செலவு செய்து இன்றியமையாத பழுதுகள் பார்க்கப் பட்டதாகத் தெரிகிறது.

காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் வேண்டுகோளின்படி பக்தர்கள் வழங்கிய பொருள்களைக் கொண்டு, மேற்படி மடத்திலிருந்து மூலஸ்தான விமான கலசத்தைத் தங்கத்தில் அமைத்துக் கொடுத்தார்கள்.

கும்பாபிஷேகப் பொறுப்பு முழுவதையும் நகரத்தார்கள் ஏற்றுக்கொண்டனர். அதற்காக ரூபாய் இரண்டு லட்சத்துக்குமேல் செலவிட்டுள்ளனர்.

இந்த ஏற்பாடுகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்ததில் பெரும்பங்கு திருவாளர் அ. ராம. அ. லெ. முத்துவீரப்பசெட்டியார் அவர்களுக்கும், திரு. மு. மெ. முத்துராமன் அவர்களுக்கும், கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களுக்கும் உரியது. இவர்களும் ஏராளமான ஏனையோரும் இளைஞர்களும் தொண்டர்களும் ஒரு மாதத்துக்குமேல் காஞ்சிபுரத்திலேயே தங்கியிருந்து எல்லா வேலைகளையும் செம்மையாகச் செய்தார்கள். தங்குவதற்கு விஜயலெட்சுமி கல்யாணமண்டபத்தினர் வசதி செய்துகொடுத்தனர். காடு மண்டிக்கிடந்த கச்சியேகம்பன் கோயிலின் மூன்றும் பிராகாரத்தை புல்டோசர் வைத்து வெட்டிச் சீர்செய்து, மண் கொட்டி, துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு யாகசாலைக் கொட்டகை மிகச் சிறப்பாகவும் கலையழகுடனும் பெரிய அளவிலும் போடப்பெற்றது,

நகரத்தார்கள் இவ்வாறு சிறப்பாக யாகசாலை அமைத்திருந்ததை, இதயம் பேசுகிறது என்ற வார இதழ், பின்வருமாறு பாராட்டி எழுதியுள்ளது.

"மயன் மாளிகைபோலப் பிரதான யாகசாலை காட்சியளித்தது. 800 கலசங்கள் வைத்து 107 சிவாசாரியார்கள் ஒருங்கே எல்லா மறைகளையும் ஓதி இறவாத எம்பிரானை அக்னி வழியே வழிபட்டு எல்லா இடங்களிலும் எழுந்தருளப் பிரார்த்தித்து பூரண ஆவர்த்தி நடத்தியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது."

தேவார திருமுறை அரங்கு நல்ல முறையில் பாகனேரி திரு முத்துப்பழனியப்ப செட்டியார் அவர்களால் ஏற்பாடு செய்யப்பெற்றது.

விழாவையொட்டி 30—1—79 மாலையில் ஒரு சமயப் பேரவையை நகரத்தார்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீலஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் சமயப் பேரவையைத் தொடங்கி வைத்து அருளுரை யாற்றினார்கள். அருள்மொழி அரசு, திருப்பணிச் செம்மல் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் இசையுரை வழங்கினார்கள். புதன்கிழமை (31—1—79) மாலை திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ காஞ்சி தொண்டைமண்டல ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் அவர்களும் யாகசாலையில் கலந்துகொண்டார்கள். மற்றும்தமிழ்ப்பேராசிரியர் திரு தெ ஞானசுந்தரம் திரு. ம. வே. பசுபதி (குமரகுருபரன் ஆசிரியர்), மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன் முதலியோர் சமயப் பேரவையில் கலந்துகொண்டனர்.

கும்பாபிஷேகம் உரிய நாளில் உரிய நேரத்தில் இனிது நடைபெற்றது. காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் முன்னின்று நடத்திவைத்தார்கள். கோவிலூர் ஆதீனகர்த்தர் ஸ்ரீ இராமநாத ஞான தேசிகர் அவர்களும் காஞ்சி தொண்டை மண்டல ஆதீனகர்த்தர் அவர்களும் காஞ்சிபுரம் நாராயண சேவாசிரமத்து கோபாலானந்தா சுவாமிகள் அவர்களும் எழுந்தருளியிருந்தனர். நகரத்தார்கள் ஆடவரும் பெண்டிருமாகத் திரளாக வந்திருந்தனர். பரந்துவிரிந்த ஏகாம்பரேசுவரர் கோயிலில் லட்சக்கணக்கான மக்கள் நிரம்பி வழிந்து கும்பாபிஷேக விழாவைக் கண்டு மகிழ்ந்தனர்.

நகரத்தார்களுக்கும் வந்திருந்த ஏனையோருக்கும் யாகசாலை நாட்களிலும் குடமுழுக்கு நாளிலும், உணவு உறையுள் ஏற்பாடு செய்து கொடுக்கப்பெற்றது.

கலசங்களில் புனித நீர் விடப்பட்ட பிறகு, கச்சிஏகம்பன் கருவறையில் அபிஷேகம் நடைபெற்றது. நகரத்தார் பிரதிநிதிகளான திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார், கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன், திரு. சேவு. அ. அண்ணாமலைச் செட்டியார் ஆகியோர்க்கு, கச்சிஏகம்பன் சந்நிதியில் சிவாசாரியார்கள் முன்னிலையில் பரிவட்டங்கள் கட்டப்பெற்றன. பிறகு அவர்கள் கோயில் மரியாதைகளுடன் அவர்களுடைய இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லப்பெற்றனர்.

1900-ஆம் ஆண்டில் திருப்பணி செய்த குடும்பத்தின் பிரதிநிதியான திரு. ம. லெ. ராம நாராயணன் செட்டியாருக்கு, யாகசாலையில் ஏகாம்பரேஸ்வரர் கோயில் சார்பாகப் பரிவட்டம் கட்டி மரியாதை செய்யப்பெற்றது.

அன்று மாலையில் மகாபிஷேகமும் திருக்கல்யாணமும் இரவில் ஐம்பெருங்கடவுளர் திருவீதி உலாவும் இனிது நிகழ்ந்தன.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள், நகரத்தார்களை அழைத்து, கும்பாபிஷேகத்தை இனிது நடத்திக் கொடுத்ததற்காக அவர்களைப் பாராட்டினார்கள். நகரத்தார் பிரதிநிதிகளான திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார், கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன், திரு. சேவு. அ. அண்ணாமலைச் செட்டியார் ஆகியோர்க்குப் பொன்னாடை போர்த்தி, காமாட்சியம்மன் கோயில் பிரசாதமும் வழங்கப்பெற்றது. நகரத்தார்கள் மேன்மேலும் செழிப்பாகவும் வளமாகவும் வாழ்ந்து இது போன்ற பல திருப்பணிகளை இனியும் செய்து வரவேண்டுமென்று புதுப் பெரியவர்கள் ஆசீர்வதித்தார்கள்.

திரு. பெரியதம்பி முதலியார் அவர்களைத் தலைவராக் கொண்ட திருப்பணிக் குழுவினர் காஞ்சிபுரம் ஜவுளி நிறுவனங்களுக்குச் சொந்தமான விடுதியில் நகரத்தார் பெருமக்களுக்கு ஒரு வரவேற்பு விருந்துநடத்தி, அவர்கள் குடமுழுக்கு விழாவைச் செம்மையாக நடத்தியதற்குப் பாராட்டி, வந்திருந்த நகரத்தார் அனைவர்க்கும் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தனர்.

ஸ்ரீ நாராயண சேவாசிரமத்திலும் நகரத்தார்களுக்கு ஒரு வரவேற்பு நடத்தப்பெற்றது.

கும்பாபிஷேக நிதி வசூல் செய்வதில் தலைவர் திரு. லெ. அழகு சுந்தரம் செட்டியார் அவர்களும், திரு. அ. மு. மு. அருணாசலம் செட்டியார் அவர்களும், திரு. சேவு. அ. அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், திரு. சா. நா. அ. சொ. அ. அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், திரு. அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார் அவர்களும் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

மலர்க்குழுவின் தலைவராக திரு. அ. மு. மு. அருணாசலம் செட்டியார் அவர்கள் பொறுப்

பேற்று, விளம்பரங்கள் பெறவும் பிற வகைகளிலும் உறுதுணையாக இருந்தார்கள். குழுவின் செயலாளராக டி. ஐ. ஏ. எம். ஹவுஸ் நிர்வாக அலுவலர் திரு. ஆர். எம். அருணாசலம் அவர்கள் இருந்து, விளம்பரப் பொறுப்புகளையும் நிர்வாக வேலைகளையும் கவனித்து உதவினார்கள்.

மலர்க்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் வருமாறு:

1. உ. ராம. மெ. சுப. சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்

2. சா. நா. அ. சொ. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்

3. கம்பன் அடிப்பொடி அவர்கள்

4. சோமலெ அவர்கள்

உ. ராம. மெ. சுப. சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நன்கொடை வசூலில் போல, விளம்பரங்களைப் பெறுவதிலும் மிக்க ஆர்வம் காட்டியது பாராட்டுக்கு உரியது.

கம்பன் அடிப்பொடி அவர்கள் தங்கள் முதிர்ந்த வயதையும் உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாது இரண்டு மாதங்களுக்குமேல் இப்பணிக்காக ஒதுக்கி தங்களுடைய புலமையையும் அனுபவத்தையும் கொண்டு கும்பாபிஷேகமும் யாகசாலையும் இனிது நிகழவும் சிறப்பான கட்டுரைகளுடனும் பயனுள்ள விவரங்களுடனும் மலர் உருவாகவும் செய்த தொண்டுகள் நன்றியுடன் குறிப்பிடத்தக்கன.

இவ்வாறு கும்பாபிஷேகம் இனிது நிறைவேறப் பல வகையாலும் உதவிய, ஒத்துழைத்த அனைவர்க்கும் கச்சியேகம்பன் திருவருளை வேண்டுகிறோம்;

ஸ்ரீ நாராயண சேவாசிரமம்

நரசிம்மராவ் தெரு, பெரிய காஞ்சிபுரம்

கேரளத்தில் பெரும்புகழ் பெற்ற ஸ்ரீ நாராயணகுரு என்ற ஞானியின் சீடரான சுவாமி கோவிந்தானந்தா இந்த ஆசிரமத்தை 1917-ல் நிறுவினர். சுவாமி கோவிந்தானந்தா தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு காஞ்சிபுரத்துக்கு வந்திருந்தார். அப்போதுதான் மலேசியாவிலிருந்து பிள்ளையார் பட்டி சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் காஞ்சிபுரத்துக்கு வந்து எதிர்பாராத விதமாக சுவாமிகளைச் சந்தித்தார்கள். சுவாமிகளுடைய புகழை மலேசியாவிலேயே அறிந்ததால், அவர்கள் சுவாமியின் விருப்பம் அறிந்து ஆசிரமம் ஏற்படுத்த ஓர்இடம் வாங்கிக் கொடுக்க முடிவுசெய்தார்கள். இப்போது ஆசிரமம் உள்ள இடம் சப்பாத்தி முள் காடாக இருந்தது. இடத்தைப் பார்வையிட்ட மறுநாளே விலைபேசி வாங்கிப் பத்திரமும் பதிந்தாகிவிட்டது. உடனே வேலி கட்டி, காடு அழித்து, கீற்றுக் கொட்டகை போட, திரு. சோமசுந்தரம் செட்டியார் ஏற்பாடு செய்தார்கள்.

அடுத்த சில மாதங்களில் காஞ்சிபுரத்தில் காலரா நோய் பெரிதும் பரவி, ஹரிஜனங்களும் மற்றவர்களும் ஏராளமான பேர் இறந்தனர். சுவாமி கோவிந்தானந்தா, காலரா நோய் வாய்ப்பட்ட பலருக்கும் மருந்து கொடுத்து அவர்களைக் காப்பற்றினர். அதனால் அவர் புகழ் மேலும் பரவியது. பொது மக்களுக்கு மருத்துவப் பணிசெய்ய, எல். எம். பி படித்த டாக்டர் இருவரைச் சுவாமிகள் நியமித்தார்கள். 1922-ல் ஆத்மானந்தா சுவாமிகள் ஆயுர் வேதத்தைப் பரப்பினர்கள். மாணவர் சிலரும் இங்கே தங்கிப் படிக்க ஏற்பாடு செய்யப் பெற்றது.

திரு சோமசுந்தரம் செட்டியார் இந்த விவரங்களை அறிந்து மகிழ்ந்து மாதம் தோறும் ஆசிரமத்துக்கு 100 ரூபாய் நன்கொடை வழங்க முன்வந்தார். சுவாமிகளின் வாக்குப்படி, திரு. சோமசுந்தரம் செட்டியாருக்கு ஆண் குழந்தையில்லை என்ற குறை நீங்கி இரு ஆண் மக்கள் பிறந்தனர். உடனே திரு. சோமசுந்தரம் செட்டியார், 1928-ல் மலேசிய நாட்டில் தைப்பிங் என்ற ஊரில் ஓர் ஈயச் சுரங்கத்தை விலைக்கு வாங்கி அந்த வருமானத்தை, ஸ்ரீ நாராயண சேவாசிரமத்துக்கு ஆண்டுதோறும் வழங்கி வந்தார்கள். 1941-ல் உலகப் போர் மலேசியாவுக்குப் பரவி, மலேசியாவிலிருந்து பணம் வருவது தடைப்பட்டது. ஸ்ரீ நாராயண சேவாசிரமத்தின் வளர்ச்சி தடைப்படக்கூடாதே என்று கருதி, திரு. சோமசுந்தரம் செட்டியார் புதுக்கோட்டையில் வீடுகள் வாங்கி அந்த வருமானத்தை ஆசிரமத்துக்கு வழங்கி வர ஏற்பாடு செய்தார்கள். சமாதி, ஆலயம், வைத்தியசாலைக் கட்டிடம் முதலியவற்றையும் கட்டிக் கொடுத்தார்கள்.

1926-ல் நாட்டரசன் கோட்டை அரு. த. கண்ணப்ப செட்டியார் அவர்கள் ஒரு கட்டிடம் கட்டிக்கொடுத்திருக்கிறார்.

1931-ல் கிழப்பூங்குடி, ஒக்கூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த நகரத்துப் பெண்மக்கள் சிலர் ஆளுக்கு ஓர் அறை கட்டிக் கொடுத்தனர்.

இப்போது நான்கு துறவிகள் உள்ளனர். சில பிள்ளைகள் இலவசமாகத் தங்கி, பள்ளிகளில் படித்து வருகிறார்கள். வைத்தியசாலைக்கு நாள்தோறும் பல நூறு பேர் வந்து பயனடை கின்றனர். சுவாமி கோபாலானந்தா அவர்கள் தலைமையில் ஆசிரமம் இனிது நடைபெற்று வருகிறது. இவர், கோவிலூர் மடாலயத்தில் வேதாந்த பாடம் பயின்றும் நகரத்தார்கள் தொடர்பு மிகுதியாகப் பெற்றும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தை மாதம் உத்தர நட்சத்திரத்தில் ஸ்ரீ மத் கோவிந்தானந்த சுவாமிகளுக்கும் ஸ்ரீ மத் ஆத்மானந்த சுவாமிகளுக்கும் குருபூசை நடைபெறுகிறது. குருபூசை நாளில் காலையில் சமாதி அபிடேகம், மாகேஸ்வர பூசை, அன்னம் பாலிப்பும் மாலையில் சொற்பொழிவு களும் இன்னிசை நிகழ்ச்சிகளும் உண்டு.

உ

குருவே துணை

காஞ்சிபுரம் ஸ்ரீ நாராயண சேவாசிரமத்தில்

நிகழ் காளயுக்தி ஆண்டு தைத் திங்கள் 20-ஆம் நாள்

2—2—1979 வெள்ளியன்று நடைபெற்ற குருபூஜை விழாவிற்கு வருகை புரிந்த நாட்டுக்கோட்டை நகரத்துப் பெருமக்களுக்கு அன்புடன் அளித்த

மகிழ்ச்சிப் பாராட்டு நல்லுரை

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்ப்
பண்புபா ராட்டும் உலகு.

கனிவார்ந்த பெருமக்களே !

வருக ! வருக ! உங்கள் வரவு நல்வரவாகுக! தென்றல் வரத் தேமா தளிர் காட்டித் திருந்தும்; அதுபோலக் கொடை வள்ளல்களாகிய உங்கள் வரவால் நாங்கள் உள்ளம் குளிர்ந்து உவகை கொள்ளுகின்றோம். நல்லீராகிய உங்கள் வருகையால் இந்தச் சேவாசிரமம் மேலும் ஆக்கமும் வளர்ச்சியும் பெறும் என எண்ணி மகிழ்ந்து, புண்ணிய சீலர்களாகிய உங்கட்கு, **ஸ்ரீமத் கோவிந்தானந்த சுவாமிகளின் 48-ஆம் குருபூஜை— ஸ்ரீமத் ஆத்மானந்த சுவாமிகளின் 9-ஆம் குருபூஜை** சார்பான இவ்விழாவில் மீண்டும் நல்வரவு கூறுகின்றோம்.

பல்வகைப் பெருமைசான்ற செல்வர்களே !

நாட்டுக்கோட்டை நகரத்துப் பெருமக்களாகிய உங்கள் பெருமையை—வள்ளன்மையைத் தமிழ்நாடே அன்றிப் பாரதத் துணைக் கண்டமும் அறியும் எனக்கூறுவது மிகையாகாது. அவற்றை விரிப்பிற் பெருகும்; காலமும் இடமும் நோக்கிச் சுருக்கிக் கூறுதும். நீங்கள் உள்ளம் மகிழ்ந்து ஆயிரம் ஆயிரமாக அள்ளிக் கொடுத்த வெள்ளிகளால் எழுந்துள்ள கோயில் திருப்பணிகள் எத்தனை ! திருமுறை அமைப்புக்கள் எத்தனை ! மடாலயத் திருப்பணிகள் எத்தனை ! இன்னும் இவைபோன்ற பிற அறக்கட்டளைகள் எத்தனை ! எத்தனை ! இவற்றுக்கெல்லாம் தலையானதாக — சிகரமாக விளங்கிவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என்னா! விரிவஞ்சி இவற்றுடன் அமைகின்றோம்.

ஜப்பான், சீனா, மலேயா முதலிய கீழை நாடுகட்குச் சென்று மீண்டும் காஞ்சிபுரம் போந்து, ஸ்ரீ கச்சபேசுரர் திருக்கோயிலில் ஜபத்தில் இருந்த வற்கலை மடாதிபரும் ஸ்ரீ நாராயணகுருதேவர் சீடர்களுள் ஒருவரும் ஆகிய **ஸ்ரீமத் கோவிந்தானந்த சுவாமிகளை,** பிள்ளையார் பட்டிப் பெருந்திருவினர் ராம. மு. சோம. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் கண்டு வணங்கி, சுவாமிகள் விரும்பியபடி வாங்கியளித்த இடமே இப்போது இந்தச் சேவாசிரமமாக விளங்கிவருகின்றது என்பதை உள்ளம் நிறைந்த நன்றியோடு தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்ளுகின்றோம். பின்னர் இதன் பொறுப்பை ஏற்று 3--ஆண்டுகள் தலைவராக இருந்த **ஸ்ரீமத் ஆத்மானந்த சுவாமிகள்** முயற்சியாலும் அன்பர்கள் பொருளுதவியாலும் இந்தச் சேவாசிரமம் விரிவும் வளர்ச்சியும் பெற்று விளங்கியது. இப்போதும் இத்திருமடத்தின் அறங்காவலர்குழுவில் மேற்படி வள்ளல் அவர்களின் தவச்செல்வர்களாகிய **திரு. R.n. M. Sm. முத்தப்ப செட்டியார், திரு Rm. M. Sm. கருப்பன் செட்டியார்** ஆகிய இருவரும் இருந்து இதனைச் செம்மையாகப் பரிபாலித்து வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

இப்படியாக இந்தச் சேவாசிரமத்தின் தெய்வப்பணி, மருத்துவப்பணி, கல்விப்பணி, அன்னம் பாலிப்பு முதலிய நற்செயல்கட்கு உறுதுணையாக இருந்து வரும் உங்களை, உங்கள் கொடைத்தன்மையை என்றும் மறவாது போற்றுவோம். பெருமக்களே, **இச்சேவாசிரமத்தின் வளர்ச்சிக்கு மேலும் பலதொண்டுகள் செய்ய வேண்டியுள்ளன. அவற்றையும் நீங்கள் முன்னின்று முடித்துத்தர வேண்டும் எனக் கோருகின்றோம்.**

ஸ்ரீ காமாட்சி அம்மையார் இடங்கொண்ட ஸ்ரீ ஏகாம்பரநாதர் உங்கட்குப் பல்லாண்டு வாழ்வும் அஷ்ட ஐசுவரியமும் பெருகத் திருவருள் புரியுமாறு பிரார்த்திக்கின்றோம்.

குவலயப் புகழ்சால் கொடை வள்ளல்களே!
தனவைசிய நகரத்தார்களே!
உங்கள் கொற்றம் உயர்க! புகழ் பரவுக!
வளம் பெருகுக! வாழ்வு சிறக்க!

இங்ஙனம், உங்கள் நலன்கோரும்,

சுவாமி கோபாலானந்தா
தலைவர்,

சுவாமி சத்தானந்தா,
Rm. M. Sm. முத்தப்ப செட்டியார்,
V. K. R. K. கோவிந்தராஜ முதலியார்,
Rm. M. Sm. கருப்பன் செட்டியார்
C. நடராஜ முதலியார்.

அறங்காவலர்கள்.

திருக்காஞ்சியிலுள்ள திருமால் திருத்தலங்கள்

கவிஞர் க. கணேசன், அருணா சுகர்ஸ் லிமிடெட், சென்னை.

1. திரு அட்ட புயகரம் (அஷ்டபுஜம்)

பெருமாள் — ஆதிகேசவப் பெருமாள் (மேற்கு நோக்கிய திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்) பெருமாளுக்கு எட்டுத் திருக்கைகள்.

தாயார் — அலர்மேல் மங்கை

விமானம் — ககநாக்ருதி விமானம்

தீர்த்தம் — கஜேந்திர புஷ்கரணி

கஜேந்திர ஆழ்வார்க்குப் பிரத்யட்சம்.

மங்களா சாசனம் செய்தவர்கள்

திருமங்கையாழ்வார்—1118-1127, 2674 (அடி 128)		—	11
பேயாழ்வார்	2380	—	1
		ஆகப் பாசுரம்—	12

2. திரு அத்தியூர்

பெருமாள் — வரதராசப் பெருமாள் (தேப்பெருமாள், தேவராசன், பேரருளாளன், மேற்கு நோக்கிய திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்)

தாயார் — பெருந்தேவித் தாயார்

விமானம் — புண்ணிய கோடி விமானம், அநந்தசரஸ்

தீர்த்தங்கள்— சேஷ, வராக, பிரம, பதும, அக்கினி, குசல தீர்த்தங்கள். வேகவதி யாறு.

பிருகு, நாரதர், அநந்தாழ்வான், பிரமன், கஜேந்திரர்கட்குப் பிரத்யட்சம்.

பாசுரங்களில் பொதுவாகக் கச்சி யென்று குறிக்கப்படுமிடங்களில் இத்தலம் கொள்ளப் படுகிறது. கோயில் (திருவரங்கம்), திருமலை (திருவேங்கடம்), பெருமாள் கோயில் (அத்தியூர்) ஆகிய முக்கிய வைணவத் தலங்கள் மூன்றனுள் இஃதொன்று. ஐராவதம் என்னும் யானையே மலையுருவாகி எம்பெருமானைத் தாங்கியமையால், இது அத்திகிரி, அத்தியூர் என்றாயிற்று. பிரமனுக்கு வரம் கொடுத்தபடியால் வரதராசன் என்னும் திருப்பெயர் ஏற்பட்டது. அத்திகிரியின் அடிவாரத்திலுள்ள அழகியசிங்கப் பெருமாளே மங்களா சாசனம் செய்யப் பெற்றவர் என்பது அறிஞர் சிலர் கருத்து.

ம. சா. செ.

திருமங்கை யாழ்வார்—1541, 2050, 2060, 2066	—4
பூதத்தாழ்வார்—2276, 2277	—2
பேயாழ்வார்—2307	—1
ஆகப் பாசுரம்	7

3. திரு ஊரகம் *(உலகளந்த பெருமாள் திருக்கோயில்)*

பெருமாள் — உலகளந்த பெருமாள் (மேற்கு நோக்கிய திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்)
தாயார் — அமுதவல்லி நாச்சியார்
விமானம் — சார ஸ்ரீகர விமானம்
தீர்த்தம் — நாக தீர்த்தம்
ஆதிகேசவனுக்குப் பிரத்யட்சம்.

ம. சா. செ.

திருமழிசை யாழ்வார்	—	814, 815	—2
திருமங்கை யாழ்வார்	—	2059, 2064, 2673, (அடி-70), 2674 (அடி 128)	4
		ஆகப் பாசுரம்	6

4. திருக் கள்வனூர் *(இந்தச் சந்நிதி காஞ்சிபுரம் காமாட்சியம்மன் திருக்கோயிலுக்குள் இருக்கிறது.)*

பெருமாள் — ஆதிவராஹப் பெருமாள் (மேற்கு நோக்கிய திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்)
தாயார் — அஞ்சிலை நாச்சியார்
விமானம் — வாமன விமானம்
தீர்த்தம் — நித்ய புஷ்கரணி
அஸ்வத்த நாராயணனுக்குப் பிரத்யட்சம்

ம. சா. செ.

திருமங்கை யாழ்வார் — 2059.

5. திருக்காரகம் *(உலகளந்த பெருமாள் கோயில் தென்பிராகாரத்தில் உள்ளது)*

பெருமாள் — கருணாகரன் (தெற்கு நோக்கிய திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம்)
தாயார் — பத்மாமணி நாச்சியார்
விமானம் — வாமன விமானம்
தீர்த்தம் — அக்ராய தீர்த்தம்
கார்ஹ ரிஷிக்குப் பிரத்யட்சம்

ம. சா. செ.

திருமங்கை யாழ்வார் — 2059.

6. திருக் கார்வானம் *(உலகளந்த பெருமாள் திருக்கோயிலுக்குள் உள்ளது)*

பெருமாள் — கள்வர் (மேற்கு நோக்கிய திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்)
தாயார் — கமல வல்லி
விமானம் — புஷ்கர விமானம்
தீர்த்தம் — கௌரி தடாகம்
பார்வதி யம்மைக்குப் பிரத்யட்சம்

ம. சா. செ.

திருமங்கை யாழ்வார் — 2059.

7. **திருத் தண்கா** *(விளக்கொளிப் பெருமாள் திருக்கோயில்)*

பெருமாள் — விளக்கொளிப் பெருமாள், தீபப்பிரகாசன், திவ்யப்பிரகாசன் (மேற்கு நோக்கிய திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்)
தாயார் — மரகத வல்லி
விமானம் — ஸ்ரீகர விமானம்
தீர்த்தம் — சரஸ்வதி தீர்த்தம்
சரஸ்வதி தேவியார்க்குப் பிரத்யட்சம், ஸ்ரீ வேதாந்த தேசிகர் திரு அவதாரஸ்தலம்.

ம. சா. செ.

திருமங்கையாழ்வார்—1849, 2065 ஆகப்பாசுரம்-2

8. **திருநிலாத்திங்கள் துண்டம்** *(இஃது ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் உள்ளது)*

பெருமாள் — நிலாத்திங்கள் துண்டத்தான் (மேற்கு நோக்கிய திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்)
தாயார் — நேரொருவரில்லா வல்லி
விமானம் — புருஷ சூக்த விமானம்
தீர்த்தம் — சந்திர புஷ்கரணி
சிவபெருமானுக்குப் பிரத்யட்சம்

ம. சா. செ.

திருமங்கையாழ்வார் 2059

9. **திரு நீரகம்** — ஜகதீசப் பெருமாள் சந்நிதி (உலகளந்த பெருமாள் திருக்கோயிலின் உள்ளது)

பெருமாள் — ஜகதீசன் (கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம்)
தாயார் — நிலமங்கை வல்லி
விமானம் — ஜகதீஸ்வர விமானம்
தீர்த்தம் — அக்ரூர தீர்த்தம்
அக்ரூரர்க்குப் பிரத்யட்சம்

ம. சா. செ.

திருமங்கையாழ்வார் — 2059.

10. **திருப்பரமேச்சுர விண்ணகரம்** *(வைகுண்ட பெருமாள் திருக்கோயில்)*

பெருமாள் — பரமபத நாதன் (மேற்கு நோக்கிய திருமுக மண்டலம், வீற்றிருந்த திருக்கோலம்)
தாயார் — வைகுந்த வல்லி
விமானம் — முகுந்த விமானம்
தீர்த்தம் — ஆயிரம் தீர்த்தம்
பல்லவ மன்னனுக்குப் பிரத்யட்சம்.
மேல் தளத்தில் சயனத்திருக்கோலமும், அதற்கு மேல் தளத்தில் நின்ற திருக்கோலமும் உள்ளன

ம. சா. செ.

திருமங்கையாழ்வார் — 1128-1137-ஆகப்பாசுரம்-10.

11. **திருப்பவளவண்ணம** *(பவள வண்ணர் திருக்கோயில்)*

பெருமாள் — பவள வண்ணன் (மேற்கு நோக்கிய திருமுக) மண்டலம் நின்ற திருக்கோலம்)
தாயார் — பவள வல்லி
விமானம் — பிரவாள விமானம்
தீர்த்தம் — சக்கர தீர்த்தம்
அஸ்வினி தேவதைகட்கும், பார்வதியம்மைக்கும் பிரத்தியட்சம்

ம. சா. செ.

திருமங்கையாழ்வார் — 2060

இத் திருக்கோயிலுக்கு அருகில் பச்சை வண்ணர் திருக்கோயில் உள்ளது.

12. **திருப்பாடகம்** *(பாண்டவ தூதர் திருக்கோயில்)*

பெருமாள் — பாண்டவ தூதர் (கல்வெட்டுக்களில் தூதஹரி, கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம், வீற்றிருந்த திருக்கோலம்)
தாயார் — ருக்மிணி, சத்தியபாமா
விமானம் — பத்ர விமானம்
தீர்த்தம் — மத்சய தீர்த்தம்
ஜனமேஜய ராஜனுக்கும் ஹாரீத மகாமுனிக்கும் பிரத்தியட்சம்.

ம. சா. செ.

திருமழிசையாழ்வார்	814-815	— 2
திருமங்கையாழ்வார்	1541, 2674 (அடி-427)	— 2
பூதத்தாழ்வார்	2275	— 1
பேயாழ்வார்	2311	— 1
	ஆகப் பாசுரம்	— 6

13. **திருவெஃகா** *(யதோக்த காரி சந்நிதி)*

பெருமாள் — சொன்ன வண்ணம் செய்த பெருமாள் (மேற்கு நோக்கிய திருமுக மண்டலம், சயனத் திருக்கோலம்)
தாயார் — கோமளவல்லி நாச்சியார்
விமானம் — வேதசார விமானம்
தீர்த்தம் — பொய்கைப் புஷ்கரணி (இந்தப் புஷ்கரணியில் தான் பொய்கையாழ்வார் திரு அவதாரம்)

பொய்கை யாழ்வார், பிரமன், கணிகண்ணன் என்பவர்கட்குப் பிரத்யட்சம். எம்பெருமான் கணிகண்ணன் சொற்படி உடன் சென்றதால் இப்பெயர் ஏற்பட்டது. யதோக்தகாரி — சொன்ன வண்ண செய்தவன். வேகவதி யாற்று வெள்ளத்தைத் தடுக்கக் குறுக்கே சயனம் வேகவதி அணை - வேகணை - வெஃகணை வெஃகா என மருவிற்று.

ம. சா. செ.

திருமழிசை யாழ்வார்	— 814, 815, 2417 —	3
திருமங்கை யாழ்வார்	— 1854, 2059, 2064, 2065 2673 (அடி-70) 2674 (அடி-127)	— 6
பொய்கை யாழ்வார்	— 2158	— 1
பேயாழ்வார்	— 2307, 2343, 2345, 2357	— 4
நம்மாழ்வார்	— 2503	— 1
	ஆகப் பாசுரம்	— 15

14. **திருவேளுக்கை-** (முகுந்த நாயகர் திருக்கோயில்)

பெருமாள் — முகுந்த நாயகன் (கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்)
தாயார் — வேளுக்கை வல்லி
விமானம் — கனக விமானம்
தீர்த்தம் — கனக சரஸ்

இத் தலத்து எம்பெருமான் இப்போது பூசையின்றி ஓர் ஏரியின் நடுவில் ஜலவாசம் செய்து கொண்டிருக்கின்றார்.

ம. சா. செ.

பேயாழ்வார்	— 2307, 2315, 2343	— 3
திருமங்கை யாழ்வார்	— 2674 (அடி 127)	— 1
	ஆகப் பாசுரம்	4

[illegible]ன் அச்சகம், சென்னை-14.